திருமகள் புத்தக நிலையம்



# மார்கழி ரோஜா

# மார்கழி ரோஜா

## 1

'மனத்தைப்பற்றி டாக்டர் ஆனந்தமோகன் சுவாரஸ்யமான புத்தகம் ஒன்று எழுதியிருக்கிறார். 'எது மனது?' என்று கேட்டுத்தான் தன் விளக்கத்தையே தொடங்குகிறார். 'மனது' என்றவுடன் கைகள் தானாக மார்பைத் தொட்டுக்காட்டும். மார்புப் பகுதியில் இதயம் தான் இருக்கிறது. அது கிணற்று மோட்டார் போல் ரத்தத்தை சதா இறைத்துக் கொண்டிருக்கிறது. அவ்வளவுதான்! அது எப்படி எண்ணங்களால் சூழப்பட்ட மனம் ஆகும்?

அப்படியானால் தலையின் பின் பகுதியைத் தட்டி மூளை இருக்குமிடத்தில் மனசு இருப்பதாகச் சொல்லாமா?

அதுவும்கூட தப்புதானாம்!

ஆனந்த மோகன் சொல்கிறார்:

உண்மையில், 'மனது எங்கே இருக்கிறது' என்கிற கேள்விக்குள் நாம் விழும்போது நெற்றிப் பொட்டுகள் குறுகுறுக்கின்றன. கண்களுக்குப் பின்னாலே தாழ்வாரம் போல ஒரு இடம் இருக்கிற மாதிரியும், அதில் பாயை விரித்து பாட்டி படுத்திருக்கிற மாதிரி மனது அங்கே தான் இருக்க வேண்டும் என்றும் நமக்குத் தோன்றலாம்.

ஆனால் அதுவும்கூட தப்புதானாம். மனது ஒன்றும் உடம்பின் ஒரு உறுப்பு போன்றதில்லையாம்! உடம்பில் அதற்கு ஒரு இடத்தைத் தேடுவது அபத்தமாம். ஒரு கட்டை விரலை உற்றுப் பார்த்து அங்கே மனது

இருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளத் தொடங்கினால் மனம் அங்கே நிலை கொள்கிறதாம்.

மனத்தை எங்குவேண்டுமானாலும் நிலை நிறுத்தலாம். நமது உடம்பில் என்றில்லாமல் வெளியே யாரிடமும், ஏன்... ஒரு மதில் சுவர் மேல், மரக்கிளைமேல், அதில் தாவிக்குதித்து ஓடும் அணில்மேல் என்று - எதன்மேலும் மனத்தைக் குவிக்கலாம் என்கிறார்.

இதை எல்லாம் கேட்டுக்கும்போது குழப்பமாக இல்லை...?'

❖❖❖

விடிந்து விட்டது!

கதவைத் திறந்து பார்த்தபோது வராண்டாவில் தினமலர் பேப்பரும், பால்பாக்கெட்டும் காத்திருந்தன.

சன்னமாய் ஒரு கொட்டாவி பிரிய அவைகளைக் கையில் எடுத்துக் கொண்டு உள்ளே சென்றாள் உஷா.

நள்ளிரவில் ஒரு ஒருமணிநேரம் ஓங்கலாய் மழை பெய்திருந்தது. அந்த ஈரத்தில் சுடுங்கியிருந்தது வாயில் புறத்து பன்னீர்மரம்.

தரையில் அது உதிர்த்திருக்கும் 'பீப்பீ' பூக்கள்!

விளக்குமாற்றால் அவைகளைக் கூட்டித்தள்ளும் போது ஒரு மாதிரி வாசமடிக்கும்.

அந்த வாசனை உஷாவுக்கு மிகவும் பிடிக்கும்.

அதை அனுபவித்தபடியே சில்லென்ற டேங்க் தண்ணீரை வாசல் பக்கமாய் உள்ள பைப்பில் பிடிக்கும்போது



உச்சி மண்டை வரை ஒரு வெலவெலப்பு தட்டும். பின் அந்த தண்ணீரால் வாசல் தெளித்து முடித்துவிட்டு அரிசிமாவால் கோலம் போடும் ஒரு கலாரசனை மிகுந்த வேலை ஆரம்பமாகும்.

முதலில் புள்ளிகள் வைத்தல். பிறகு அவைகளை வளைகோடுகளாலும், நேர்கோடுகளாலும் சிறைப் படுத்துதல்... கிட்டத்தட்ட ஒரு ஓவியம் வரைகிற மாதிரியான செயல்தான் அது.

உஷா இவைகளில் எதிலும் குறைவைப்பதே கிடையாது.

இத்தனைக்கும் அவள் தங்கை நிஷா இருக்கிறாள். எட்டு மணிக்கு முன்னால் அவள் கண் திறந்து பார்த்ததாக வரலாறே கிடையாது.

உஷாவுக்கு இருபத்தி ஆறு வயதாகிறது என்றால் நிஷாவுக்கு இருபத்தி நான்காகிறது.

பாகம் பிரித்துக் கொண்டு எவ்வளவோ வேலைகளைச் செய்யலாம்தான். ஆனால் நிஷா எதற்காகவும் காலைத் தூக்கத்தை மட்டும் இழக்கத் தயாரில்லை என்று சொல்லவே சொல்லிவிட்டாள்.

அப்படியே எழுந்தாலும் இந்த வாசல் தெளித்தல் - கோலம் போடுதல், பால் காய்ச்சிக் காபி போடுதல், ஈஸிசேரில் சாய்ந்து கொண்டு பேப்பர் படிக்கும் ஆண்வர்க்கத்திடம் அதை ஏந்தி வந்து தருதல் என்பதெல்லாம் சரியான அடாவடியான ஆணாதிக்கம் மிகுந்த செயல் என்பது அவள் கருத்து.

உஷாவுக்கு இப்படியெல்லாம் சிந்திக்கவே தெரியாது. பெண் என்றால் அடக்க ஒடுக்கமாக வீட்டு வேலை பார்த்துக் கொண்டு அப்பா அம்மா பேச்சைக் கேட்டுக் கொண்டு இருக்க வேண்டும் என நினைக்கும் ஜாதி.

அதனால்தான் அதிகாலையிலேயே உஷாவுக்கு அன்றைய தினம் ஆரம்பமாகிறது. நிஷாவுக்கோ எட்டு மணிக்குத் தொடங்கினால் அது குறைந்தபட்சம்.

ஒரு தலையணைக்கு இரண்டை அண்டக் கொடுத்துக் கொண்டு அவள் தூங்கும்போது பார்த்தால் சிரிப்பாய் வரும்.

மரவட்டை போல சுருண்டுதான் படுத்திருப்பாள். முகம் எங்கிருக்கிறது என்றே தெரியாது. சமயங்களில் காலை ஆறு ஏழு மணிவாக்கில் அவளுக்கு போன்கால்கள் வரும்.

பக்கத்திலேயே கார்ட்லெஸ் போன் இருக்கும்.

எடுத்துக் காதோரம் வைத்துக் கொண்டு சுருண்ட நிலையில் இருந்து விலகாமல் மெள்ள அவள் பேசுவதைப் பார்த்தால் பேச்சு - தூக்கம் இரண்டையும் அவள் பேலன்ஸ் செய்வது நன்றாகத் தெரியும்.

அப்பா தியாகராஜன் தலையில் அடித்துக் கொள்வார். உஷா சிரிப்பாள்.

அந்த வீட்டில் அவர்கள் மூன்றே பேர்தான்.

தியாகராஜன் ஒரு ரிடயர்ட் பி.டி.ஓ!

பென்ஷன் வருகிறது. தாயில்லாத அந்த இரண்டு பெண்களையும் எப்படியோ தான் வேலை பார்த்த நாளில் நல்லவிதமாக படிக்கவைத்துவிட்டார் தியாகராஜன்.

படிக்கவைக்கும்போதுகூட இருவராலும் வித்தியாச மான பிரச்சினைதான்.

ராகிங்குக்கு பயந்து கொண்டு உஷா சில நாட்கள் காலேஜுக்கே செல்லவில்லை... நிஷாவோ வீட்டுக்கே வரவில்லை. அவளைத் தேடிக்கொண்டுதான் இவர் வீட்டுக்கு வந்தனர்.



காலேஜில் அவள் பயங்கரமாக கலாட்டா செய்வதாகக் கூறி தியாகராஜனிடம் புகாரும் கூறினார்கள்.

தியாகராஜன் ஒரு ஓரமாய் போய் உட்கார்ந்து விட்டார்.

'கடவுளே! என் வயிற்றில் எப்படி இப்படி எதிரும் புதிருமாக இரண்டுபேர் பிறந்தார்கள்?' என்று கேட்டுக்கொண்டு கண்கலங்கிப் போனார்.

உஷாதான் அப்பொழுது ஆறுதல் கூறினாள்.

''அழாதீங்கப்பா... நீங்க அழுதா எனக்கும் அழுகை வரும்,'' என்று மூக்கைச் சிந்தினாள்.

ஆனால் நிஷாவோ ''ஒரு ஆண்பிள்ளை போய் அழலாமா?'' என்றுதான் திருப்பிக்கேட்டாள்.

''என்ன பண்றது... நீ ஒரு பொம்பள ரவுடியா போய்ட்டியே.''

''தைரியமா இருந்தா ரவுடியா?''

''எது தைரியம்...? திமிறு, தெனாவெட்டுக்குப் பேர் தைரியமா?''

''இருக்கலாம். திமிறும் தெனாவெட்டும்தான் தைரியம்னா அப்படியே வெச்சுக்குங்க. ஆனா ஒண்ணு... எந்த ஆம்பளையும் என்கிட்ட பல்லிளிக்கவோ ஜொள்ளுவிடவோ முடியாது. மீறி வழிஞ்சாங்கன்னா செருப்புப் பிஞ்சிடும்...''

அவள் இப்படிச் சொல்லும்போதே அனல் அடிக்கும். தியாகராஜனும் ஒருவகையில் அதை ரசிப்பார். அந்த வகையில் தன் பெண் ஒரு அனல் புஷ்பம் என்பது அவர் கருத்து. இந்த அனல் புஷ்பத்தைப் பற்றி கவலைப் படவேண்டாம்.

எவ்வளவோ விஷயங்கள் காதில் விழுகிறது-

தியாகராஜனே நிறைய பாத்திருக்கிறார்.

அவருடைய சகா, பரமசிவத்தின் மகள்கள் இரண்டு பேர். வேலைக்குப் போன இடத்தில் காதலித்து ஓடிப்போய்க் கல்யாணம் செய்து கொண்டனர்! பரமசிவம் மனசு ஒடிந்து போனார்.

அதே கதைதான் தாசில்தார் ஒருவர் குடும்பத்திலும் நடந்தது. அவ்வளவு எதற்கு...? ஒரு ஜூனியர் விகடனையோ, குமுதம் ரிப்போர்ட்டரையோ திறந்தால் ஓடிப்போய் அவஸ்தைப்படும் பெண்களைப் பற்றித்தானே கதை கதையாக வருகிறது.

அதை எல்லாம் படிக்கும்போது தியாகராஜனுக்கு மனசு துடிக்கும். தாயில்லாத பெண்களை எப்படி வளர்த்து ஆளாக்கப் போகிறோமோ என்று ஒரே தவிப்பாக இருக்கும். அதிலும் உஷாவை நினைத்தால் மிகவும் பயமாக இருக்கும்.

ஒரு கரப்பான் பூச்சி மேலே விழுந்ததற்கே நான்கு நாள் காய்ச்சலில் படுத்தவள் அவள்! அந்த அளவு பயம் ஒரு பக்கம் என்றால் அதற்குமேல் இரக்கமுள்ள மனசு மறுபக்கத்தில்... பல பிச்சைக்காரர்கள் எந்த வீட்டில் எது இல்லாவிட்டாலும் உஷா எதையாவது போட்டே தீருவாள் என்றே முடிவு செய்து வந்து போவதுண்டு.

அவர்களை நிஷா பார்த்துவிட்டாலோ வந்தது ஆபத்து...

''டேய் போங்கடா... போய் உழைச்சுப் பொழைக்கற வழியப்பாருங்க. பிச்சை எடுக்க உங்களுக்கு வெக்கமா இல்லை...'' -என்று ஆரம்பித்துவிடுவாள்.

இதனால் உஷாவுக்கும் நிஷாவுக்குமேகூட அடிக்கடி கருத்து வேறுபாடு ஏற்பட்டு அது சண்டை வரை செல்லும். இறுதியில் நிஷாவுக்கு ஈடுகொடுக்க முடியாமல் உஷா மடங்கிப் போய்விடுவாள்.



அப்போதெல்லாம் தியாகராஜன் குறுக்கிட்டு ''கவலப்படாதம்மா... அவ ஒரு காட்டுக்குதிரை. அந்த குதிரையை அடக்க ஒருவன் வருவான். இவளை நம்மால எல்லாம் அடக்க முடியாது. நல்ல கொடுமைக்காரனா ஒருத்தன் வரணும். அப்பதான் இவ கொட்டம் அடங்கும்,'' என்பார்.

ஒரு அப்பாவா இப்படிச் சொல்வது?

உஷா மறித்து வாயைப் பொத்துவாள்.

அப்படிப்பட்ட உஷாவுக்கு இன்று ஒரு முக்கியமான நாள்.

அவளைப் பெண் பார்க்க மாப்பிள்ளை வர இருக்கிறார். அதில்கூட நிஷா ஒரு குட்டி கலாட்டா செய்துவிட்டாள்.

'மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் வந்தால் ஒழுங்கு மாரியாதையா நடந்து கொள்ளவேண்டும்; ஆடத்தெரியுமா பாடத் தெரியுமா என்று கேட்டு உஷாவை படுத்தக் கூடாது.

அதேபோல அவர்களுக்கு 'சொஜ்ஜி பஜ்ஜி' என்று தியாகராஜனும் எந்த உபசாரங்களும் செய்யக்கூடாது. வந்த மரியாதைக்கு ஒரு காபி கொடுக்கலாம். அவ்வளவுதான். கல்யாணம் என்பது உறவுப் பரிமாற்றம். அதை அந்தஸ்து, பணம் போன்றவற்றால் எடைபோட முயல்வது மிகப் பெரிய தப்பு' என்று ஒரு பெரிய பிரச்சாரமே பண்ணிவிட்டாள்.

தியாகராஜன் காதைப் பொத்திக் கொண்டார்.

''இப்படிக் காதைப் பொத்திக்கிட்டால்லாம் விடமாட்டேன்... இந்தக் காலத்து ஆம்பளைங்களப் பத்தி தெரியும் தானே? அசந்தா காதுல பூ சுத்திடுவாங்க. மண்ணெண்ணெய் கண்டு பிடிச்சது அடுப்பு எரிக்கறதுக்காக இல்லப்பா. உஷா மாதிரி வாயில்லாப் பூச்சிகளைக் கொளுத்த'' என்று திருப்பிக் கத்தினாள்.

தியாகராஜனுக்கு அவளைச் சமாளிப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது.

நல்லவேளை, நிஷா என்னும் அந்தப்பிசாசு இன்னும் படுக்கையைவிட்டு எழுந்திருக்கவில்லை.

உறக்கம் கலைந்து எழுந்த நிலையில் முகம் கழுவிக் கொண்டு வந்த தியாகராஜன் பெட்ரூமை ஒட்டி ஒரு பார்வை பார்த்தார்.

பிறகு உஷாவிடம் வந்தார்.

அவள் சமையல் கட்டில் காபி போட்டுக் கொண்டிருந்தாள்.

''அம்மாடி...''

''இருங்கப்பா... இரண்டு நிமிஷத்துல காபி ரெடியாயிடும்.''

''அதுக்கில்லம்மா... உனக்கு மளிகைக் கடைல எதாவது வாங்கணுமா?''

''எல்லாம் இருக்குப்பா...''

''பஜ்ஜிபோட வாழக்கா உருளைக் கிழங்கு இருக்கு தானே?''

''எல்லாம் தயாரா இருக்கு...''

''அது சரி... உன் அத்தை பத்து மணிக்கு வந்துடுவா. அவகிட்ட நீ அடுப்படிய விட்டுடு. நீ உக்காந்து இதை எல்லாம் செய்துகிட்டு இருக்காதே.''

''சரிப்பா... ஆமா... மாப்ளை வீட்ல எத்தனை மணிக்குப்பா வராங்க...?''



''டான்னு 11 மணிக்கு வந்துட்றதா சொல்லி யிருக்காங்க...''

''இந்த நிஷாப் பிசாசை எப்படிப்பா சமாளிக்கப் போறீங்க?''

''நீ கவலையே படாதே. அவ கேட்டா சாயங்காலம் வரப்போறதா சொல். அவளும் பகல்ல லைப்ரரி, அங்க இங்கன்னு போய்டுவா. நமக்கும் பிரச்சினை இருக்காது.''

''ஒருவேளை போகலைன்னா...?''

''விடு... அப்பப் பார்த்துக்கலாம்.''

''பயமா இருக்குப்பா... அவங்க எதுக்க இவ அதிகப் பிரசங்கித் தனமா ஏதாவது பேசி வெச்சா...?''

''எனக்கும் பயமாத்தான் இருக்கு.''

''பெரிய இடம்னு சொல்றீங்க. ஏடாகூடமா எதாவது நடந்துட்டா...''

''விடு... ரொம்ப துள்ளினா ஒரே அறை... இதுவரை என் கை நீண்டதில்லை. இன்னிக்கு அவ அறை வாங்கணும்னு இருந்தா யாரால மாத்த முடியும்?

ஆனா ஒண்ணு... இந்த இடம் ரொம்ப நல்ல இடம். மாப்ளை அமெரிக்காவுல இருக்கான். காசு பணமெல்லாம் பெரிசு இல்ல... ஒழுக்கம், குடும்பப்பாங்கு இதுதான் முக்கியம்கறதால நம்மளைப்பத்தி கேள்விப்பட்டு பார்க்க வராங்க.

பையனுக்கு மட்டும் உன்னை பிடிச்சுட்டா நீ எங்கையோ போய்டுவே...!''

''எங்க...ஜி.எச்'ல மார்ச்சுவரிக்கா?''

-எதிர்பாராத ஒரு கேள்வி அவர்கள் இடையே வந்து விழுந்தது. வாயில் பிரஷ்ஷுடன் நிஷா நின்று கொண்டிருந்தாள். அவள்தான் அப்படிக் கேட்டவள்.

தியாகராஜனுக்கு குட்டுப்பட்டதுபோல் இருந்தது.

''வாயைக் கழுவு... உனக்கு எதையும் சரியாவே யோசிக்க வராதா?'' -அலறினார்.

''இன்னிக்கு இப்படியெல்லாம் யோசிச்சாதான் நாம தப்பிக்க முடியும். தெரிஞ்சுக்குங்க...''

''போச்சுடா. காலம் காத்தாலையே ஆரம்பிச்சுட்டா. ஆமா... பேசினத எல்லாம் கேட்டுகிட்டு இருந்தியா?''

''இல்லையா பின்னே... எனக்கு பேர் நிஷா தான். நிஷாப் பிசாசு கிடையாது. அப்புறம் என்ன சொன்னீங்க? ஆங்... காலைல நான் லைப்ரரி அங்க இங்கன்னு போய்டுவேனா? மாப்ளை வீட்டுக்காரங்க 11 மணிக்கு வரப்போறாங்களா...

வரட்டும்...

வரட்டும்...'' -நிஷா சொல்லும்போதே நெருப்பு கனன்று சிவக்கிறமாதிரி இருந்தது. தியாகராஜன் வெளிறிப் போனார்.

## 2

'ஒருவர் எவ்வளவு மனோபலம் உடையவராக இருந்தாலும் சரி... அவரைத் தொடர்ந்து ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தால் அவர் சலனமடைவார். ஏன் இப்படிப் பார்க்கிறாய் என்று கேட்கப் போய் 'சும்மாதான்' என்று அவர்கள் கூறினாலும் அதைக் கேட்டு மனது



சமாதானமடையாது. இப்படி ஒரு பதிலைச் சொன்ன பிறகு மீண்டும் பார்த்தால் பார்க்கப்படுபவர்க்கு மிகப்பெரிய அளவில் மனதில் அச்சமும், குழப்பமும் ஏற்படும்...

அதன்பின் அவர்களை சாதாரணமாக யாராவது பார்த்தால்கூட அவர்கள், ஏதோஒரு கெட்ட நோக்கத்தோடுதான் சம்பந்தப்பட்டவர் பார்க்கிறார் என்று நினைப்பார்.

பார்வைக்கு அப்படி ஒரு சக்தி உண்டு.

ஹாலந்தில் ஒரு வக்கீலை இப்படிப் பார்த்துப் பார்த்தே பைத்தியமாக்கிவிட்ட சம்பவம் ஒன்று உண்டு.

அந்த வக்கீல் ஒரு பிரபலமான கிரிமினல் லாயர். வழக்கு ஒன்றில் அவரால் பாதிக்கப்பட்ட எதிரிகளில் சிலர்தான் இப்படி நடந்து கொண்டனர். ஒருவர்க்கு நான்குபேர் அவரைக் கண் காணித்தனர். வக்கீலும் தனக்குள் சமாதானங்களைச் செய்து கொண்டு அவர்கள் பார்வையை தவிர்க்கப் பார்த்தார். ஆனால் அவர்கள் விடவில்லை.

இறுதியில் மனம் வெறுத்து அவர் கத்திக் கூப்பாடு போட்டு பைத்தியமாகவே ஆகிவிட்டார்.

இரு கண்களால் கூர்மையாகப் பார்ப்பது என்பது சாதாரண விஷயமல்ல!'

❖❖❖

ஒன்பது மணி!

அந்த நாளைய பெல்ஜியம் கெடிகாரம் சப்தம் போட்டு ஊரைக் கூட்டியது.

டேப்ரிக்கார்டரிலும் வெங்கடேச சுப்ரபாதம் சன்னமாய் ஒலித்துக் கொண்டிருந்தது. கூடவே வீடு முழுக்க ஒரு மெல்லியமேகப் பொதிபோல சாம்பிராணி தூபம்!

உஷாதான் ஈரத்தலையோடும், பட்டுப்புடவை சரசரக்கவும் போட்டுக் கொண்டே போனாள்.

நிஷா உட்கார்ந்து பேப்பர் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒரு கையில் பீங்கான் கோப்பையில் டீ ஆறி விட்டிருந்தது. இருந்தும் அதைப் பாயசமாய்க் கருதி சூப்பிக் கொண்டிருந்தாள். இடையிட்டது ஆட்டோ சப்தம்.

நிமிர்ந்து பார்த்தபோது அத்தை கனகம் இறங்கிக் கொண்டிருந்தாள்.

அவளைப் பார்க்கவும் நிஷாவுக்கு சிரிப்பு வந்துவிட்டது. கனகம் பார்ப்பதற்கு கட்டை குட்டையாக ஒலிம்பிக்கில் பதக்கம் வாங்கிய மல்லேஸ்வரி மாதிரி இருப்பாள்.

சாதாரணமாக நடக்கவே வராது. 'குடுகுடு' வென்று தான் ஓடுவாள். கேட்டால் அதுதான் தன்நடை என்பாள்.

எப்பொழுதும் கையில் ஒரு துணிப்பை இருக்கும். நெற்றியில் விபூதி, குங்குமம், செந்தூரம், மஞ்சள், போதாதற்கு ஏதாவது ஹோமத்து மை என்று எல்லாமே இருக்கும்.

அதனால் பார்க்கும்போதே சிரிப்பு வந்துவிடும்.

அத்தை புருஷன் ஒரு குடிகாரன். குழந்தைகள் இல்லை. அத்தைதான் கல்யாண வீடுகளில் சமையலுக்குச் சென்று சம்பாதிப்பவள். அதைக் குடித்தே அழிப்பவன்தான் அவள் கணவன். ஆனால் அவன் திருந்திவிடுவான் - தன்னை வாழவைப்பான் என்று நம்பி கோவில் கோவிலாகப் போய்க் கொண்டிருப்பதுதான் அத்தையின் நிகழ்கால நடவடிக்கை.



நிஷாவுக்கு கோபம் கோபமாக வரும்.

''வா அத்தை... எங்க காணோமேன்னு பார்த்தேன்.'' -என்று உள்ளே நுழைபவளை ஒரு மாதிரி வரவேற்றாள். கனகத்துக்கும் அவள் சுபாவம் தெரியும். ஒருமுறை மட்டும் முறைத்தாள். முறைத்தபடியே உள்ளே சென்றாள். உஷா ஒரு தேவதை போல கண்ணில்பட்டாள். அத்தையைப் பார்க்கவும் ஓடி வந்து காலில் விழுந்து எழுந்தாள். ''நல்லாரு... நல்லாரு... இப்பதான் அந்த பிசாசைப் பாத்தேன். வாயப் புடுங்கப் பார்த்தா... ஓடி வந்துட்டேன். இருந்தா உன்னைப் போல இருக்கணும்'' என்று பொங்கி வழிந்தாள். தியாகராஜனும் எதிர்ப்பட்டார்.

''வா கனகம்!''

''வந்துட்டேன்தியாகு. நீ சொன்ன மாதிரியே ஒன்பது மணிக்கெல்லாம் வந்துட்டேன்...''

''சந்தோஷம்க்கா... எப்படி இருக்கார் மாப்ள?''

''இப்பல்லாம் வெளிய போய் குடிக்கறது இல்லை. நானே ஊட்ல ஊத்திக் கொடுத்து படுக்க வெச்சுட்றேன். ரசாபாசமில்லாம ஏதோ நாள் ஓடிக்கிட்டு இருக்கு...''

''ஹூம்... இதை ஒரு முன்னேற்றமா நினைக்கற அளவு ஆயிடிச்சே உன்நிலைமை.''

''என்னப்பா பண்ண... எல்லாம் என் தலை எழுத்து. ஆனா எனக்கு நம்பிக்கை இருக்கு. ஆஞ்சனேயர் கோவிலுக்கு இன்னியோட நூத்தி மூணு நாள் போய்ட்டேன். இன்னும் அஞ்சு நாள் போய்ட்டா நூத்தி எட்டு நாள் ஆயிடும். அவர் கண் திறக்காமலா போய்டுவார்...''

-கனகம் நம்பிக்கை காட்டினாள். நெற்றியிலும் ஆஞ்சனேயர் கோவில் செந்தூரம். தியாகராஜன் அதைக் கேட்டு சிரித்தார்.

''அத்தைகாரு... ஆஞ்சனேயர்கிட்ட போனால்லாம் உன் புருஷன் திருந்தமாட்டார். என்கிட்ட விடு. நெஞ்சுல நாலு மிதி. ஒரு மணி நேரத்துல வழிக்குக் கொண்டு வரேன்''. என்றபடியே நிஷா வந்தாள்.

''தியாகு... இவளை வெச்சுகிட்டா இன்னிக்கு பெண்ணு பாக்கப் போறாங்க...?''

-அத்தை கனகம் தியாகராஜனிடம் கேட்டாள்.

''ஆமாங்க்கா... எதையாவது சொல்லி அனுப்பிட லாம்னு பார்த்தேன். முடியல.''

''அப்ப இன்னிக்கு உஷாவுக்கு மாப்பிள்ளை பார்த்த மாதிரிதான்...''

''ஏன்...ஏன்... நான் என்ன வரப்போற மாப்ளையைக் கடிச்சாதின்னுடப் போறேன்.''

''ஆளைக் கடிச்சாதானா... வார்த்தையாலதான் எட்டு ஊருக்கு கடிப்பயே...''

''கடிக்கற மாதிரி இருந்தா கடிக்கத்தானே வேணும்.''

''போதும்மா... வார்த்தைக்கு வார்த்தை பேசி என்னை டென்ஷன் படுத்தாதே. வரப்போற மாப்ளை அமெரிக்கால வேலைல இருக்கறவர். நல்ல படிப்பு; சம்பளம்... எதாவது சில பலவீனங்கள் இருந்தாலும் அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டு போறதுதான் புத்திசாலித்தனம்.

உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன். வர்றவங்க போறவரைக்கும் நீ யார் கண்ணுலையும் படக்கூடாது. என்ன



நடந்தாலும் சரி... வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசக்கூடாது...''

''ஏம்ப்பா இப்படி போலீஸ் கமிஷனர் மாதிரி 144 போட்றீங்க. எனக்கு உஷா வாழ்க்கைல அக்கறை இல்லைன்னு நினைக்கறீங்களா?''

''இதோ பார்... எதையாவது தொண தொணன்னு பேசி கேள்வி கேட்டு என் டென்ஷனை அதிகரிக்காதே. இப்ப சொல்றேன். பெண் பார்க்க வர்றவங்க போறவரைக்கும் வாயை வெச்சுகிட்டு சும்மா இருக்கணும். மூச்சுவிடக்கூடாது. உன் ரூமைவிட்டு வெளியேயும் வரக்கூடாது.''

-தியாகராஜன் ஒரே போடாக போட்டுவிட்டு அடுத்த வேலையைப் பார்க்க கிளம்பிப் போனார். கனகமும் 'அப்படிப் போடு' என்றபடி சமையல் கட்டில் போய் புகுந்து கொண்டாள்.

உஷா பூஜையறையில் சாமியிடம் தஞ்சம் புகுந்திருந்தாள்.

''சாமி.. எனக்கு இந்த இடம் நல்லவிதமா முடிஞ்சுடணும்'' -அவளுக்குள் பிரார்த்தனை.

நிஷாவுக்கு எரிச்சலாக வந்தது.

போய் கதவைத் தாழிட்டுக் கொண்டாள்!

சரியாக மணி பன்னிரெண்டு.

வீட்டு வாசலில் சர்சர்ரென்று கார்கள் வந்து தேங்கி நின்றன. கோட்டும் சூட்டுமாய் கதவைத் திறந்து கொண்டு மாப்பிள்ளை ராஜேஷும் இறங்கினான். கூடவே ஒரு படை.

நல்லி சில்க்கையும், தங்கமாளிகையையும் அப்படியே விலைக்கு வாங்கி, வாங்கியதை உடம்பில் தாங்கியபடி வருவது போல் இருந்தது.

தியாகராஜன் பிரமிப்போடு கைகளைக் கூப்பியிருந்தார். அப்படியே திரும்பி நிஷா இருக்கும் அறையைப் பார்த்தார். அறைக் கதவு மட்டுமல்ல, ஜன்னல் கூட பூட்டப்பட்டிருந்தது.

நிம்மதியாக இருந்தது.

எல்லோரும் உள்ளே வந்தனர். தியாகராஜனின் நண்பர்கள் சிலர் மனைவிமார்களுடன் வந்திருந்தனர். அவர்கள் சமையல் கட்டுக்கு ஓடி காபியை கொண்டு வந்து கொடுத்து முதல் கட்ட உபசரிப்பை ஒரு மாதிரி செய்து முடித்தனர்.

மாப்பிள்ளை பறங்கிப் பழம் போல நல்ல சிகப்பு.

கூலிங்கிலாஸ் தரித்திருந்தான். கழுத்தில் மைனர் செயின் - கையில் பிரேஸ்லெட். கோட் பாக்கெட்டில் துருத்தலாய் செல்ஃபோன். அதைக் கையில் எடுக்காமலே பேசத் தோதாக ஹியரிங் ஸ்பீக்கர் ஒன்று - காது மடலுக்குள் அமர முடிந்த சைஸில்! பார்க்கும் இடமெல்லாம் அமெரிக்க மணம்!

உடன் வந்தவர்கள் அதிகம் பேசவில்லை. ஆனால் அடிக்கடி உடுப்பை சரிசெய்து கொள்வது, நகைகளைத் தளர்த்திவிட்டுக் கொள்வது என்று அலட்டிக் கொண்டனர். அவர்களோடு வந்திருந்த ராமமூர்த்தி என்பவர்தான் வாயைத் திறந்தார். அவர்தான் அந்த இடத்தை தியாகராஜனுக்கு காட்டியவர்.

''அப்புறம் தியாகராஜன்... அப்படி உக்காருங்க. ஏன் நின்னுகிட்டே இருக்கீங்க.''

''இருக்கட்டும் ராம்மூர்த்தி. ஆமா... சுலபமா வீடு கண்டு பிடிச்சு வந்துட்டீங்களா - ஒண்ணும் சிரமம் இல்லையே...?''

''நான்தான் வந்துருக்கேனே... என்ன சிரமம்?''

''இல்ல கேட்டேன்.. மத்தபடி ஜாதகப் பொருத்தம் பார்த்தேன். ரொம்ப பிரமாதமா பொருந்தி இருக்குது.''



''நீங்க பாத்துக்குங்க. ஆனா தம்பி ராஜேஷுக்கு அதுல எல்லாம் நம்பிக்கை கிடையாது...''

-ராமமூர்த்தி சகஜமாகப் பேச - மாப்பிள்ளை ராஜேஷ் தன் கூலிங் கிலாஸ் கண்களால் தியாகராஜனின் வீட்டை ஒருமுறை அளந்தான்.

அந்தக் காலத்து சாதாரண தார்சு வீடு.

சுவர்களில் நிறைய காலண்டர்கள் - புகைப் படங்கள். அங்கங்கே சின்னச் சின்னதாய் ஓவியங்கள். நிஷா வரைந்தது. அதைப் புரிந்து கொள்ள பிரம்மா இன்னொரு மூளையைப் படைத்திருந்தால் தேவலை. ஆனால் இருக்கும் மூளையை வைத்துக் கொண்டு அதைப் பார்த்தால் வர்ணங்களைக் கொட்டிக் கலந்து உருண்டை பிசைந்த மாதிரி இருக்கும். ஒன்றுமே புரியாது. ராஜேஷும் அதைப் பார்த்தான். அருகே சென்று பார்க்க ஆசைப்பட்டவன் போல எழுந்து அருகே சென்றான். உற்றுப் பார்த்தான். ''பியூட்டிஃபுல்'' என்றான். தியாகராஜனே அதைக் கேட்டு அதிர்ந்தார்.

''யார் இதை வரைஞ்சது?'' - கேட்டான் அவன்.

''அது...அது... என் செகண்ட் டாட்டர்வரைஞ்சா.''

''ஐ.சீ... எங்க அவங்க?''

''அவ... அவ... அவ இப்ப இல்லை. ஐ மீன் அவளுக்கு வைரஸ் ஃபீவர். அதனால...''

-தியாகராஜன் சமாளிக்கப் பார்த்தார்.

''இட்ஸ் ஓ.கே... இந்த அளவு ஐடியலாஜிகலா ஒரு படத்தை நான் நியூயார்க் ஆர்ட் கேலரிலதான் பாத்துருக்கேன்... வாட் எ பியூட்டிஃபுல் பெர்ஃபாமன்ஸ்!''

''இதுவா?''

''அஃப் கோர்ஸ். முதல்ல நான் அவங்களப் பாக்கணும். கொஞ்சம் கூப்பிட்றீங்களா?''

''தாராளமா... அதுக்கு முன்னால - நல்லநேரம் போறதுக்குள்ள பெண்ணப் பார்த்துடலாமே...''

''எனக்கு எல்லா நேரமும் நல்ல நேரம்தான். சரி உங்க இஷ்டப்படியே வரச்சொல்லுங்க...''

-ராஜேஷ் பதிலோடு தோளைக் குலுக்கிக் கொண்டு போய் அமர்ந்தான்.

அடுத்த இரண்டாவது நிமிடம் ஒரு பட்டுத்தேராக உஷா அவன் எதிரில் அழைத்து வரப்பட்டாள்.

அகலக்கரை போட்ட பட்டுச்சேலை... தலை கொள்ளாத அளவு பூ! ஜடைபில்லை... மேக்கப் பாரத்தில் அவள் தலை தாழ்ந்திருந்தது.

ராஜேஷ் அவளைப் பார்த்த நொடி அதிர்ச்சியடைந்தவன் போல ராமமூர்த்தியைப் பார்த்தான்.

''என்ன தம்பி?''

''என்ன சார் இது... எதுக்கு இவ்வளவு மேக்கப். சாதாரணமா ஹோம்லியா இருந்தா போதும்னு தானே நான் சொல்லியிருந்தேன்.''

''அது...அது...இதுதான் தம்பி எப்பவும் வழக்கம்.''

''அ'யம் சாரி... எல்லாம் ரொம்ப இடியாடிக் கல்ச்சர். பொம்பளைங்கள ஏன் இப்படி அலங்காரப் பதுமையாக்கி எக்ஸிபிட் பண்றீங்க.



எனக்கு கேஷுவலா இருக்கணும். ரொம்ப சாதாரணமா இருக்கணும். அப்பதான் பிடிக்கும்.''

''இதோ இப்பவே வேணும்னா கேஷுவலா ஒரு நைட்டில கூட வரச்சொல்றேன். போதுமா?''

''ஸ்டுப்பிட் மாதிரி பேசாதீங்க. நான் சொன்னதை நீங்க சரியாப் புரிஞ்சுக்காம இவங்களை அப்ரோச் பண்ணியிருக்கீங்க... இவங்களும் இன்னும் அந்த காலத்துலையே இருக்காங்க. இவங்க மைண்ட் செட் - அப் ரொம்ப புவர்.

நீங்க சொல்ற மாதிரி எல்லாம் கேட்டு ஆடினா என்ன அர்த்தம்...? எனக்குப் பிடிச்சிருக்கு - பிடிக்கலைங்கறதா விஷயம். ஒரு பொண்ணு ஃப்ரீ மைண்டோட இருக்கணும். சாரி... நீங்க என்னை ரொம்ப தர்மசங்கடப் படுத்திட்டீங்க...''

-ராஜேஷ் படு முற்போக்காகப் பேசினான்.

அவன் பேச்சு உஷாவை கலக்கியிருந்தது. கண்களில் கண்ணீர் திரண்டுவிட்டது.

உடம்பிலும் நடுக்கம் பரவ ஆரம்பித்துவிட்டது.

''ஓ... ஏன் அழறீங்க. நான் உங்கள எதுவும் சொல்லலை. என் கொள்கையைச் சொன்னேன். நீங்க தப்பா புரிஞ்சுகிட்டு அழாதீங்க. அ'யம் சாரி...''

''இல்ல... நான் வேணும்னா இந்த பட்டுப் புடவையை அவுத்துப் போட்டுட்டு சாதாரணமா வரவா?''

''நோ... எனக்காக இப்படி நீங்க உடனே உங்களை மாத்திக்க கூடாது. உங்ககிட்ட நான் சில விஷயங்கள் எதிர்பார்க்கற மாதிரி என்கிட்டேயும் நீங்க எதிர்பார்க்கணும். நாம இரண்டும் பேரும் சமம். நம்மோட அலைவரிசை...

தட்மீன்ஸ் ஃப்ரீக்வன்சி ஒத்துப் போகணும். இல்லாட்டி லைஃப் பார்ட்னராகறது ஆபத்து...''

-அவன் சொல்லச் சொல்ல உஷா ஒன்றும் புரியாத மாதிரிதான் வெறித்தாள். ஆனால் பதிலுக்கு ''சபாஷ்... ஒண்டர் ஃபுல்!'' -என்கிற கைத்தட்டல் பின்னால் இருந்து கேட்டது. திரும்பினால் நிஷா!

''வெல்செட் மிஸ்டர் ராஜேஷ்! ஐ அப்ரிஷியேட் யுவர் பாலிசி. ஆரம்பத்துல இருந்தே பாத்தேன். நீங்க யூஷுவல் ராமசாமி குப்புசாமி இல்ல... எங்க ஊர் ரமேஷ் சுரேஷும் இல்ல. நிச்சயமா வித்தியாசமான ஆள். உங்களுக்கு நியூட்ரல் மைண்ட்.''

-அவளே பாராட்டிப் பெருகி வழிந்தாள்.

''நீங்க?''

''ஐ' யம் நிஷா. இந்த உஷாவுக்கு ஜஸ்ட் 526 டேஸ் பின்னால பொறந்த இவளோட இடியட் சிஸ்டர்.''

''இடியட் சிஸ்டர்?''

''அப்படித்தான் இவங்க என்னை சொல்வாங்க.''

''அந்த ட்ராயிங்லாம்?''

''அது நான் வரைஞ்சது தான்...''

''பியூட்டிஃபுல். உங்களுக்குள்ள கலீல் கிப்ரான்ல இருந்து இப்ப தமிழ்ல பாப்புலர் ஆகியிருக்கற தாமரை வரை எல்லாரும் இருக்காங்க. ஒண்டர்ஃபுல்.''

''தேங்க்யூ...இவங்கல்லாம் இதைப் பார்த்து பெயிண்ட் கொட்டிச்சான்னுதான் கேட்டாங்க. நீங்கதான் அதுக்குள்ற இருக்கற ஐடியாவைப் பார்த்துருக்கீங்க...''



-நிஷா சிரித்தபடி சொன்னாள். ராமமூர்த்திக்குப் புரிந்துவிட்டது. 'ராஜேஷ் நிஷாவைத்தான் பிடித்திருக்கிறது என்று சொல்லப்போகிறான். பிள்ளையார் பிடிக்க குரங்காகிவிட்டதே... என்ன செய்வது?' -அவர்கள் பேசிக்கொண்டே போக ராமமூர்த்தி தியாகராஜனைத் தனியே அழைத்தார்.

''என்னங்க?''

''என்ன தியாகராஜன்... கதையே மாறும் போல இருக்குதே...''

''புரியுது... மாப்ளை நிஷாவைத்தான் பிடிச்சிருக்குன்னு சொல்லப் போறாரு... அப்படித்தானே?''

''புரிஞ்சுகிட்டீங்களே...''

''அதுவும் ஒரு வகைல நல்லதுக்குத்தான். உஷாவுக்கு நான் வேற இடம் பாத்துக்கறேன். நிஷாவுக்கும் அவரைப் பிடிச்சிருந்தா முடிச்சுடலாம்.''

''நிஜமாத்தான் சொல்றீங்களா?''

''வேற என்ன பண்ணச் சொல்றீங்க... மனப்பொருத்தம்கறது ரொம்ப முக்கியமான ஒண்ணாச்சே?''

-ராமமூர்த்தியும் தியாகராஜனும் படுவேகமாக ஒரு முடிவுக்கு வந்தனர். மாப்பிள்ளை ராஜேஷ் நிஷாவைத்தான் பிடித்திருக்கிறது என்று சொல்ல வேண்டியதுதான் பாக்கி. அப்படிச் சொன்ன மறுவிநாடியே 'அதற்கென்ன... அப்படியே ஆகட்டும்' என்று சொல்லிவிட வேண்டியதுதான்...

தியாகராஜன் தயாரானார்.

உஷாவைப் பார்த்தார்.

அவள் குழம்பிப் போயிருந்தாள். வெட்கப்பட்டுக் கொண்டு நிற்கவும் பிடிக்கவில்லை... விலகிச் செல்லவும் முடியவில்லை. பரீட்சை ரிசல்ட்டுக்குக் காத்திருக்கும் மாணவி போல அவளுக்குள் ஒரே தவிப்பு.

தியாகராஜன் அவளை உள்ளே போகச் சொல்லிவிட்டு ராஜேஷ் பக்கம் திரும்பினார்.

அவன், ''அ'யம் சாரி... உங்களை எல்லாம் கொஞ்சம் டென்ஷனாக்கிட்டேன்னு நினைக்கிறேன்...'' என்று ராஜேஷ் சற்று தொண்டையைக் கனைத்தபடி செருமினான். அந்த செருமலே அவன் எதையோ சொல்லத் தயங்குவதை அவர்களுக்கு உணர்த்தியது.

ஆனால் அவர்கள்தான் ஏற்கெனவே கணக்கு பண்ணிவிட்டார்களே...?

''என்ன மிஸ்டர் ராஜேஷ்... எதையோ சொல்லத் தயங்கற மாதிரி தெரியுதே...''

''ஆமாம். ஆனா எப்படிச் சொல்றதுன்னுதான் தெரியல.''

''பரவால்ல சும்மா சொல்லுங்க.''

''கல்யாணம்கறது வாழ்க்கைல ஒரே ஒரு தடவை நடக்கற விஷயம்.''

''நான் இல்லேங்கலியே...''

''அதே சமயம் அதுதான் ஒரு மனுஷனுக்கு டர்னிங் பாயின்ட்டும்கூட...''

''ஷ்யூர்...ஷ்யூர்.''

''ஆகையால...'' -ராஜேஷ் வெற்றிலை மாதிரி வார்த்தைகளை மெல்ல, நிஷா கூர்மையானாள். அதற்குமேல் உஷா.



''உம் சொல்லுங்க...''

''எனக்கு உங்க இரண்டு பெண்கள்ல நிஷாவை ரொம்ப பிடிச்சிருக்கு...''

-அவன் முடிக்க, அவள் முகம் மத்தாப்பானது. ஆனால் உஷாவோ கலங்கிப் போய்விட்டிருந்தாள்.

தியாகராஜன் அடுத்த நொடி நிஷாவைத்தான் பார்த்தார். அவளிடம் உற்சாகமான மௌனம்.

அவருக்கும் புரிந்துவிட்டது.

''ரொம்ப சந்தோஷம் மிஸ்டர் ராஜேஷ். மனசுல பட்டதை சொல்லிட்டீங்க. நீங்க சொன்ன மாதிரி கல்யாணம்கறது மனசுக்குப் பிடிச்சவங்களோட ஒரே ஒருமுறை நடக்கற ஒரு திருப்பு முனையான ஒரு சம்பவம் அது.

இந்த விஷயத்துல நிஷாவுக்கும் உங்களைப் பிடிச்சா எனக்கு ஆட்சேபணை இல்லை.''

-தியாகராஜன் சுற்றிவளைக்காமல் பாயின்ட்டுக்கு வந்தார். நிஷாவும் வெட்கத்தோடு உள்ளே ஓடினாள். அவள் இப்படி வெட்கப்பட்டு தியாகராஜன் பார்த்ததேயில்லை.

கைதட்டி ரசித்து சிரித்தார்.

ஆனால் உஷாவின் கண்களிலோ கண்ணீரின் பிரவாகம்!

## 3

**'மனத்தைப்பற்றி நன்கு அறிந்தவர்கள் புத்தபிட்சுக்கள். இவர்கள் மனத்தைக் கட்டுப்படுத்தி அளப்பரிய சாதனைகள் பல செய்யக் கூடியவர்கள்.**

உடம்பின் சக்தி உண்ணும் உணவால் உருவாவது.

அதன் நிழலைப் போன்றதுதான் மனோ சக்தி என்பது இவர்கள் கருத்து.

உடம்பின் சக்தியைப் பொறுத்தே மனத்தில் சக்தியும் இருக்கும். எனவே உடம்பை நலத்தோடும் பலத்தோடும் பேணவேண்டும் என்பார்கள்.

இதையே நமது முன்னோர்களும் 'ஆரோக்கியமே பெரிய செல்வம்' என்றனர்.

ஒருமுறை ஒரு புத்த பிட்சு காட்டு வழியே நடந்து சென்று கொண்டிருந்தாராம். அப்பொழுது அவரை நோக்கி ஒரு வேடன் ஓடிவந்து விழுந்தான். வந்தவன் அவரைப் பார்த்து ஒரு புலி துரத்தி வருவதாகக் கூறி தப்பித்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, அருகில் உள்ள மரத்தின்மேல் அவன் ஏறிக் கொண்டான். அதே வேளையில் அந்தப் புலியும் துரத்திக்கொண்டு வந்தது. பிட்சுவைப் பார்த்துவிட்டு பாய்வதற்குத் தயாரானது. ஆனால் பிட்சு துளியும் அயரவில்லை. அந்த புலியை மிக சாந்தமான பார்வைதான் பார்த்தார். பாயத் தயாரான புலி மெல்ல மாறி அடங்கி அவரிடம் ஒரு நாயினைப் போல அடங்கிச் சென்று நின்றது.

வேடன் விக்கித்துப் போனான். பிட்சு புலியை அனுப்பிவிட்டுத் திரும்பவும், அவரிடம் வந்த வேடன் உங்களுக்கு வசியம் தெரியுமா? என்று கேட்டான்.

பிட்சு சிரித்தார். அவன் கருத்தையும் மறுத்தார். 'பின் எப்படி கொடிய புலி உங்களுக்கு அடங்கியது?' என்று கேட்டான்.

'நான் அதன் நண்பன் என்கிற எண்ணத்தை அதற்கு ஏற்படுத்தினேன் - அதனால் அது அடங்கியது' என்றார்.



'அது எப்படி முடியும்...? நீங்கள் அதைச் சாந்தமாகப் பார்க்க மட்டும் தானே செய்தீர்கள்?' என்று கேட்டான். 'பேசுவதைவிட பார்ப்பதில் நிறைய செய்திகளைப் பரிமாறிக் கொள்ளலாம் வேடனே...!' என்றார் பிட்சு.

'அப்படியானால் எங்கே... என்னிடம் அப்படிப் பேசி எனக்குப் புரியவையுங்கள் பார்ப்போம்' என்றான்.

'இப்பொழுது வேண்டாம். இன்னொரு நாள் வா. உன்னிடம் பேசாமல் பேசிப் புரியவைக்கிறேன்' என்றார்.

'ஏன் இப்பொழுது தவிக்கிறீர்கள்?' என்று கேட்டான்.

'உன் மனம் இப்பொழுது பரபரப்பில் இருக்கிறது. மனம் சிறிதும் சலனமின்றி உறைபனிபோல இருக்க வேண்டும். அப்படி இருந்தால் எதுவேண்டுமானாலும் செய்யலாம்' என்றார் அவர். 'அது எப்படி?' என்று கேள்விகளை வளர்த்திக் கொண்டே போனான் அவன்.

அவர் சிரித்தபடி 'அதோ பார் வானத்தில் ஒரு ரதம்' என்று மேகப் பொதி ஒன்றைக் காட்டினார். அவனும் பார்த்துவிட்டு திரும்பியபோது அந்தபிட்சு அங்கே இல்லை. அவர் அவனை அப்போது தவிர்த்துவிட்டார்.'

❖❖❖

அழுது வடிந்தபடி அமர்ந்திருந்தாள் உஷா.

அத்தை கனகம் வந்தாள்.

''எதுக்குடி வருத்தப்பட்டே... கல்யாணம்கறது நம்ம கைலயா இருக்கு -அது ஆண்டவன் போட்ற முடிச்சுடி''-என்றாள்.

உஷா பதிலுக்கு முறைத்தாள்.

''முறைக்காதே... ஒரு விஷயம் தெரிஞ்சுக்கோ. ஒருத்தன் பொண்டாட்டியை இன்னொருத்தன் கட்ட முடியாதுன்னு சொல்வாங்க. அப்படின்னா அர்த்தம் என்ன தெரியுமா?''

-இடை வெளி விட்டாள்.

''போ அத்தை... நீ எதையாவது சொல்லாதே. நான் ஒரு அதிர்ஷ்டக்கட்டை...'' என்றாள் பதிலுக்கு உஷா.

''அட பைத்தியமே... ஒரு மாப்பிள்ளை வந்து உன்னை வேண்டாம்னுட்டதுக்காக நீ அதிர்ஷ்டக்கட்டை ஆயிடுவியாக்கும். பைத்தியம். அவன் தாண்டி அதிர்ஷ்டக் கட்டை. அந்த நிஷா ஒரு காட்டுக்குதிரை. அவளோட ஒருத்தன் குடும்ப நடத்த முடியும்னு நினைக்கறே நீ?''

''அப்படி நினைக்காமதான் 'எனக்கேத்த ஜோடி இவ'ன்னு அவளைக் கட்டிக்கறேன்னு சொன்னாராக்கும்?''

''அங்கதான் அந்த மாப்பிள்ளைத் தம்பி தப்பு பண்ணிட்டான். நீ பாரேன் - அவன் என்ன பாடுபடப் போறான்னு...''

-கனகத்தின் சமாதானம் கொஞ்சம் போல வேலை செய்தது. உஷாவும் கண்ணீரைத் துடைத்துவிட்டுக் கொண்டு அடுத்த வேலையைப் பார்க்கத் தொடங்கினாள். கனகம் நேராக தியாகராஜனிடம் போய் நின்றாள். அவர் வாயில்புறம் ஈஸிசேர் போட்டு அதில் சாய்ந்திருந்தார்.

''என்னக்கா?''

''உன் பொண்ணை சமாதானப்படுத்தறதுக்குள்ள போதும் போதும்னு ஆயிடிச்சு தெரியுமா?''



''என்ன பண்ணச் சொல்றே... யாரா இருந்தாலும் வருத்தமாத்தானே இருக்கும்?''

''அதுக்காக...? சட்டுபுட்டுன்னு அவளுக்கும் ஒரு வரனைப் பார்த்து இரண்டு பேருக்கும் ஒரே நாள்ல கல்யாணத்த முடி.''

''அமையணுமேக்கா...''

''ஏன் அமையாது? ஒரு பையன் இப்படிப் பண்ணிட்ட தால வர்றவன்லாம் இப்படியே நடந்துப்பான்னு ஏன் நினைக்கறே...?''

''அப்ப உஷாவுக்கும் வேகமா மாப்ளை பாத்து ஒரே நாள்ல இரண்டு கல்யாணம் பண்ணுங்கறே... அப்படித் தானே?''

''அப்பத்தான் இவளுக்கும் மனசு சமாதானமாகும். இல்லன்னா பெரியவ இருக்க சின்னவ விலை போய்ட்டான்னா இந்தப் பொண்ணுகிட்ட ஏதோ குறை இருக்குன்னு, நினைக்க ஆரம்பிச்சுடுவாங்க - அதுவே ஒரு மைனஸ் பாய்ண்ட்டாகி இவளுக்கு நீ கல்யாணமே பண்ண முடியாம கூடப் போகலாம்.''

''ஓ... அப்படிக்கூட ஒரு இடைஞ்சல் இருக்குல்ல...?''

''இடைஞ்சல்லயே பெரிய இடைஞ்சல் அதுதான்...''

-கனகம் பற்ற வைத்தது தியாகராஜனுக்குள் நன்றாகவே பற்றிக் கொண்டது. கையில் இருந்த பேப்பரில் மணமகள் தேவை பகுதியில் வேகமாக ஊடுருவ ஆரம்பித்தார்.

மதியம் மணி 12 இருக்கும்!

அந்த அபார்ட்மெண்ட்டின் 'சி' பிளாக்கில் குடி இருக்கும் நவநீதனும் அவர் மனைவி பார்வதியும் தியாகராஜனைப் பார்க்க வந்தனர்.

''வாங்க... வாங்க...'' -தியாகராஜனும் வரவேற்று அமர்த்தினார்.

''உங்களை எல்லாம் விட்டுத்தான் போகப் போறோமே... அதோன் சொல்லிட்டு போகத்தான் வந்தோம்...''

''என்னது... குண்டத்தூக்கி போட்ரீங்க?''

''குண்டாவது பாமாவது... நான் பேங்க் உத்தியோகஸ்தன். பிரமோஷன் தந்து ஊர் ஊரா மாத்தறது தானே எங்க உத்தியோக லட்சணம்.''

''ஓ... பிரமோஷன்ல போறீங்களாக்கும்?''

''ஆமாம்... காட்பாடி பிராஞ்ச்சுக்கு ட்ரான்ஸ்ஃபர்.''

''எனக்குத் தெரியாது நவநீதன். நான் இப்பதான் கேள்விப்பட்றேன்.''

''அதனால என்ன... பழிகினவரைல தாயா பிள்ளையா நல்லா பழகிட்டோம். கவலப்படாதீங்க. நிஷா கல்யாணத் துக்கு நிச்சயம் வந்துடுவோம்.''

''அது சரி... நீங்கல்லாம் இல்லாமலா?''

''அப்புறம் ஒரு முக்கியமான விஷயம்...''

''என்ன சொல்லுங்க...''

''வீட்டை நல்லபடியா யாருக்காவது வாடகைக்கு விடணும். பூட்டிவெச்சா அது வீட்டுக்கு நல்லது இல்லேம்பாங்க...''

''வாஸ்தவம்தானே... ஏன் பூட்டி வைக்கறீங்க? வாடகைக்கு விட்டா வீடும் பாதுகாப்பா இருக்கும். மாசமானா பணமும் வரும்ல?''



''அதான்... யாராவது ஒரு நல்ல பார்ட்டிக்கு நீங்களே வாடகைக்கு விட்ருங்களேன்.''

''நானா?''

''நீங்களேதான்... இருந்து பார்த்து வாடகைக்கு வைக்க எனக்கு லீவு கிடையாது. இங்க எங்களுக்கு நல்லபழக்கம்னா நீங்கதானே?''

''சரி... வாடகை எவ்வளவு?''

''எல்லாம் உங்க விருப்பம். கொஞ்சம் லேட்டானாலும் பரவால்ல. நல்ல நபர்களுக்கா விடுங்க. அதுபோதும்.''

''அப்ப ஒண்ணு பண்றேன்.''

''என்ன?''

''என் இரண்டு பொண்ணுங்க கல்யாணம் முடியறவரை உங்க வீடு என் பொறுப்புல என்கிட்டயே இருக்கட்டும். கல்யாணத்துக்கு வர்றவங்க தங்க கொள்ள பயன்படட்டும். பிறகு நான் நல்ல ஆளா பாத்து வாடகைக்கு விட்டுட்றேன்.''

''சந்தோஷமா செய்யுங்க. வெறும பூட்டி வைக்காம தினசரி யாராவது போய் படுத்துகிட்டாக்கூட சந்தோஷம்.''

''நானே போய்ப் படுத்துக்கறேன். இப்ப என்ன?''

''அப்புறம் ஒரு விஷயம்...''

''என்ன நவநீதம்?''

''உங்களுக்குத் தெரியாததில்ல...''

''எதை சொல்றீங்க?''

''எங்கப்பா விஷயம்தான்...''

-நவநீதம் 'அப்பா விஷயம்தான்' என்று சொன்ன நிமிஷம் தியாகராஜன் முகத்தில் ஏகப்பட்ட மாறுதல்கள்!

நவநீதனின் அப்பா நடராஜபிள்ளை ஒரு யோகாசன வித்தைக்காரராக இருந்தவர்.

அந்த அபார்ட்மென்ட்டில் பலருக்கு யோகாசனம் செய்வது எப்படி என்றெல்லாம் சொல்லிக் கொடுத்தவர். அவரும் விதம்விதமாக ஆசனங்கள் போடுவார். பார்க்கவே படுபிரமிப்பாக இருக்கும்.

ஒரு கட்டத்தில் காவி உடுத்தி சன்யாசம் வாங்கிக் கொண்டு ஏலகிரி மலையில் உள்ள அவரது குருநாதர் ஆஸ்ரமத்துக்கே போய்விட்டார்.

அதன்பின் எப்பொழுதாவது நவநீதத்தையும் அவர் மனைவி பார்வதியையும் பார்க்க வருவார்.

அப்பொழுது அந்த அபார்ட்மென்ட்டே அவரைப் பார்த்துவிட்டு காலில் விழுந்து வணங்கும்.

பிறகு ஒரு நாள் அவர் மகாசமாதி ஆக இருப்பதாகக் கூறி நவநீதத்துக்கு தகவல் வந்தது.

மகாசமாதி ஆவது என்றால் சமாதிக்குழியில் அமர்ந்த நிலையில் குறிப்பிட்ட சமயத்தில் பிராணமூச்சை தானாக நிறுத்திக் கொண்டுவிடுவது.

நவநீதமும், பார்வதியும் அலறி அடித்துக் கொண்டு புறப்பட்டார்கள். ஆனால் அவர்கள் துரதிர்ஷ்டம் - அன்று எதற்கோ பந்த் நடைபெற்று ஊரே மயான அமைதியில் இருந்தது. ஒரு டாக்சிக்காரன் கூட வர மறுத்துவிட்டான். எப்படியோ ஒரு காரைப் பிடித்து ஏலகிரிக்குப் போனபோது நடராஜபிள்ளை சமாதியாகி விட்டிருந்தார். சமாதியை



சலவைக்கல்லால் மூடி மேலே பிருந்தாவன மேடை ஒன்றும் கட்டி அதில் ஒரு துளசி நாற்றையும் வைத்துவிட்டார்கள்.

நவநீதனுக்கும் பார்வதிக்கும் பொசுக்கென்று ஆகிவிட்டது. கண்ணீர்விட்டு அழுதபடி அந்த பிருந்தாவனத்தை 11 முறை சுற்றி வணங்கிவிட்டு திரும்பிவிட்டனர்.

ஆனால் அவர்களின் மகன் ஐந்து வயது அவிநாஷ், தாத்தா இறந்தது தெரியாமல் அடிக்கடி தாத்தாவைப் பார்க்கவேண்டும் என்று அடம் பிடிக்க, அப்போதெல்லாம் எதையோ சொல்லி சமாளித்திருக்கின்றனர். ஒரு கட்டத்தில் முடியாமல் போய் 'உன் தாத்தா இறந்துவிட்டார்' என்று கூற 'இறந்து போவது என்றால் என்ன?' என்று கேட்டிருக்கிறான் அவினாஷ்.

இறந்துபோவது என்றால் கடவுளிடம் போய்ச் சேர்ந்துவிடுவது என்று கூறியும் அவன் சமாதானமாகவில்லை. 'அதெல்லாம் எனக்குத் தெரியாது. கடவுளிடம் போனதாத்தா என்னைப் பார்க்க வரவேண்டும். நானே கடவுளிடம் கேட்கிறேன்' என்று சாமிபடங்களின் முன்னால் நின்று வேண்டிக் கொள்ள ஆரம்பித்துவிட்டான். இறுதியில் அது நெப்பு நிதானம் இல்லாத காய்ச்சலில் போய் முடிந்தது. டாக்டர்கள் வந்து ஊசி போட்டு மருந்து மாத்திரை கொடுத்துவிட்டுச் சென்றனர்.

இருந்தும் குணமே ஆகவில்லை.

நவநீதம் பயந்து நடுங்க ஆரம்பித்துவிட்டார். அவரது பரம்பரையில் எப்பொழுதும் ஒரே வாரிசுதான். அவரது தாத்தாவுக்கு அவர் அப்பா ஒரே வாரிசு. அவர் அப்பவுக்கு நவநீதன் ஒரே வாரிசு. அவருக்கு அவினாஷ் ஒரே வாரிசு. அப்படி ஒரே வாரிசுத் தொடர்ச்சியில் அவினாஷ்

இறந்துவிட்டால் அவ்வளவு தான்... பரம்பரைத் தொடர்பே முடிந்து போய்விடும். எனவே நவநீதன் பரிதவித்துப் போனார்.

அவரது பரம்பரையில் இப்படி பால்ய வயதில் மரணம் தரிப்பதும், முதியவர்கள் சாமியார்கள் ஆவதும் பல தலைமுறையாய் நடந்து வந்திருக்கிறது. எல்லாம் சேர்ந்து நவநீதனை மிரட்டியது.

என்ன செய்வது என்றே தெரியவில்லை.

அப்போது ஒருவர் நவநீதனைப் பார்த்து ''ஓசைப் படாமல் உங்கள் அப்பா சமாதியாகிவிட்ட பிருந்தா வனத்துக்குப் போய் பிரார்த்தனை செய்துவிட்டு வாருங்கள். உங்கள் அப்பா எல்லோரையும் போல உடல் நலமில்லாமல் போய் எமன் வந்து அழைத்துப் போகப்பட்டவர் அல்ல... எமனை அழைத்து என்னைக் கூட்டிச்செல் என்று உயிர் மூச்சை தானாக நிறுத்திக் கொண்டவர். இப்படி சமாதியானவர்களுக்கு சக்தி அதிகம். இன்றும் மகான் ராகவேந்திரரின் பிருந்தா வனத்துக்கு எல்லோரும் செல்லக் காரணம் அவரது ஆத்ம, பிராண சக்தி அங்கே பொங்கி வழிந்து கொண்டிருப்பதுதான். ஆகவே உங்கள் அப்பாவின் சமாதியாகிய ஏலகிரி மலை பிருந்தாவனத்துக்குச் செல்லுங்கள். அவரிடம் பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள்'' என்றார்.

நவநீதனுக்கும் அதைவிடச் சிறப்பான ஒரு வழி இருக்கிற மாதிரி தெரியவில்லை. எனவே ஏலகிரி மலை பிருந்தாவனம் நோக்கி அவர் மட்டும் ஓடினார். அதே சமயம் அவினாஷ் வீட்டில் படுத்த படுக்கையாக இருக்க - பார்வதி அவன் அருகிலேயே இருந்து கவனித்துக் கொண்டாள்.

நவநீதனும் ஏலகிரி மலைக்குப் போய் பிரார்த்தனையை முடித்துக் கொண்டு திரும்பவும் - அவருக்கு ஒரு அதிர்ச்சி காத்துக் கொண்டிருந்தது.



பார்வதி அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்க, குழந்தை அவினாஷ் உற்சாகமாய் எழுந்து அமர்ந்து பொம்மை ஒன்றுடன் விளையாடிக் கொண்டிருந்தான்.

நவநீதன் பார்வதியை எழுப்பவும் அவளும் எழுந்து பார்த்து ஆச்சிரியப்பட்டுப் போனாள்.

''என்னங்க இது ஆச்சரியம்... காச்சல்ல கண்ணு முழி திறக்காம படுத்திருந்தான். மருந்து கொடுத்துட்டு நானும் அசந்துட்டேன். முழிச்சுப் பார்த்தா நீங்க இருக்கீங்க. இவனும் விளையாடிக்கிட்டு இருக்கான்'' என்று சொல்லி அவள் ஆச்சரியப்பட, அவினாஷ் சிரித்தபடி சொன்னான்:

''அப்பா... தாத்தா வந்தாங்களே...''

''என்னது... தாத்தாவா...? இங்கையா?''

''ஆமாம்ப்பா... அவர்தான் இந்த பொம்மை தந்தாங்க...'' -அவன் ஒரு பொம்மையைக் காட்டினான்.

புதிய சீனதேசத்து குபேரன் தாத்தா பொம்மை! நவநீதன் நெடு நேரம் குழம்பிவிட்டு பிறகு ஒரு மாதிரி சமாதானம் ஆகி யாராவது ஒரு தாத்தா எதற்கோ வந்திருக்க வேண்டும் - அவர்தான் தந்திருக்க வேண்டும்.

-இவன் அவரை தன் தாத்தா நடராஜ பிள்ளையாக நினைக்கிறான் போல் இருக்கிறது என்று நினைத்து சமாதானமாகிவிட்டார்.

ஆனால் அதன்பின் தொட்டுத் தொட்டு அதிசயங்கள் நடக்க ஆரம்பித்தன.

ஐந்து வயது அவினாஷ் உடம்பை வில்லா வளைத்து தானாக தனுராசனம், உட்கட்டாசனம், வஜ்ராசனம், கபாலபதி என்று ஆசனங்களில் உன்னதமானதை எல்லாம் தானாகவே செய்ய ஆரம்பித்தான்.

''அவி... உனக்கு எப்படி இதெல்லாம் தெரியும்?''. என்று கேட்டபோது, ''அதான் தாத்தா டெய்லி என்னைப் பார்க்க வராறே, அவர்தான் சொல்லித் தந்தார்...'' என்று அதிர்ச்சியளித்தான்.

''அவரா சொல்லிக் கொடுத்தாரு...?''

''ஆமாம்...''

''பொய் சொல்லாதே. அவரெல்லாம் வரமாட்டாரு.''

''நான் ஏன் பொய் சொல்லணும். வேணும்னா தாத்தா வரும்போது அவர்கிட்டையே நீங்க இப்படிச் சொன்னதை சொல்றேன்.''

''உளறாதே. செத்துப் போனவர் எப்படிடா வரமுடியும்? வயசுக்குத் தகுந்த பேச்சுப் பேசு.''

''செத்துப் போனா என்ன... சாமிகிட்ட சொல்லிட்டு வரலாமாமே. நான் கேட்டேனே - தாத்தா சொன்னாரே...'' -அவினாஷ் பதிலுக்கு பதில் அதிர்ச்சியளித்தான். அவன் ஏதோ சிறுபிள்ளைத் தனமாக உளறுவதாகத்தான் நினைத்தார் நவநீதன். ஆனால் அதிசயமாக ஒரு நாள் ஒரு ஏட்டுக்கட்டுடன் உட்கார்ந்து அதைப் புரட்டிக் கொண்டிருந்தான் அவினாஷ். ஏது என்று கேட்டதற்கு ''தாத்தா வந்தபோது விட்டுவிட்டு போய்விட்டார்.'' என்றான். நவநீதன் பயப்பட ஆரம்பித்து விட்டார். ரகசியமாக அவனை கண்காணிக்க ஆரம்பித்தார். அவர் கண்காணிப்பது தெரிந்தோ இல்லை வேறு காரணத் தாலோ அவர் பார்க்கும்போது அவினாஷிடம் யாரும் வரவில்லை.

அதே சமயம் பாத்ரூம் போய்விட்டு வருவதற்குள் அவரே வந்து கொடுத்த ஏட்டுக்கட்டை திரும்ப எடுத்துக் கொண்டு போய்விட்டதாகக் கூறினான். அப்போழுது



நெற்றியில் விபூதியை இட்டதாகவும் சொல்லி நெற்றியைக் காட்ட ஜவ்வாது வாசமுடன் விபூதி கமகமவென்று மணந்தது.

'இது எப்படிச் சாத்தியம்?'

யாராவது இவனிடம் வந்து விளையாட்டு காட்டு கின்றார்களா?

இல்லை இவன்தான் புரியாமல் பேசுகிறானா?' நவநீதனுக்குத் தெரியவில்லை. ஆனால் விஷயம் எப்படியோ அக்கம்பக்கம் பிளாட்டுகளில் கசிந்து மகாசமாதியான நடராஜபிள்ளை அவரது வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருக்கிறார் என்கிற மாதிரி பரவிவிட்டது.

இந்த நிலையில் தான் ட்ரான்ஸ் ஃபரும் வந்து நவநீதன் காட்பாடி கிளம்பும்படி ஆகிவிட்டது.

எனவேதான் வீட்டுச் சாவியைக் கொடுத்து வாடகைக்கு விடச் சொன்னவர், அப்பா விஷயம் என்று சொல்லவும் தியாகராஜனே ஒரு விநாடி சலனப்படும்படி ஆகிவிட்டது.

''என்ன தியாராஜன்... அந்த வதந்தியை நீங்களுமா நம்பறீங்க?''

''அதெல்லாம் இல்ல. இருந்தாலும் ஒரு சின்ன நெருடல்.''

''என்னவோ போங்க. செத்தும் கொடுத்தான் சீதக்காதிம்பாங்க. எங்கப்பா நேர் எதிர் பலன் கொடுத்துக்கிட்டிருக்காரு. இல்ல வேற யாராவது என் மகன்கிட்ட கண்ணாமூச்சி ஆட்றாங்களான்னு தெரியலை. இத்தனைக்கும் அவன் கூடவே இருந்தும் கவனிச்சேன். என்கண்ணுக்கு நான் பார்த்தவரைல அப்பாவும் வரலை, தாத்தாவும் வரலை.''

''நான் நினைக்கறேன். அவினாஷ் தனக்குத்தானே நினைச்சுப் பாத்துகிட்டு அதைத்தான் தாத்தா வந்தாரு அப்படி இப்படின்னு சொல்லிக்கிட்டிருக்கணும். நீங்க டாக்டர்கள்கிட்ட கூட்டிக்கிட்டு போய் காட்டியிருக்கணும். ஆனாவிட்டுட்டீங்க''

-அலுத்துக் கொண்டார்

''நானும் போகணும்னு நினைச்சேன் தியாகராஜன். ஆனா காலே வரலை. இந்த ஒரு விஷயம்தான் அவினாஷ்கிட்ட சிக்கல். மத்ததுல எல்லாம் எவ்வளவு சுபீரியரா இருக்கான் தெரியுமா?

இவ்வளவு ஏன்... வீட்லையே மாடத்துல விளக்கு ஏத்தி வெச்சுட்டு அதையே உத்துப்பார்த்து பெரிய மகான் மாதிரி தியானம் பண்றான். கேட்டா தாத்தாதான் சொல்லிக் கொடுத்தாருங்கறான்.

அதுமட்டுமில்ல... அவஅம்மா... அதான் இங்க இருக்காளே பார்வதி... இவளுக்கு ஒருநாள் சொல்ல முடியாத அளவு தலைவலி. தைலம் போட்டு தடவுதடவுன்னு தடவிப் பார்த்திருக்கா. ஒண்ணும் சரிப்பட்டு வரலை. ஆனா இந்தப்பய வந்து நெத்திய தொட்டு ஒரு இரண்டு தடவை அப்படியும் இப்படியும் நீவியிருப்பான். அவ்வளவுதான். தலைவலியே சுத்தமா இல்லேங்கறா. இதை என்னன்னு செல்லறது?''

''டச் தெரஃபி மாதிரி தெரியுதே...''

''யாருக்கு தெரியும்... கேட்டா தாத்தா வீட்டுக்கு வரார். ஒவ்வொண்ணா சொல்லித்தராருங்கறான். நான் என்னத்த சொல்ல...?''

''சரி சரி... இப்ப எங்க அவினாஷ்...?''



''வெளிய பசங்களோட விளையாடிக்கிட்டிருக்கான்!''

''கூட்டிக்கிட்டு வந்திருக்கலாமே...''

''வரமாட்டேன்னுட்டான். புரிஞ்சுக்கவே முடியல. ஒரு பக்கம் பெரிய மனுஷன் மாதிரி தியானம், யோகம்னு போறான். மறுபக்கம் இப்படி வயசுக்குத் தகுந்த மாதிரி ஒரே விளையாட்டு. என்னன்னு சொல்வேன்.''

-நவநீதன் பெருமூச்சுவிட்டார். தனது ஒரே வாரிசு இப்படி புரியாத ஒரு புதிராக இருக்கிறதே என்னும் ஆதங்கம் அதில் விரவிக்கிடந்தது.

அவர்கள் பேசிக் கொண்டிருக்க அவ்வளவையும் உள்ளிருந்த உஷா கேட்டுக்கொண்டுதான் இருந்தாள். அவளுக்கு அவர்கள் பேச்சை எந்தக் கணக்கில் எடுத்துக் கொள்வது என்றுதான் தெரியவில்லை!

## 4

**'பஞ்ச பூதங்களில் நெருப்பின் அம்சம் ஒளி. அந்த ஒளியை உணர்வது உடம்பிலேயே கண்தான். ஒரு ஆச்சரியம் - ஒளியை ஊடுருவிப் பார்க்கவல்ல கண்ணின் 'பாப்பா' கருமையானது. அது பதிந்து கிடக்கும் விழிப்படலம் வெண்ணிறமானது. அதுவும்கூட தட்டையாகவும் சதுரமாகவும் செவ்வகமாகவும் எல்லாம் இல்லாமல் உருண்டு புரளக்கூடிய ஒரு கோலியைப்போல் இருப்பது கவனிக்கப்படவேண்டிய ஒன்றாகும். முனைகளற்ற - உருண்டு ஓட முடிந்த ஒரு வெள்ளைப் பந்தில் இருட்டின் நிறத்தில் உள்ள கரிய பாப்பாதான் ஒளியை ஊடுருவுகிறது. உள்ளபடியே நமது கண் பார்க்கிறது என்று நாம் சொல்லும் ஒரு விஷயத்தில் பல உண்மைகள் இருக்கின்றனவாம். அதாவது**

நம்கண்பார்ப்பது என்பது பொய்யாம். வெளியே உள்ள ஒளிதான் கண்ணில் ஊடுருவி ஏறுகிறதாம். அது பார்ப்பதாக நம்மால் உணரப்படுகிறதாம். ஒளி நம்கண்ணில் ஊடுருவ வட்டவடிவில் ஒரு கரியதிரை காத்திருக்கிறது. அதில் ஒளி பட்டு பிரதிபலிக்கிறது. அந்த பிரதிபலிப்பைத் தான் பார்வை என்கிறோம். இந்த பிரதிபலிப்பை அதாவது வெளியே இருந்து கண்ணின் 'பாப்பா'வில் விழும் ஒளியின் வீச்சு அளவைப் பொருத்தே பார்வை. பார்ப்பதை வைத்து உடனே மனது எதைப் பார்க்கிறோம் என்று நொடிக்கும் குறைவான காலத்தில் புரிந்துகொண்டுவிடுகிறது. அதுதான் செய்தியாகி மூளைக்குச் சென்று அதற்கேற்ப உடம்பு இயங்குகிறது.

கண்ணின் இந்த இயக்கத்தைப் புரிந்து கொண்டுவிட்டால் இதன் மூலமாகவே எதுவும் பேசாமல் பலசெய்திகளைக் கூற முடியுமாம். அந்தச் செய்தியை மனமும் அறிந்து அதற்கேற்ப செயல்படுமாம்!'

❖❖❖

ஒருவாரம் ஓடிவிட்டது!

நிஷாவுக்கு தரையில் கால் நிற்கவில்லை. அந்த அமெரிக்க மாப்பிள்ளையை நினைத்து நினைத்து பூரித்துக்கொண்டிருந்தாள்.

நடுநடுவே உஷாவையும் சீண்டிக்கொண்டுதான் இருந்தாள்.

''ஏய் குடாக்... கொஞ்சமாவது மாடர்னா டிரஸ்பண்ணு. இப்படியே இருந்தே லோக்கல் சமையல்காரன்கூட உன்னை கன்சிடர் பண்ணமாட்டான்'' என்றாள்.



எப்பொழுதும் தொலைபேசி அருகிலேயே பழியாகக் கிடந்து மாப்பிள்ளை ராஜேஷிடம் வழிந்து கொண்டிருந்தாள். உஷாவை அவள் செய்கை மிகவும்தான் வாட்டியது.

ஒரு கட்டத்தில் உஷா நிஷாவை ஓங்கி ஒரு அறைவிடும் அளவுக்குப் போய்விட்டது. இவள் அறைய பதிலுக்கு அவள் அறைய ஒரே ரகளை.

தியாகராஜன் இடையிட்டு சமாதானம் செய்வதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது.

அத்தை கனகம் நடுவில் ஒரு அழகான வழியைச் சொன்னாள்.

''உஷா... நீ பேசாம நவநீதம் சார் பிளாட்டுக்கு போய்டு. சாப்பிடமட்டும் இங்கவா. இவமுகத்துலையே விழிக்க வேண்டாம். அந்த பிளாட் சாவி நம்ம வீட்லதானே இருக்கு...?'' என்றாள்.

ஆரம்பத்தில் உஷா அந்த சாவியை எடுத்துக்கொண்டு அந்த வீட்டுக்குப் போய் தங்க ரொம்பவும்தான் பயந்தாள். ஆனால் நிஷாவைவிட அந்த வீடு ஒன்றும் பயங்கரமானது இல்லை என்று ஒரு க்ஷணம் நினைத்தவள் பேசாமல் அங்கே போய்விட்டாள்.

ஒரு தலையணை, ஒரு பாய், ஒரு போர்வை, ஒரு டவல், ஒரு சோப் பாக்ஸ், பிளாஸ்டிக் பக்கெட் ஒன்று, மக் ஒன்று...

மேற்படி சமாச்சாரங்களுடன் அந்த வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவள் குப்பையும் கூளமுமாய் இருந்த ஹாலையும், அறைகளையும் முதல்காரியமாய்க் கூட்டி சுத்தப் படுத்தினாள்.

ஒருவாரம் ஆகிவிட்டது-நவநீதம் சாவிகொடுத்து... ஆனால் தியாகராஜனோ தினம் போய் படுத்துக

வேண்டும் என்று நினைத்ததோடுசரி. இரண்டு வயசுப் பெண்களைத் தனியே விட்டுவிட்டுப் போய் ஒரு வீட்டில் படுப்பதா என்று நினைத்தோ என்னவோ இங்கே வந்து படுத்துக் கொள்ளவே இல்லை. உஷாதான் முதன் முதலாக வந்திருக்கிறாள்.

இப்பொழுது வந்திருப்பதுகூட தியாகராஜனுக்குத் தெரியாது. அவர் உஷாவுக்கு மாப்பிள்ளை பார்ப்பது தொடர்பாகத்தான் பொள்ளாச்சி வரைக்கும் போயிருக்கிறார்.

எனவே உஷாவுக்கு செளகர்யமாகப் போய்விட்டது. ஒரு வழியாக சுத்தம் செய்து முடித்தவள் பாத்ரூம் பக்கம் சென்று குழாயைத்திறந்து தண்ணீர் வருகிறதா என்றெல்லாம் பார்த்துவிட்டு வந்து பாயை விரித்தாள்.

வீட்டில் ஒரு ட்ரான்சிஸ்டர் இருக்கிறது.

அதைக் கொண்டு வந்து விட்டால் அமைதியாக பாட்டுக்கேட்கலாம் என்று தோன்றியது. அதற்காக வெளியே கிளம்ப கால் எடுத்தவள் அப்பொழுதுதான் வீட்டின் நடுவில் ஒரு அறை சாத்தியே இருப்பதைப் பார்த்தாள்.

அதை நவநீதன் இருந்தவரை பூஜை அறையாகப் பயன்படுத்தி வந்தது ஞாபகம் வந்தது. உள்ளே ஒரு ஷெல்ப்! அதில்தான் சுவாமிபடங்கள் இருந்தன. பக்கத்தில் ஒரு மூங்கில் ஷெல்ப். அதில் நிறைய புத்தங்கள்.

ஆவலாகக் கதவைத் திறந்து உள்ளே பார்வையை ஓடவிட்டாள் உஷா! பலத்த ஆச்சரியம் தரும் ஒரு விஷயம் காத்திருந்தது. உள்ளே நடு மாடத்தில் சுவாமிஷெல்ப்புக்கு மேலே ஒரு அகல் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அருகே சென்று பார்த்தாள். விளக்கில் வழிய வழிய எண்ணெய் என்று இல்லாமல் வறண்டகுளம் போலக் கிடந்தது குழிப்பாகம்.



இருந்தும் திரியில் தீபச் சுடர் எந்த சலனமும் இன்றி எரிந்தபடி இருந்தது!

'எப்படி இது சாத்யம்?'

'ஒருவேளை எண்ணெயெல்லாம் தீர்ந்து முடிந்த நிலையில் கதவைத் திறந்து நான் பார்த்திருக்கிறேனா!' அவளுக்குள் எண்ணங்களின் ஓட்டம்! இறுதியில் அப்படித் தான் இருக்கமுடியும் என்கிற எண்ணத்துடன் திரும்பிக் கதவைத் தாழிட்டுவிட்டு வெளியே வந்து பூட்டிவிட்டு வீடுநோக்கி நடந்தாள். நடக்கும் போதும் அதே சிந்தனை... ஒரு வாரமாய் பூட்டியிருக்கும் ஒரு வீட்டில் எப்படி ஒரு விளக்கு எரிய முடியும்? ஒரு வேளை தியாகராஜன் காலையில் பொள்ளாச்சிக்குப் புறப்படும் போது இங்கே வந்து விளக்கேற்றி வைத்துவிட்டு போயிருப்பாரோ? அப்படித்தான் இருக்கும் என்று தோன்றியது.

வீட்டுக்குள் நுழைந்தவளை குத்தீட்டி போல பார்த்துக் கொண்டிருந்தாள் நிஷா. உஷா அந்த பார்வையை லட்சியமே செய்யாமல் ரேடியோவைத் தேடத் தொடங்கினாள்.

அது பீரோ ஒன்றின் மேல் இருந்தது. எடுத்துத் திருகவும் சப்தமே இல்லை. காதோரமாக வைத்து ஒரு ஆட்டு ஆட்டிப்பார்த்தாள். பார்த்துக் கொண்டேயிருந்த நிஷா உடனே சிரித்தாள். சரியான கேலிச்சிரிப்பு.

''எதுக்குடி இப்படி சிரிக்கிறே?''

''சிரிக்காம... அது என்ன உண்டியலா...? காதுகிட்ட வெச்சு குலுக்கிப் பாக்க... ரேடியோடி. பேட்டரி போட்டாதான் பாடும்.''

உஷா முகமும் அதைக் கேட்டு அசடு வழிந்தது. ''எதையும் யோசிச்சுப் பார்த்து செய். அப்பா உனக்கு மாப்ளை

பார்க்கத்தான் பொள்ளாச்சிக்குப் போயிருக்கார். இந்த மாப்பிள்ளையும் அமெரிக்காதான்.

இவனும் உன்னைப் பாக்க வந்துட்டு என்னைத்தான் பிடிச்சிருக்குன்னு சொல்லிடப் போறான்.'' -நிஷாவின் பேச்சு உஷாவைக் கூர்மையோடு குத்தியது.

''இந்த கர்வம் வேண்டாண்டி. அப்புறம் ரொம்ப சிரமப்படுவே.''

''நான் எதுக்கு சிரமப்படணும்? எனக்கு மூளை இருக்கு. நான் ஒண்ணும் பயந்தாங் கொள்ளியும் கிடையாது. இங்க இருக்கப்பிடிக்காம யார் வீட்லையோ படுத்துக்கறதுக்கு...''

-நிஷா தொடர்ந்து ஊசிபோல் குத்திக் கொண்டே போனாள்.

உஷாவின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து உருள ஆரம்பித்தது. நல்ல வேளை அத்தை கனகம் வந்து இடையில் நுழைந்து சமாதானம் செய்ய ஆரம்பித்தாள்.

''என்னடி... எதுக்கு அழுகை...? இவ இப்படி என்ன சொன்னா?''

''ஆமா... என்னையே சொல்லு... நல்லா டிரஸ் பண்ணிக்கோடின்னு சொன்னேன். இது தப்பா?''

''அதை எதுக்கு நீ சொல்றே... அவளுக்குத் தெரியாதா?''

''ஆமா... தெரிஞ்சிருந்தா வந்த மாப்ளை எதுக்கு என்னைப் பிடிச்சிருக்குன்னு சொல்லணும்?''

''அவன் இவளைப் பிடிக்கலைன்னு சொல்லலை.. அவன் உணர்வு வேற; இவ உணர்வு வேறையா இருக்குன்னு தான் சொன்னான். அத நீ புரிஞ்சுக்கோ.''



''இதெல்லாம் சமாளிப்பு. அல்டிமேட்டா முடிவு என்ன? எனக்கு இந்த பட்டிக்காடு ஒத்து வராதுங்கறதுதானே?''

-நிஷாவிடம் கர்வம் கொடிகட்டிப் பறந்தது. தன் பேச்சும் செயலும் உஷாவை எவ்வளவு பாதிக்கும் என்று உணர்ந்தவளாகவே தெரியவில்லை.

கனகத்திற்கும் அவளிடம் பதிலுக்குப்பதில் என்று பேசிக் கொண்டே போக விருப்பமில்லை.

''உஷா! நீ கவலப்படாதடா... உன் மனசுக்கு ஒரு தங்கமான மாப்ளை உனக்கு வருவான். அடுத்தவங்க மனசைப் புண்படுத்தற யாரும் நல்லா வாழ்ந்ததா சரித்திரமே கிடையாது. நீ நம்பிக்கையோட இரு...''. என்று உஷாவுக்குத்தான் ஆறுதல் கூறினாள்.

''என்ன அத்தை சாபம் விட்றியா... நான் ஒண்ணும் பொறாமைல பேசலை. ஒண்ணு நல்லாதெரிஞ்சுக்கோ... இவ இப்படி மடிசஞ்சியா - மண்ணாந்தையா, எதுக்கெடுத்தாலும் அழுவற அழுமூஞ்சியா இருக்கறவரை இவளால ஒரு நல்ல வாழ்க்கையை அமைச்சுக்க முடியாது.

ஆணும் பெண்ணும் சமம்னு நினைக்கற காலம் இது. ஞாபகம் வெச்சுக்கோ. இப்ப சொல்றேன். இவ இப்படியே இருந்தா ஒரு கல்யாண சமையல்காரன் கூட இவளைக் கல்யாணம் பண்ணிக்கமாட்டான். ஞாபகம் வெச்சுக்கோ...''

-நிஷாவும் வரிந்துகட்டினாள்.

''சரிடீ... உன் உபன்யாசத்தை நிறுத்திக்கோ. கல்யாணங்கிறது ஏற்கெனவே தீர்மானமான ஒன்று. அதை யாரும் நான்தான் செய்து வெச்சேன்னு சொல்ல முடியாது. நான் பயன்பட்டேன்னு வேணும்னா சொல்லிக்கலாம். அந்த அளவுக்கு கடவுளால் தீர்மானிக்கப்பட்ட விஷயம் அது. தயவு

செய்து உனக்குத்தான் பேசத்தெரியும்னு பேசாம வாயமூடிக்கிட்டு இரு.

உங்கப்பாவுக்கு தெரியும்... இவளுக்கு எப்படி கல்யாணம் பண்ணி வைக்கணும்னு!''

-கனகம் நிஷாவுக்கு ஒரு ஆப்பு வைக்க, தியாகராஜனும் வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தார்.

''வா தியாகு... என்னப்பா சரேல்னு வந்துட்டே. ஊருக்கு போனியா இல்லையா?''

''இல்லக்கா... போக அவசியம் இல்லாதபடி பையனோட அப்பாவை நம்ம சண்முகசுந்தரம் வீட்லையே பார்க்கும்படி அமைஞ்சது... அவரும் பையனோட நான், நாளைக்கே பொண்ணு பார்க்க வரேன், நீங்க எதுக்கு இதுக்காக பொள்ளாச்சி வந்துகிட்டுன்னு சொல்லி ஒரு வேலையை மிச்சம் படுத்திப்பிட்டார்.''

''இதைத்தான் கும்புடப்போன தெய்வம் குறுக்க வந்ததுன்னு சொல்வாங்க. அப்ப பெரியவ உஷாவை பொண்ணு பார்க்க நாளைக்கு வராங்கன்னு சொல்லு.''

''ஆமாங்க்கா... நீயே இருந்து எல்லா ஏற்பாட்டையும் செய்துடு.''

''பையன் எப்படின்னு விசாரிச்சியா?''

''விசாரிச்சு பிடிச்சிருந்ததானேக்கா நான் அடுத்த கட்டத்துக்கே போவேன்.''

''அப்ப சரி... பையன் அமெரிக்கா தானே?''

''பின்ன... நிஷாவுக்கு அமைஞ்ச வரன் மாதிரியே தான். சொல்லப் போனா அந்த மாப்ளையைவிட இந்தப் பையனுக்கு சொத்து பத்து ஜாஸ்தி.''



-தியாராஜன் சொல்லவும் கனகம் உஷாவைப் பார்த்தாள். அவள் முகத்தில் ஒரு புதுவித பிரகாசம். நிஷாவையும் பார்த்தாள். அவள் கண்ணாடி முன் நின்றுகொண்டு தலைமுடியில் சிடுக்கு எடுத்துக் கொண்டிருந்தாள். கனகம் பார்க்கவும் ஒரு பார்வை. படு அலட்சியப் பார்வை பார்த்தாள்.

''எப்படியோ எல்லாம் நல்லபடியா நடந்தா சரி. தாயில்லாத புள்ளைங்க... போற இடத்துலையாவது குடும்பம் உறவுகள்ன்னு சந்தோஷமா இருக்கட்டும்.''

-கனகம் மனம் கசிந்து வாழ்த்தினாள்.

''நிஷாக்குட்டி...'' -தியாகராஜன் இளைய மகளைத் தான் கூப்பிட்டார். அவளும் ''என்னப்பா?'' என்று கேட்காமல் கேட்டபடி நின்றாள்.

''நாளைக்கு உஷாவை சும்மா தங்கரதம் மாதிரி அலங்காரம் பண்ணி மாப்ளை முன்னால நிறுத்தணும். உன் லைன் கிளியர் ஆனமாதிரி இவ லைனும் கிளியர் ஆகணும். என்ன?''

''சரிப்பா... தங்கரதத்தை எல்லாம் அமெரிக்கா மாப்ளைங்க ஏத்துக்க மாட்டாங்க. சிம்ப்பிளா ஒரு போனிடைல், கேஷுவலா ஒரு கார்ட்டன்சாரி, சின்னதா ஒரு ஸ்டிக்கர் பொட்டு... ஒரு மெல்லிசான சங்கிலி, அதிக பவுடர் இல்லாத ஃபேஷியல் பண்ண முகம் - இப்படி இருந்தாதான் வர்றவங்களுக்குப் பிடிக்கும்.''

''சரிம்மா... அப்படியே இவளை ரெடி பண்ணிடு.''

''இந்த குடாக்கு என்பேச்சை கேக்காதே, இது இப்ப என்னை எனிமியால்ல நினைக்குது.''

''என்னம்மா நீ... இருக்கறது இரண்டுபேர். உங்களுக்குள்ளே சண்டைன்னா கேக்கவே அசிங்கமா இருக்கும்மா. தண்ணி அடிச்சு தண்ணி விலகாதும்மா.''

''வேண்டாம்ப்பா... இந்த மாதிரி பழைய ப்ராவெர்ப் சொல்லி போரடிக்காதீங்க. இவ என் பேச்சைக் கேட்டா போதும். நான் பாத்துக்கிறேன்.''

''உஷா... என்னடா இது? தங்கச்சி பேச்ச கேளுடா.''

''நல்லாருக்குப்பா நீங்க சொல்றது... எனக்கு என்னவோ எதுவுமே தெரியாதுங்கற மாதிரி இருக்குதுப்பா உங்கபேச்சு.''

''என்னம்மா நீ... உன் நல்லதுக்கு சொன்னா அதையே தப்பா எடுத்துக்கிட்டு என்னையே திருப்பறியே.''

''பின்ன என்னப்பா... வெடுக்வெடுக்குன்னு பேசறா. பெரிய புடுங்கின்னு இவளுக்கு நினைப்பு. இவபேச்சை நான் கேக்கவா.. யார் பேச்சை யார் கேக்கிறது...''

''ஐயோடா... இப்ப உனக்குக் கல்யாணம்னு ஒண்ணு நடக்கணுமா வேண்டாமா?'' -தியாகராஜன் பெரியகுரலில் ஓங்கலாக கத்தியபடி கேட்டார். உஷாவும் அதைக்கேட்டு நடுங்கியவளாகக் காதைப் பொத்திக் கொள்ள - நிஷா குறுக்கிட்டாள்.

''வேண்டாம்ப்பா... விட்ருங்க. அவ விருப்பம்போல அவ வரட்டும். நான் மூச்சுவிடமாட்டேன். நல்லது நடந்தா சரி...'' -என்றவளாய் விலகிப் போனாள்.

தியாகராஜனுக்கு இருவரின் திருமணத்தையும் எப்படி நடத்தப் போகிறோமோ என்று தான் தோன்றியது.



## 5

'மனம்!

இதைப்பற்றி எவ்வளவோபேர் ஆராய்ந்து விட்டார்கள். இதைக் குரங்கு என்றும் கோட்டான் என்றும் வர்ணித்தவர்களே அநேகர். ஆனால், இது ஒரு யானை என்று சொல்லி 'புரிதல்' என்னும் அங்குசத்தால் வெகு அழகாக அடக்கி ஆளலாம் என்று சொன்னவர்கள் சிலர்தான்.

மனம்தான் செயல்பாடு பற்றி நினைக்கிறது. நினைப்புதான் செயலாகிறது. இந்த செயலின் சாயல் 'பாடி லாங்குவேஜ்' (Body Language) எனப்படும். ஒருவரின் அங்க அசைவுகளை வைத்து அவர் நினைப்பதையும் அவரின் மன அழகையும் கணிக்க முடியும்.

இதெல்லாமே அறிவு பூர்வமான - சாத்யமான - உலகம் ஒப்புக்கொண்ட அணுகுமுறைகள். இதற்கு அப்பாற்பட்டு புதிராய் சில விஷயங்கள் மனத்தைப் பொறுத்தவரைஉண்டு. அதில் ஹிப்னாடிசமும் மெஸ்மரிசமும் ஒன்று. இதையும் விஞ்ஞானம் என்று சொன்னாலும் இதை ஒரு முழு வெற்றி பெற்ற தீர்மானமான விஷயமாக அறிஞர்கள் கருதுவதில்லை.

ஹிப்னாடிசம் பற்றியும், மெஸ்மரிசம் பற்றியும் ஆக்ஸ்போர்டு பல்கலை நூலகத்தில் பல புத்தகங்களும், ஆய்வுக் கட்டுரைகளும் உள்ளன. அவைகளை வைத்து இந்தக் கலையைக் கற்றுக் கொள்ள முயன்ற பலர் தோல்வியையே தழுவியுள்ளனர்.

ஹிப்னாடிச, மெஸ்மரிச அறிஞர்களாக தங்களைச் சொல்லிக் கொள்ளும் சிலரும்கூட எல்லோர்

மனங்களையும் கட்டுப்படுத்த முடியாதவர்களாகவே உள்ளனர்.

திரைப்படம், தொலைக்காட்சிகளில் இந்த விஷயத்தை படு மிகையாக சித்திரித்துள்ளனர். எனவே அவைகளைப் பார்த்து இந்த மனத்தை வசப்படுத்தும் கலையைப் புரிந்து கொள்ள முயலுவது என்பது படுமுட்டாள்தனமான ஒன்று. அதேசமயம் மந்திர தந்திரங்கள் இந்த வித்தையைச் சுலபமாக கற்றுத்தருகின்றன என்று ஒரு கருத்து இருக்கிறது. இந்த மந்திர தந்திரங்களால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். தென் அமெரிக்காவில் ஒரு பாதிரியார் பலரைப் பார்வையால் அமைதிப்படுத்தியிருக்கிறார்.

மேற்கு ஜெர்மனியில் ஒரு பெண்மணி பல கைதிகளின் உள் மன ரகசியங்களை அறிந்து போலீசுக்குச் சொல்லும் ஒரு உளவாளியாகவே இருந்திருக்கிறார்.

இந்து மதத்தில் குறிப்பாக சித்தர்கள் கலாசாரத்தில் மனத்தை ஆள்வது, மயக்குவது, மாற்றுவது என்ப தெல்லாம் மிகச் சாதாரண ஒன்றாக உள்ளது.

அதேபோல் மனத்தைப் படிப்பது என்பதும் இங்கே சாதாரண ஒரு விஷயம். கம்பளத்து நாயக்க சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் மனத்தில் இருப்பதை சாதாரணமாகச் சொல்லிவிடுகின்றனர்.

வசிய சாஸ்த்ரம், மனோவசியம், ராஜவசியம், வசித்துவம், சாகர்த்துவம், ஸ்த்ரீவசியம், சூட்சும பாதாள ஞானம் என்று இங்கே மனது தொடர்பாய் பல நூல்கள்.

பொதுவில் எந்த ஒரு மர்மமான விஷயமும் புரியாதவரை மந்திர ஞானமாகவே கருதப்படும். புரியத் தொடங்கிவிட்டால் அது விஞ்ஞானமாகி விடும்!''

❖❖❖



இரவு

உஷா படுக்கக் கிளம்பினாள்.

''அந்த வீட்டுக்கா போறே?'' -கனகம் கேட்டாள்.

''ஆமாம் அத்தை... எனக்கு இங்க இருக்கவே புடிக்கல.''

''அதுவும் சரிதான். டிரான்சிஸ்டர் எடுத்துக்கிட்டு அங்கையே போய்டு. ஃபேன்லாம் இருக்கா...?''

''இல்லை... எனக்கு ஃபேன் இல்லேன்னா பரவால்ல...''

''அட நீ வேற... கொசு ஆஞ்சிடும். டேபிள் ஃபேன் எடுத்துக்கிட்டுபோ...''

''பரவால்ல. விடு அத்த...''

''சொன்னா கேள் உஷா... கொசு கடிச்சு மூஞ்சி தடிச்சு போனா நல்லாவா இருக்கும்... நாளைக்கு அமெரிக்க மாப்ளை வராருல்ல...''

-அத்தை கனகம் பாய்ன்ட்டைப் பிடித்தாள். பின் அவளே டேபிள் ஃபேனை எடுத்துக் கொண்டு போய் அந்த 'சி' பிளாக் வீட்டில் வைத்துவிட்டு வீட்டையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு வந்தாள்.

''வீடு நல்லா பெரிய வீடு... தாராளமா 3000 ரூபா வாடகை தரலாம்...'' என்றாள் தம்பி தியாகராஜனிடம்.

''தரணுமே...''

''ஏன் தராம... 1000சதுர அடி வீடு. கீழ தரை எல்லாம் மார்பிள்.''

''என்ன மார்பிளோ... அந்த வீட்டு பேச்ச எடுத்தாலே சாமியார் வீடான்னு கேக்கறாங்க...''

''ஏன்... சாமியார் வீடா இருந்தா என்னவாம்?''

''அவரு வந்துட்டு வந்துட்டு போறாருன்னா யாருக்காவது குடிவர தைரியம் வருமா?''

''இதோ பாரு... இதெல்லாம் புரளி. இதே அபார்ட்மெண்ட்டுல 'பி' பிளாக்ல ஒரு பொண்ணு தூக்கு மாட்டி தற்கொலை பண்ணிகிட்டா. இப்ப அங்க யாரும் குடி இல்லையா என்ன?''

''என்னத்த சொல்றது. சில விஷயம்லாம் பரவிட்டா மாத்த முடியமாட்டேங்குது. சந்தனக் கடத்தல் வீரப்பன் பத்தியே ஸ்ட்ராங்கா ஒரு கருத்து பரவிகிட்டு இருக்கு தெரியுமா?''

''அப்படியா... அப்படி என்ன சொல்றாங்க அவனப்பத்தி?''

''அவன் ஒரு வனதேவதையை வசியப்படுத்தி வெச்சிருக்கானாம். அவளோட துணை இருக்கறவரை அவனை யாராலும் பிடிக்க முடியாதாம். அதே மாதிரி ஆஞ்சனேய சாமியும் அவனுக்குப் பாதுகாப்பா இருக்காராம். ஒரு 'மை' வெச்சுருக்கானாம். அதை நெத்தி புருவத்துல பூசிக்கிட்டா அவன் யார் கண்ணுக்கும் தெரியமாட்டானாம்.''

''இந்த காலத்துலையா இப்படி எல்லாம் பேசறாங்க...''

''இந்த காலத்துலதான் இந்த மாதிரி விஷயத்தைப் பத்தி நிறைய யோசிக்கிறாங்க. டி.வி. பாக்கறேல்ல... காலை ஏழு மணில இருந்து ஒன்பது மணி வரை டி.வி.யை பிடிச்சு வெச்சுகிட்டு இருக்கறது யார்? நவரத்ன கல்லு விக்கிறவங்க,



வாஸ்து ஜோசியம் சொல்றவங்க, தினப்பலன் சொல்ற வங்கதானே...?''

''அதான் எனக்கும் புரியல. ஒரு பக்கம் விஞ்ஞான சௌகர்யங்களும் அதிகமாகிகிட்டே போகுது. குளோனிங்குன்னு சொல்றாங்க. செவ்வாய் கிரகத்துல தண்ணி இருக்குதுங்கறாங்க. ஏவுகணைத் தாக்குதல் - அணுகுண்டு அந்த குண்டுன்னு என்னென்னவோ பேச்சுங்க ஒரு பக்கம். தெருவுல குச்சி ஐஸ் விக்கறவன் கூட ஒரு செல்ஃபோனை வெச்சுகிட்டு கித்தாப்பா பேசறான். இது ஒரு பக்கம்னா மறுபக்கம் யாரைப்பார் ஐயப்பன் மலைக்கு மாலை போட்டுக்கற தென்ன... பிரதோஷம்னு கோவிலுக்குப் போவுறதென்ன, திருவண்ணாமலைக்கு போய் கிரி பிரதட்சணம் பண்றேங் கறதென்ன...?

காலத்தைப் புரிஞ்சுக்கவே முடியலியே தியாகராஜா.''

''எனக்கும்தான்க்கா... ஒரு விஷயத்துலையும் தெளிவா ஒரு முடிவுக்கு வர முடியறதில்ல...''

-கனகமும் தியகாராஜனும் எதார்த்தமாக பேசிக் கொள்ள அதுவரை பொறுமையாக இருந்த நிஷா பொறுமையிழந்து வாயைத் திறந்தாள்.

''அத்தையம்மா... எந்தக் காலத்துலையும் மனுஷனோட புத்திதான் ஜெயிச்சுகிட்டு வந்துருக்குது. அதைத் தெரிஞ்சுக்க. அதே சமயம் ஆவி, பேய், பிசாசு இதெல்லாம் படுபயங்கர பித்தலாட்டம்னும் கண்டுபிடிச்சு சொல்லியாச்சு.

ஒருத்தர் எப்பப்பார் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருக்கார்னு வை. அவர் எழுந்து போன பிறகும் அவர் சைசுக்கு அங்க வெப்ப அலை கொஞ்ச நேரம் இருக்கும். இதை சூப்பர் பவர்லென்ஸ் கொண்ட கேமராவால படம் எடுத்து

ஆவின்னு ஒருத்தன் புளுகினதைக் கிழிச்சு கேப்பையை நட்டுட்டாங்க.

ஆவி, பேய், பிசாசு இதெல்லாம் உண்மைன்னு ஒரு பேச்சுக்கு வெச்சுப்போம். இந்த உலகத்துல இப்ப உயிரோட இருக்கறவங்களைவிட இறந்தவங்க எண்ணிக்கை அதிகம். ஏன்னா ஆவரேஜா இரண்டாயிரம் வருஷமாதான் இந்த உலகம் இருக்குதுன்னே கணக்கு வெச்சாலும் இந்த இரண்டாயிரம் வருஷத்துல செத்துப்போன அவ்வளவு ஆவியும் பேயும் நிஜமா இருந்திருந்தா அதுங்களுக்கே இந்த பூமியில இடம் இருக்காது. அப்புறம் மனுஷன் எங்க பொறந்து வளர்றது?''

-நிஷா நீட்டிக் கொண்டே போனாள்.

''போதும்... நம்ம நவநீதன் சார் வீட்டுக்கு யாரை எவ்வளவு வாடகைக்குக் குடிவைக்கலாம்னு ஆரம்பிச்ச ஒரு விஷயம் இப்படி ஒரு உபன்யாசமாவே நீண்டு போச்சே... எது எப்படியோ... இந்த சாக்குல நிஷாவுக்கு எவ்வளவு உலக ஞானம் இருக்குங்கறது தெரிஞ்சு போச்சு'' என்றபடியே கொட்டாவிவிட்டார் தியாகராஜன்.

உஷாவும் பாயை விரித்து கொட்டாவி விடப்போனாள். தலைமாட்டில் ரேடியோவில் சென்னை வானொலியின் கசிவு. ஒரு காலத்தில் ரேடியோ எப்படியெல்லாம் மனிதர்களைக் கட்டிப் போட்டிருந்தது என்று யோசித்தவளுக்கு வருத்தமாகத் தோன்றியது.

ரேடியோவில் யாரோ ஒருவர் யாருடனோ அந்தக் காலத்தில் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டது பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

பேச்சில் சுரத்தே இல்லை... கேள்வி கேட்பவரும் கடனே என்று கேட்கிற மாதிரி இருந்தது.



பேண்டு மாற்றிப் பார்த்தாள். கொர் புர் என்று ஒரே சப்தம். பேசாமல் அணைத்துவிட்டு படுக்கலாம் என்று தோன்றியது. அணைத்தாள். படு நிசப்தமாக இருந்தது.

மெல்லிய ஹாலின் நைட்லாம்ப் ஒளி மட்டும் கசிந்தபடி இருந்தது. அதுவும் ஆஃப் ஆகி ஃபேனும் நின்றதில் கரண்ட் கட் என்பது தெரிந்து போயிற்று. நிசப்தத்தின் பரிமாணம் கூடியதுபோல இருந்தது. பம்மென்று காதை அழுத்தியது நிசப்தம். ரொய்ங்ங் என்று ஒருவித சப்தம் காதுக்குள் கேட்டது. நிசப்தம் என்பது சப்தமே இல்லாதது என்று யார் சொன்னது? அதுதான் மிக ஆபத்தான - அமைதியைக் கெடுக்கும் சப்தம் என்று நினைத்துக் கொண்டாள்.

அருகில் கர்ட்டனால் மூடப்பட்ட ஜன்னல். எழுந்துபோய் திறந்துவிட்டால் காற்றுவரும் என்று தோன்றியது. அப்படியே யாராவது வருகிறார்களா என்று எட்டிப் பார்க்கலாம் என்றும் தோன்றியது.

ஒரு சௌகரியமே அசௌகர்யமாக மாறுவது இப்படித்தான்... புரண்டு படுத்தாள். கசகசவென்று இருந்தது. கும்மிருட்டில் ஜன்னல் மட்டும் பார்க்க முடிந்த மாதிரி நூலளவு வெளிச்சத்தில் தெரிந்தது.

வெட்டிப் பிடிவாதம். வீணான சண்டை காரணமாக வந்து மாட்டிக் கொண்டு விட்டோமோ என்றுகூடத் தோன்றியது. அதே வேளையில் அந்த ஹால் முழுக்க பார்க்க முடிந்த மாதிரி மெலிதாய் வெளிச்சம் பரவிக் கொண்டிருந்தது.

'அய்யோ... எப்படி இது சாத்யம்...?' என்று படுத்த நிலையில் எழுந்து அமர்ந்து பார்த்தாள்.

வெளிச்சம் அதிகமாகிக் கொண்டே போனது.

'எப்படி... எப்படி? எங்கிருந்து வருகிறது?' பார்வையை சுழலவிட்டாள். ஹாலின் சதுர வடிவ அந்த பாகத்தில் பூஜை

அறைக் கதவு திறந்திருந்த நிலையில் உள்ளே எந்தப் படங்களும் இல்லாத காலியான ஷெல்ப்பின் மையத்தில் அகல் விளக்கு...

முதல் முதல் அவள் வீட்டுக்குள் வந்து பார்த்தபோதும் எரிந்து கொண்டுதான் இருந்தது.

இப்பொழுது மீண்டும்!

'எப்படி? யார் ஏற்றியது... ஒரு வேளை அது அணையா தீபமாய் எரிந்து கொண்டே இருக்கிறதோ? கதவு மூடியிருந்ததால் வெளிச்சம் வெளியே பரவவில்லையோ... இப்பொழுது காற்றோ இல்லை பூனையோ கதவைத் திறந்திருக்க வேண்டும். அதனால் வெளிச்சம் வெளியே பரவியுள்ளதோ?

அதுசரி... எப்படி ஒரு அகல்விளக்கு அணையாமல் தொடர்ந்து எரிய முடியும்?'

கேள்வி மலைப்பாறையா மனத்தை அழுத்திற்று. துணிச்சலை வரவழைத்துக் கொண்டு எழுந்தாள். மெல்ல அறைக்குள் சென்று விளக்கருகே முகத்தைக் கொண்டு சென்று பார்த்தாள்.

விளக்கில் எண்ணெய் இருப்பதற்கான சுவடே இல்லை. ஆனால் ஒரு இலையை சுருட்டி அதன் நுனியில் தீயிட்டதுபோல தீபம். ஒரு வெளிர் மஞ்சள் ஸ்டிக்கர் பொட்டு ஒன்று தகதகக்கிற மாதிரி இருந்தது. மற்றபடி எந்தவிதமான சப்தமும் இல்லை. மனத்தை அச்சப்பத்தும் விஷயங்கள் எதுவும் இருக்கின்ற மாதிரியும் தெரியவில்லை. சில விநாடிகள் அந்த அகல் விளக்கை உற்றுப் பார்த்தவள் திரும்பி வந்து படுக்கையில் சரிந்தாள். மஞ்சள் தூளை சலித்தது போல அறை முழுக்க அதன் புழுதியாட்டம் மெல்லிய வெளிச்சம்.



கூரையில் ஃபேன் பவர் பாயிண்ட் நேர் எதிரில் தெரிந்தது. அதை ஒட்டி ஒரு சாண் நீளத்திற்கு நன்கு பருத்த பல்லி. 'அய்யோ மேலே விழுந்துவிடுமோ...' பாயை இழுத்துப் போட்டுக் கொண்டால் என்ன என்றும் தோன்றிற்று. அதேபோல எழுந்து பாயை இழுத்துவிட்டுக் கொண்டாள். அப்பொழுது ரேடியோ பக்கவாட்டில் சாய்ந்து ஆன் ஆனது போல ஒலிக்க ஆரம்பித்தது.

'அவினாஷ்... அவினாஷ்...' எங்க ராஜா போய்ட்டே? தாத்தா வந்துருக்கேன் பார். நான் சொல்லிக் கொடுத்த மாதிரி தீப ஜோதி கர்ப மரத்து இலையால விளக்கு ஏத்திட்டே நீ... நல்ல இலை தொடர்ந்து 48 நாள் எரியும்!

இந்த விளக்கொளி ரொம்ப விசேஷமானது ராஜா. இதை ஊன்றிப் பார்த்து செய்யற பயிற்சி ஒண்ணு இருக்கு. அதுக்கு 'ஆக்ஞா ஒளிப் பயிற்சி'ன்னு பேர். அதை எல்லாம் நான் உனக்கு போகப் போக சொல்லித் தருவேன்.

மனதுல வைராக்யம் உள்ளவங்க இந்தப் பயிற்சியை பத்தே நாள்ல முடிச்சுடலாம். பூர்வஜன்ம கர்மமும் இடம் தரணும். ஏன்னா பெரிய தவப்பயிற்சி இது. இந்த பயிற்சி முடிஞ்சதுக்கான அடையாளம் என்ன தெரியுமா?

அகல் விளக்குல தெரியற அந்த தீப ஜோதி நெற்றிப் பொட்டுல எரியற மாதிரி தோன்றும். அப்ப மெலிசா ஒரு குறுகுறுப்பும் உடல் முழுக்க ஒரு பரவசமும் ஏற்படும். இந்த நிலைல அப்படியே கண்களை மூடி கபாலபதி பயிற்சி செய்யணும். அப்ப அந்த விளக்கொளி கொஞ்சம் கொஞ்சமா உள்ளுக்குள் மடங்கி கண்கள் முதல்ல எரியற மாதிரி தோணும். பிறகு அப்படியே நீலோற்பல மலர் தண்ணியில விழுந்து சில்லிட்டுப் போன மாதிரி கண்ணிரண்டும் ஆயிடும். இப்படி ஆயிட்டா 'ஆக்ஞா ஒளிப்பயிற்சி'யில் ஒரு முழுமை கிடைச்சாச்சுன்னு பொருள்.

அதன்பின் யாரோடையும் வார்த்தைகளால பேச வேண்டிய அவசியமே இல்லை. உடம்போட சக்தியை பேச்சுங்கற விஷயத்துல நாம் சரிபாதிக்கு மேல செலவழிக்கறோம். அது அப்படியே சேமிப்பாகும். நாம் நினைப்பதை பார்வையாலேயே பிறருக்கு உணர்த்தலாம். நம்முடைய கட்டளைக்கு எல்லோரும் கீழ்படிஞ்சு நடப்பாங்க.

இந்த 'ஆக்ஞா ஒளிப்பயிற்சி'யில ஜெயிக்கறது அவ்வளவு சுலபம் இல்லை. இதுல கொஞ்சம் தடம் புரண்டாலும் சித்த பிரமை ஏற்பட்டுடும். என்னடா ஒரு ஐந்து வயசுப் பையன்கிட்ட இவ்வளவு பெரிய விஷயங்களைப் பேசறேனேன்னு நினைக்கறியா?

சிலருக்கு உடம்புக்கு வயசு குறைவா இருக்கும். ஆனா மனசுக்கு வயசு கூடுதலா இருக்கும். ஞான சம்பந்தர் அப்படித்தான்... நீயும் ஒரு ஞான சம்பந்தன் ஆகணும் ராஜா. கவலைப்படாதே; தாத்தா இருக்கேன். தாத்தா இப்ப பசி தூக்கம்னு உணர்ச்சிகள்ல இருந்து விடுதலை பெற்று ஒரு ஆன்ம சொரூபத்துல இருக்கேன். காலம் நேரம் இரண்டும் எனக்குக் கிடையாது. எப்படிங்கறதை எல்லாம் உனக்கு போகப் போக சொல்லித் தரேன்...'

-ரேடியோவில் கேட்ட குரல் உஷாவைக் கட்டிப் போட்டிருந்தது. அதை நிமிர்த்தி வைக்கக்கூட தோன்றாமல் அந்தப் பேச்சில் அப்படியே ஒன்றிப் போய்விட்டாள். கொஞ்சம் குரல் ஒலி தேய்வதுபோல தோன்றவே அதைத் தொட்டு நிமிர்த்தினாள். சவுண்டைக் கூட்ட உள்ள பகுதியைத் திருகினாள். ஆனால் சப்தமே வரவில்லை. திடீரென்று 'ஆல் இந்தியா ரேடியா சென்னை வானொலி நிலையம்' என்று அறிவிப்பாளர் குரலும் கேட்டது.

அய்யோ...? அப்படியானால் இப்பொழுது இதுவரை கேட்ட குரல் யாருடையது... காதில் விழுந்தது ஏதாவது



ஒலிபரப்பு நிகழ்ச்சியா இல்லை யாராவது இங்கே இருந்து பேசிய பேச்சா?

குழப்பமாக இருந்தது. முகத்தை பூசித் துடைத்துக் கொண்டாள். விளக்கொளியை திரும்பி ஒரு பார்வை பார்த்தாள். தீபஜோதி கர்ப மரத்து இலை விளக்கு என்று காதில் ஒலித்த குரல் ஞாபகத்தில் மீண்டும் பரவியது. 'ஒருவேளை அது போன்ற ஒரு இலை விளக்குதான் உள்ளேயும் எரிந்து கொண்டிருக்கிறதோ? 48 நாள் தொடர்ந்து எரியும் என்றதே ரேடியோவில் கேட்ட குரல்... அதுதான் இந்த வீட்டு விளக்கும் அணையாமல் எரிந்தபடி உள்ளதோ?

அது எப்படி இங்கே இந்த விளக்கு வந்தது?

எனக்குத் தெரிய வேண்டும் என்றே யாரோ சொன்ன தகவல்களா இவை... இல்லை இவை தற்செயலான ஒலிபரப்பா?'

உஷாவை குழப்பம் கழுகு அலகுபோல கொத்திக் கிழித்தது. 'அவினாஷ்... அவினாஷ்... எங்க ராஜா போய்ட்டே? தாத்தா வந்துருக்கேன் பார்... என்று காதில் விழுந்ததே... அப்படியானால் இந்த வீட்டைப் பற்றி நவநீதன் சொன்னதெல்லாம் உண்மையா? அவர் மகன்தானே அவினாஷ். அவனைத் தேடி தாத்தா வந்திருக்கிறேன் என்றால் வந்தது நடராஜ பிள்ளையா?

பிள்ளைகுரல் எப்படி ரேடியோவில் கேட்டது. என் காதில் விழுந்ததில் எது நிஜம். எது பொய்? தெய்வமே...'

உஷா புழுங்கினாள். நிறைய வியர்த்தாள். சட்டென்று கரண்ட் வந்தது. நைட் லேம்பும் எரிந்தது. ஃபேன் விர்ரென்று ஓடி மெல்லிய சப்தம் கேட்க ஆரம்பித்தது. எழுந்து விளக்கைப் போட்டாள். ரேடியோவை எடுத்து சுற்றிச் சுற்றிப் பார்த்தாள்.

ட்யூன் செய்து எந்த அலை வரிசையிலாவது அந்த குரல் மீண்டும் கேட்கிறதா என்று பார்த்தாள்.

கொர்ர்ர்... டுர்ர்... என்று சப்தம்தான் காதைக் கிறியது. சில இடங்களில் பாடல்கள்! குறிப்பாக 'வீடு வரை உறவு... வீதி வரை மனைவி' பாடல் அந்த சூழலுக்கு வலுசேர்க்கிற மாதிரி ஒலித்து அவளை மிரட்டியது.

அதற்குமேல் அங்கே தொடர்ந்து படுக்க அவளுக்கு தைரியமில்லை. அப்படியே கதவைப் பூட்டிக் கொண்டு தன் வீடு நோக்கி நடந்தாள்.

''டொக்... டொக்!''

-கதவைத் திறந்தார் தியாகராஜன்.

எதிரே தெரிந்த உஷாவைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்.

''என்னம்மா... ஏன் பாதியில வந்துட்டே.''

''அங்க இருக்க பயமா இருக்குப்பா...''

''என்னம்மா சொல்றே?''

''ரேடியோவுல நவநீதன் சார் அப்பாகுரல் கேட்குது. அணையாம விளக்கு ஒண்ணு எரிஞ்சுகிட்டு இருக்குது- பயமா இருக்குப்பா...''

-அவள் சொன்னது உள்ளே நிஷா காதிலும் ஒலித்ததுபோல் உள்ளிருந்து சிரிப்புச் சப்தம் கேட்டது.

''சரி சரி உள்ற வா... அது எப்படி அவர் அப்பா குரல் ரேடியோவுல கேட்கும். என்னென்னவோ சொல்றியேம்மா நீ...''

-அவள் உள்ளே வரவும் கதவைச் சாத்தியபடியே கேட்டார் தியாகராஜன்.



''வேண்டாம்ப்பா... என்னை எதுவும் கேக்காதீங்கப்பா. இங்க ஒரு விஞ்ஞானி ஒருத்தி இருக்கா. அப்புறம் அவ தன் பங்குக்கு எதையாவது சொல்ல ஆரம்பிச்சுடுவா. ஆளைவிடுங்க.''

-உஷா வேகமான பதிலோடு பெட்ரூமில் உள்ள அவளது படுக்கையில் போய் விழுந்தாள். தியாகராஜனும் விளக்கை அணைத்துவிட்டு படுக்கச் சென்றார்.

படுக்கையிலும் உஷாவின் காதில் ரேடியோ குரலின் எதிரொலிகள்.

'இந்த விளக்கொளி ரொம்ப விசேஷமானது. இதை ஊன்றிப் பார்த்து செய்யற பயிற்சி ஒண்ணு இருக்கு. அதுக்கு 'ஆக்ஞா ஒளிப் பயிற்சி'ன்னு பேர். அதை எல்லாம் நான் உனக்கு போகப் போக சொல்லித் தருவேன். மனசுல வைராக்யம் உள்ளவங்க இந்த பயிற்சியை பத்தே நாள்ல முடிச்சுடலாம். பூர்வ ஜென்ம கர்மமும் இடம் தரணும். ஏன்னா பெரிய தவப் பயிற்சி இது. பல வருஷம் செய்தாலும் சித்திக்கிறது ரொம்ப கஷ்டம்!'

-உஷா புரண்டு புரண்டு படுத்தாள். தொடர்ந்து காதில் ஒலித்தபடி இருந்தது அந்த குரல்.

'ஆக்ஞா ஒளிப் பயிற்சியில தேறிட்டா கண்கள் முதல்ல காந்தலா எரிஞ்சு பின் நீலோற்பவ மலர்போல குளிர்ந்துடும்.

அதன்பின் யாரோடையும் பேசி எதையும் புரியவைக்க வேண்டிய அவசியம் இல்லை.

பார்வை ஒண்ணே போதும்...'

-தொடர்ந்து காதுகளில் மோதியபடி இருந்தது அந்தக் குரலின் கருத்துக்கள்.

அப்படியே ஒரு கட்டத்தில் தன்னை மறந்து தூங்கிப்போனாள்!

## 6

'புராணங்களில், இதிகாசங்களில் அசரீரி சப்தம் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கலாம். வானில் இருந்து ஒரு குரல் ஒலிக்கும். அதற்கேற்ப புராண புருஷர்கள் செயல்படுவார்கள். குழந்தை கண்ணனை கூடையில் சுமந்து கொண்டு வசுதேவர் நடக்கையில் அசரீரிதான் அவரைப் பல இடங்களில் 'கைட்' செய்தது.

அசரீரியை கடவுளின் குரல் என்றும் தேவர்களின் குரல் என்றும் கூறுவார்கள். அசரீரி கேட்டதெல்லாம் துவாபர, திரேத யுகங்களில்... கலியுகத்தில் அசரீரி கிடையாதா, ஏன் கிடையாது போன்ற கேள்விகளுக்கு அவ்வளவு சுலபத்தில் பதில் கூறிவிட முடியும். கலியுகத்தில் மட்டும் மனிதன் பாவ புண்ணியத் தாக்கங்களுக்கு உட்பட்டு அதில் கடைத்தேறிதான் மோட்சம் அடைய முடியும்.

கலியுகத்தில் கடவுளால் கொடுக்கப்பட்ட புத்தியே கடவுளை இல்லை என்று கூறி கச்சை கட்டும். இது ஒரு வகையில் வரம் கொடுத்த சிவனின் தலையிலேயே கை வைத்துப் பார்க்கும் முயற்சிதான். ஆனால் இதனால் கடவுளுக்கு அணுவளவு பாதகமும் நேரப்போவதில்லை. புத்தி கடவுளைக் கண்டு தெளியத்தான் நாளாகும். அவ்வளவுதான். இருப்பினும் திரேத, துவாபர யுகத்து சங்கதிகள் கலியுகத்திலும் இருக்கின்றன.

அதில் ஒன்றான அசரீரி இன்று வேறு வடிவில் வெளிப்பட்டபடி உள்ளது. பகவான் ரமணர் நாடோடியாய் அலைந்தபோது திருவண்ணாமலைக்கு அவரைப் போகச் சொன்னது இப்படிப்பட்ட அசரீரிகள்தான்.



ஒரு ரயில்வே ஸ்டேஷனில் நிச்சலனத்தோடு படுத்துக்கிடந்தவர் 'எங்கே போவது... இனி தனது நாட்கள் எங்கு கழியும்?' என்கிற கேள்வியில் இருந்த போது, அருகில் இரண்டு பேர் தங்களுக்குள் வேறு விஷயத்துக்காக பேசிக் கொண்டிருந்தனர்.

அதில் ஒருவர் 'திருவண்ணாமலைக்குப் போ... அங்கதான் இனி உனக்கு காலம்,' என்கிறார்.

'அங்கே என்னை ஆதரிக்க யார் இருக்கா?' என்று எதிர் கேள்வி கேட்கிறார் அடுத்தவர். 'மலையைச் சுத்தி ஆயிரம் பேர் இருக்கா... என்ன நீ அப்படிச் சொல்லிட்டே...?' என்கிறார் முதலாமவர்.

அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டது ரமணரை பூரிக்க வைத்தது. புறப்பட்டுவிட்டார். நமக்கும் இப்படி பல சந்தர்ப்பங்களில் பதில்கள் கிடைத்திருக்கும். அதை நமக்கான பதில் என்று உணர்வதில்தான் இருக்கிறது சூட்சுமம்... சரி இது எப்படி நிகழ்கிறது... யார் குரலிலோ ஏன் நமக்கான வழிகள் தெரியவேண்டும்? அந்த கடவுள் ஏன் நேராக நம்மிடம் கூறக்கூடாது என்றெல்லாம் கேள்விகள் கிளைவிடும்.

கடவுள் தோன்றாமலிருக்கும்போதே இந்த மண்ணில் தொண்ணூறு சதம் கடவுள் நம்பிக்கையாளர்களும் 10 சதமே நாத்திகம் பேசுபவர்களும் உள்ளனர் என்கின்றனர். அந்த கடவுள் நேரில் தோன்றிவிட்டால் அவ்வளவுதான். நல்ல கற்பனைத்திறன் உடையவர்கள் கடவுள் நேரில் தோன்றினால் என்னாகும் என்று கற்பனை செய்து பாருங்கள். ஒன்று நிச்சயம் நிகழும்!

'உலகம் இயங்குவது எல்லா வகையிலும் நின்றுவிடும்.'

❖❖❖

ஐந்து மணி. அலாரம் அலறியது.

கனகம் எழுந்திருந்து உஷாவை எழுப்பிவிட்டாள்.

நிஷா அப்பொழுதுதான் உறக்கத்தின் உச்சாணிக் கொம்பில் இருந்தாள்.

உஷாவும் எழுந்திருந்து பாத்ரூம் போய்விட்டு ஈரமுகத்துடன் வந்தாள்.

வாசலில் தண்ணீர் தெளிக்கும் சப்தம்!

எட்டிப்பார்த்தாள். அத்தை கனகமே அந்த வேலையில் இறங்கிவிட்டிருந்தாள். உடனே வாசலுக்கு ஓடினாள்.

''அத்தை... இப்படி கொடுங்க.''

''இல்ல... நீ போ...''

''அட கொடுங்கன்னா...''

''நீ போடி... இனி இந்த மாதிரி வேலையைப் பத்தியெல்லாம் யோசிச்சுகூட பார்க்காதே. அமெரிக்கா போகப் போறவளுக்கு எதுக்கு வாசலும் கோலமும்...''

-அத்தை சொன்னது ஐஸ் கட்டியாய் ஜில்லிட்டது.

தியாகராஜனும் எழுந்து வந்து அதைக்கேட்டு சிரித்தார்.

''என்ன தியாகு... நான் சொன்னது சரிதானே?''

''தப்புக்கா. அமெரிக்கால கோலம் போடக்கூடாதா என்ன?''

''சிரிப்பாங்க...''

''ஆமாங்க்கா... ரசிச்சு சிரிப்பாங்க. எவ்வளவு பெரிய கலை வடிவம் இது. இதை இந்தியப் பெண்கள் ரொம்ப



சாதாரணமா அதே சமயம் தினம் தினம் செய்யறாங்களேன்னு நினைச்சு ரசிச்சு ரிசிப்பாங்க.''

''என்னடா... காலங்காத்தால உபதேசமா... அதுவும் என்கிட்டையேவா?''

''அப்படி இல்லக்கா... நம்மகிட்ட எவ்வளவோ நல்ல விஷயங்கள் இருக்கு. அதுல இதுவும் ஒண்ணு. குறிப்பா பெண்கள் காலைல 5 மணிக்கே எழுந்திருக்கறதால சொல்ல முடியாத அளவு நன்மைகள் ஏற்படுதாம்...''

''யாருக்கு... உங்களை மாதிரி ஆம்பளைங்களுக்கா?''

''அட நீ ஒண்ணு... காலைல 5க்கும் 6க்கும் இடைப்பட்ட பிரம்ம முகூர்த்த நேரத்துல காத்துல பல அமிர்த வாயுக்கள் இருக்காம். அதைக் குனிஞ்சு வளைஞ்சு யோகாசனம் பண்ற மாதிரியான விஷயத்தோட செயல்படும்போது ஹார்ட், நுரையீரல்லாம் புத்துணர்ச்சி அடையுதாம். ரத்தம் சுத்தமாகுதாம். புத்தியிலையும் ஒரு பிரகாசம் அதனால ஏற்படுதாம். சுருக்கமா சொல்லப்போனா கோலம் போட்றது மாதிரி ஒரு எளிய-இனிய யோகாசனமே இல்லேங்கறதுதான் உண்மையாம்!''

''உனக்கு இதை யார் சொன்னது?''

''யார்... எல்லாம் நம்ம நவநீதனோட அப்பா நடராஜபிள்ளைதான். யோகாசனம் அது இதுன்னுதான் அவர் ஏகப்பட்ட ஆராய்ச்சிகள் பண்ணினவர் ஆச்சே?''

''அப்ப ஆம்பளைங்கள கோலம் போடச் சொல்லலாமே...? ஏன் பெண்களையே செய்யச் சொல்றீங்க?''

கனகத்துக்கும் மடக்கத் தெரிந்தது. உஷா கேட்டபடி நின்று கொண்டிருந்தாள். தரையில் புள்ளிகளோட கனகத்தின்

கைகளால் சதுரமாய், செவ்வகமாய், முக்கோணமாய் உருவாகி ஒரு அழகிய கலைவடிவம் தோன்றியபடி இருந்தது.

''ஆம்பளையும் செய்யலாம்கா... தப்பு இல்லை. ஆனா அவன் உடம்பு வாகுக்கு இது ரொம்ப சின்ன விஷயம். நான் கேட்டேனே?

பதிலுக்கு அவர் என்னைப் பார்த்து 'எதுக்கு இப்படி இந்த விஷயத்தை சமப்படுத்த பாக்கறே...? பள்ளமா இருக்குன்னு கிணத்தைப் போய் மூடினா தண்ணிக்கு எங்கடா போவே?'ன்னு என்னைத் திருப்பி கேட்டாரே...''

''புரியலைடா... அதுக்கு அர்த்தம் என்ன?''

''அவங்கவங்க உடம்பு வாகுக்கு ஏத்ததை அவங்கவங்க செய்யணும். நீ செய்யற எல்லாம் நானும் செய்வேன்னு இறங்கினா விபரீதம் தான்கறததான் அவர் அப்படி சொல்றாரு... அதோட இந்த மாதிரி விஷயத்துல உயர்வு தாழ்வும் கிடையாதாம். அழகா இன்னொரு பதிலும் சொன்னாரு...''

''என்ன?''

''தலைகீழா நின்னாலும் ஒரு ஆண், பிள்ளை பெக்க முடியாது. மாட்டேன்னாலும் கருப்பை இல்லாம பெண்ணும் பெத்துக்கப் போறதில்லை. இது இயற்கை. இதைப் புரிஞ்சக்கணும். ஆணைவிட பெண்ணுக்கு ஆரோக்யம் ரொம்ப முக்கியம். ஏன்னா அவதான் உயிர்களை உலகுக்கு கொடுக்கறவ. அவளே சொத்தையா இருந்தா அவ கொடுக்கற உயிர் எப்படி இருக்கும்? ஆகையாலதான் சிகரெட், பீடி, தண்ணி, பொண்ணுன்னு ஆண் சமூகம் தப்பு செய்யும் போது பெரிசா தெரியாத விஷயம் பெண் செய்யும் போது தெரியுது.''

''அப்பா...'' -கத்தரித்தாள் உஷா.



''என்னடா... நீ என்ன சொல்லப் போறே?''

''காலங்காத்தால நீங்க இப்படி கத்தி போட்றத நிஷா மட்டும் கேட்டா உங்களைக் கைமா பண்ணிடுவா.

'இப்படி சொல்லியே எங்களை அடிமைகளா வெச்சிருக்கறது உங்க வழக்கமா போச்சு'ன்னு ஆரம்பிச்சுடுவா. ஞாபகம் வெச்சுக்குங்க...''

''இல்லம்மா... பெட்டியில வைச்சு பூட்ற தங்கமும், ஜெயிலுக்குள்ள வெச்சு பூட்டப்பட்ற கைதியும் ஒண்ணா என்ன?

ஒண்ணு உள்ள இருந்தாதான் பாதுகாப்பு -அதாவது... அதுக்கு பாதுகாப்பு! இன்னொண்ணும் உள்ள இருந்தாதான் பாதுகாப்பு... இந்த பாதுகாப்பு வெளிய இருக்கறவங்களுக்கு.

ஆசையாவும் பாசத்தோடயும் செய்யற செயலை அடிமைத்தனமா அர்த்தம் பண்ணிக்கக்கூடாது... எல்லாம் புரிஞ்சுக்கறதுலதான் இருக்கு...''

''சரிடா.. போய் அடுத்து ஆகவேண்டியதப்பாரு. மாப்ளை வீட்டுக்காரங்க எப்ப வருவாங்க?''

''பதினோரு மணின்னு சொன்னாங்க...''

''போ... போ... எவ்வளவு வேலை இருக்கு.''

-தியாகராஜன் திரும்பினார். உஷாவும் அவரை ஒட்டியபடி உள்ளே சென்றாள். அவிழ்ந்த தலைமுடியை அவர் எதிரில் அள்ளி முடிந்து கொண்டபடியே கேட்டாள்.

''அப்பா... மாப்ளையை நீங்க பாத்தீங்களா?''

''இல்லையேம்மா... ஆனா போட்டோவுல பார்த்தேன்...''

''எனக்குக் காட்டலையேப்பா...''

''அட... நீ இன்னுமா பாக்கலை? உன் தங்கச்சி பாத்துட்டு நான் காட்டிக்கறேன்னாளே...''

''அவகிட்ட ஏம்ப்பா கொடுத்தீங்க...?''

''சரி... சரி... இப்ப என்ன... எழுப்பிக் கேட்டு வாங்கித்தரேன்.''

-தியாகராஜன் நிஷா படுத்திருக்கும் அறைக்குள் நுழைந்தார். அவளும் ஒரு ரப்பர் வளையம்போல சுருண்டு படுத்திருந்தாள்.

''நிஷாக்குட்டி... நிஷா... ஏய் குரங்கு உன்னைத்தான்...''

''என்ன பெரிய குரங்கு?'' -நிமிராமல் படுக்கையில் புதைந்த நிலையிலேயே பதில் கேள்வி.

''அடிச்சேன்னா... எங்க அந்த மாப்ளைப் பையன் போட்டோ...?''

''எதுக்கு?''

''எதுக்கா... என்ன கேள்வி இது. அதை நீ உஷாகிட்ட காட்டலையா?''

''காட்டலை... சஸ்பென்ஸாவே இருக்கட்டும்னு விட்டுட்டேன்...''

''எதுடி சஸ்பென்ஸ்...? என் போட்டோவை நீ ஏண்டி வெச்சுருக்கே? அதான் உனக்குன்னு ஒருத்தன் முடிவாயிடிச்சுல்ல?''

-உஷா ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தாள்.



நிஷாவிடமும் தூக்கம் கலைந்தது. உஷாவின் ஆவேசம் அவளை எழுப்பி உட்கார்த்தியது. உஷாவை கூர்ந்து பார்த்தாள்.

''என்ன பாக்கறே... எங்க போட்டோ?''

''இப்ப என்கிட்ட இல்லை...''

''இல்லையா...?''

''ஆமாம்... கிழிச்சு போட்டுட்டேன். இப்ப என்ன பண்ணுவே?'' -அவள் கோபத்தைக் காட்ட ஆரம்பித்துவிட்டாள். புரிந்து கொண்ட தியாகராஜனும் ''நிஷா விளையாடாதே... காலங்காத்தால உங்கக்காவை அழவிடாதே. எங்க போட்டோ...'' என்று கத்தினார். அதன்பின் நெடுநேரம் வரை படுசஸ்பென்சாய் மாறி மாறி பார்த்துவிட்டு தலையணை அடியில் இருந்து போட்டோவை எடுத்து நீட்டினாள்.

''என் போட்டோவை நீ எதுக்குடி வெச்சுருந்தே- அதுவும் ரகசியமா தலைகாணிக்கு கீழே...?''

-உஷாவிடம் கோபம் அடங்கவில்லை. நிஷாவுக்கு அதற்குமேல் பொறுக்க முடியவில்லை.

''எனக்குப் பிடிச்சிருந்தது; வெச்சுருந்தேன்..போதுமா?'' -பட்டென்று வெடித்தாள்.

-தியாகராஜன்கூட குழப்பத்துடன் பார்த்தார்.

''என்னடி சொல்றே... உனக்குத்தான் ஒரு மாப்ளை பார்த்தாச்சே...?''

-இது உஷா...

''அவரை இப்ப எனக்குப் பிடிக்கலை. எனக்கு இவரைத்தான் பிடிச்சிருக்கு. இப்ப என்ன சொல்றே?''

-அவள் பதில் கேள்வி தியாகராஜனை திக்குமுக்காட வைத்தது.

''அம்மாடி... என்னமா பேசறே நீ. தெரிஞ்சுதான் பேசறியா?''

''ஆமாம்ப்பா... எனக்கு அந்த மாப்ளையைவிட இவர் பெட்டரா தெரியறார். அதுமட்டுமில்ல... புராப்பர்ட்டிவைஸ் இந்த நபர்தான் பிக்ஷாட்.''

''அதனால...?''

''பேசாம இவரை எனக்குப் பேசி முடியுங்க. அந்த மாப்ளைக்கு சாரி சொல்லிடுங்க... சொல்லிடுங்க என்ன... நானே நேத்து நைட் 'சாரி ராஜேஷ்'னு சொல்லிட்டேன்.''

''என்ன விளையாட்றியா... மாப்பிள்ளைங்கள்ளாம் என்ன கத்திரிக்காயா, வெண்டைக்காயா - இது பிடிக்கலை அது பிடிக்கலேங்கறதுக்கு...''

-தியாகராஜன் கோபத்தின் உச்சத்துக்கு போக, காபியோடு வந்து நிற்கும் கனகத்துக்கும் நெஞ்சை அடைத்தது.

''என்னடா தியாகு?''

''என்னத்த சொல்ல... இந்த பிசாசு திடீர்னு ஒரு குட்டி கலாட்டா பண்றா. இவளுக்கு பார்த்த மாப்ளையை இவளே பிடிக்கலைன்னுட்டாளாம்.

இன்னிக்கு ,வரப்போறவன்தான் இவளுக்கு வேணு மாம்...''



''அடக்கடவுளே... ஏண்டி... உன் புத்தி ஏண்டி இப்படிப்போகுது. நினைச்சு நினைச்சு மாப்ளைங்கள மாத்த அவங்க என்ன சட்டையா பேண்ட்டாடி...?''

''அத்தை... எனக்கு என் செளகர்யம்தான் பெருசு. ஏன் நீ மட்டும் என்ன? உனக்குப்பிடிக்காதவன கட்டி வெச்சா கட்டிக்குவியா?''

''நாங்கள்ளாம் மணப்பந்தல்லதாண்டி மாப்ளை முகத்தையே பாத்தோம்...''

''அதான் இப்ப அந்த ஆள் இல்லாம கல்யாண சமையல் செஞ்சு கஷ்டப்பட்றே... நான் அப்படி இல்லை. என் வாழ்க்கையை எப்படி அமைச்சுக்கறதுன்னு எனக்குத் தெரியும்...''

''நிஷா.. திஸ் ஈஸ் டூ மச்... ராஜேஷுக்கு என்ன குறை?''

''என்ன நிறை...? உஷாவைப் பெண் பார்க்க வந்துட்டு என்னைப் பார்த்து பல் இளிச்சது எதோட சேர்த்தி?''

''அப்ப எதுக்கு நீ சம்மதிச்சே?''

''சம்மதிக்கற மாதிரி நடிச்சேன். இந்த மாதிரி ஆட்களை எல்லாம் இப்படித்தான் ட்ரீட் பண்ணணும். சாய்ஸ்ங்கறது ஆணுக்கு மட்டுமே சொந்தமான விஷயம் கிடையாதுப்பா... அது பெண்ணுக்கும் உரிய விஷயம்.''

''இல்லம்மா... நீ தப்பா சிந்திக்கிறே... தப்பு தப்பா நடந்துக்கறே. உஷாவைப் பார்... எவ்வளவு பெருந்தன்மையா உன் வரைல நடந்துகிட்டா, விட்டுக் கொடுத்தா...''

''அ'யம் சாரிப்பா... நான் நிஷா.''

''இடியட்... சொல்லச் சொல்ல திமிராவா பேசறே.''

''இல்லப்பா... தன்னம்பிக்கையோட பேசறேன்.''

''எது தன்னம்பிக்கை...? இன்னிக்கு வரப்போறவனை நீ அடைய நினைக்கறதா?''

''கவலைப்படாதீங்க. நான் போட்டியே போடமாட்டேன். வரப்போற நபர், தானா - அந்த ராஜேஷ் மாதிரியே என்னைத்தான் பிடிச்சிருக்குன்னு சொல்லுவார். அதே சமயம் எனக்கும் பிடிக்கணும்- அதுவும் ரொம்ப முக்கியம்...''

''அடிப்பாவி... முடிவே பண்ணிட்டியா?''

''இது என்னோட முடிவு கிடையாது. அரசியல்வாதிகள் பாணில சொன்னா இது காலத்தின் கட்டாயம்?''

-நிஷா சொல்லிவிட்டு பாத்ரூம் நோக்கி நடந்தாள். நடையில் ஒரு தெனாவெட்டு. உஷா அப்படியே உடைந்து போயிருந்தாள். கனகமும் ஸ்தம்பித்திருந்தாள்.

பாவம் தியாகராஜன்.

அவருக்கு தான் அடுத்து என்ன செய்வது... அதை எப்படிச் செய்வது என்றே தெரியவில்லை.

## 7

**'மனம் என்பது ஒரு மைதானம் மாதிரி. இந்த மைதானத்திற்குள் பலரும் வருவார்கள்- போவார்கள். யார் எப்பொழுது வருவார், எப்படி வருவார், என்ன செய்வார் என்று முன்னதாக உணரவே முடியாது. இப்படி வருவோர் போவோரால் மைதானமும் பாதிக்கப்பட்டபடிதான் இருக்கும்.**

**மன மைதானத்தில் வருவோர் போவோர் என்பவர்களே எண்ணங்கள்!**



மைதானம் பாதுகாப்பாக, சுகாதாரமாக இருக்க வேண்டுமானால் வருவோர் போவோருக்கு உத்தரவுகள் இட்டு இப்படித்தான் வரவேண்டும், இப்படித்தான் செல்லவேண்டும் என்று ஒரு விதியை உருவாக்க வேண்டும்.

அதாவது உள்ளே வரும் எண்ணங்களை மனதானது பிரித்துப் பார்த்து, அனுமதிக்க வேண்டியதை அனுமதித்து, தள்ள வேண்டியதைத் தள்ள தெரியவேண்டும்.

இதைச் சாதாரணமாய் செய்ய முடியாது.

மனவளக் கலைகள் இந்த பயிற்சியைத் தருகின்றன. மேல் நாடுகளில் மனத்தையும் எண்ணத்தையும் ரேடியோவோடு ஒப்பு நோக்குகிறார்கள். ரேடியோ ஒலிபரப்பப்படும் அலைகளை உள்வாங்கி வெளியேவிட்டு இயங்குவது; அதை மனிதன் இயக்குகிறான். அதே போன்றதுதான் அவன் மனமும்... மனிதனும் மௌனமாக இருந்து ரேடியோ அலைகளை உள்வாங்கி உணரலாம். ரேடியோ பெட்டியில் ஒரு கருவி செய்வதை அவன் மனமே செய்யலாம். இது இயலும் அதற்கான அமைப்பு நம் உடற்கூறில் உள்ளது. இதன் அடித்தளத்தில் தான் இயங்குகிறது. மெஸ்மரிசமும், ஹிப்னாடிசமும்...

பயிற்சியால் இதை உணரமுடியும். நம் உடல் ஒரு மர்மக்கூடம். இதில் எவ்வளவோ சாத்தியக்கூறுகள் உள்ளன. அவைகளைக் கண்டறிந்து நம்மை மேம்படுத்திக் கொள்ள நாம் முனைவதில்லை.

காடுகளில் சித்தர்களும், இன்னும் சிலரும் மர்மக்கூடமான உடம்பைப் புரிந்துவைத்திருப்பவர்கள். இன்று உள்ளங்கையில் அடங்கிவிட்ட ஒரு செல்ஃபோன்

மூலமாக வானில் இன்சாட் உதவியுடன் பேசும் நாம் இன்னும் ஒரு சில நூற்றாண்டுகளில் இந்த கருவிகளின் துணை இன்றியே பேசப் போகிறோம். இது நடக்கப் போகிறது.

ஒரு ஆச்சரியம்... இப்படிப் பேசிக் கொண்ட ஒரு நிலை ராமாயணம், மகாபாரதத்தில் நிறையவே உள்ளது. அதாவது அடுத்து நாம் அடைய உள்ள விஞ்ஞான உச்சியை நம் முன்னோர்கள் முன்பே அடைந்தவர்களாக இருந்திருக்கிறார்கள்!'

❖❖❖

உஷாவுக்கு வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லை. கலகலவென்று தொடங்கிய காலைப்பொழுது கண்ணாடி தரையில் விழுந்து நொறுங்கிய மாதிரி உடைந்து சிதறிவிட்டது.

தியாகராஜன் பொம்மையாட்டம் உட்கார்ந்திருக்க, கனகம் கேட்டாள்.

''ஏம்பா... அடுத்து என்ன பண்ணப்போறே?''

''எனக்கு ஒண்ணும் புரியல்லக்கா.''

''இப்படி சொன்னா எப்படி...? நேரம் ஆகிக்கிட்டு இருக்குல்ல...''

''என்னை என்ன பண்ணச் சொல்றே... ஒரு ராட்சஸி எனக்கு மகளா பொறந்துட்டதால நான் கிடந்து தவிக்க வேண்டியிருக்கு...''

''அவ கிடக்கறா... அவளை ஒண்ணு ரூம்ல போட்டு பூட்டு. இல்ல எங்கையாவது வெளியே அனுப்பு...''



''என்னக்கா பேசறே... இதுக்கெல்லாம் கட்டுப் பட்றவளா அவ?''

''அதுக்காக... இவளுக்கு பயந்துகிட்டு இப்படியே உக்காந்திருக்கப் போறியா?''

''இப்போதைக்கு எனக்கு ஒரே வழிதான்... வரப்போற மாப்பிள்ளையை வரவேண்டாம்னு சொல்றதுதான் அது.''

''அவசரப்படாதே. ஒரு தடவை ஒரு நல்ல காரியம் தள்ளிப்போனா அப்புறம் மூனுதடவை தள்ளிப்போகும்.''

''நூறு தடவை தள்ளிப் போகட்டும். என்னை என்ன பண்ணச்சொல்றே... இந்த ராட்சஸியை வெச்சுகிட்டு உஷாவுக்கு என்னால நல்லவிதமா மாப்ள பார்க்கவே முடியாது. ஒரு தடவை தப்பு நடந்தது. அதையும் எப்படியோ சரிசெய்தேன். இப்ப இன்னொரு தடவைன்னா... ஆமாம் எங்க உஷா?''

''அவ உன் ஃப்ரெண்டு நவநீதன் வீடு காலியாதானே இருக்கு - அங்க போய்ட்டா...''

''அங்க இருந்து ராத்திரி பயந்துபோய் திரும்பி வந்தாளே...''

''அது ராத்திரி... இப்ப பகலாச்சே. தைரியம் வந்துருக்கும்.''

''சரிக்கா... நான் மாப்ளை வீட்டுக்கு வரவேண்டாம்னு தகவல் கொடுத்துட்டு வரேன். இந்த சண்டிக்கழுதை என்ன செய்றான்னு பாக்கறேன்.''

-தியாராஜன் கிளம்ப - கனகம் வேறு வழி தெரியாமல் வெறித்தாள். அப்படியே நிஷா என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்று ஒரு பார்வை பார்த்தாள். அவள் திரும்பவும் சென்று படுக்கையில் விழுந்திருந்தாள்.

கனகம் தலையில் அடித்துக்கொண்டாள்.

குத்துக்காலிட்டு அமர்ந்திருந்தாள் உஷா.

எதிரே அவள் ஆச்சரியத்துடன் பார்த்த அந்த எண்ணெயில்லாமல் எரியும் ஜோதி கர்ப விருட்ச மரத்தின் இலையால் எரியும் விளக்கு. அருகில் ரேடியோ! கண்களில் கண்ணீர் கசிந்து கொண்டிருந்தது.

உடன் பிறந்தவளே ஒரு போட்டிக்காரியாகி முட்டி மோதுவது நெஞ்சைப் பிசைந்து கொண்டிருந்தது. அவள் இப்படி நடக்க வேண்டிய அவசியமேயில்லை. எதனால் அவளுக்கு இவ்வளவு காழ்ப்பு என்பதும் தெரியவில்லை.

''உஷா...'' -குரல் கேட்டது. திரும்பினாள்.

கனகம் தான் வந்தாள். அருகில் அமர்ந்தாள்.

''அழுவுறியா... வயசுப் பொண்ணு அழுவலாமா?''

-தலையைத்தடவி ஆறுதலாய்ப் பேசினாள்.

''இப்ப எதுக்கு இங்கே வந்தே?''

''காரணமாத்தான்... நீ ஆ ஹன்னா இங்க வந்துட்றியேம்மா. எதையும் எதிர்த்து நின்னு ஜெயிக்க வேண்டாமா?''

''எனக்கு வெறுத்துப் போச்சு அத்தை. எதிர்த்து நிக்க நான் என்ன அவ எதிரியா... இல்ல அவதான் எனக்கு எதிரியா?''

''பைத்தியம்... நீ எதிரியா நினைக்காம இருக்கலாம். ஆனா அவ நினைக்கறாளே. அப்ப நீ சுதாரிக்க வேணும்.''

''சரி வந்த விஷயத்தைச் சொல்.''



''உன் அப்பா மாப்ளையை வரவேண்டாம்னு சொல்றதுக்கு கிளம்பிட்டான். அந்த ராட்சஸி நினைச்சாலும் ஒண்ணும் பண்ணமுடியாது.''

''அப்ப இன்னிக்கு யாரும் வரப்போறதில்ல...?''

''ஆமா... இன்னொரு நாள்ல ரகசியமா அவஇல்லாதப்ப ஏற்பாடு செய்வான்னு நினைக்கறேன்.''

''நான் என்ன விபசாரியா... என்னை பார்க்க எதுக்கு அவர் ரகசியமா வரணும். உனக்கே இதைச் சொல்ல சங்கடமா இல்லை?''

-உஷாவின் மடக்கல்லில் கனகமே திணறித்தான் போனாள்.

''சரி என்னதான் பண்ணலாம்கறே?''

''எனக்குக் கல்யாணமே வேண்டாம். அவளுக்கு முதல்ல பண்ணுங்க.''

''அதைத்தான் உங்கப்பன் செய்தானே, ஆனா அவனையே வேண்டாம்னுட்டாளே இந்த ராட்சஸி.''

''சரி... இன்னிக்கு வர்ற மாப்பிள்ளையை பிடிச்சிருந்தா பண்ணிவையுங்க...''

''என்னம்மா நீ... அவ விருப்பத்துக்கு ஆட உங்கப்பா என்ன அவளோட அடிமையா?''

''சரி... எக்கேடோ கெட்டுப் போங்க... இப்ப என்னை விடு. நான் கொஞ்சம் தனியா இருக்கேன்.''

''சரி... நான் இப்ப கிளம்பறேன். பிறகு வந்து பேசறேன். ஒரு பொண்ணுக்கு கோணல் புத்தியா போய்ட்டதால எவ்வளவு பேருக்கு சிக்கல்...''

-புலம்பியபடியே விலகிச் சென்றாள்.

உஷா திரும்பவும் குத்துக்காலிட்டு உட்காரப் போனாள். என்ன நினைத்தாளோ...

எழுந்து சென்று கதவைத் தாழிட்டுவிட்டு வந்தாள். அடக்க முடியாதபடி அழுகை வந்து கொண்டே இருந்தது.

பெண்களில் இரு ஜாதியினர்தான் இருக்கின்றனர். ஒன்று முடங்கி அழுபவர்கள்... இல்லாவிட்டால் சீறிப் பாய்பவர்கள். நடுவாந்திரத்தில் நிதானத்தில் இருந்தால் எப்படி இருக்கும்?

அழுது கொண்டே இருந்த உஷாவுக்குள் சட்டென்று ஒரு பொறி.

'நான் உயிரோடு இருப்பதால்தானே இவ்வளவு பிரச்சினைகளும்...?'

-வரக்கூடாத எண்ணம் அவளுக்குள் வந்துவிட்டது. சுற்றுமுற்றும் ஒரு பார்வை பார்த்தாள். ஃபேனைப் பூட்டும் கொக்கியும் பிளக் பாயிண்ட்டும் அருகருகே தெரிந்தன. சற்றுத்தள்ளி ஒரு உடைந்த நாற்காலி கிடந்தது.

சில நொடிகள் மாறி மாறிப் பார்த்தவள் நாற்காலியை எடுத்து வந்து போட்டு அதற்கு ஒரு காலி டப்பாவை அண்டக் கொடுத்து நிறுத்திவிட்டு மேல் ஏறினாள்.

சேலையை நின்றபடி அவிழ்த்தவள் ஒரு முனையை ஃபேன் கொக்கியில் நுழைத்தாள். மறுமுனையை ஒருசேர இழுத்து ஒன்றாகக் கட்டியவள் கழுத்திற்கு அருகே வைத்துப் பார்த்து அளவை சரி செய்து கெண்டாள். ஒரு வளையத்தை சுருக்கு முடிச்சு போட்டு உருவாக்கி கழுத்தில் மாட்டிக் கொள்ள வேண்டியதுதான். அதன்பின் முப்பது நொடிகளோ இல்லை ஒரு நிமிடமோ... அதன்பின் உஷா என்று ஒருத்தி



இந்த பூமியில் வாழ்ந்தாள் என்றுதான் ஊர் சொல்லும். இருக்கிறாள் என்று சொல்லாது.

என்ன இருந்தாலும் சாகப் போகிறோம் எனும்பொழுது கடைசி கடைசியா என்று சில எண்ணங்கள் அவளுக்குள் எழும்பி அவளைச் சற்று தாமதப்படுத்தின. உடம்பிலும் வெடவெட வென்று நடுக்கம்.

அதில் அவள் நின்று கொண்டிருந்த நாற்காலியும் சேர்ந்து நடுங்கியது. அவளையும் கீழே தள்ளிவிட்டது. விழுந்த வேகத்தில் கையோ காலோ பட்டு தரையில் இருந்த ட்ரான்ஸிஸ்டர் ஆன் ஆனது. தொடக்கத்தில் 'கர்புர்' என்று இரைச்சலிட்டாலும் பின் அது இதமாகப் பேசத் தொடங்கியது.

'ஆத்ம ஹத்தி பெரியபாவம்... அதுவும் நான் இருக்கும் இடத்தில் ஒரு பெண் தூக்கில் தொங்க நினைப்பது மிகமிகத் தவறு.

உன் மன உளைச்சலை நான் அறிவேன்.

கவலையே படாதே. இன்றே உனக்கு மாப்பிள்ளை வருவான். வருபவன் மாப்பிள்ளை மட்டுமல்ல - மருந்தும்கூட...! மற்றதை பொறுத்திருந்து பார்... உன் எதிரில் எரிந்தபடி இருக்கும் விளக்கைப்பார். மனதை அதில் குவித்து தியானம் செய். பதட்டம் அடங்கும். மனோ சக்தியும் பெருகும்.

'டொர்ர்.. கொர்ர்... டப்...டுப்...கொய்ங்ங்ங்...'

-ரேடியோ குரல் முற்றுப் பெற்று திரும்பவும் இரைச்சல் சப்தம் காதில் மோதியது. ஒருகணம் உஷா ஸ்தம்பித்தாள். காதில் விழுந்தது ரேடியோ ஒலிபரப்பா... இல்லை தனக்கான பிரத்யேகக் குரலா? இது எப்படி சாத்யம்?

மீண்டும் குழப்பத்தின் ஆக்ரமிப்பு. சாகவேண்டிய எண்ணம் பின்னுக்குச் சென்றது. பார்வை தானாக தீபத்தை நோக்கித்தான் போய் நின்றது.

அது அணையாமல் ஒளிர்ந்து கொண்டிருந்தது... உஷாவின் கண்ணும் மனமும்கூட அதில்தான் ஒடுங்கியது!

## 8

**கை**வல்யம் என்பது ஒருவித முக்தி அடைந்த நிலை. மனிதப் பிறப்பில் உடம்பைப் புரிந்து கொண்டு பக்தி செய்து பின் உடம்பை ஜெயித்து அந்த உடம்பை உதிர்த்த பின்னும் ஆன்மாவாய் சூட்சும தேகத்துடன் நடமாடுபவர்கள் பலர் இந்த மண்ணில் உண்டு. குறிப்பாக யோகியர்கள், சித்த புருஷர்களை எரித்து சாம்பலாக்காமல் மண்ணில் புதைக்கக் காரணமே அவர்கள் சூட்சும தேகத்துடன் வாழ்வாங்கு வாழ்ந்து வழிகாட்ட வேண்டும் என்பதற்காகத்தான்.

அப்படி வாழும் யோகிகள் இடத்திற்கும் ஆளுக்கும் தகுந்தாற்போல அதிசயங்கள் செய்வார்கள். இவர்களே நமக்கு அசரீரியாய் பிறர் குரல் மூலம் வழிகாட்டுவார்கள். இந்த குரல் அலைகள் ரேடியோ அலைகளைப் போலவே வானில் ஊடுருவி ரேடியோவில் வெளிப்பட வல்லது. இதைப் பலரும் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இதை ஏதோ ஒரு நிகழ்ச்சியின் ஒலிபரப்பாகவே கருதுவர்.

❖❖❖

'பாம் பாம்...!'

-கார் ஹாரன் சப்தம் கேட்டு வெளியில் பார்த்தார் தியாகராஜன். படகு கார் ஒன்று தேங்கி நிற்க, அதிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தனர் சிலர்.



'சரி, நமக்கு இனி இங்கென்ன வேலை' என்று கிளம்பப் பார்த்த கனகமும், ஒரு தோல் பையுடன் புறப்பட்டுவிட்ட நிஷாவும் கூட வந்து நிற்கும் காரைப் பார்த்து விதிர்த்துப் போக, தியாகராஜன் வேகமானார்.

வந்திருப்பது பொள்ளாச்சி மாப்பிள்ளை

-ராம்குமாரும், அவன் அப்பா கைலாசமும்!

'வரவேண்டாம்... இப்பொழுது பெண்ணுக்கு சற்று உடல் நிலை சரியில்லை' என்று தகவல் தந்தும் வந்திருக்கிறார்களே?!'

கேள்வி ஒருபுறம்... ஆச்சரியம் மறுபுறம். அத்துடன் உதட்டில் அழைப்பு!

''வாங்க... வாங்க...''

-அவர்களும் வந்தனர். உள்ளே நுழையாமல் வெளியே நின்றனர்!

''உள்ற வாங்க...'' தியாகராஜன் மீண்டும் அழைத்தார்.

''மன்னிக்கணும்... நாங்க இப்ப உங்க வீட்டுக்கு வரலை...''

-பையனின் அப்பா கைலாசம் பேசினார்.

''அப்படின்னா?''

''நம்ம யோகி நடராஜபிள்ளை சாமி வீடு இந்த அபார்ட்மென்ட்ல தானே இருக்கு?''

''ஆமா... அதுக்கென்ன?''

''அவர் வீட்டு சாவிகூட உங்ககிட்ட இருக்கறதா அவர் மகன் நவநீதன் சொன்னார்...''

''ஆமாம். இப்படி வெளியவே நின்னு பேசினா எப்படி? உள்ற வாங்க...''

''வரோம்... பொண்ணு பாக்க ஒரு நாள் வரத்தானே போறோம். இப்ப அவர் வீட்டுககுப் போய் கொஞ்ச நேரம் தியானம் செய்யணும்னு என் மகன் ஆசைப்பட்டான். அதான்... சாவியைத் தர்றீங்களா?''

-தியாகராஜனுக்கு நெற்றி குறுகுறுத்தது. நிஷா அவ்வளவையும் கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'அமெரிக்க மாப்பிள்ளை இங்கிருக்கும் வீட்டிற்கு வந்து தியானம் செய்வதா...?' -அவளுக்குள் ஆச்சரியக் குறுகுறுப்பு. அதே கேள்வியோடு சாவியை எடுக்கப்போன தியாகராஜன் அங்கே உஷா இருப்பது தெரிந்து திரும்பி வந்து ''அங்க... அந்த வீட்லதான் என் மகள் உஷா இருக்கா... வீடு திறந்துதான் இருக்கு,'' என்றார்.

''கொஞ்சம் வந்து காட்டமுடியுமா?''

-கைலாசம் இணக்கமாகக் கேட்டார்.

''நிச்சயமா... ஆமா காலியா இருக்கற வீட்டுல தியானம் பண்ணனும்கறீங்களே. எனக்கு ஒண்ணும் புரியலை...'' -நடந்தபடியே கேட்டார்.

''அது வந்துங்க தியாகராஜன்... என் பையன் அமெரிக்காவுல இருந்தாலும் தியானம் யோகம். இதுல எல்லாம் ரொம்ப ஈடுபாடு உள்ள பையன்... நம்ம நடராஜபிள்ளை எழுதிய யோக புத்தகங்களை பார்த்துருக்கான். அவனுக்கு ரொம்ப பிடிச்சு போச்சு. அவரையே ஆத்ம குருவா நினைச்சு அங்கையே பயிற்சி எடுத்துருக்கான். அதுல குறிப்பா 'அக்ஞா ஒளிப்பயிற்சி'ன்னு ஒண்ணு. அது இவனுக்கு ரொம்பவே கை வந்துருக்கு. அங்க மனோதத்துவ



டாக்டராத்தானே இருக்கான். இந்த ஆக்ஞா ஒளிப்பயிற்சி இவனை அங்க இருக்கற டாக்டர்களிலே நம்பர் ஒன் ஆக்கியிருக்கு... அதான் இந்தியா வந்தவன் யோகி நடராஜ பிள்ளையைப் பார்க்க ஏலகிரி மலைக்குப் போனான்.

ஆனா... இவனுக்கு அதிர்ஷ்டமில்லை.

அதுக்குள்ற அவர் சமாதியாயிட்டாராமுல்ல?''

-கைலாசம் சகஜமாக விளக்கியபடி நடந்து வந்தார்.

''அதுசரி... இங்க வீட்டுக்கு...?'' -திரும்ப நிமிண்டினார்.

''இந்த விஷயத்தை மட்டும் இவன்கிட்டையே கேட்டுக்குங்க...'' -அவர் விலகி அவனுக்கு வழிவிட்டார்.

எளிய பைஜாமா குர்தாவில் ஒரு வடநாட்டு சேட் இளைஞனைப் போல தெரிந்த ராம்குமார் தலையைக் கோதிக் கொண்டே ''அங்க்கிள்... நான் சொல்றதக் கேட்டு நீங்க என்னைப் பார்த்து சிரிக்கக்கூடாது...'' என்றான்.

''சிரிக்க என்ன மாப்ள இருக்கு?''

''இல்ல... நான் ஒரு அமெரிக்க டாக்டர். நானா இப்படி எல்லாம் பேசறேன்னு தோணும்...அதான்.''

''நீங்க என்னன்னு இன்னும் சொல்லலியே...''

''ஒண்ணுமில்ல... நேத்து ஒரு கனவு. அதுல என் குரு வந்தார். 'என் வீடு காலியாதான் இருக்கு. அங்க வா... வந்து ப்ரே பண்ணு'ன்னார்.''

''ஆச்சரியமாயிருக்கே... கனவுல வந்தாரா?''

''ஆமாம்... ஜஸ்ட் இது ஒரு சாதாரண தாட் பிராசஸ்ல எனக்கு ஏற்பட்ற எவ்வளவோ கனவுகள்ள ஒண்ணா

இருக்கலாம். இருந்தாலும் இதை நான் நம்பறேன். அதான் உடனேயே கஷ்டப்பட்டு அட்ரஸைத் தேடிப் பிடிச்சேன். கடைசில பார்த்தா இதே அபார்ட்மென்ட்லதான் நீங்க இருக்கீங்க.

சரிதான்... பொண்ணு பார்க்க வரும்போது அப்படியே கனவுல என் குருநாதர் சொன்னபடி அவர் வாழ்ந்த வீட்டுல ப்ரே பண்ணிட்டு போயிடலாம்னு நினைச்சேன்.

அன்ஃபார்ச்சுனேட்லி இன்னிக்கு மார்னிங் நீங்க உங்க டாட்டர்க்கு உடம்பு சரியில்லைன்னு போஸ்ட் போன் பண்ணீங்க... இட்ஸ் ஓ.கே! நான் முன் வெச்ச காலை பின் வைக்கறதா இல்லைன்னு கிளம்பி வந்துட்டேன்...''

-நின்ற நிலையில் வெகு அழகாய் நளினமான முகபாவங்களுடன் சொல்லி முடித்தான் மாப்பிள்ளை ராம்குமார்.

கனகமும் தொடர்ந்து தியாகராஜனோடு வந்திருந்தாள். அவன் பேசியதை எல்லாம் கேட்டு மனது நெகிழ்ந்து போயிருந்தாள்.

அமெரிக்காவில் வாழ்ந்தும் நம் கலாசார பூர்வமான விஷயங்களில்தான் என்ன ஒரு ஈடுபாடு! கரைய ஆரம்பித்திருந்தது மனது. ஆனால் நிஷா வீட்டோடு நின்றுவிட்டாள்.

தியாகராஜன் ராம்குமாரின் கையைப் பிடித்திருந்தார்.

''ரொம்ப சந்தோஷம் மாப்ளை... நடராஜபிள்ளை அய்யா இங்கையே எங்ககூடவே வாழ்ந்தவர். அவர் அருமை எங்களுக்குத் தெரியல. ஆனா அமெரிக்காவுல இருக்கற உங்களுக்குத் தெரிஞ்சிருக்குதே. ரொம்ப சந்தோஷம். ரொம் ரொம்ப சந்தோஷம்...'' என்றார்.



''தேங்க்யூ அங்கிள்... அவர் வீடு?'' -அவன் திரும்பவும் தன் நோக்கத்தில் குறியானான்.

''அதோ அந்த வீடுதான்....'' -கையைக் காட்டிக் கொண்டே முன்னால் ஓடினார்.

கதவு சாத்தியிருந்தது. தட்டினார். ஆனால் உஷா உள்ளே தன்னை மறந்து தியானத்தில் அமர்ந்திருந்தாள். நெடுநேரம் தட்டியபிறகே கண்ணைத் திறந்தாள். அதற்குள் சாவித்துவாரம் வழியாக உள்ளே பார்த்தவருக்கு தூக்கிவாரிப் போட்டது.

ஃபேன் கொண்டியில் புடவை தூக்குக் கயிறாட்டம் தொங்கிக் கொண்டிருப்பது அவர் கால் நரம்பையே வெட்டியது.

அதற்குள் அவளும் வேகவேகமாக புடவையைக் கட்டிக் கொண்டு வந்து கதவைத் திறந்தாள். பார்வை முதலில் ராம்குமார்மேல்தான் சென்றது. அவனும் அவளைப் பார்த்தான்.

முதல்பார்வை... அசாத்ய ஊடுருவல். ஒருக்ஷணம் இதயத்தில் இருந்து பூவாணம் ஒளிப்புள்ளிகளோடு சிதறுகிற மாதிரி இருந்தது.

''அம்மாடி... என்னடா... என்ன பண்ணிகிட்டு இருக்கே?'' -தியாகராஜன் குரல் மட்டும் நடுங்கியது. ராம்குமாரும் விபரீதமாய் ஏதோ என்று புரிந்து கொண்டவன் ''ஒரு நிமிஷம் அங்கிள்...'' என்று அவரைக் கூர்ந்து பார்த்தான். அவரும் பார்த்தார்.

அது ஒரு விதமான பார்வை... அவரை இதயத்தின் ஆழம்வரை துளையிட்டது. அப்படியே அவருக்குள் ஒருவித பரவசமான நிலை... மனதிலும் புதிய புதிய எண்ணங்கள்.

சரியாக முப்பது நொடிகள்!

பார்வையை விலக்கியவன் உஷாவைப் பார்த்தபடியே வீட்டுக்குள் நுழைந்தான்.

''இந்த வீடுதான்.. இதே வீடுதான் என் கனவுலையும் வந்தது...'' என்றவன் விளக்கு எரிந்தபடி இருக்கும் பூஜை மாடத்தைப் பார்த்தான்.

வெளியே தியாகராஜனும் கைலாசமும் தங்களுக்குள் பேசிக் கொள்ள ஆரம்பித்திருந்தனர். உள்ளே உஷாவும் அவனும் மட்டும்...

''நீங்க...?''

''நான்தான் ராம்குமார். உங்களைப் பெண் பார்க்க வருவதா இருந்தவன்...''

''அப்படியா?''

''ஆமாம்... இப்ப உங்க மனநிலை எப்படி இருக்கு?''

''அமைதியா சலனமில்லாம இருக்கு... எப்படின்னு தெரியல.''

''எல்லாம் என் குருவோட அருள். அவர் இங்க என்னை ஏன் கூப்பிட்டார்ங்கறது புரிஞ்சிடிச்சு. உங்கப்பாவை பார்த்த நிமிஷம் அவருக்குள்ள இருக்கற கவலைக்குரிய விஷயங்களை என்னால உணர முடிஞ்சது.

உங்க சிஸ்டரே பிராப்ளம் பண்றாங்க போல இருக்கே...''

அவன் கேட்க உஷா அதிர்ந்து போனாள்.

''இது... இது... எப்படி உங்களுக்குத் தெரியும்? அப்பா சொன்னாரா?''



''ஆமாம்... சொல்லாம சொன்னார்...''

''சொல்லாம..?''

''அவர் சொல்லலை. நான் மனசைப் படிச்சேன்.''

''எப்படி?''

''போகப் போக உனக்கும் புரியும் உஷா. உனக்குத் தான் குருவருள் பரிபூரணமா இருக்கே?''

''ஆச்சரியமா இருக்கு...''

''இதுல ஆச்சரியப்பட என்ன இருக்கு... அவர் இந்த வீட்ல வாழ்ந்த காலத்துல அவருக்கு நிறைய உதவிகள் செய்தபோல இருக்கே?''

''நானா?''

''நீயேதான்... அவரோட புத்தகங்கள் எல்லாம் அவர் சொல்லச் சொல்ல நீ எழுதியதாமே...?''

''ஆமாம்.. என் கையெழுத்து நல்லா இருக்கும்னு அவர் என்னை எழுதச் சொன்னார்...''

''அதுதான் இப்ப உன் தலை எழுத்தையும் மாத்தி இருக்குன்னு நினைக்கறேன்.''

அவனின் புதிரான பதில் அவளை மலங்க மலங்க பார்க்க வைத்தது.

''இல்லேன்னா தற்கொலைன்னா செய்துகிட்டிருப்பே...?''

''அது.. அது...''

''பார்த்தேனே... சாவித்துவாரம் வழியே.. புடவை தொங்கிகிட்டு இருந்திச்சே...''

''அய்யோ... கவனிச்சிட்டீங்களா?''

''கவனிச்சதால தான் உன் அப்பாவை ஊடுருவினேன். அவர் மனசுக்கு ஒரு சேதி சொல்லியிருக்கேன். அது அவரை நிச்சயம் சமாதானப்படுத்தும். வேகமா கல்யாண ஏற்பாடும் செய்வார்...''

''எல்லாம் புதிரா இருக்கு... எப்படி?''

''இப்ப புதிர்தான். ஆனால் நாளைக்கு இது ஒருவித யாகம்னு தெரிஞ்சிடும். அமெரிக்க மண்ணுல ரொம்ப கஷ்டப்பட்டு குழப்பமான பாடங்கள் மூலமா கத்துக்கற மெஸ்மரிசம் ஹிப்னாடிசத்தை, என் குருநாதர் ஒரு விளக்கொளில் ஆக்ஞா ஒளிப்பயிற்சியா எளிமையா கத்துக் கொடுத்துட்டார்.

நாம கண்டு பிடிச்ச கம்ப்யூட்டர்ல நாம ஈ-மெயில் மூலமா தகவல் சொல்ற மாதிரி பிறர் மனசுக்கும் நாம தகவல் தரமுடியும்.

இங்க நினைச்சா அங்க புரை ஏறுறது இல்லையா... அந்த அலைவரிசைல.''

''அப்ப ரேடியோல கேட்டகுரல்...?''

''குருநாதர் குரலாத்தான் இருக்கணும். எனக்கு இன்னும் அந்த பாக்யம் கிடைக்கல. ஆனா உங்க பிரச்னையை பார்த்த நொடி புரிஞ்சுகிட்டேன்... இனி கவலை வேண்டாம்...''

''எப்படி... என் தங்கை நிஷா ஒரு ராட்சஸி.''

''இல்லை... இனி அவ என் பேஷண்ட். அவ மனசுக்குள்ற தன்னைப் பற்றிய மிக உயர்வான நினைப்பு இருக்கு... ஆனா அதைக் கொண்டு அவளால பெருசா எதையும் செய்யமுடியலை.



அதாவது ஒரு மேனேஜரா ஆபரேட் பண்ற தகுதியுள்ள ஒருத்தர் சாதாரண கிளார்க்கா வேலை பார்க்க நேர்ந்தா மன அபத்தத்தால தப்பான கேரக்டரா மாறிப் போயிடுவார். பாக்கற வேலைல திருப்தி அடையாம சுத்தி உள்ளவங்ககிட்ட குத்தம் கண்டு பிடிச்சு சண்டை போடுவார். அதுல சின்ன வெற்றி கிடைச்சாலும் உலகமே பரிசாக் கிடைச்ச சந்தோஷம் அவருக்கு ஏற்படும்.

உன் தங்கை நிஷாவும் அப்படித்தான். அவளுக்கு அதிகாரம் பண்ண வாய்ப்பு கிடைச்சா போதும். வீட்ல ரொம்ப நல்ல பெண்ணாயிடுவா.''

-ராம்குமார் உளவியலும் அமானுஷ்யமும் கலந்து பேசினான். அவளுக்கு நடப்பது நிஜமா இல்லை கனவா என்கிற சந்தேகம் ஏற்பட்டது.

''என்ன... இது கனவா நிஜமான்னு சந்தேகமா இருக்கா?'' -அடுத்த நொடியே அது அவனிடம் கேள்வியானது. அவளிடம் கூடுதல் திடுக்.

''இது கனவில்லை. நிஜம்!

யோகி போன்ற குருநாதர் அருள் உள்ளவங்க வாழ்க்கைல எல்லா நிஜமுமே, கனவு மாதிரிதான் இருக்கும்.

இன்னும் உனக்கு சந்தேகமா இருந்தா இப்பவே உன் வீட்டுக்குப் போ. அங்க உன் தங்கை என்னைப் பற்றிய நினைப்புல ஒரு பெரிய மாறுதலுக்கு வந்துருப்பா பார்.

'நல்லவேளப்பா... இந்த ஆள் பாக்கத்தான் லட்சணமா இருக்கான். மத்தபடி தியானம் யோகம்னு கொஞ்சம் பட்டிக்காடாவும் இருக்கான். அமெரிக்கா போயும் இந்த முட்டாள் குணங்கள் விடலியே... எனக்கு அந்த மாப்ளையே பெட்டர். பேசாம இந்த பட்டிக்காடே இந்த ஆளை

கட்டிக்கட்டும். நமக்கு ஒத்துவராதுப்பா'ன்னு சொல்வா பார்...''

-ராம்குமார் சொல்லிவிட்டு ஒரு குறுஞ்சிரிப்பு சிரித்தான். அவள் தேங்கி நின்றாள்.

''ப்ளீஸ்... போய்ட்டுவா. நான் கொஞ்சநேரம் இங்க அமைதியா...''

-அவள் உடனே கிளம்பினாள். வெளியே வந்தாள் தியாகராஜனும் கைலாசமும் சுவாரஸ்யமாக பல விஷயங்களைப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தனர்.

உஷா வீடு நோக்கி ஓடினாள்.

கனகமும் ஒரு மூலையில் நின்று கொண்டிருந்தவள் அவளைப் பின் தொடர்ந்தாள்.

விட்டுக்குள் நுழைந்தவள் எதிரில் நிஷா!

பின்னாலேயே அத்தை கனகம்.

''ஏய் குடாக்... எங்க போய்ட்டே. உன் ஆள் வந்துருக்கார் பார்த்தியா?''

''என் ஆளா?''

''யெஸ்... எனக்கு பயந்துகிட்டு அப்பா வரவேண்டாம்னு சொன்ன த சேம் பர்சன். நல்லவேளப்பா. இந்த ஆள் பாக்கத்தான் லட்சணமா இருக்கான். மத்தபடி தியானம் யோகம்னு கொஞ்சம் பட்டிக்காடாவும் இருக்கான். அமெரிக்கா போயும் இந்த முட்டாள் குணங்கள் விடலியே... எனக்கு அந்த மாப்பிளையே பெட்டர். பேசாம இந்த பட்டிக்காடே இந்த ஆளை கட்டிக்கட்டும். நமக்கு ஒத்து வராது அத்தை...''



-நிஷா ராம்குமார் சொன்னதை அப்படியே எதிரொலித்தாள். உஷாவுக்கு மயிர்க்கூச்சல் எடுத்தது. கனகமும் அப்பாடா என்று மார்பைத் தழைத்தாள்.

உஷா திரும்ப ஓடினாள்.

பெருசுகள் இருவரும் பேசியபடிதான் இருந்தனர்.

வீட்டினுள் நுழைந்தாள்.

ராம்குமார் அமைதியாக அந்த விளக்கைப் பார்த்தபடி தியானத்தில் இருந்தான். உஷா அவன் தியானத்தைக் கலைக்காமல் பக்கத்தில் சற்று நெருக்கமாகவே அமர்ந்தாள். மனம் முழுக்க ஒரே பூரிப்பு.

இந்த வாழ்க்கைதான் க்ஷணத்துக்கு க்ஷணம் எப்படியெல்லாம் திரும்புகிறது என்கிற ஆச்சரியம். கூடவே அவன் எப்படி அத்தனை கச்சிதமாக அவள் பேசப் போவதைச் சொன்னான் என்கிற அந்தக் கேள்வி!

❖

# 2. (டே)காவக்கார சாமி

வழிபாடுகளில் குலதெய்வ வழிபாடு மிகுந்த வலிமை உடையது, ஒருவரின் குல தெய்வத்திற்குப் பின்னால் அவருடைய பாட்டன் முப்பாட்டன் என்று ஒன்பது பித்ருக்கள் இருக்கிறார்கள் என்பது குலதெய்வங்களுக்குப் பின்னால் இருக்கும் நுட்பமான உண்மையாகும்.

ஒருவர் குலதெய்வத்தை வழிபாடு செய்கையில் தன்னையுமறியாமல் இந்த மண்ணில் தான் பிறந்து வாழக் காரணமான தன் முன்னோர்களில் ஒன்பது தலைமுறையினரை சேர்த்தே வழிபாடு செய்கிறார்கள் என்பது தான் குலதெய்வ வழிபாட்டுக்குள் இருக்கும் சூட்சமம்!

❖❖❖

பட்டு வேட்டி, பட்டுச்சட்டை, நவரத்ன மோதிரம் என்று தர்பாராக வெளியில் கிளம்பிக் கொண்டிருந்தார் நாகமாணிக்கம்

வாசலில் டிரைவரோடு காத்துக் கொண்டிருந்தது புத்தம் புதிய சியாரோ.

ஏதோ கட்டைப் பஞ்சாயத்து.

நாகமாணிக்கம் தலையிட்டால் தீர்ந்து விடும் என்று அவரை வற்புறுத்தியதன் விளைவு அவரும் கிளம்பிவிட்டார்.

பார்த்துக்கொண்டேயிருந்தாள் அமிர்தம்.



அவரது சகதர்மிணி.

அவள் கண்களில் கணிசமான அளவு கலக்கம். முகத்திலும் வாட்டம்.

''நான் புளியம்பட்டி வரை போயாறேன்...''

என்று அவர் அவளிடம் சொல்லிக் கொண்டு கிளம்பும்போது பார்த்து தொலைபேசி சிணுங்கியது. போகிற போக்கில் அவரே போய் ஒரு பொம்மை யானையின் மத்தகத்தின் மேல் இருந்த ரிசீவரை எடுத்து காதைக் கொடுத்தார்.

''ஹலோ அப்பா...'' மறுமுனையில் மகன் குரல் அவரை ஏதோ மிளகாயைக் கடித்தவர் போல ஆக்கியது. கண்களில் மருட்சி.

''அப்பா... நான் உங்க மகன் சிவகுமார் பேசறேம்ப்பா. இங்க உங்களுக்கு பேரன் பொறந்துருக்காம்ப்பா!''

அவன் அடுத்து சொன்ன சேதி அவரது முகத்தில் ஏகத்துக்கம் சலனத்தை உருவாக்கியது.

பதில் சொல்லாமல் மனைவி அமிர்தத்தை நோக்கி பார்வையை விட்டார். ரிசீவரை மடக்கென்று திரும்ப வைத்தார்.

வைத்துவிட்டு சில அடி கூட நடந்திருக்கமாட்டார். அது திரும்ப சிணுங்கியது. அவர் திரும்பவில்லை. வேகமாக சென்று காரில் ஏறிக் கொள்ள - காரும் கிளம்பத் தொடங்கியது.

கார் அகன்ற மறு நொடி அமிர்தம் ஓடி வந்து ரிசீவரை எடுத்தாள்.

''அம்மா...''

''சிவா...''

''சிவாதாம்மா... சிவாவே தாம்மா...''

''எப்படிய்யா இருக்கே?''

''இருக்கேம்மா.. எங்கம்மா அப்பா? முதல்ல போனை எடுத்தது அவர்தானே?''

''அவரேதான்...''

'' 'அப்பா, நீங்க தாத்தா ஆயிட்டீங்க'ன்னு சொன்னேன். அதைக் கேட்டும் அவர் ஒரு வார்த்தைக்கூட பேசமா போய்ட்டாரேம்மா...''

''என்னது ... எனக்கு பேரன் பொறந்துருக்கானா?''

''ஆமாம்மா... நீ பாட்டி ஆயிட்டே. பய நல்ல செவப்பா ராசாவாட்டடம் இருக்காம்மா. மூணரை கிலோ வெயிட்.''

''நெசமாவா...? நான் பாட்டி ஆயிட்டேனா? ஆமா ரத்னா எப்படி இருக்குறா''

''நல்லா இருக்காம்மா... சொகப் பிரசவம்தான்.''

''எல்லாம் அந்த மாதேஸ்வரி கருணை... இப்ப எங்க இருந்து பேசறே?''

''ஆஸ்பத்திரியில் இருந்து தாம்மா...''

''இது உன்மாமானார் மாமியாருக்கு தெரியுமா?''

''இனிமேட்டுதான் சொல்லணும். என்ன சொல்லி என்ன பிரயோஜனம்? அவங்களும் உங்கள மாதிரிதானே...? என் அப்பாவாச்சும் பேசுனதை காது கொடுத்துக் கேட்டாரு. ஆனா என் மாமனார் என் குரலைக் கேட்டாலே போனை வெச்சுட்றாரு.''



மறுமுனையில் உடைந்த குரலோடு உருகினான் சிவகுமார் என்னும் அவளுடைய பிள்ளை.

''என்னய்யா பண்ண... சாதிவிட்டு சாதி யார் பேச்சையும் கேட்காம இரண்டு பேரும் ஓடிப் போய் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க.

அப்ப எரிய ஆரம்பிச்ச நெருப்பு. அணையாம இன்னம் எரியுது.''

''அதே பேச்சு தானம்மா... ரத்னாவுக்கு என்னம்மா குறை? நல்ல பொண்ணும்மா அவ! மனசுக்கு பிடிச்சிருக்கறது தாம்மா கணக்கு. சாதி எல்லாம் அப்பா மாதிரி திமிரெடுத்தவங்க உருவாக்குன விஷயம்மா.''

''நீ ஆயிரம் சொல்லு... சுட்ட மண்ணு ஒட்டாதுங்கற மாதிரி ஆகிப்போச்சு நம்ம உறவு.''

அமிர்தம் பதிலோடு அழுதாள்.

''அழுவத் தெரிஞ்ச உனக்கு எங்களை வந்து பார்க்கத் தெரியாதாம்மா?''

''பாக்கவா... என் நெனப்பெல்லாம் உங்களச் சுத்தி தானேடா கண்ணு இருக்குது. ஆனா உங்கப்பாவை நினைச்சாத்தான் குலையே நடுங்குதே?''

''அவர்கிடக்கறாரும்மா... வாம்மா... வந்து பார்த்து எங்களை ஆசீர்வாதம் பண்ணும்மா. உன் பேரனை வந்து பாரு... அவன் சிரிக்கறத பார்த்தா எல்லா வருத்தமும் சரியாப் போயிடும்!''

''சரி கண்ணு.... நான் வாரேன். எதுவந்தாலும் சரி. நான் வாரேன். நடக்கறது நடக்கட்டும்!''

''அமிர்தம் ரிசீவரை வைத்தாள். திரும்பினாள். கேட்டுக் கொண்டேயிருந்தாள் ஒரு மூலையில் கட்டிலில் படுத்த படுக்கையில் கிடக்கும் நாகமாணிக்கத்தின் தாயான தங்கமணி!

அவள் முழிப்போடு படுத்திருப்பதை உணராமல் மகனிடம் 'நான் வருகிறேன்' என்று சொன்னது அமிர்தத்தை கலக்கியது.

'அய்யோ... இந்தக் கிழவி பொல்லாதவள் ஆயிற்றே? மகனிடம் போட்டு விட்டுவிடுவாளே...'

அது உண்மைதான் என்கிற மாதிரி அமிர்தத்தையே பார்த்துக் கொண்டிருந்தது கிழவி தங்கமணியின் வெறித்த விழிகள்.

மெல்ல அருகில் நெருங்கினாள்.

''ஆருடி... போனுல...?''

''உ..உ.. உம்ம பேரன்.''

''அடி செருப்பால... அந்த ஓடிப் போனநாயோடையா பேசிக்கிட்டிருந்தே...?''

''இல்ல அத்தே... வந்து''

''என்னாடி வந்து போயி... சிந்தாமணி விஷயத்துல நான் எப்படி நடந்துகிட்டேன்னு ஞாபகம் இருக்குதா?''

அவள் கேட்கவும்தான் அமிர்தத்துக்கு அவள் நாத்தனார் சிந்தாமணியின் நினைவே வந்தது.

அவளும் இப்படித்தான்...

ஊருக்கு கூத்து நடத்த வந்த ஒருவனிடம் காதல் வயப்பட்டு ஓடிப்போனாள்.



கிழவி தங்கமணிக்கு உயிரே போய்விட்டது!

ஊர் நாட்டாமை என்கிற கௌரவமும், ஊரிலேயே அதிக காசுள்ள குடும்பம் என்கிற திமிரும் சேர்ந்து அவளைப் பிசைந்தது. இத்தனைக்கும் சிந்தாமணி பிறக்கும்போதே அவள் கணவர் கதிர்வேலுக்கவுண்டர் போய்ச் சேர்ந்துவிட்டார்.

ஒரு வெள்ளைச் சீலையும், விபூதி நெற்றியுமாய்த் தான் தங்கமணி நாட்டாமை செய்து வந்தாள்.

'கணவர் கதிர்வேலுக்கவுண்டர் இருந்தால் இப்படி நடந்திருக்க விடமாட்டார். அந்த கூத்துக்காரன் கைகாலை வாங்கியிருப்பார்...' என்று சிலர் பேசியதெல்லாம் காதில் விழுந்தது. தங்கமணியின் ரத்தமும் கொதித்தது.

அடுத்த சிலமணி நேரங்களிலேயே அந்தக் கொடுமை நடந்து விட்டது. ஓடிப்போன சிந்தாமணியின் காதலன் அந்த கூத்துகட்டும் கலைஞனின் நாக்கை ஒரு கூட்டம் போய் இழுத்து வைத்து நறுக்கிவிட்டு வந்தது.

இப்பொழுதும் பேசமுடியாத அந்த ஊமைக் கலைஞனோடு சிந்தாமணி வாழ்க்கையை எதிர்த்து போராடியபடிதான் உள்ளாள்! வருடமும் பத்து இருபது என்று உருண்டு ஓடிவிட்டது. நல்ல வேளை அந்த மாதிரி ஒரு கொடுமையான முடிவுக்கு நாகமாணிக்கம் வரவில்லை.

போய்த் தொலையட்டும் என்று விட்டுவிட்டார். ஆனால் கொடுமுடி ஆற்றுக்குப் போய் முழுக்கு போட்டுவிட்டு வந்தது அமிர்தத்துக்கு தெரியும்.

முழுக்கு உறவு? இதோ இப்பொழுது ஒரு கிளை வேறு...!

அமிர்தத்துக்கு நெஞ்சு கிடந்து துடித்தது.

நாகமாணிக்கத்துக்குத் தெரியாமல் போய் மகனையும் பேரனையும் பார்த்துவிட்டு வருவது சாத்யமில்லை என்பது புரிந்தது.

''பேசாமல் இந்த வீடே வேண்டாம் என்று மகனுடனேயே போய்ச் சேர்ந்து விட்டால்?''

## 2

'நம்வாழ்க்கையில் நமக்குக் கிடைக்கும் கல்வி, செல்வம்,ஆரோக்கியம், புதிய உறவுகளான மனைவி, குழந்தை என்று எல்லாவற்றுக்குப் பின்னாலும் நமது கர்மங்கள் மட்டுமல்ல நம்முடைய முன்னோர்களின் கர்மங்களும் சேர்ந்தே ஒளிந்துள்ளன.

அந்த கர்மங்களுக்கு ஏற்பவே நமக்கு நடக்க வேண்டியது நடக்கும். கிடைக்க வேண்டியது கிடைக்கும்.

நமது தாத்தாக்களின் வரிசையில் தற்போது உள்ளவரை ஒன்பதாகக் கொண்டு, எட்டு, ஏழு,ஆறு என்று அவர்களைக் குறைத்துக் கொண்டே போவதில் முதலாவது தாத்தாவின் மூக்குச் சொறியும் தன்மை அப்படியே இன்று நம்மிடம் இருக்கலாம். இரண்டாவது தாத்தாவின் தலைமுடியைப் போலவே நம் தலைமுடி இருக்கலாம்.

உருவத்தில் மட்டுமல்ல இவர்களது பாவ புண்ணியங்கள் கூட இன்று நம்கணக்கில் வரவு வைக்கப்பட்டு நாம் அவைகளை அனுபவிக்க நேரிடலாம்.

இவர்களது தொடர்ச்சியான நாம் வேறு.. இவர்கள் வேறு கிடையாது. இவர்களை நாம் வணங்குவது என்பது நம்மை நாம் பலப்படுத்திக் கொள்வதைப் போன்றது.



அதற்கான ஒரு எளிய வழிமுறை தான் குலதெய்வ வழிபாடும், சுமங்கலி பூஜை முறைகளும்.

ஆயிரம் முறை கோவிலுக்குச் சென்று அருளை சேகரிப்பதைவிட வலிமையுடையது - ஒருமுறை நிகழ்த்தும் இந்த செயல்பாடுகள்!

❖❖❖

ஆஸ்பத்திரி வாசலை அமிர்தம் மிதித்தபோது காத்துக் கொண்டிருந்தான் சிவகுமார்.

ஓடிவந்து கட்டிக் கொண்டான். கண்ணீரும்விட்டான். அவள் பெரிதாக ஒரு பெட்டியோடு வந்திருப்பதை வைத்தே அவள் சமீபத்தில் திரும்பப் போவதில்லை என்பதையும் புரிந்து கொண்டான்.

அமிர்தம் வேகமாக உள்ளே ஓடினாள்.

வார்டில் தொட்டிலில் கிடந்த பேரனைத் தேடி அவன் முன்னால்தான் போய் நின்றாள்.

கை காலை உதைத்துக் கொண்டு 'வழவழ கொழகொழா' என்று மழலைப் பிதற்றலில் இருந்த பேரனைப் பார்த்த அடுத்த நொடியே அவளிடம் ஸ்தம்பிப்பு.

''அம்மா... என்னம்மா ஆச்சு?''

''சிவா... என்பேரன்... என்பேரன்...''

''உன் பேரன் தாம்மா... ஏன் இவனுக்கென்ன?''

''என்ன ஒரு ஆச்சரியம்... என்னா ஒரு அதிசியம்'' அவள் குரலில் படபடப்பு.

''என்னம்மா சொல்றே?''

பதில் பேசாமல் அவள் மருமகளைப் பார்த்தாள். அப்படியே திருஷ்டி கழித்தாள். நெற்றியில் முத்தமிட்டாள். பின் கொண்டு வந்த பெட்டியைத் திறந்தாள். உள்ளே ஒரு ஃப்ரேம் போட்ட பழைய புகைப்படம்! அதில் ஒரு வயதுக் குழந்தை தவழ்ந்து கொண்டு இருந்தது.

அதை பார்த்த சிவகுமார் கச்சிதமாகக் கேட்டான்.

''அம்மா, இது என் தாத்தா கதிர்வேலுவோட சிறு வயசு போட்டாதானே?''

''இதே தான்... அவரோட மத்த போட்டோல்லாம் நம்ம வீடு தீப்பிடிச்சு எரிஞ்சதுல எரிஞ்சுபோச்சு. இது ஒண்ணுதான் தப்பினுச்சு. இப்ப நான் கிளம்பி வரைல இந்தப் படம், நம்ம குலதெய்வம் படம், உங்கப்பா படம் எல்லாத்தையும் அள்ளிப்போட்டுகிட்டு வந்தேன்.

இதுமட்டும் அப்ப ஏன் எரியலைன்னு இப்பதான் புரியுது. பாரு... அப்படியே என் பேரன் உன் தாத்தா மாதிரியே இல்லை...''

''ஆமாம்மா... அது சரி... நீ என்ன திரும்ப போறது இல்லேங்கற முடிவோடயே வந்துட்டியா?''

சிவகுமார் கவலையோடு கேட்டான். அவள் தலை மௌனமாக ஆமோதித்தது.

''அம்மா...''

''கவலைப்படாதே. நான் விரும்பினாலும் என்னை இனி அவர் சேர்க்க மாட்டாரு. அவர் என் கழுத்துப் புருஷன். நீ என் வவுத்துப் புருஷன்.

கழுத்துப் புருஷன் சரியில்லேன்னா வவுத்துப்புருஷன் தானே கதி?''



அடுத்த நொடியே அம்மா அமிர்தத்தை அப்படியே வாரிக் கட்டிக் கொண்டான் சிவக்குமார்.

வீட்டு வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம்.

எட்டிப் பார்த்த அமிர்தத்துக்கு அடி வயிற்றில் அமிலம் சுரக்க ஆரம்பித்தது.

காரில் இருந்து நாகமாணிக்கம் இறங்கி அங்கேயே நின்றபடி நேராக உள்ளே பார்த்தார்.

சிவகுமாரும் அப்பா வந்து நிற்பதைப் பார்த்துவிட்டு வாசல் நோக்கி ஓடினான்.

''அப்பா வாங்கப்பா... உள்ற வாங்கப்பா...'' வாய் நிறைய அழைத்தான். அவரோ கையைக் கட்டிக் கொண்டு முறைத்தார்.

''அப்பா...''

''வாய மூடு... எங்க உங்கம்மா..?''

''உள்ற இருக்காங்க. நீங்களும் வாங்கப்பா...''

''அவளை வெளிய வரச்சொல்லு...''

அவளே வெளியே வந்தாள். மழையில் நனைந்தவள் ஒடுங்கி நிற்கிற மாதிரி நின்றாள்.

''அமிர்தம்... உனக்கு ஆனாலும் தைரியம்தான் புள்ள...''

''அது வந்துங்க...''

''எது வந்து...? பாசம் பொத்துகிச்சோ?''

''ஆமாங்க...'' பட்டென்ற பதில் அமிர்தத்திடம்.

''அப்ப இனி நான் உனக்கு தேவை இல்லைன்னு சொல்லு.''

''நான் அப்படி நினைக்கல: உள்ற வாங்க. பேரனைப் பாருங்க. பொறவு பேசுங்க. உங்க அப்பாரு அப்படியே வந்து பொறந்துருக்காரு.''

''த்தூ... வாயமூடு! என் அப்பாவுக்கென்னடி தலைஎழுத்து... இந்த சிறுக்கி வவுத்துல வந்து பொறக்க?''

வாசலில் அவர் கத்திய கத்தலில் அக்கம் பக்கம் எட்டிப் பார்த்தது.

''அப்பா உள்ற வாங்கப்பா... எல்லாரும் பாக்கறாங்க''. சிவகுமாரும் கெஞ்சினான்.

''இதோ பார். உனக்கு நான் அப்பாவுமில்லை - எனக்கு நீ மகனுமில்லை. அதே மாதிரி உன் அம்மாவும் எனக்கு பொண்டாட்டியா இல்லையாங்கறது இப்ப தெரிஞ்சாகணும் எனக்கு...''

''எதுவா இருந்தாலும் உள்றவாங்க. உக்காந்து பேசுவோம்.''

''அதுக்கு வேற யாரையாவது பார்த்துச் சொல்லு, நான் மானஸ்தன். உப்பு போட்டு சோறு திங்கறவன்.''

''அப்படி என்னப்பா நான் செய்யக்கூடாத தப்ப செய்துட்டேன்?''

''ஒரு தப்புக்கல்யாணம் உனக்கு சாதாரண விசயமோ..? சரிதான். உன் கிட்டல்லாம் பேசிகிட்டு நிக்கறேன்பாரு. என்னை செருப்பால அடிக்கணும். ஏய்... உனக்கு கடைசியா ஒரு சந்தர்ப்பம். இப்ப என் கூட வருவியா மாட்டியா?''

அவர் முடிவுக்கு வந்துவிட்டார். அமிர்தம் பதில் கூறாமல் திரும்பி உள்ளே நடந்தாள். அவரை அது வெளி கொள்ள வைத்தது.



''அப்படியா சங்கதி... அப்ப உனக்கும் போட்றேண்டி முழுக்கு. இனி என் சொந்தத்துல மட்டுமல்ல சொத்துலையும் உங்களுக்கு ஒரு கால் காசு கிடையாது. இதை சாதாரணமா சொல்லிட்டு போயிடுவேன்னு நினைக்காதே.

ஊரைக்கூட்டி பஞ்சாயத்து வெச்சு அவங்க முன்னால் நீர்க்கோடு போட்டு தாண்டிப் போய் முடிவு கட்டுவேன். வாரேன்...''

அவர் உக்கிரத்தை கக்கிவிட்டு திரும்பக்காரில் ஏறிக் கொண்டு பறந்தார்.

உள்ளே ஒரே அழுகை.

சிவகுமாரின் மனையினான ரத்னா ஓடிவந்து மாமியார் காலில் விழுந்து அழுதாள்.

''அத்தே... எங்கள மன்னிச்சிடுங்க... காலம் எவ்வளவுதான் மாறுனாலும் மாமா மாறாமலே பேசறாரு. ஒரு குழந்தை பொறந்தா சரியாயிடும்னு நம்புனோம். ஆனா அதிகமாயிடிச்சு. இப்ப இவர் மட்டுமில்ல - நீங்களும் இல்லாம போயிட்டீங்க. எல்லாம் எங்களாலதான்.

எங்களை மன்னிச்சிடுங்க...''

அமிர்தம் மருமகள் கண்ணீரைத் துடைத்துவிட்டு ''எல்லாம் இந்த குடும்பத்து சாபக்கேடு.'' - என்றாள்.

''என்ன அத்தை சொல்றீங்க?''

''இவன் அத்தை ஒருத்தி இருக்கா. அவ விஷயத்துலையும் இப்படிதான் அவளைப் பாடாப் படுத்தி ஓடாத் தேச்சாங்க.

வீட்டுப் பொண்ணு... அவ அழுதா குடும்பம் விளங்காதுன்னு நான் எவ்வளவோ சொன்னேன். மானம் ரோஷம்னு எகிறிக் குதிச்சதோட அந்தப் பொண்ணு

காலத்துக்கும் கண்ணீர் விடும்படி அவ புருஷன் நாக்கை வெட்டிட்டாங்க.

பாவம் அவ..

அந்தப் பாவம் இப்ப உங்களை, என்னைன்னு பிரிச்சு அவரை தனி மரம்ஆக்கிடிச்சு.

இப்படி எல்லாம் நடக்கணும்னு ஆசைப்பட்ட பங்காளிங்களுக்குத்தான் கொண்டாட்டம்.''

அமிர்தம் பழைய குடும்பக் கதையை சுருக்கமாக சொல்லி முடித்தாள்.

அப்பொழுது வாசற்புரம் நிழலாடியது.

''இரு யாருன்னு பாக்கறேன்...'' - அமிர்தம் எழுந்து சென்று பார்த்தாள். பார்த்த நொடி ஈரக்குலையே ஒரு ஆட்டம் ஆடிவிட்டது. அவள் சற்று முன் யாரைப் பற்றிசொன்னாளோ-அவள் சிந்தாமணி!

அதுவும் ஒரு பிச்சைக்காரியாக...

''சிந்தாமணி...''

''அண்ணி.''

''நீயா... நீயா இப்படி?'' - அமிர்தம் பதறினாள். சிந்தாமணியும் உடல் நடுங்க கண்ணீர்விட ஆரம்பித்தாள்.

''உள்ற வா தாயி... உள்ற வா!'' அமிர்தம் அவளைப் பற்றி இழுத்துக் கொண்டு உள்ளே சென்றாள். சிவகுமார் அத்தை பற்றி கேள்விப்பட்டிருக்கிறான். ஆனால் பார்த்ததில்லை. இப்பொழுதுதான் பார்க்கிறான். அதுவும் ஒரு பிச்சைக்காரியாக...



''சி'வா... இவதாண்டா உன் அத்தை. இப்ப கொஞ்சம் முந்தி சொன்னேனே, அவடா!'' - அமிர்தம் அறிமுகம் செய்து வைத்தாள்.

''அத்தையா...?''

''ஆமாம்... உங்க அப்பா, பாட்டியோட சாதித் திமிரால - வறட்டு கௌரவத்தால இவ வாழ்க்கையே பாழாப் போச்சு. அம்மாடி... என்னடி இது கோலம்? உன் புருஷன் வேலை வெட்டி எதுக்கும் போறதில்லையா?''

-அமிர்தம் ஆரம்பித்தாள்.

-பதிலுக்கு சிந்தாமணி அழுதாள். பார்த்துக் கொண்டேயிருந்த ரத்னாவுக்கும் அடி வயிறு கலங்கியது.

காதல் - விஷயத்தில் அவர்களுக்கு முன்னோடியாயிற்றே அவள்.

''அவரால நடமாட முடியலை அண்ணி. பேச்சு போனதுல இருந்தே அவர் பாதி மனுஷன்தான். இப்ப மிச்சமும் போயாச்சு. படுத்த படுக்கையா கிடக்காரு. எனக்கும் என்ன செய்யறதுன்னு தெரியல... வேறு வழி தெரியாமத்தான் இப்படி...''

-சிந்தாமணி பேச்சின் முடிவில் விசும்பி விசும்பி அழ ஆரம்பித்தாள். அமிர்தம் பதிலுக்கு கட்டிக் கொண்டாள்.

''கவலைப்படாதே... நீ பிச்சை எடுக்க கிளம்பினதும் நல்லதாத்தான் முடிஞ்சிருக்கு. இல்லேன்னா இந்த வீட்டுப் பக்கம் வந்திருப்பியா... என் கண்ணுலதான் பட்ருப்பியா?''

''அண்ணி... நீங்க எப்படி இங்க?''

''இந்த நிமிஷம் உன் நிலை தான் என் நிலையும். நீ செஞ்ச அதே தப்பை இதோ இவனும் செய்துட்டான். என்மகன். உன் மருமகன்.

விட்டுல சேக்கல உன் அண்ணன். நானும் வந்துட்டேன். என்னையும் தலை முழுகிட்டதா சொல்லிட்டு அவர் கிளம்பிப் போயிட்டாரு''.

''பட்ட கால்லையே படும்... கெட்ட குடியே கெடும்கற மாதிரி நம்ம குடும்பம் இப்படி ஆயிடிச்சே அண்ணி. அனமா... என் புருஷன் நாக்கை அறுத்த மாதிரி இவங்கள...''

- சிந்தாமணி நியாயமான பயத்தைதான் காட்டினாள்.

''இந்த நிமஷம் வரை ஒண்ணும் பண்ணல. நானும் வந்துட்டதால இனி ஒரு வேளை அவர் எதாச்சும் திட்டம் போடலாம்.

அவங்களுக்குத்தான் அவங்க பிடிச்ச முயலுக்கு மூணு கால் ஆச்சே.

அதுலையும் நீ வேற இப்ப இங்க இருக்கறது தெரிஞ்சுட்டா எல்லாரும் ஒண்ணா சேர்ந்து கூட்டுக்களவாணித்தனம் பண்றதாத்தான் உங்கண்ணன் நினைப்பாரு.

உங்கண்ணன் நினைக்கறதோட இல்லியோ-உங்கம்மா நிச்சயம் சும்மா இருக்கமாட்டாங்க. அதை நினைச்சாதான் பயமா இருக்கு...''

- அமிர்தம் அச்சப்பட ரத்னாவும் சிவகுமாரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

## 3

**இரத்த சம்பந்தமுள்ள உறவு நிலைகளில் ஒருவர் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் நினைத்த மாத்திரத்தில் இவரது ஸ்டிசம உடலும், அவரது சூட்சம உடலும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு விடுகின்றன.**



ஒவ்வொரு மனிதருக்கும் அவரது திட உடல் இல்லாமல் புறத்தில் ஒரு முழம் தொலைவில் சூட்சம உடலும் தலைக்குமேல் அதி சூட்சம உடலும் அமைந்துள்ளது.

அதைச் சாதாரண நமது கண்களால் பார்க்க முடியாது. யோகாப்பியாசத்தாலும், வேறு பயிற்சிகளாலும், குண்டலினி யோகம், சகஜஸ்தி போன்றவைகளாலும் ஒரு மேம்பட்ட நிலையை அடைந்துவிட்ட மகான்களுக்கு அந்த சூட்சம உடலைப் பார்க்கும் திறன் உண்டு.

உடலைச் சுற்றி வண்ண வண்ண வளையங்களும் மிகுந்திருக்கும். இதில் அவரது துக்கத்தைக் கறுப்பு நிறமும், சந்தோஷத்தைப் பொன்னிறமும், கல்வி ஞானத்தை மஞ்சள் நிறமும் காட்டிக் கொடுக்கும்.

இதைப் பார்த்தே பல ஞானிகள் நாம் எதுவும் கூறாமலே நம்மைப் பற்றித் தெரிந்து கொண்டு அதற்கேற்ப நமக்கு ஆசி கூறுவர்.

இந்த நூற்றாண்டில் பகவான் ரமணர், காஞ்சி பரமாச்சார்யார், யோகி ராம் சுரத்குமார் போன்றோர் இந்த ஆற்றல் மிகுந்தவர்களாக இருந்தனர்.

இறப்புக்கு பிறகு நமது திட உடல்தான் அழிகிறது. இந்த சூட்சம உடல் அப்படியேதான் இருக்கும். அது கர்ம காரியங்களைப் பொறுத்து இந்த உலகை விட்டு பித்ருலோகம் செல்லும். அப்படிச் சென்றவை பூவுலகில் தங்கள் வம்சாவழிகளை ஆசிர்வதிக்கவும், அவர்களும் பித்ரு கர்மங்களை ஏற்கவும் உரிய திதிகளில் திரும்ப வருவார்கள். ஒருக்கால் மீண்டும் ஜென்மம் எடுக்க நேர்ந்தாலும் அந்த நிலையிலும் அவர்களது வழிபாடு முந்தைய குல தெய்வத்தைச் சார்ந்ததாகவே இருக்கும்.

தெய்வதம் என்றால் அழியாதபடி காத்து நிற்றல் என்று பொருள். குல தெய்வம் என்பதும் வம்சா வழிகளைக் காத்து நிற்க முற்படும் ஒரு செயல்பாடே.

எனவே இழிநிலையில் இருந்து விடுபட குலதெய்வங்களை சரணடைந்தால் நிவாரணம் மிக வேகமாய்க் கிட்டும்.

❖❖❖

குட்டி போட்ட பூனைபோல கவலையோடு சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தார் நாகமாணிக்கம். படுக்கையில் எழுந்து அமர்ந்த நிலையில் அவரது தாயான கிழவி தங்கமணி, ''இதை இப்படியே விட்டா அப்புறம் நீ மீசை வெச்சிருக்கறதுக்கே அர்த்தமில்லடா. எல்லாத்துக்கும் காரணம் அந்த சிறுக்கி. அவளை அப்படியே உசுரோட வெச்சு கொளுத்திப்புடு.''

கிழவி மகனை ஏற்றிவிட்டாள். நாகமாணிக்கக் கவுண்டர் நல்ல நாளிலேயே நாழிப்பால். இப்பொழுது அம்மா வேறு சேர்ந்து கொண்டால் கேட்கவா வேண்டும்.

''இல்ல ஆத்தா... அப்படி எல்லாம் இப்ப எதையும் பண்ண முடியாது. பத்து பதினைஞ்சு வருஷத்துக்கு முந்தி இருந்த நிலையே வேற. இப்ப தொட்டதுக்கெல்லாம், புதுசு புதுசா சட்டங்கள். பொம்பளைங்களுக்குன்னு தனியார் போலீஸ் ஸ்டேஷன். போலீஸ் காரவுக. ஆகையால திட்டம் போட்டுத்தான் தட்டணும், மாட்டிக்கிடாம சாக்ரதையா அடிக்கணும்.''

''என்னடா போலீசு, சட்டம்னு தொடை நடுங்கறே. என்ன பெரிய போலீசு? சிந்தாமணியைக் கட்னவன் நாக்கை அறுத்தப்ப கூடத்தான் விலங்கை தூக்கிட்டு வந்து



நின்னானுங்க. அப்ப நான் ஒரு நோட்டுக் கட்டாலையே அவனுங்கள திருப்பி அனுப்பலை...?''

''ஆத்தா! நீ பழைய நினைப்புலயே இருக்கே. அங்க அந்த கூத்தாடிப்பய விபரமில்லாதவன். ஆனா என் மவன் அப்படி இல்ல. அவன் என் ரத்தம். நான் என் செய்வேனோ அதை அவனும் செய்வான்.''

''அப்ப... தலைமுழுக்கு போட்டுட்டு இருந்தா பாக்கறவுக என்ன பேசுவாக? உன் மவனும் பொண்டாட்டியுமே உன் கைக்குள்ள இல்லாதப்ப நீ யாரை அதிகாரம் பண்ண முடியும்? ரோசிச்சுப் பார்த்தியா?''

''போதும்.. நானே நெருப்பா கொதிச்சுப் போய் கெடக்கேன். நீ வேற எண்ணெய் ஊத்தாதே.''

''அடப்போடா முட்டாப் பயலே... என்ன ஆனாலும் சரி. உனக்கு அடங்காத அவங்க நிம்மதியா வாழ்ந்துடக்கூடாது.''

''அப்ப ஒரு வழிதான் இருக்குது.''

''என்ன?''

''அவுகளை மன்னிச்சு இங்க இழுத்துகிட்டு வந்து நமக்குள்ள வெச்சு, கழுத்தை அறுக்கறதுதான் அது!''

-நாகமாணிக்கக் கவுண்டர் ஒரு வேகத்தில் இப்படிச் சொன்னாலும் அதிலும் அர்த்தம் இருக்கத்தான் செய்தது. கிழவியும் ஆமோதிப்பாய் தன் பொக்கை வாயைத் திறந்தாள்.

''எலேய் ... சட்டி சுட்டுச்சு கை விட்டுச்சுன்னு இல்லாம, இப்படி இழுத்து வெச்சு அழிக்கறதும் நல்லாத்தான் படுது. போ... போய் அவுகளை இழுத்துகிட்டு வா. இனி இந்த வூட்டுல இரண்டு வேலைக்காரிங்க. ஒண்ணு உம் பொண்டாட்டி. இன்னொருத்தி உன் மருமக. அவுளுகள சித்திரவதை

பண்ணி சாவடிப்போம். போ... போய் அவுங்களை இழுத்துகிட்டு வாடா, போ...''

-கிழவியின் துரத்தல் நாகமாணிக்கத்துக்கும் ஒரு புதிய தெம்பைத் தந்தது.

'எப்படி இந்த கௌரவப் பிரச்சினையில் இருந்து விடுபடப் போகிறோமோ தெரியவில்லையே!' என்று குழம்பியவருக்கு ஒரு பத்து நிமிடத்தில் புதிய வழி தெரிய வந்ததில் பெரிய அளவில் நிம்மதி.

**வீ**டு வீடாகப் போய், பிச்சை எடுத்துக் கொண்டிருந்தாள் அந்தப் பெண். நல்ல பணக்கார தோற்றம். பளிச்சென்ற முகம். மஞ்சள் புடவையும் ரவிக்கையுமாக தீச்சட்டி ஏந்தி, அவள் வீடு வீடாக வரும்போது எல்லாருமே அவளை வீட்டுக்குள் அழைத்து நடு ஹாலில் உட்கார வைத்து, அவள் மடித்துணிப் பையில் அரிசியை பிச்சையாக இட்டனர்.

சமயபுரம் மாரியம்மனிடம் ஒரு நேர்த்திக் கடனாய் நேர்ந்து கொண்டு இப்படி வீடு வீடாக பிச்சை எடுக்கும் அந்தப் பெண் உண்மையில், ஒரு பெரிய ஆபிசரின் மனைவி.

அவருக்கு உயிருக்கு ஆபத்தான ஒரு நிலையில் மாரியம்மனிடம் சரண் புகுந்தாள். அவரும் பிழைத்தார். அதன்பின் அன்னை மாரி அவள் உடலில் அடிக்கடி புகுந்து, பேச ஆரம்பித்தாள்.

அப்பொழுது அவள் சொன்னதெல்லாம் அப்படியே நடந்தது.

கடவுளாவது... உடம்பில் இறங்குவதாவது. எல்லாமே ஒருவித மனநோய் என்று தனக்குத் தெரிந்த கருத்தை சொன்ன டாக்டர் ஒருவர் கூட பின் அவள் வரையில் மாறித்தான் போனார்.



எப்பொழுதுமே சுயமாக அனுபவிக்காதவரைத்தான் விஞ்ஞானம் பெரிது. ஒருமுறை-ஒரே முறை அழுத்தமாய் இறை அனுபவத்துக்கு ஆட்பட்டுவிட்டால் அதன்பின் வேறு எதுவுமே பெரிதாகத் தெரியாது.

இந்தப் பெண்மணியின் விஷயமும் அப்படித்தான்...

வீடு வீடாக பிச்சைக் கேட்டு வரும் அவள் சில வீடுகளில், அழைத்தும் செல்லவில்லை. சில வீடுகளுக்குள்ளோ, அழைக்காமலே சென்றாள்.

அப்படித்தான் சிவகுமாரின் வீட்டுக்குள்ளும் நுழைந்தாள்.

ஒரு கையில் புகை கக்கும் தீச்சட்டி, மறு கையில் வேப்பிலை... இரண்டுடனும் அவள், 'ஆயிவந்துருக்கேன்... மகமாயி வந்துருக்கேன்' என்றபடியே உள்ளே நுழையவும் எல்லோரும் ஒரு வினாடி ஆடிப்போயினர்.

அமிர்தம் கைகளைக் கூப்பிக் கொண்டு பயபக்தியோடு பார்த்தாள். சிவகுமாரும், சிந்தாமணியும் ஒரு ஓரமாக நின்று வெறித்தனர்.

அந்த பெண்மணியின் பார்வை, வீட்டைச் சுற்றிச் சுற்றி பார்த்தது. நடுவில் குழந்தையின் அழுகுரல். அதைக் கேட்கவும் அந்த பெண்மணியின் முகத்தில் ஒரு புன்முறுவல்.

''நான் யார்னு தெரியுதா?''

''தெரியலியேம்மா... உங்கள நான் பார்த்ததில்லையே.''

''பரவால்ல.. ஆனா நான் தான் தினம் பார்க்கறேனே. நீ நாள் தவறினாலும் என் கோவிலுக்கு வரத்தவறாத என் பக்தையாச்சே...''

-அந்தப் பெண்மணி அமிர்தத்தை பார்த்துச் சொன்னதும் உண்மைதான். அவள் வீட்டுக்கு அருகில் கவுண்டரின் பராமரிப்பில் ஒரு மாரியம்மன் கோவில் இருக்கிறது. அதற்கு தினமும் ஒரு வேளை போய், விளக்கு போட்டுவிட்டு வருவாள்.

அதை இங்கே அந்தப் பெண்மணி கச்சிதமாக எதிரொலிக்கவும் அமிர்தம் முகம் துலக்கியது போல ஒளிர்ந்தது.

''வீட்டுல ஒரே குழப்பம்... கொண்டவனே விண்டவனாயிட்டான் போல தெரியுதே...?''

- அடுத்து அந்த பெண்மணி கேட்டதும் பொட்டில் அடித்த இன்னொரு நிஜம்.

வேகமாக அமிர்தத்தின் தலையாடியது.

''கவலைப்படாதே... குல தெய்வத்தை மறந்தாலே இப்படித்தான். எனக்கு எதுக்கு இனிமே விளக்கு? போ... போய் உன் குல தெய்வத்துக்கு போடு. அங்கே போய் கால்ல விழு.

கழுத்த, நெர்க்கப்போற கையும்-கட்டி, மாலை போடும். எல்லாமே மாறும். எனக்கு நீ ஏத்துன விளக்குக்கு உனக்கு நான் வழிகாட்டிட்டேன். கெட்டியா புடிச்சுக்கோ... வரட்டா...''

மளமளவென்று சொல்லவேண்டியதை சொல்லிவிட்டு அந்தப் பெண்மணி வெளியேற, அமிர்தம் ஆச்சரியத்தில் அப்படியே நெகிழ்ந்து போனாள்.

''என்னம்மா இதெல்லாம்?''

''இதாண்டா அவளோட அருள்!''



''யாரும்மா அவ...?''

''முட்டாளே... நம்ம தோட்டத்து மாரியம்மனுக்கு நான் கூட தினம் தினம் விளக்கு போட்டுட்டு வருவேனே...''

''அதுக்கும் இந்தம்மா சொல்றதுக்கம் என்ன சம்பந்தம்?''

''உனக்கு புரியலியா... நாம பல வருஷமாவே குலதெய்வம் கோவிலுக்குப் போறத விட்டுட்டோம். விட்டுட்டோம்ங்கறது கூட பொய். மறந்தே போயிட்டோம். அதை ஞாபகப்படுத்திவிட்டு போவுது இந்தம்மா...''

''குலதெய்வதைத்தைக் கும்பிட்டா நம்ம பிரச்சினை தீர்ந்துடுமா?''

''சொன்னிச்சே கேக்கலையா? கழுத்த நெரிக்கப் போற கையும் கட்டி மாலைபோடும்னு சொன்னிச்சே...''

''சாரிம்மா... இப்படி தெருவுல போறவங்க வந்து தோணினதை பேசுனதக் கேட்டெல்லாம் என்னால ஒரு முடிவுக்கு வர முடியில... அதேபோல தெய்வம் அப்புறம் குலதெய்வம் அதுக்கொரு ஸ்பெஷல் கும்பிடுங்கறதெல்லாம் பம்மாத்து. சாமி ஒண்ணுதான். அதை குலதெய்வம், கோவில் தெய்வம்னு பிரிச்சு வித்யாசப்படுத்தறதை பெரிய முட்டாள் தனமாத்தான் நான் நினைக்கிறேன்.''

-சிவகுமார் - இன்றைய இளைஞன் எப்படிப் பேசுவானோ அப்படிப் பேசினான். அப்படியே,

''ஆமாம் நம்ம குலதெய்வம் கோவில் எங்க இருக்கு?''

''அது இருக்குது ஒரு காட்டுக்குள்ற... அங்க ஒரு நடுகல்லுதான் நம்ம சாமி.''

''சாமி பேரு...''

''ஆச்சாரப்பசாமி!''

''ஆச்சாரப்பரா...! பேரே வினோதமாக இருக்குதே...!''

'' ஆச்சாரப்பர்தான். உங்க தாத்தா இருந்தவரை ஒழுங்கா போய் பொங்கல் வெச்சு கும்பிட்டுகிட்டு இருந்தோம். அவர் செத்தாரு, அதோட எல்லாமே போயிடிச்சு.''

''அப்ப அவர் வந்து பொறக்கவும் தெருவுல போவுற ஒரு அம்மா வந்து கரெக்டா ஞாபகப்படுத்திடிச்சாக்கும்?''

''என்னடா சொல்றே?''

''நீதானே சொன்னே... என் தாத்த சின்ன புள்ளைல இருந்த மாதிரியே உன் பேரனும் இருக்கான்னு...''

-சிவகுமார் எதார்த்தமாகத்தான் கேட்டான். ஆனால் அமிர்தம் அதை கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

''இருக்கும்... இருந்தாலும் இருக்கும்'' என்றாள் பரவசத்தோடு.

''என்னத்த இருக்கும்...? உன் புருஷன் என் மீது கொடுமையை எந்த மாதிரி செய்யப் போறாரோ, அதை எப்படி ஃபேஸ் பண்ணப் போறோமோன்னு தெரியல நான் முழிச்சுகிட்டிருக்கேன். நீ என்னடான்னா குலதெய்வம் அது இதுன்னு பேசிக்கிட்டிருக்கே...''

''இல்லடா தம்பி... எனக்கு நம்பிக்கை இருக்கு. இந்த நிமிஷம் நான், நம்ம குலதெய்வத்துக்கிட்ட சரணடைஞ்சிட்டேன். நம்மை எல்லாம் காப்பாத்தறது இனி அதோட கடமை. நீ வேணா பாரு, இனி நம்ப முடியாததெல்லாம் நடக்கப்போகுது.''



''நம்ப முடியாததுன்னா... அப்பா மனசு மாறி, மகனே என் ராசா... வந்துட்றா வீட்டுக்குன்னு எனக்கு வெத்தலை பாக்கு வைப்பாரா? அப்படி நடந்தா அதுதான் முடியாத விஷயம் இப்ப...'' சிவகுமார் சொன்ன மறுநொடி, வீட்டு வாசலில் நாகமாணிக்கக் கவுண்டரின் கார் வந்து நின்றது.

## 4

**'பரம தரித்ர நிலையில் உள்ளவர்கள் கூட குலதெய்வங்களை ஆத்மார்த்தமாக வணங்கினால் தரித்திரத்திலிருந்து விடுபடுவார்கள். குறிப்பாக சுமங்கலியாக இறந்தவர்களை வணங்குவது பெரிதும் நன்மை செய்யும்.**

**அவர்கள் கர்ம வினைக்கு ஏற்ப முக்தியோ மோட்சமோ அவர்கள் அடைந்திருந்தாலும் அவர்களது சூட்சம தேகங்களில் ஒன்று குலதெய்வத்திடம் சென்று அதன் அருள் வட்டத்தில் ஜீவித்தபடி இருக்கும். அதற்கு நமது கர்ம பலன்களைக் கூட்டவும், குறைக்கவுமான சக்தி உண்டு. ஆனால் நம் வழிபாடு உண்மையானதாகவும், ஆத்மானு பூர்வமாகவும் இருக்க வேண்டும்.**

**பொன் வேண்டும், பொருள் வேண்டும் என்கிற அற்ப பிரார்த்தனைகளாக அது இருக்கக்கூடாது. அவர்கள் அருள் வேண்டும். அவர்களது காவல் வேண்டும் என்று கேட்டாலே போதும்.**

**மெல்ல மெல்ல நம்மை மேன்மைக்கு அவர்களது அருளாசி அழைத்துச் சென்றுவிடும். அதே சமயம் அவர்களை மறந்தும், அவர்களுக்கான திவசகர்மங்களைத் துறந்தும் வாழ்ந்தால் அது பெரிய சாபமாக உருமாறி குடும்பத்தை அலைக்கழிக்கும்!'**

❖❖❖

காரில் இருந்து இறங்கிய நாகமாணிக்கத்தைப் பார்த்த சிவகுமாருக்கு தூக்கி வாரிப்போட்டது.

''அப்பா...'' - உற்சாகமானான். அமிர்தமும் ரத்னாவும் சிந்தாமணியும் கூட அவர் வருவதைப் பார்த்து அதிர்ந்தார்கள்.

அவர் ஒன்றும் சும்மா வரவில்லை.

வெற்றிலை, பழம் என்று ஒரு பெரிய தட்டுடன்தான் இறங்கினார்.

அமிர்தம் சொன்னது வீண்போகவில்லை, இப்படிக்கூட நடக்குமா என்ன?

''வாங்கப்பா...'' -சிவகுமார் பாசத்தோடு அழைத்தான். அவரோ வாசற்படியருகிலேயே தயங்கி நின்றார்.

''உள்ற வாங்கப்பா...''

''இல்லப்பா... நான் பேசுன பேச்சே இப்ப என்னை தடுத்துக்கிட்டு இருக்குது.''

''நாங்க அதை எல்லாம் அப்பவே மறந்துட்டோம். சும்மா வாங்க...''

-அவரும் தயங்கியபடி உள்ளே பிரவேசித்தார். ''அம்மாடி... இந்தா பிடி...'' - என்று, பழத்தட்டை ரத்னாவிடம் நீட்டினார்.

அமிர்தம் மட்டும் அவரது செயலை எடைபோடுகிற மாதிரி வெறித்துக் கொண்டே இருந்தாள்.

'இப்படியெல்லாம் சட்டென்று மாறுகின்றவர் அல்ல இவர்' என்று அவளுக்குள் ஒரு எச்சரிக்கை ஒலி.

''ஏ புள்ள... என்ன வெறிச்சுகிட்டு நிக்கே? வா. வந்து சேந்து நில்லு. மருமகளையும் மகனையும் ஆசிர்வாதம் செய்வோம்...''



அவர் அழைக்க, தயங்கியபடி - ஆனால் சந்தேகத்துடன் அவள் வர, சிந்தாமணி ஒரு தூண் பின்னால் ஒளிந்திருந்தாள்.

பார்த்தால் ஒருவேளை நரசிம்மாவதாரம் எடுக்கக்கூடும் என்கிற பயம்.

அமிர்தம் பார்த்துக் கொண்டே போய் அவர் அருகில் நிற்க, அவரிடம் மத்தாப்பு போல முகத்தில் மலர்ச்சி.

''நான் ஒரு முட்டாப்பய... கொஞ்சம் கூட ரோசிக்காம கோபப்பட்டு பேசிப்புட்டேன். பொறவுதான் கூட்டி கழிச்சு பாத்தேன்.

எனக்கோ ஒரே பையன். அவன் சந்தோஷத்தை பெருசா நினைக்காம, சாதி, அந்தஸ்துன்னு திமிறா ரோசிக்கறதுல அர்த்தமில்லன்னு தோணிச்சு. அதான் ஓடியாந்துட்டேன்.''

- அவரிடம் பூசி மெழுகல்.

''இந்த புத்தி உங்க மகனுக்கு மட்டும் தானா, இல்ல எல்லாத்துக்குமா?'' - சன்னக்குரலில் அவர் காதில் மட்டும் விழுகிற மாதிரி கேட்டாள் அமிர்தம். அவரை அந்தக் கேள்வி குத்தியது. அதே சமயம் சிந்தாமணியும் அவர் கண்ணில் பட்டாள்.

நடுக்காலில் நல்ல கூர்மையான ஆணி ஏறின மாதிரி இருந்தது. இருந்தும் சமாளித்தார்.

''சிந்தாமணி...''

''சிந்தாமணியேதான்.''

''இவ... இவ இங்க எப்படி?''

''கால நேரம் கொண்டு வந்து சேர்த்துடிச்சே''- உண்மையைத்தான் சொன்னாள் அமிர்தம். ஆனால்

நாகமாணிக்கத்துக்கு அது விஷமாகத் தோன்றியது. எல்லோருமாய் சேர்ந்து, திட்டம் போட்டு செயல்படுகின்றார்கள் என்றுதான் அவர் புத்திக்குள் உறைந்தது. அந்த நொடி பெரியதாய் ஒரு நெருப்புப் பொறி கிளம்பியது. உதட்டு மீசை துடியோ துடியென்று துடித்தது. மிகுந்த சிரமப்பட்டு அடக்கிக் கொண்டவர் ''சிந்தாமணி...'' என்றார் - போலியான நாத்தழுதழுப்புடன்... அவளும் நெருங்கி வந்தாள். ஆனால் அவர்மேல் உள்ள கோபம் அடங்கியிராத நிலையில் ஒரு அம்புப் பார்வையை மட்டும் பார்த்தாள்.

''அப்படி பார்க்காதே... நான் அன்னிக்கு பெரிய பாதகத்தை பண்ணிப்புட்டேன். இப்ப நினைச்சாலும் என் நெஞ்சு கெடந்து தகிக்குது.'' - என்று அவளிடமும் டயலாக்கை அள்ளி விட்டார்.

''எப்படியோ நீங்க மனசு மாறினீகளே, அதுவே போதும்...'' அமிர்தம் இழுத்துப் பூசினாள்.

''நிக்கறீங்களே... உக்காருங்க மாமா...'' என்று ஒரு நாற்காலியை தூக்கிவந்து போட்டாள் ரத்னா. வெட வெடவென்று அவள் கைகளில் நடுக்கம்.

''எங்கம்மா என் பேரப்பய...?'' - அவரையும் மீறி நிஜப்பாசம் அந்தக் கேள்வியை கேட்டுவிட்டது. ரத்னா ஓடிப்போய் தொட்டிலில் கிடந்த குழந்தையை தூக்கிக் கொண்டு வந்தாள். அவர் மடியில் விட்டாள்.

குழந்தையைப் பார்த்தவருக்கு குபீர் என்று வியர்த்தது. வீட்டில், சுவரில் தொங்கிய தன் தந்தையின் குழந்தை வயசுப் போட்டோ உடனடியாக அவர் மனத் திரையில் ஒரு ஸ்லைடை போட்டுக்காட்டியது.

''எலே... எலே... அப்படியே தாத்தனை உரிச்சுக்கிட்டு பொறந்துருக்கானே இந்தப் பய...'' - அவரிடம் நிஜமான பரவசம்.



''ஆமாம்ப்பா... நம்ம தாத்தா செத்த அன்னிக்குதான் இந்தப் பய பொறந்தான்.'' - சிவகுமார் சொன்னது அவரது நெஞ்சில் சொரேல் என்று ஒரு உணர்வைப் பரத்தியது.

மகனை மலங்க மலங்கப் பார்த்தார்.

''நம்ம தாத்தா செத்த அன்னிக்குன்னா - அவர் உசுர்போன அதே நாள்ளன்னு அர்த்தம் இல்ல. அந்தத் தேதியில பொறந்துருக்கான். காலண்டரைப் பாருங்க தெரியும்.''

''அப்படியா... என் அப்பனுக்கு நேத்தா தெவசம்? நான் மறந்துட்டேன். நீ மறக்கலியே.''

''எப்படிப்பா மறக்க முடியும்? என்னைக் காப்பாத்தப் போயி கார்ல அடிபட்டு எனக்காகத் தன்னை கொடுத்தவராச்சே என் தாத்தா...''

அவன் கண்களில் கண்ணீர் துளிர்ந்தது.

''அப்ப எங்கப்பாரே திரும்பவந்து பொறந்துருக்கறாரா?''

''அப்படித்தான் நான் நினைக்கறேன். அதான் உங்களால கூட கோவிக்க முடியில. மனசு மாறி பாக்க வந்துட்டீங்க...''

''நெசம்தான்... அந்த சாமியம்மா சொன்ன மாதிரி நம்ம குலசாமியை போய் கும்பிட்டுட்டு வந்தா, கொஞ்ச நஞ்ச கஷ்டமும் விலகிடும்.''

-இடையில் அமிர்தம் குறுக்கிட்டு ஞாபகமாக அந்த சமயபுரத்துக்கார அம்மா சொன்னதை எடுத்துப் பேசினாள்.

''எப்படியோ... எல்லாம் நல்லபடி நடந்தா சரி. சரி தாயி... இனியும் நீங்க இங்க கிடந்து கஷ்டப்படவேண்டாம். எல்லாரும் ஒண்ணா இருப்போம்... கிளம்புங்க...'' - என்று, தான் வந்த நோக்கத்திடம் வந்தார்.

அமிர்தம் அர்த்தத்தடன் ஒரு பார்வை மட்டும் பார்த்தாள்.

''என்ன புள்ள பாக்கறே?'' - தழைந்த குரலில் அவர் கேட்க ''நெசமாலுமே மனசு மாறித்தான் பேசுறீகளா?'' என்று அவளும் சந்தேகிக்க, அவர் கண்களில், அகப்பட்டுக் கொண்டது போல் ஒரு தவிப்பு - கொஞ்சம் கோபமும் கூட...

''என்னடி... எதுக்கு இப்ப என் வாயைக் கிண்டுறே?''

''எல்லாம் உங்களப்பத்தி நல்லா தெரிஞ்சதாலதான்...''

''அப்ப என்ன நீ சந்தேகப்படுதியா''

''ஆமா... எலி அம்மணமா அலையிதுன்னா காரணமில்லாமலா இருக்கும்?''

''வாயப் பொத்து...''

''கோவிக்கறதப் பார்த்தா, பெருசாகுழியத் தோண்டி புதைக்க வந்துருக்கற மாதிரி தான் எனக்குத் தோணுது.''

-அவர்கள் காதோடு பேசிக்கொள்வதை சிந்தாமணியும் கேட்டுக் கொண்டிருந்தாள்.

சிவகுமார் தன் குழந்தையிடம் கவனமாக இருக்க, ரத்னா அது மூத்திரம் பெய்துவிட்டதற்காக உள்ளாடை மாற்றியபடி இருந்தாள்.

நாகமாணிக்கம் அமிர்தத்திடம் பேச்சுக்கு பேச்சு என்று லாவணி பாடாமல் ஒதுங்கி வந்து பேரனிடம் நின்றார். அவர் வரவும் பேரக்குழந்தையைத் தூக்கி அவர் கைகளில் கொடுத்தாள் ரத்னா. அவள் முகத்தில் மஞ்சள் பூசிக் குளித்தது போல ஒரு சந்தோஷம்.

அமிர்தம் மனது மட்டும் எச்சரிக்கையாக இருக்க என்ன வழி என்று யோசித்துக்கொண்டேயிருந்தது.



## 5

'நோய் வாய்ப்பட்ட பெற்றோர்களைப் பராமரிக்கும் பொறுப்பு என்பது, காலம் ஒருவருக்கு வைக்கும் பரீட்சையை போன்றது. அதைச் சகிப்புத் தன்மையுடனும் பாசத்தைக் குறைத்துக் கொள்ளாமலும் ஈடேற்ற வேண்டும். நோய் நொடிக்கு அஞ்சியும், அதை வெறுத்தும் கை கழுவ முயன்றால் தற்காலிகமாக வேண்டுமானால் அதிலிருந்து தப்பிக்கலாம். ஆனால் அவர்கள் ஒதுக்கிய விஷயம் வட்டி போட்டு வளர்ந்து, ஒரு நாள் அவர்கள் நினைத்தாலும் ஒதுக்க முடியாதபடி வந்து, அவர்களை ஆக்ரமித்துக் கொள்ளும்.

அப்பொழுது அவர்கள் பெற்றோர்களிடம் காட்டியதை அவர்களிடம் மற்றவர்கள் காட்டுவார்கள். அந்த நொடி காலச்சக்கரம் என்பது எவ்வளவு அழகாய் கணக்குப் போட்டு கொடுக்க வேண்டியதைக் கொடுக்க வேண்டியவர்களுக்குக் கொடுக்கிறது என்பது புரியும்.

பொதுவில் நோய் நொடி இன்றி வாழ்வது என்பது சுகாதாரமாய் வாழ்வதில் மட்டும் இல்லை. எவ்வளவு பேர் ஆசீர்வாதங்களை நாம் பேலன்ஸ் வைத்திருக்கிறோம் என்பதில் தான் அது உள்ளது!

❖❖❖

தென்னந்தோப்பில் பாளையைச் சீவி கள்ளுப்பானை பதிப்பதை பார்த்தபடி நின்று கொண்டிருந்தார் வேடியப்ப நாயக்கர். ஒரு ஓரமாய், அம்பாரமாய் அறுத்துக் குவிக்கப்பட்டிருக்கும் காய்கள்.

சுற்றி வளைத்துக்கட்டி, பத்துப் பேர் நின்று கொண்டு மட்டை உரித்துக் கொண்டிருந்தார்கள்.

வேடியப்பநாயக்கரும் எல்லாவற்றையும் மேற்பார்வையிட்டுவிட்டு திரும்பும்போது, அவரது வலது கையான சென்னிமலை ஓடி வந்தபடி இருந்தான்.

அவரை சமீபித்து மூச்சிரைக்க நின்றவன் ''ஐயா...! ஒரு முக்கியமான விசயமுங்க...'' என்றான்.

''மொத மூச்ச விட்டு முடி. பொறவு சேதிய சொல்லு.''

''நம்ம ரத்னா பொண்ணை நாகமாணிக்ககவுண்டர் மருமகளா ஏத்துகிட்டு ஊட்டுக்கு கூட்டிகிட்டு போய்ட்டாருங்களாம்!''

-அவன் சொன்ன செய்தி வேடியப்ப நாயக்கரை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது. சென்னிமலையை வெறித்தார்.

''என்னய்யா... நம்ப முடியலையா...''

''பொடலங்கா... அவன் நடிக்கறாண்டா. இப்பதான் எனக்கு புரியுது.''

''என்னங்க சொல்றீங்க?''

''அவன் என் சொத்தைக் குறிவெச்சே ஆரம்பத்துலே இருந்து காய் நவுத்திகிட்டு வர்றான். வெறுக்கற மாதிரி வெறுத்து, இப்ப அவளை சேத்துக்கிட்டதெல்லாம் சும்மா... அவனுக்கு என் சொத்துமேல ஒரு கண்ணு எப்பவுமே உண்டு.''

-வேடியப்ப நாயக்கர் பேச்சோடு பேச்சாக பழைய நினைப்பு ஒன்றுக்குள் நுழைந்தார்.

அது ஒரு மாட்டுப் பொங்கல் தினம்.

தென்னந்தோப்பில் ஒரே கொண்டாட்டம். வேடியப்ப நாயக்கரின் நண்பராக இருந்தவர்தான் நாகமாணிக்க கவுண்டர். அவரும் இன்னும் சிலரும் கவுண்டரின் தோப்பில் மும்முரமாக சீட்டாட்டத்தில் இருந்தனர்.



ஒரு பக்கம் கள்ளும் பிராந்தியும்... இன்னொரு பக்கம் தலைக்கறியும் ஆட்டுக்கால் சூப்பும்...

ஒரே உல்லாசம்தான்!

போதை ஏற ஏற ஆட்டமும் சூடு பிடித்துக் கொண்டே போனது.

கவுண்டரின் பொல்லாத நேரம், அன்று சீட்டு அவருக்கு வசப்படவேயில்லை.

வேடியப்பநாயக்கரும் சும்மா விடவில்லை ''கவுண்டரே! உம்ம கைல இருந்த ஒட்டமும் சுழியும் என் கைக்கு மாறிடிச்சுய்யா...'' என்று சொல்லி அட்டகாசமாகச் சிரித்தார்.

அது கவுண்டரை ரேக்கி விட்டது.

''எலேய்... இந்த கவுண்டனை ஜெயிக்க ஒருத்தன் பொறந்து வரணும்டா'' என்று பதிலடி கொடுத்தார்.

''ஆமா... அம்பதும் நூறும் வெச்சு ஆட ஒரு ஆள் பொறந்து தான் வரணும்'' என்று நாயக்கரும் சீண்டி விட மீண்டும் கவுண்டரின் ஆவேசம்.

''எலேய்... லட்ச ரூபா வைக்கறதுக்கு எனக்கு தில் இருக்கு. உனக்கு இருக்குதா?''

''தண்ணியப் போட்டுட்டு இந்த மாதிரி உளறினா நான் நம்பிடுவேனா?''

''எலேய் நாயி... நான் உளறல. சத்தியமா சொல்றேன். என்ன சீண்டாதே.''

''அப்ப ரூவாயை வை. பதிலுக்கு நானும் வைக்கறேன்.''

''ரூவா... ரூவா...''

''என்ன அப்பு... அதான் இருக்கறத எல்லாம் போட்டு இந்த தோப்பை வாங்கிப்புட்டியே... இன்னும் ரூவாய்க்கு எங்க போவே?''

''சரிடா... நீயும் நானும் இருக்கற இந்த தோப்பையே வைக்கறேன். நீ பணத்தை வை.''

இருவரின் பேச்சும் இப்படி கொக்கிபோட்டது போல மாட்டிக்கொள்ளும் என்று, கூட இருந்தவர்கள் சிந்தித்திருக்க மாட்டார்கள்.

''நாயக்கரே என்ன இது... நல்ல நாளும் அதுவுமா...?''

''சும்மா இருங்கய்யா. கவுண்டன் தோப்பை வைக்கறேன்னு சொல்லிட்ட பொறவு நான் பின்வாங்குனா அப்புறம் எனக்கு என்ன மதிப்பு மரியாதை இருக்கு? இத்தனைக்கும் அவன் சொத்து பத்துக்கு என் சொத்து பத்து எதுலையும் குறைஞ்சதில்ல. சொல்லப் போனா அவன் லட்சாதிபதின்னா, நான் கோடீஸ்வரன்...''

நாயக்கர் மீசையை நீவிக் கொண்டு எழுந்தார். கால்கள் பெருக்கல் குறிபோல பின்னிக் கொண்ட நிலையிலும் நடந்தார். ஒரு அரை மணியில் அவரது அம்பாசிடரில் திரும்பி அவர் வந்தபோது, அவரது கையில் அவரது சொத்துப் பத்திரங்கள்!

ஏதோ பரீட்சை பேப்பரை மடித்து வைத்துக் கொண்டு ஆசிரியர் வகுப்பறைக்கு எடுத்து வருகிற மாதிரி எடுத்துக் கொண்டு வந்தார்.

அதை அப்படியே வீசி எறிந்தார்.

ஆட்டமும் ஆரம்பமானது.

சுற்றி இருப்பவர்கள் கண்கள் எல்லாம் காதுவரை விரிந்து நின்றன.



இருவரும் இப்படி முட்டிக் கொண்டது எப்படியோ உறவினர்களுக்குத் தெரியவே, அவர்கள் எல்லாரும் கூட ஓடி வந்து அவரவர்கள் தரப்பில் நின்று கொண்டனர். அதில் ரத்னாவும், சிவகுமாரும் கூட இருந்தனர்.

இருவரும் அவர்கள் இருவர் ஆடுவதையும் தடுக்கப் பார்த்தனர்.

ஆனால் வெள்ளம் கரை மீறிவிட்டது.

''நான் மானஸ்தன்... முன் வெச்ச கால பின்வெக்க மாட்டேன்'' என்று நாயக்கர் ஒரு பக்கமும் ''நான் மட்டும் என்ன வெக்கங்கெட்டவனா? சொத்தே அழிஞ்சாலும் சரி'' என்று கவுண்டர் இன்னொரு பக்கமும் எகிற, சீட்டுக்கட்டு குலுக்கி அலசப்பட்டு இருவருக்கும் பரிமாறப்பட்டது.

அதன்பின் அதை வியர்வை ஒழுக விசிறி போல பிடித்துக்கொண்டு இருவரும் ஒற்றை ஒற்றை சீட்டாய் எடுத்து தங்கள் அதிர்ஷ்டத்தை அதனிடம் தேடினர்.

இறுதியில் நாயக்கர் 'ஹோ' வென்று சந்தோஷக் கூச்சலிட்டபடி கவுண்டரின் சீட்டை மடக்கிப் போட்டுவிட்டு எழுந்து நின்று, வேட்டி அவிழ்ந்ததுகூடத் தெரியாமல் சந்தோஷக் கூச்சல் போட்டார்.

கவுண்டர் கலங்கிப் போய்விட்டார்.

தலைக்குமேல் நூறு பேர் ஏறி அமர்ந்து தரையோடு தரையாக அவரைப் புதைக்க முயல்கிற மாதிரியெல்லாம் பிரமை தட்டியது அவருக்கு.

அந்தக் கூட்டத்தில் அவரை ஒட்டி சிவகுமாரும், நாயக்கரை ஒட்டி ரத்னாவும் நின்று கொண்டிருந்தனர்.

அப்பொழுதே இருவருக்கும் காதல்.

இப்படி ஆகிவிட்டதால் இருவர் கண்களிலும் கண்ணீர்.

கவுண்டர் அண்ணாந்து தோப்பைப் பார்த்தார். நெடுநாள் குறிவைத்து போராடிப் பின் பேரம் பேசி வாங்கிய ஆசையான தென்னந்தோப்பு. பத்திரப் பதிவு முடிந்து அதில் கையெழுத்தின் ஈரம்கூட காய்ந்திருக்கவில்லை.

அதற்குள் அது நாயக்கர் வசம் போய்விட்டது.

பாரதத்தில் அன்று தர்மன்!

தென்னந்தோப்பில் இன்று கவுண்டர்!

ஆனால் தர்மனைப் போல இவரால் கண்ணியமாக எழுந்து போக முடியவில்லை.

''எலே பேடி... சீட்டாடி என் தோப்பை அபகரிச்சுட்டேல்ல. சகுனிப்பயலே. இதை எப்படி திருப்பி வாங்கறதுன்னு எனக்குத் தெரியும்டா.'' - என்று கறுவிக் கொண்டேதான் திரும்பிச் சென்றார்.

அதற்கேற்ப ரத்னாவும் சிவகுமாரும் ஒரு கட்டத்தில் ஓடிப் போய் திருமணம் செய்து கொள்ளவும் எல்லாம் கவுண்டரின் குறுக்குவழி என்றுதான் நாயக்கர் நினைத்தார்.

ஆனால் கவுண்டரோ அப்படியே மாற்றி நினைத்தார்.

''என் தென்னந்தோப்பை புடுங்கிக்கிட்டது போதாதுன்னு, என் மகனையே இழுத்து மாப்பிள்ளையாக்கி கிட்டியா நீ?'' என்று திருப்பிக் கேட்டார்.

இளசுகளின் கபடமில்லாத காதல் பெருசுகளிடம் நேரெதிர் நிலைப்பாடுகளை உருவாக்கி மோதவிட்டது.

இறுதியில் இருவருமே அந்தக் காதலை அங்கீகரிக்க முடியாதபடி மாறிப்போயினர். யார் ஒருவர் அங்கீகரித்தாலும்



மற்றவர் அதை, சொத்தை அபகரிப்பதற்கான குறுக்கு வழி என்றோ - இல்லை வேறுவிதமாகவோ பேச வேண்டிய ஒரு சிக்கல் இடையில் இருந்து அவர்களைச் சேரவிடாமல் பார்த்துக் கொண்டது.

ஆனால் இப்பொழுது அதைக் கவுண்டர் ஒருவாறு மீறிவிட்டார்.

''நாகமாணிக்கம்... உனக்கு ஆனாலும் கள்ள புத்திடா. பேரன் பொறந்ததை சாக்கா வெச்சு ஒண்ணு சேர்ந்துட்டியா, காலணா சொத்தை என்கிட்ட இருந்து நீ வாங்க முடியாது'' என்று அவர் தேவையில்லாமல் கறுவ, அவர் வக்கீல் அப்போது பார்த்து அங்கேவந்து அவருக்குள் புளியைக் கரைத்தார்.

''நாயக்கரே... உம்ம சொத்து ஒண்ணும் நீங்க சம்பாதிச்சது கிடையாது. பாட்டன் சொத்து பேரன் பேத்திங்களுக்குதான். உம்ம மவ கேஸ் போட்டா, நீங்க கோவிந்தா'' என்றவுடன் அவரிடம் டெம்ப்பரேச்சர் எகிறிவிட்டது.

''அப்ப... அவன் கேஸ் போடுவான்னு சொல் நீங்களா?''

''அது தெரியாது... போட்டா நீங்க காலி, அதுக்கு... பேசாம கவுண்டர் சமாதானமா போயிட்ட மாதிரி நீங்களும் சமாதானமாக போயிடுங்க. சாவற வரை சொத்தை அனுபவிக்கவாச்சும் செய்யலாம்.''

''மாட்டேன்... கவுண்டன் விரிச்ச வலைல நான் விழமாட்டேன்...''

''நீங்களா விழுந்தா நஷ்டம் குறைவு. அவர் இழுத்து விழுந்தா அம்புட்டும் காலி. எப்படி சௌகர்யம்?''

-வக்கில் நன்றாகவே புளியைக் கரைத்துவிட்டு போய்விட்டார்.

வேடியப்ப நாயக்கர் நெஞ்சுக்குள் கவுளி ஒன்று படபடவென்று அடித்துக் கொண்டது.

அடுத்து என்ன செய்வது?

## 6

'குல தெய்வ வழிபாட்டை முடித்துவிட்டு, ஒருவர் தன் மனைவி குழந்தையுடன் பஸ்ஸில் திரும்பிக் கொண்டிருந்தார். ஜன்னல் ஓரமாக மனைவி கைக் குழந்தையுடன் அமர்ந்திருந்தாள்.

குழந்தைக்கு ஆறு மாதம் கூட ஆகவில்லை.

இதற்குமுன் மூன்று குழந்தைகள் பிறந்து, அவை இறந்துவிட்டன. இது நான்காவது. இதாவது நிலைக்க வேண்டுமே என்பது அவர் கவலை.

அதற்கு ஒரே வழி குல தெய்வத்தின் காலில் போய் விழுவதுதான் என்று ஒருவர் ஆலோசனை சொல்லவும்தான், குலதெய்வம் கோவிலுக்குப் போய்விட்டு வந்து கொண்டிருந்தார்.

இரவு நேரம், பஸ் சிட்டாய் பறந்து கொண்டிருந்தது.

மனைவி, குழந்தை மடியில் இருக்க - அயர்ந்து தூங்கிவிட்டாள். அவரும் அயர்ந்துவிட்டார். ஒரு இடத்தில் பஸ் நிற்கவும் கண் விழித்து மடியைப் பார்த்தவர்களுக்கு தூக்கிவாரிப் போட்டது. குழந்தையைக் காணவில்லை. குழந்தையை சுற்றியிருந்த துணி, அருகில் ஜன்னல் கம்பியில் சிக்கிய நிலையில் படபடத்தபடி இருந்தது.



"அய்யோ... பஸ் வளையும்போது குழந்தை நழுவி சாலையில் விழுந்துவிட்டது போல் தெரிகிறது" என்று கூக்குரலிட்டு அழ ஆரம்பித்து விட்டாள்.

டிரைவரும் பஸ்ஸை பின்னுக்கு எடுத்து, வழியெல்லாம் தேடியபடிவர ஒரு இடத்தில் முட்புதர் ஒன்றில் காட்டுக் கொடிகளின் பிடியில் குழந்தை விழுந்த நிலையில் தாயின்மடியில் கிடப்பது போலவே எந்த வித அழுகையுமின்றி கிடந்தது தெரிந்தது. ஓடிப்போய் தொட்டுத் தூக்கியவர்கள் அப்பொழுதுதான் அந்த முட்புதரைப் பார்த்தனர். அது ஒரு கருடபட்சியின் கூடு. அவர்கள் குலதெய்வம் கருட வரதன் என்கிற சாமிதான்.

❖❖❖

கிழவி தங்கமணியிடம் கொள்ளுப் பேரனை காட்டிக் கொண்டிருந்தாள் ரத்னா.

கிழவிக்கும் ஒரு க்ஷணம் பகை உணர்ச்சியை மீறி பாச மயக்கம் ஏற்பட்டது. செத்துப்போன கணவரே திரும்ப வந்து பிறந்து விட்டாரோ என்றுதான் தோன்றியது.

பதட்டம் குறையாமல் மகன் நாகமாணிக்கத்தை ரகசியமாகக் கூப்பிட்டுக் கேட்டாள்.

''ஆமாம் ஆத்தா... அதான் இப்ப என் கையைக் கட்டுது.''

''ஒண்ணு பண்ணு... சிசுவை விட்டுடு. அவளை அனுப்பிடு.''

''அதான் எப்படின்னு ரோசிச்சுகிட்டு இருக்கேன்.''

''இதுக்கெதுக்குடா இம்புட்டு ரோசனை... அந்த நாயக்கன்தான் இவ என் மவளே இல்லைன்னு தலை முழுகிட்டானுல்ல. அவனை நினைச்சு பயப்படுதியோ?''

''நான் கூடதான் தலை முழுகிட்டதா சொன்னேன். பொறவு ஊட்டுக்கே போய் கூட்டியாரலையா...''

''இப்ப நீ முடிவா என்னதான் சொல்றே? அந்த சிறுக்கி இந்த ஊட்டுல இருக்கக்கூடாது. பாஷாணம் வைப்பியோ இல்ல கரண்டு வைப்பியோ, அவ போய்ச் சேரணும். என் பேரன் நம்ம சாதிக்குள்ளையே இன்னொரு பொண்ணைக் கட்டிகிட்டு என் எதிர்க்க வரணும். நான் கண் குளிரப் பார்க்கணும்.''

''எனக்கு கூட ஆசையிருக்குது. ஆனா என் பொண் டாட்டியே என்னை எவ்வளவு சந்தேகப்பட்றா தெரியுமா-''

''அப்ப அந்த நாயிக்கும் பாஷாணத்தை வை. பொண்டாட்டி, மருமவ இரண்டு பேரையும் ஒரே சமயத்துல காலிபண்ணா, அதைக் கொலையா யாரும் நினைக்கமாட்டங்க. தவறிப் போய் இரண்டு பேரும் பாஷாண சோத்தை சாப்ட்டு உசுரை உட்டுட்டதாதான் நினைப்பாங்க.''

''ரோசிக்கறேன்...''

''ரோசிக்காதே. செஞ்சு முடி. எப்ப உன்னை மீறிகிட்டு அவ ஊட்டை உட்டு போனாளோ அப்பவே உன் பொண்டாட்டி இல்ல அவ. ஓடுகாலி நாயி அவ.''

கிழவி அனலாய்க்கத்தினாள். கவுண்டரும் அரைமனதாய் அதுதான் சரியான முடிவு என்கிற மாதிரி தலையை அசைத்துவிட்டு மீசையை நீவினார்.

''ஆமா... எங்க அவ...? காலைல இருந்து கண்ணுலையே படலையே?''

''குல தெய்வ கோவிலுக்கு போயிருக்குறா.''



''ஆச்சாரப்பார் சன்னதிக்கா?''

''ஆமாம்.''

''அங்க என்ன திடீர்னு...?''

''தெரியல... அவவரைல நான் கொடுமைக்காரன்தானே, எனக்கு நல்ல புத்தி தரணும்னு வேண்டிக்கிறானோ என்னவோ...''

''சரியான ஓடுகாலி நாயிடா அவ. உன்னையே மோப்பம்பிடிச்சு உனக்கே ஆப்பு வைக்க நினைக்கறாளே...''

''விடு ஆத்தா... எனக்கு அவளோ மருமவளோகூட இப்ப கண்ணுக்குத் தெரியல. அந்த நாயக்கன்தான் தெரியறான். அவன் மட்டும் இப்ப சமாதானத்துக்கு வந்தா விடுவனா பாரு...''

''அப்படி அவன் வரும்போது நீ எச்சரிக்கையா இரு. அவன் வர்றதுக்குள்ள இங்க அவன் மகளோட கதையை முடிச்சிப்பிடு, இல்லாட்டி வில்லங்கமாயிடும்.''

-கிழவி ஜரூராக ஏற்றிவிட்டாள். கவுண்டரும் அதற்கு என்ன வழி என்று யோசிக்கத் தொடங்கினார்.

## 7

**'நமது சான்றோர்கள் ஆலயங்களை உருவாக்கியதன் பின்னே பலமான காரணகாரியங்கள் உள்ளன. ஆலயம் என்று மட்டும் ஒன்று இந்த உலகில் இல்லாமல் போனால் மனித வாழ்க்கை இன்று இருப்பது போல நாகரிகமானதாக -அடிப்படை நெறிகளோடு இருக்கவே இருக்காது.**

**ஆலயம் என்பது ஒரு அற்புத விஷயம். சக்தியை நமக்கு வாரித் தரக் காத்திருக்கும் ஒரு உன்னதமான**

விஷயம். அங்கே நடைபெறும் பூஜைகள், வழிபாடுகள் எல்லாமே ஆலயத்துக்கு சக்தியை சேர்க்கின்றன.

எந்த ஒரு ஆலயத்தில் கூட்டம் அதிகம் கூடுகின்றதோ எந்த ஒரு ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் அதிகம் நடைபெறுகிறதோ அந்த ஆலயம் மிகுந்த சக்தி உடையதாக மாறும். அதன் அருள் அலைகள் ஊர் முழுக்கப் பரவி மனித வாழ்வை காப்பாற்றியபடி இருக்கும்.

ஊருக்கான ஆலயங்கள் எல்லோருக்குமானது. ஆனால் குலதெய்வ ஆலயங்கள் சில குடும்பங்களுக்கே யுரியது. வணங்குவதன் மூலம் நாம் பணிகிறோம். பணியும்போது மனம் ஒடுங்கும். மனம் ஒடுங்கும்போது உடம்பின் கிரக சக்கரச் சுழற்சி சீரடையும். அதே சமயம் ஆலயத்தில் உள்ள அருள் அலையை அது கிரகித்துக் கொண்டு அதற்கேற்ப சுழற்சி அமையும். அந்தச் சுழற்சிக்கு ஏற்பவே நாம் சிந்திப்போம். பேசுவோம். நடப்போம்.'

❖❖❖

மிகால்லி மலைக் காட்டில் ஒரு பச்சை வனத்துக்குள் இருந்தது அந்த சிறிய கோவில். கோவிலுக்கான பாதையே தெரியவில்லை. அதைக்கூட புதர்கள் மூடிவிட்டிருந்தன.

அமிர்தமும், சிந்தாமணியும் ஒரு பெரிய மூங்கில் கூடையுடன் அந்த காட்டுக்குள் நடந்தபடி இருந்தனர். யாரோ ஒரு மலைப்பளியன் அவர்களுக்கு வழியைக் காட்டியபடி முன்னால் நடந்து கொண்டிருந்தான்.

''நாங்களும் ஆச்சாரப்பரதான் கும்புடுறோம். அவரை கும்புட்டுட்டு போனா அன்னிக்கு ஒரு பிரச்சினையும் இருக்காது. வேட்டையும் விறுவிறுப்பாக இருக்கும்,'' என்று பேசிக் கொண்டே நடந்து கொண்டிருந்தான்.



''அண்ணி... நம்ம ஊர் எங்கையோ இருக்கு. ஆனா சாமி கோவில் இங்க இருக்குதே. அதுவும் இப்படி ஒரு கருங்காட்டுக்குள்ளாற...'' என்று சிந்தாமணி கூட அலுத்துக் கொண்டாள்.

''ஆச்சாரப்பர் எங்க சமாதியானாரோ அங்க தானே கோவிலும் இருக்க முடியும்?'' -பளியன் பளிச்சென்று சொன்ன பிறகுதான் சிந்தாமணிக்கும், அமிர்தத்துக்கும் ஆச்சாரப்பர் என்பவர் தன் வம்சாவழிகளில் ஒருவராக இருந்து ஒரு தவசியாகவும் வாழ்ந்து அப்படியே மகா சமாதியாயிருக்க வேண்டும் என்றும் தோன்றியது.

அது உண்மைதான் என்பது போல அந்த கோவிலும் கண்ணில் பட்டது. ஒரு பத்துக்குப் பத்து சதுர அடியில் ஒரு சமாதி. அதை அடக்கிய ஒரு கருவறை. கருவறை மேல் சிறிய விமானம், விமானத்தில் பொம்மைகள் உடைந்து பசலை பிடித்திருந்தது. கோவிலுக்கு வெள்ளையடித்தே பத்து பதினைந்து வருடங்கள் ஆகியிருக்கலாம் என்றே தோன்றியது.

அதை பார்த்த அமிர்தம் மிகவும் வருந்தப்பட்டாள். கூடையில் கொண்டு வந்திருந்த செம்பு, பால், தேன், எண்ணெய், கற்பூரம், பூமாலை, சந்தனம், பழங்கள் இவைகளை வைத்து மளமளவென்று அந்த சமாதியையும் சமாதிக்கு முன் உள்ள நடுகல்லையும் சுத்தப்படுத்தி தண்ணீர் கொண்டு வந்து அபிஷேகம் செய்து விளக்கையும் ஏற்றினாள். பின் பூக்களைத் தூவி ஊதிபத்தி பற்ற வைத்து வாசமான சூழலை உருவாக்கினாள்.

ஒரு தட்டில், பழம் தேன் பால் இவைகளை படையல் போல் வைத்து கைகளை கூப்பிக் கொண்டு நின்றாள். மனத்தில் வீட்டுக்குள் தேடி வந்து வழி காட்டிய அந்த சமயபுரத்து அம்மன் பெண் மணியின் முகம் நிழலாடியது.

அந்த வழிகாட்டுதலில் கோவில் வரை வந்து வழிபட்டுக் கொண்டிருப்பதை எண்ணிப் பார்த்தாள். பார்வை திரும்பி சிந்தாமணி மேல் சென்றது.

காலம் அவளை பிச்சை எடுக்க வைத்து விட்ட கொடுமை நெஞ்சில் குத்தியது. மனதும் உருகி அழ ஆரம்பித்தது.

''சாமி... நாங்க உன் மதிப்பு தெரியாம உன்னை மறந்து இருந்துட்டோம்.

மனுஷனாப் பொறந்து வாழ்ந்து மடியப் போறது கொஞ்சநாள். அந்த நாள்ள அர்த்தத்தோட வாழாம அந்தஸ்து காச்ச பிடிச்சு ஆணவத்தோட நடந்துக்கறதால எவ்வளவு பிரச்சினைங்க?

இப்ப கூட என் குடும்பத்துல குழப்பம் தான்.

சிங்கம் புலியோட காட்டுலகூட வாழ்ந்துடலாம். ஆனா என் வீட்டுல வாழ முடியுமான்னு தெரியல. பயமா இருக்கு. இரண்டு பேர் மாறி மாறி அடிச்சிக்கிறாங்க. எந்த நல்லதும் அவங்க காதுல ஏற மாட்டேங்குது.

மனுஷனால முடியாதது எதுவும் இல்லேங்கறாங்க. ஆனா உள்ளபடியே இந்த மாதிரி மிருக புத்தி உள்ளவங்ககிட்ட இருந்து தப்பிக்கறது எப்படின்னு தெரியமாட்டேங்குது.

மனுஷசக்தி இந்த மாதிரி நேரத்துல அற்பமா ஆயிடுது. காலத்தோட சக்திதான் பெருசா தெரியுது. அந்தக் காலம் கருணை செய்தாதான் வாழ்க்கை.

காலத்தோட காலமா இருக்கற சாமிங்க கருணை செய்தா தான் வாழ்க்கை.

கால்ல உழுந்திட்டேன். எங்கள காப்பாத்து.



என் மகனும் மருமகளும் நல்லா இருக்கணும்.

யார் எந்தச் சூது செய்தாலும் அதுபலிக்கக்கூடாது.

உன் காலில் எங்களை காத்து நிறுத்தணும். உன்னை எப்பவும் நாங்க இனி மறக்காம இருக்கற நல்லபுத்தியையும் நீதான் தரணும்.''

கண்களில் கண்ணீர் பெருக அமிர்தம் பிரார்த்தித்துக் கொண்டாள். கூட்டி வந்திருந்த பளியன் கூட ஏதோ பெரிய சிக்கல்தான் போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டான்.

அதன்பின் இருவரும் அந்த கோவிலை சுற்றி வலம் வரத் தொடங்கினர். கோவிலின் ஈசான மூலையில் ஒரு பன்னீர் மரம். அமிர்தம் கை கூப்பியபடி வலம் வரும்போது மரத்தின் மேல் ஒரு கருடன் வந்து அமர்ந்தது. அது அமர்ந்த வேகத்தில் கிளை ஒன்றில் இருந்து சில பன்னீர் புஷ்பங்கள் உதிர்ந்து கீழ் விழ ஆரம்பித்தன. அவை நேராகக் கூப்பியகரத்துடன் நடந்தபடி இருக்கும் அமிர்தத்தின் கரத்தில் தான் விழுந்தன. பளியன் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

''சாமி பதில் சொல்லிருச்சு... கவலையேபடாதீங்க. எதெல்லாம் பிரச்சினையோ அதெல்லாம் இனி ஒரு முடிவுக்கு வந்துடும் பாருங்க'' என்றான்.

அமிர்தமும், சிந்தாமணியும் அதைக் கேட்டு சிலிர்த்துப் போய்விட்டிருந்தனர்.

**தா**டையைத் தடவியபடி சிந்தனையிலேயே இருந்தார் வேடியப்ப நாயக்கர். அடிக்கடி அவரை ஊரைச் சேர்ந்தவர்கள் வந்து பார்த்து பேசிவிட்டு போய்க் கொண்டிருந்தனர்.

பேச்சு முழுக்க முழுக்க நாகமாணிக்கம் அவர் மகளை ஏற்றுக் கொண்டுவிட்டது பற்றியே இருந்தது. அதைப் பெருந்தன்மையான செயலாக நினைப்பதா இல்லை

அதன்பின்னே தன்னைப் பழிவாங்கும் எண்ணம் ஒளிந்திருக்கிறதா என்பதில் மட்டும் நாயக்கருக்கு குழப்பம் தீரவேயில்லை.

''கூடப்பிறந்த தங்கச்சியை தெருவுல பிச்சை எடுக்க உட்ட ஆளு... இவர் இப்ப பெருந்தன்மையா நடந்துக்கறாராமா? எல்லாம் நாடகம். ஏதோ சதித்திட்டம்தான் இது...'' என்று சிலர் நன்றாக சுருதி வேறு சேர்த்தார்கள்.

அதற்கு ஏற்ப நாட்டு வைத்தியர் ஒருவர் வீட்டில் நாகமாணிக்கத்தைப் பார்த்ததாவும், நாகமாணிக்கமும் அந்த வைத்தியரிடம் சாப்பிட்ட மாத்திரத்தில் மூச்சை நிறுத்தும் ஆலகால விஷம் கேட்டு வாங்கிச் சென்றதாகவும் வந்து சொன்னது நாயக்கரை உலுக்கிவிட்டது.

'இந்த ஆளுக்கு எதுக்கு விஷம்... யாரைக் கொல்ல?' என்று ஏகத்துக்குக் குழம்பிப் போனார். விஷயத்தைச் சொன்னவரும் 'இது பரம ரகசியம். யாருக்கும் தெரியாது. எனக்குக்கூட ஒளிந்திருந்து பார்த்ததால்தான் தெரியவந்தது' என்று தான் சொல்லியிருந்தார்.

குழம்பிப் போய் மண்டை காய்ந்தவருக்கு இறுதியாக ஒரு வழிதான் தோன்றியது. அந்த வைத்தியர் அவருக்கும் வேண்டியவன்தான். பேசாமல் அவனிடமே போய் கேட்டுவிட்டால் என்ன என்று தோன்றியது.

கிளம்பி விட்டார்!

வைத்தியர் மிரண்டு போனார்.

''நான் நாகமாணிக்கத்துக்கு ஆலகாலம் கொடுத்தது உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டதற்கு நாயக்கரிடம் ஒரு அமட்டல் சிரிப்புதான் பதிலாக இருந்தது. வைத்தியரோ நடுங்க ஆரம்பித்துவிட்டார்.



''உண்மையைச் சொல்லு... எதுக்கு ஆலகாலத்தைக் கொடுத்தே...?''

''கேட்டாரு. கொடுத்தேன்...''

''அப்ப நானும் கேக்கறேன். கொடு.''

''அய்யோ அதைப் பக்குவமா செஞ்சு தரணும். ஒரு இரண்டு மணி நேரமாவது தேவைப்படும்.''

''இன்னிக்குப் பூரா எடுத்துக்க...''

''உங்களுக்கு எதுக்கு இது?''

''இந்த கேள்வியை நீ அவன்கிட்ட கேட்டியா?''

''அது ... அது...''

''சொல்லுடா...''

''நான் சத்தியம் செய்திருக்கேன். அப்படியே பணமும் வாங்கி இருக்கேன்.''

''நானும் பணம் தரேன். விஷயத்தைச் சொல்லு.''

''நாய்க்கரே...''

''சொல்றா நாயி.''

''ஏய்யா இப்படி இரண்டு பேரும் அடிச்சிகிட்டுஎங்க மாதி வைத்யனுங்க உசுரை வாங்கறீங்க?''

''காசை வாங்கிகிடு விஷத்தையும் கொடுத்துட்டு டயலாக்கா பேசறே... விஷம் யாருக்கு?''

''உங்க... உங்க...''

''எனக்கா...?''

''இல்ல... உங்க மகளுக்கு''

''என் மகளுக்கா...?'' - நாயக்கர் முகத்தில் அதிர்ச்சி குதிதாளம் போட்டது.

''ஆமாம்... எல்லாம் அந்தக் கிழவி வேல. நான் கொடுத்த ஆலகால பாஷாணம் தூக்கத்துல உசுரைப் பிரிச்சுடும். உடம்புல நீலம் பாரிக்காது. யாருக்கும் சந்தேகம் வராது. பால்ல கலந்து கொடுத்தா போதும். வாழப்பழத்துல ஊசியில மருந்த ஏத்தியும் தரலாம்.''

-வைத்தியர் சொல்லச் சொல்ல நாயக்கர் மீசை துடித்தது.

''அப்ப ஒரு சீப்பு பழத்தை தயார் பண்ணு...''

''அய்யோ...''

''சொன்னதைச் செய்...''

''சாமி, என்ன விட்ருங்க...''

''கண்ண நோண்டிபுடுவேன். இப்பவே என் மகளைப் பார்த்து அந்த ஊட்டுல பச்சைத் தண்ணிகூட குடிக்கக் கூடாதுன்னு சொல்லணும். அப்படியே பழத்தை அந்த நாகமாணிக்கத்துக்கும், அவன் ஆத்தாளுக்கும் கொடுக்கணும். அவங்க செத்த தகவல் என் காதுக்கு வரணும். அப்பதான் நீ தப்பிப்பே, இல்லாட்டி நீயும் அந்த நாகமாணிக்கமும் கூட்டு களவாணித்தனம் பண்ணி என் மகளைக் கொல்ல பாத்ததுக்கு உன்னை உசுரோட கட்டி வெச்சு கொளுத்திப்பிடுவேன்.''

'நாயக்கர் படு உக்ரமாக கறுவினார். ஆள்பலம் உள்ள அவர் சொன்னால் சொன்னபடி செய்வார் என்பது வைத்தியருக்கும் தெரியும்.

தன் தவறுக்கு இப்படி ஒரு மோசமான விதத்தில் பரிகாரம் காணவேண்டிவரும் என்பதை நினைக்கும் போதே நெஞ்சைக் கரித்தது.



அதே சமயம் நாகமாணிக்கத்தையும் அந்தக் கிழவியையும் தானே கொல்ல வேண்டும் என்கிற அந்தக் கட்டாயம் உடம்பை நடுக்கியது.

அப்படிக் கொன்றாலும் நாயக்கரிடம் இருந்து தப்ப முடியாது. காலமெல்லாம் அந்த ரகசியத்தைச் சொல்லியே இந்த மாதிரி பல எதிரிகளைக் கொல்லச் சொல்லுவார் என்னதான் செய்வது?

வைத்தியருக்குள் படபடப்பை மீறி ஒரு புதிய வழி தெரிந்தது. அதுதான் ஒரே வழி... அது தான் இந்த முதலைகளிடம் இருந்தும் தன்னைக் காப்பாற்றும் என்று தோன்றவே - நாயக்கரை உட்காரச் சொன்னார்.

''எதுக்கு...?''

''வாழப்பழத்த ரெடி பண்ண வேண்டாமா?''

''அப்படி வா வழிக்கு... பழத்தோட நீ புறப்படறவரை நான் இங்க இருந்து நகரமாட்டேன்.''

-நாயக்கர் மீசையை நீவியபடி சொல்ல வைத்தியர் தலையை ஆட்டிவிட்டு வாழைப்பழம் வாங்கி வருவதாகக் கூறிக் கிளம்பினார்.

''அப்படியே ஓடிடாதே... நீ எங்க போனாலும் அப்பால உடமாட்டேன்.'' - என்று அவர் போகும் போதும் நாயக்கரிடம் எச்சரிக்கை மிரட்டல்!.

❖❖❖

பஸ்ஸை விட்டு இறங்கி ஒரு ஆட்டோ பிடித்து வீட்டுக்கு வந்த போது வீட்டு முகப்பில் ஒரே கூட்டம்!

ரத்னாவும் சிவகுமாரும் வீட்டுக்குள் ஒரு சிலை போலத்தான் உட்கார்ந்திருந்தனர்.

''எலே சிவா... என்னலே ஆச்சு?'' - அமிர்தம் கேட்க அவன் பெருமூச்சுவிட்டான்.

ரத்னாதான் அழுதபடி வாயைத் திறந்தாள்.

''அத்தே... மாமா எங்கள மன்னிச்சு ஏத்துக்கிட்டதெல்லாம் வெறும் நடிப்பு அத்தே. என்னை விஷம் வெச்சுக் கொல்லலாம்னு ஒரு வைத்தியரைப் போய் பார்த்துருக்காரு. அது எப்படியோ எங்கப்பாவுக்கு தெரிஞ்சு என் அப்பா அவரைப் போய் பார்த்துருக்காரு.''

''அடக்கடவுளே!''

''பதிலுக்கு என் அப்பா மாமாவுக்கு விஷம் வைக்க அந்த வைத்தியரையே திருப்பி உட்ருக்காரு. அந்த வைத்தியர் புத்திசாலித்தனமா போலீசுக்கு போய் எஸ்.பி. ஐயாவையே பார்த்து இரண்டு பேரும் தன்னை இப்படி மாறி மாறி தப்புக்கு தூண்டறாங்கன்னு சொல்லி அப்ரூவரா மாறிட்டாரு''.

''அப்றம்...?''

''இப்ப இரண்டு அப்பாக்களும் லாக்-அப்புல. கிழவியைக்கூட இழுத்துகிட்டு போயிட்டாங்க. கொலை செய்யறதைவிட தூண்டறது பெரிய குத்தமாமே... எஸ்.பி. ஆச்சாரப்பன் சொன்னாரு.''

-ரத்னா சொன்ன அந்தப் பெயர் அமிர்தத்தை அப்படியே உலுக்கியது. உடம்பு முடிகள் எல்லாம் சிலிர்த்துக் கொள்ள, அப்படியே கண்ணீர் மல்க, கைகூப்பினாள். புரிந்தது போல் சிந்தாமணியும் சேர்ந்து கொண்டாள்.

❖

# 3. நாயக்கர் மாளிகை!

## 1

'மொத்தமாய் பதினாலாயிரம் சதுர அடியில் உட்பரப்பு. இதுபோக மாடியில் ஒரு பதினாலாயிரம் சதுர அடி. ஆகமொத்தம் இருபத்தி எட்டாயிரம் சதுர அடியில் அமைந்த மாளிகை அது!

1950ல் ஒருமுறை விக்ரம நாயக்கர் மைசூர் வரை போயிருந்தார். அங்குள்ள லலித மஹாலும், அரண்மனையும் அவரை வெகுவாக பாதித்துவிட்டன.

அதன் எதிரொலியாகத்தான் விக்ரம நாயக்கபுரத்தில் அவர் இருபத்தி எட்டாயிரம் சதுர அடியில் மாளிகையை எழுப்பினார்.

தரையெல்லாம் சலவைக்கற்கள்! ராஜஸ்தானுக்கே லாரிகளை அனுப்பி நேராகச் சென்று வாங்கி வந்தார். மாளிகைக்குள் உள்ள மரங்களுக்காகவே ஒரு கப்பல் நிறைய மரத்துண்டுகள் தூத்துக்குடி துறைமுகத்திற்கு வந்தது. இப்படி பார்த்துப் பார்த்து கட்டிய மாளிகை அது. இருந்தும், கிருகப்பிரவேசத்தின்போது ஒரு விபரீதம் போல நாயக்கரின் பட்டு வேட்டியில் தீ பிடித்தது!'

❖❖❖

தென்னந்தோப்பில் தென்றல் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருந்தது.

அருகிலேயே ஆவென்று அரக்கனின் வாய்போல வட்டக்கேணி. அதில் தளும்பத் தளும்பத் தண்ணீர். அதன் ஒரு ஓரமாய் பம்ப் செட்டை உள்ளடக்கிய அறை. அறை முகப்பில் கயிற்றுக் கட்டில் ஒன்று கிடந்தது. பக்கமாய் ஒரு பிளாஸ்ட்டிக் மோடோ.

மோடோமேல் விஸ்கி பாட்டிலும், அவித்த முட்டையும் தயாராக இருந்தது. கூடவே பொன்மேனியும் தயாராக இருந்தாள்!

அப்பப்போது நிமிர்ந்து அந்த அறைக்கு வருபவர்களை அழைத்துவரும் ஒற்றையடிப் பாதையை பார்த்தபடி இருந்தாள்.

பரந்தாம நாயக்கர் வருவதாக சொல்லியிருந்தார்.

இந்த தோப்பே அவருடையதுதான்.

மொத்தமாய் மூவாயிரத்து தொண்ணூறு தென்னைகள்! முப்பது ஏக்கரில் அவை ராணுவ வீரர்கள் அணிவகுத்து நிற்கின்ற மாதிரி வரிசையாக தலையில் தென்னங் குலைகளோடு நின்று கொண்டிருந்தன.

சில கிடுகுகள் மேல் வரிசையாய் கிளிகள் வந்து அமர்ந்து கொண்டிருக்க பார்க்க படுரம்யமாக இருந்தது.

தோப்பு முகப்பில் ஒரு பெரிய இரும்பு வேலிக்கதவு. வேல்கம்புகளை தொகுத்துக் கட்டியது போல் அது இருந்தது. அந்த வேலிக் கதவை ஒட்டி ஒரு சிறிய குடிசை. குடிசையில் அடுப்பை ஊதியபடி சோறு பொங்கவிட்டுக் கொண்டிருந்தாள் சொர்ணம் - அந்தத் தோப்புக் காவலாளியான கருப்பையாவின் மனைவி. கருப்பையா தோப்பில் ஏதாவது மரத்தடியில் தான் இருப்பான்.



மரத்தில் கோர்த்துக் கொண்டு விட்ட சடைகளை பிடுங்குவது, காய்ந்த கிடுகுகளை வெட்டி ஓரம் கட்டுவது, கீழே விழுந்திருக்கும் குறும்பைத் தேங்காய்களைப் பொறுக்கி ஒரு ஓரமாய் குவித்துவைப்பது என்று அவனுக்கு வேலை சரியாக இருக்கும்.

அவ்வளவு பெரிய தென்னந் தோப்பு அது.

பரந்தாம நாயக்கருக்குச் சொந்தம். அப்படி ஒன்றும் அவராக சம்பாதித்து விடவில்லை. எல்லாம் முப்பாட்டன் காலத்து சொத்து.

அதை விற்றுக் கரியாக்கி விடாமல் அவர் காபந்து செய்து கொண்டிருப்பதே பெரிய விஷயம் என்றுதான் கூற வேண்டும்.

அதோ அவரே வந்துவிட்டாரே...

மெல்லிய திணறலுடன் அவரது புதிய இண்டிகா கார் தோப்பு முகப்பில் அந்த வேல்கம்பு கிராதிக்கதவு முன்னால் தேங்கி நின்றது.

அவரும் எட்டு முழ நூல் வேட்டிச் சரசரப்போடு இறங்கினார்.

சந்தனக் கலரில் முழுக்கை சட்டை. ஆனால் முழங்கைவரை அதை மடித்துவிட்டிருந்தார்.

மார்பில் இரண்டு பட்டன்களைவேறு திறந்துவிட்டிருந்தார். ஒன்பது பவுனில் தங்கச் சங்கிலி அவரது புசுபுசு மார்பில் மேல் தவழ்ந்தபடி இருந்தது. மார்பில் ஏதோ புதர்போல முடிக்கூட்டம்.

புதர்போல் முடியிருந்தால் பெண்களுக்கு மிகவும் பிடிக்குமாமே?

அதனால்தான் பொன்மேனியும் அவருக்காக வந்து காத்துக் கிடக்கிறாளோ?

காரைவிட்டு இறங்கி நடக்க ஆரம்பித்திருந்த நாயக்கரைப் பார்த்துவிட்டு குடிசைக்குள் இருந்து ஓடி வெளியே வந்தாள் சொர்ணம்.

கையில் அகப்பைக் கரண்டி இருந்தது. அதை அக்குளில் செருகியபடி ''கும்புட்றேங்க'' என்றாள்.

நாயக்கர் முகத்தில் பதிலுக்கு ஒரு தெற்றுப்புன்னகை.

நடை என்னவோ கிணற்றை நோக்கித்தான் இருந்தது.

குறிப்பாக கிணற்றருகே பம்புசெட் ரூமை நோக்கித்தான் இருந்தது.

ரூம் முகப்பில் கட்டிலை ஒட்டி பொன்மேனியும் தெரிந்தாள். அவள் கண்ணில் பட்ட நொடி, உடம்பில் நரம்பில் ஏதோ ஒரு இடத்தில் வெடிமருந்து திரிக்கு நெருப்பு வைத்த மாதிரி ஒரு தீ ஜ்வாலை பற்றி எரிய ஆரம்பித்தது. பொன்மேனியும் பெயருக்கு ஏற்றமாதிரி பொன்னை அரைத்துப் பூசிக் கொண்டது போலத்தான் இருந்தாள்.

ஐந்தரை அடி உயரம்.

அதில் மூன்றரை அடி உயரத்திற்கு கூந்தல்.

தோளும், மார்பும் மஞ்சக்கடம்பு மரத்தில் செதுக்கியதுபோல இருந்தது.

வயிற்றுப் பாகத்தில் பிரம்மன் பால்கோவாவை கிளறிக் கொண்டிருந்தான்.

கண்களில் ஒரு முத்து தெரிய அதை அவள் அடிக்கடி சிமிட்டும்போது ஒரு சிமிட்டலுக்கு ஒரு ஆண் அப்படியே வேரோடு விழுவான் போலத் தோன்றியது.



அதனால்தான் பரந்தாம நாயக்கரும் விழுந்து விட்டாரோ?

அருகே நெருங்கிவிட்ட அவரைப் பார்த்து அவள் சிரித்தாள்.

அவரும் அதை ரசித்தபடியே கட்டிலில் அமர்ந்தார்.

வெள்ளையும் கறுப்புமாய் வளர்ந்திருந்த கடாமீசையை ஒரு நீவு நீவிக்கொண்டார்.

அந்த நீவலில் அநியாயத்திற்கு ஒரு பணக்காரத்திமிர் தெரிந்தது.

''என்ன அப்படி பாக்குறிக?'' -அவள் வாயைத் திறந்தாள்.

''கிழங்காட்டம் இருந்தா பாக்காம என்ன பண்ண?''

அவரும் பதில் சொல்ல ஆரம்பித்தார். அவள் உடனே வெட்கத்தோடு முந்தானையை இழுத்துவிட்டுக் கொண்டாள்.

''அடேங்கப்பா... உனக்குக்கூட வெட்கமா?''

அவர் கேட்ட விதத்தில் சரியான கேலி. ஆனால் அவளோ அந்த கேலியை ஒரு அம்பாக நினைத்துக் கொண்டாள். அது தன்னை வந்து நறுக்கென்று தைத்து விட்டதுபோல் உணர்ந்தாள். விருட்டென்று எழுந்தாள். சேலையையும் சரிசெய்து கொண்டாள். விறுவிறுவென்று வெளியேறத் தொடங்கினாள்.

பரந்தாம நாயக்கருக்கு கொஞ்சம் செவ்வெறும்பு கடித்த மாதிரிதான் இருந்தது.

''ஏபுள்ள... இப்ப நான் என்ன சொல்லிட்டேன்னு இழுத்து மூடிகிட்டு கிளம்பிட்ட...?''

-நின்ற நிலையில் கத்தினார். பல அடி தூரம்வரை சென்று விட்டவள் நின்றாள். உடனே... மெல்ல திரும்பிப் பார்த்தாள்.

''அடேங்கப்பா... இது என்ன போசு? நான் என்ன பெரிசா சொல்லக் கூடாததை சொல்லிப் போட்டேன்னு இப்படி கிளம்பிப்புட்டே...?''

மீண்டும் நாயக்கரிடம் கேள்வி.

அவள் மெல்லத் திரும்பி வந்தாள்.

கண்களில் கண்ணீர் திரண்டிருந்தது.

பரந்தாம நாயக்கருக்கும் - அதைப் பார்க்க - அவள் இதயத்தில் ஏற்பட்டிருக்கும் வலிபுரிந்தது.

''அடங் கொப்புரானே... என்னா புள்ள இது... எதுக்கு அழுவறே?'' - அவரிடமும் பதட்டம்.

அவள் கண்களில் திரண்டிருந்த கண்ணீர் மார்பில் சொட்டத் தொடங்கியது.

அவளும் மெல்ல வாயைத் திறந்தாள்.

''நாயக்கரே... என்னைத் தெரியலியா உங்களுக்கு?''

-என்று விசும்பும் குரலில் மெலிதாகக் கேட்டாள்.

''தெரியலியே...''

-அவர் பதில் மேலும் அவளை அழுகைக்குள்ளாக்கியது.

''அட எதுக்கு இப்படி முணுக்கு முணுக்குன்னு அழுவறே? நான் என்ன சொல்லிபுட்டேன் தெரியலைன்னுதானே சொன்னேன்''

''காசுக்காரனூர் மல்லிகைத் தோட்டமாச்சும் ஞாபகத்துல இருக்கா?'' -அவள் விசும்பலோடு தொடர்ந்து



கேட்கவும் அவர் நெற்றியில் சுருக்கம் விழுந்தது. அவர் யோசிக்கிறார் என்பதும் தெரிந்தது. சில நொடிகளுக்குப்பின் வாயைத் திறந்தார்.

''சேலம் காசுக்காரனூர் மல்லிகைத் தோட்டத்தையா சொல்றே?''-அவள் தலை ஆடியது. ஆமோதித்தது.

''அதுக்கென்ன?'' மீண்டும் அவர்தான் இப்படிக் கேட்டது.

''அதுக்கென்ன?'' அங்க ஒரு சிறுக்கி உங்களுக்காகவே தினம் தினம் தோட்டத்துக்கு வந்தாளே... அவளையாச்சும் ஞாபகம் இருக்குதா?''

''அட ஆமாம்... பதினாறு பதினேழு வருஷத்துக்கு முந்தின சம்பவம்ல அது. அது...அது நீயா?''

''அப்பா... இப்பவாச்சும் வழிக்கு வந்தீங்களே...''

''சத்தியமா சொல்றேன் ஞாபகமில்ல புள்ள... ஆமா, நீ எப்படி இப்படி எல்லாருக்கும் பொதுவாகிப் போனே?''

''நான் பொது இல்ல...'' -சொல்லும் போதே அவளிடம் மீண்டும் கண்ணீர்.

''என்ன புள்ள சொல்றே?''

''இந்த பொன்மேனி பொது இல்ல நாயக்கரே... நான் செல்லமுத்துக் கவுண்டரோட சம்சாரம்!''

''என்னாது... நீ இன்னொருத்தன் பொஞ்சாதியா?'' - அவரிடம் ஏராளமான அதிர்வு.

''ஆமாம்... என் புருஷனும் ஒண்ணும் லேசுவாசான ஆள் இல்ல. அவரும் உங்களப் போல நிலம் நீச்சு, காரு பங்களான்னு வெச்சுருந்தவருதான்...''

''அடக்கெரகமே... அப்புறம் ஏன் என் தோப்புல என்கூட படுக்கவந்தே...?''

''எல்லாம் தலையெழுத்து நாயக்கரே... தலையெழுத்து...'' -அவளிடம் மீண்டும் கண்ணீர் கொப்பளிக்க ஆரம்பித்தது.

''அதான் நான் 'உனக்கும் வெக்கமா'ன்னு கேட்டது குத்திருச்சா?''

''அதுமட்டுமில்ல... என்னிய அடையாளம்கூடத் தெரியாத அளவுக்குல்ல மாறிட்டீர்?''

''அது சரி... தினம் ஒருத்தி இங்க வர்றா, நானும் தெம்பு இருக்கற வரை அனுபவிப்போமேன்னு இந்திரலோகத்து இந்திரனா என்னை நினைச்சுகிட்டு சல்லாபிக்கிறேன். இதுல உன்முகம் எப்படி ஞாபகம் இருக்கும்?''

''சரி இப்ப ஞாபகம் இருக்குதுல்ல...?''

''அதான் யாருன்னு தெரிஞ்சுபோச்சே... ஆமா உன் புருஷன் இருக்க என்னாண்ட வந்துருக்கியே... இடிக்குதே...'' -நாயக்கர் பாய்ன்ட்டைத் தொட்டார்.

''எல்லாம் என் தலையெழுத்து...'' -அவளும் நொந்து கொண்டாள்.

''அப்படின்னா...?''

''அவரு கைலாசம் போய் மூணு மாசத்துக்குமேல ஆயிடுச்சு.

''ஓ...போய்ட்டாராக்கும். சரி கழுத... விட்டுத்தள்ளு. பொழைக்க எம்புட்டோ வழிமுறைங்க இருக்குதே.. இந்தத் தொழிலுக்கா நீ வரணும்?''



''நான் இந்தத் தொழிலுக்கு வந்துட்டதா உங்களுக்கு யார் சொன்னா?''

''பொறவு...?''

''உங்க நிழல்லையே இனி காலம் பூரா இருந்துடலாம்னுதான் இங்க வந்துட்டேன்...''

''என்ன சொல்றே...?'' -நாயக்கரிடம் அதிகபட்ச அதிர்ச்சி பரவியது.

''நிரந்தரமா உங்களாண்டையே தங்கிட்றேனே...?''

குழைந்தாள் பொன்மேனி.

''அடி ஆத்தி... பர்மனன்டாவா?''

''ஆமாம்...''

''அது சரி.. உன் புருஷனுக்கும் காடு கழனி, நிலம் நீச்சுன்னு இருக்கறதா சொன்னியே... அதெல்லாம் என்னாச்சு?''

-நாயக்கர் அந்த கேள்விகேட்ட மறுநொடி மீண்டும் அவள் கண்களில் ஒரு கண்ணீர்ப் பி.ரவாகம்.

''என்ன புள்ள... திரும்ப எதுக்கு அழுவறே?''

''அந்த கதையைக் கேட்டா உங்க நெஞ்சும் நஞ்சுபோகும். ஈரக்குலையே ஆடிப்போயிடும்.'' -பொன்மேனி பீடிகை போட்டாள்.

உல்லாசமாக இருக்கவேண்டிய வேளையில் பரந்தாம நாயக்கரும் அவள் போட்ட பீடிகையில் அப்படியே அடங்கியவராக அவள் வாயையே பார்க்க ஆரம்பித்தார்.

அவள் 'நாயக்கர் பங்களா...' என்று ஆரம்பித்தாள்!

## 2

'அந்த வட்டாரத்திலேயே விக்ரம நாயக்கரின் மாளிகைதான் மகா பெரியது. ஜில்லாவிற்கு வரும் எந்த ஒரு பெரிய மனிதரும் நாயக்கர் மாளிகைக்கு வராமல் போனதில்லை.

வந்து வாயைப் பிளந்துகொண்டு நிற்காமலும் இருந்ததில்லை.

''நாயக்கரே! நீர் தானய்யா இந்த ஜில்லாவுக்கே ராசா.'' என்று புகழாதவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

அவர்களில் ஒருவர்தான் மேட்டாங்கரை ஜம்புலிங்கம். ஜம்புலிங்கத்துக்கு தன் கொடியே உயரமாகப் பறக்க வேண்டும் என்பது விருப்பம்.

விக்ரம நாயக்கர் மாளிகை கட்டும் முன்வரை ஜம்புலிங்கம் பெயர்தான் அந்த வட்டாரத்தில் எதற்கும் அடிபடும். ஆனால் அந்த மாளிகை உருவானபிறகு ஜம்புலிங்கம் பெயர் தானாகப் பின்னே போய்விட்டது.

தமிழ் நாட்டின் பிரபல நடிகர் ஒருவர்கூட நாயக்கர் மாளிகை பற்றி அறிந்து அங்கே வந்து தங்கி ஒருவாரம் வரை ஓய்வெடுத்தார். அந்த நடிகர்தான் அடுத்த முதல்வர் என்று ஊரே பேசிக்கொண்டிருக்கும் தருணத்தில் அவர் முதல்வரானால் நாயக்கருக்கும் நிச்சயமாக ஒரு எம்.எல்.ஏ சீட்டோ எம்.பி. சீட்டோ உறுதி என்று பேசிக்கொண்டார்கள்.

அக்கடாவென்றிருந்த நாயக்கர் இப்படி மாளிகை கட்டி அதன் புகழாலேயே எம்.பி., எம்.எல்.ஏ.யாகவும் ஆகிவிட்டால் அப்புறம் தன் நிலை மண்ணைவிட கேவலமாகிவிடும் என்று தோன்றியது ஜம்புலிங்கத்துக்கு.



அடுத்தநொடி அவர் போய்ப் பார்த்தது அல்லிக்கரை செங்கமலத்தைத்தான்!

அல்லிக்கரை செங்கமலம் அள்ளி முடியாத மனிதர்களே அந்த வட்டாரத்தில் இல்லை!

❖❖❖

செல்லமுத்துக் கவுண்டரின் தென்னந்தோப்பில் வரிசையாக லாரிகள் நின்றிருந்தன.

ஒவ்வொன்றிலும் பத்தாயிரத்து எட்டு காய்கள் என்று எண்ணி லோட் செய்ததில் மொத்தமாய் பத்து லாரிகள்!

லட்சத்துக்கும் மேல் அதில் காய்கள்.

ஒரு காய்க்கு மார்க்கெட் மதிப்பு மூன்று ரூபாய்! காய் ஒவ்வொன்றும் நல்ல காராம் பசுவின் மடியைப்போல் அத்தனை பெரிது!

சில்லரை விலைக்குப் போகும்போது மூன்றுரூபாய் காய் ஐந்து ரூபாயில்போய் நின்றுவிடும்.

மொத்தமாய் லட்சம் காய்க்கும் மூன்று லட்ச ரூபாய்!

அவ்வளவையும் ஐநூறு ரூபாய் நோட்டில் அடக்கி அதையும் ஒரு தோல் பையில் அடக்கி செல்லமுத்து கவுண்டரிடம் தருவதற்காக வந்தார் மொத்த வியாபாரி தங்கமணி.

''என்னாலே எல்லாம் சரியா இருக்குதா?''

''எண்ணிப் பார்த்துக்குங்க...''

அதெல்லாம் எதுக்குய்யா... இன்னிக்கு நேத்தா நீ விலைக்கு வாங்கறே?''

''அப்ப சரியா இருக்குதான்னு நீங்க கேக்கலாமா?''

''நான் கேட்டது உன் ரூபாயை இல்ல. என் தேங்காயை...''

''என்னை நீங்க நம்புறமாதிரி உங்களை நான் நம்புறேன் கவுண்டரே.''

''நல்லது... நாம அந்த சாமியை நம்புவோம்.'' -கவுண்டர் கலகலப்பாக சொல்லிக் கையை அசைக்கவும் லாரிகள் சீறிக்கொண்டு புறப்பட்டன.

கவுண்டரின் கையிலும் கொத்தாக மூன்றுலட்சரூபாய்.

சுற்று வட்டாரத்தில் எல்லாத் தென்னையும் பூச்சிவிழுந்து விளைச்சல் இல்லாத நிலையில் இருக்க, கவுண்டர் மட்டும் எப்படியோ தப்பித்து விட்டார்.

கேட்டால், 'எல்லாம் அணைக்கரைப்பட்டி ஆஞ்சனேயன் கருணை' என்பார்.

தொட்டதற்கெல்லாம் 'ஆஞ்சனேயா' என்று அவனைக் கூப்பிடுமளவு ஆழமான பக்தி உடையவர்.

மூன்று லட்சம் ரூபாயோடு புறப்படத் தயாரானார் எதிரில் பொன்னுசாமிப் பிள்ளை வந்தபடி இருந்தார். கவுண்டரின் பால்ய ஸ்னேகிதர்!

''வாவே பொன்னு... இப்பத்தான் வர வழி தெரிஞ்சிச்சா உனக்கு...''

''அட நீ ஒன்னு செல்லமுத்து... ஒரு பத்து நாளாவே வேலை பெண்டு கழண்டு போச்சு...''

''எலேய் எவண்டாவன்... மரத்துல ஏறி நாலு இளநீர் வெட்டுங்கடா...'' -வேலைக்காரர்களுக்கு உத்தரவு போட்டு



விட்டு இருவருமாய் சென்று ஒரு வேப்பமரத்தடியில் போடப்பட்டிருந்த பிரம்பு நாற்காலிகளில் அமர்ந்தனர்.

''அப்புறம்...?''

''ஒரு முக்கிய விசயமாத்தான் உன்னிய பாக்கவந்தேன்.''

''என்ன... உன் பொண்ணுக்கு மாப்ளை பாத்துட்டியாக்கும்.''

''இல்லப்பா... இது வேற சமாச்சராம்!''

''விவரமா சொல்லு...''

''விக்ரம நாயக்கபுரம் பத்தி கேள்விப்பட்டிருக்கியா?'' -பொன்னுசாமிப் பிள்ளை கேட்ட நொடி செல்லமுத்துக் கவுண்டர் நெற்றியில் சுருக்கம் விழுந்தது.

இடையே வேலைக்காரனின் இளநீர்க் கைகளும் நீண்டன. அதை வாங்கி வாயோரமாய் ஒரு கவிழ்ப்பு கவிழ்த்து ஒரு மொடக்கு இளநீரைப் பருகிவிட்டு மீசையை நீவிவிட்டுக் கொண்டே,

''அந்த பேய் பங்களா விக்ரம நாயக்கபுரம் தானே?'' என்றார் நிதானமாய்.

''அப்ப விக்ரம நாயக்கபுரம் பத்தி உனக்கும் தெரியும்னு சொல்லு...''

''அதுக்கென்ன பொன்னு...?''

''இல்ல... இந்த பேயி பிசாசுங்களைப் பத்தியெல்லாம் நீ என்ன நினைக்கறே?''

''என்ன திடீர்னு அந்த ஊரைப் பத்தி பேசிப்புட்டு சட்டுன்னு பேய் பிசாசுங்களுக்கு தாவிட்டே...?''

''நீ என் கேள்விக்கு பதில் சொல்லு. பேய் பிசாசுங்க பத்தி என்ன நினைக்கறே நீ?''

''இப்படி திடீர்னு பேய் பிசாசு பத்திகேட்டா நான் என்னத்தடா சொல்ல...?

அது என்ன பழகிப்பார்த்து பதில் சொல்ற சமாச்சாரமா?''

''அதுசரி... உனக்கு அந்தமட்டுல ஒரு அபிப்ராயம் இருக்கும்ல...?''

''அபிப்ராயம்னா...?''

''யப்பா... எதுக்கு இப்படி வளைச்சு வளைச்சு பேசிக்கிட்டு? பேயும் பிசாசும் இருக்கறதா நீ நம்புறியா?''

''நீ கேக்கறத பார்த்தா விக்ரம நாயக்கபுரத்துல அந்த பேய் மாளிகையை வாங்கப் போறியா என்ன?''

-செல்லமுத்துக கவுண்டர் நேராக விஷயத்தை தொட்டார்.

பொன்னுசாமிப் பிள்ளையும் ஆச்சரியமாகி ஒரு ஆழப்பார்வை பார்த்தார்.

''என்னா... கேக்கறேன்ல -அந்த பங்களாவை வாங்கப்போறியா... என்ன?''

''ஆமாம் செல்லமுத்து... இன்னிக்கெல்லாம் பத்துகோடி ரூபாய் மதிப்பாம் அதுக்கு... ஆனா வெறும் பத்துலட்சத்துக்கு வருதுப்பா.''

''அதான் பேயும் பிசாசும் அந்த மாளிகை கூத்தடிக்குதுங்கறாங்கல்ல அதை வாங்கி அதுகளோட குடும்பம் நடத்தப் போறியா நீ?''



''அதுக்குதான் உன்கிட்ட கேட்டேன் - பேய்பிசாசு மேல உனக்கு நம்பிக்கை இருக்குதான்னு...''

''இல்லேன்னா நீயும் அதை நம்பிடுவியா?''

''எனக்கு நீ சொன்னா போதும்... துணிஞ்சு இறங்கிடுவேன்.''

''அதுசரி இப்ப அந்த மாளிகை யார்கிட்ட இருக்கு?''

''விக்ரம நாயக்கர் மகள்கிட்ட இருக்குதுப்பா. பாவம்... அது சோத்துக்கே கஷ்டப்பட்டுக்கிட்டிருக்கு.''

''அடக் கொடுமையே... நாயக்கர் குடும்பத்துக்கு அப்படி ஒரு நிலையா?''

''சும்மாவா சொன்னாங்க பெரியவங்க. நல்லா வாழ்ந்தவங்க கெட்டா ஓட்டுச்சில்லுக்குகூட ஆகமாட்டாங்கன்னு...''

''சே... எப்படி ஒரு பேரும் புகழுமா இருந்தவர் இந்த விக்ரம நாயக்கர்! எப்ப அந்த பங்களாவைக் கட்டுனாரோ அப்பவே அவரைக் கெட்ட நேரம் பிடிச்சு ஆட்ட ஆரம்பிச்சிடிச்சே...''

''அதவிடு... தைரியமா அந்த மாளிகையை வாங்கலாம்கிறியா?''

''என்வரைல நான் எந்த பேயையும் பிசாசையும் பார்த்ததில்ல. எல்லாம் உடான்சுதான்கறது என் அபிப்ராயம். அப்புறம் உன் இஷ்டம்,''

''இப்படி இரண்டும் கெட்டானா சொல்லாதப்பா, தைரியமா சொல்லு.''

''சரி தைரியமா சொல்றேன். போ... அந்த மாளிகையை வாங்கு.''

''நெசமாத்தான் சொல்றியா...?''

''எலேய்... ஏண்டா இப்படி என் உசுரை வாங்கறே.''

''நல்லா தெளிவா சொல்லுப்பா.''

''தெளிவா என்ன.. புடலங்கா... நான் என்ன புரியாத பாஷையா சொல்றேன். தாராளமா வாங்கு... வாங்கு... வாங்கு... போதுமா?''

''அப்ப ஒரு அஞ்சலட்சம் வெட்டு...''

''அஞ்சுலட்சமா... எதுக்கு?''

''ஆமா... அந்த மாளிகைல நீயும் எனக்கு சரிசமமான பார்ட்னர்.''

''அடப்பாவி... இதுக்குதான் எனக்கு பேய்பிசாசு நம்பிக்கை உண்டான்னு கேட்டியா?''

''ஆமாம் செல்லமுத்து... நல்லதோ கெட்டதோ இரண்டுபேரும் சேர்ந்தே அந்த மாளிகையை வாங்குவோம். ஊரும் உலகமும் சும்மா கொடுத்தா கூட வேணாம்னு சொல்ற அந்த மாளிகையை நாம வாங்கி கொஞ்சநாள் வெச்சுருந்து வாழ்ந்து காட்டி, பொறவு அதை பல கோடிக்கு விப்போம். என்ன சொல்றே?''

''நீ பெரிய கில்லாடிடா பொன்னுசாமி...''

''பாராட்றது இருக்கட்டும். பணம்?''

''ஆமாம்... அஞ்சா பத்தா சட்டுன்னு பாக்கெட்ல கையைவிட்டு எடுத்துத்தர...''

''தேங்காலாரி போறத பார்த்துட்டுதான் வரேன். பத்து லாரி தேங்கா... எப்படியும் மூணுலட்சம் தேத்தியிருப்பே. கூட ஒரு இரண்டு லட்சத்தை போட்டு வெட்டு. மிச்சத்தை நான் பாத்துக்கறேன்...''



''சும்மா இருந்த என்னை வம்புல மாட்றே பார்த்தியா?''

''அப்ப உன் தொடை நடுங்குதுன்னு சொல்லு, உன் தைரியம்லாம் சும்மா மேலுக்குதான்.''

''உடனே இப்படி பேசாதே... நானே அந்த பங்களாவை நாம வாங்குனா என்னான்னு பலதடவை யோசிச்சதுண்டு. இப்ப நீ துணைக்குவேற வரேங்கறே. இரண்டுல ஒண்ணு பார்த்துட வேண்டியதுதான். இந்தா இதுல மூணுலட்சம் இருக்கு, மிச்சத்தை நான் கணக்குப் பிள்ளைகிட்ட கொடுத்துவிட்றேன்.''

''அப்படிப்போடு அருவாளை... இப்பத்தான் நீ என் சினேகிதன். நாம மீசை வெச்சிருக்கறதுக்கும் இனிமேதான் அர்த்தமே வரப்போகுது பாரு.'' - பொன்னுசாமிப்பிள்ளை சீன நாட்டு வானத்து மத்தாப்புபோல ஏகத்துக்கும் குஷியாகி ஒளிவிட்டார்.

-ஆனால் அடுத்து நடக்கப் போகிற அந்த ஆபத்து தெரியாமல்!

## 3

**'விக்ரம நாயக்கர் அவரது பிறந்தநாளை தானம் தருமம் என்று விசேஷமாகக் கொண்டாடுவது வழக்கம். விக்ரம நாயக்கர் பட்டியே அல்லோல கல்லோலப்படும். ஊர்க்காரர்கள் ஒருவர் பாக்கியில்லாமல் வயசு வித்தியாசமோ, அந்தஸ்து பேதமோ பார்க்காமல் அன்று நாயக்கர் மாளிகைக்கு வந்துவிடுவார்கள்.**

விருந்தும் கேளிக்கையும் தூள் கிளப்பும். அக்கம் பக்கத்து கிராமங்களில் இருந்தும்கூட விஷயம் கேள்விப்பட்டு எல்லோரும் வருவார்கள்.

சரியாக அந்த நாளை தனது இலக்காகத் தேர்ந்தெடுத்தார் - அவரை தனது மிகப்பெரிய எதிரியாகக் கருதிவிட்ட ஜம்புலிங்கம்.

அந்த நாளைய வாக்ஸ் ஹால் காரில் பெரிய ஆளுயர மாலையோடும் கூடவே அல்லிக்கரை செங்கமலத்தோடும் அவர்போய் நிற்கவும் விக்ரம நாயக்கர் அப்படியே வாயைப் பிளந்து விட்டார். செங்கமலம் பற்றி நாயக்கர் கேள்விப்பட்டிருக்கிறார். ஆனால் நேரில் பார்த்ததில்லை. அவளோ ஒரு கலாப மயில்போல நேரிலேயே வந்தால் அவருக்கு எப்படி இருக்கும்! அவரது நாற்பது வயது நாடி நரம்புகளில் ஒரு பரபரப்பு போட்மெயில் கணக்காக ஒரு ஓட்டம் ஓடியது. அவளும் மாராப்பை சற்று விலக்கி ஒரு மென்மையான மையலை அவருக்குக் காட்டி காதோரமாக 'ஆம்பளைன்னா நீங்கதான்...' என்றபோது அவருக்குப் புரிந்துவிட்டது.

அவருக்கு மட்டுமா?

அவரது அருமை மனைவி பங்கஜ மீனாட்சிக்கும்தான்!

❖❖❖

விக்ரம நாயக்க புரத்துக்குள் பொன்னுசாமியின் கார் புழுதி பறக்க நுழைந்தபோது காலை வெய்யில் பட்டை கிளப்பிக் கொண்டிருந்தது.

மண்சாலைதான்!



அதுவும் அகண்ட கண்மாயான வீரபத்ரன் கண்மாய்க்கரை ஓரமாக அமைந்திருந்தது.

கண்மாயில் அவ்வளவாக தண்ணீரில்லை. ஒரு சதுர கிலோமீட்டர் பரப்பளவுக்கு சுருங்கி இடுப்பளவு தண்ணீர் மட்டும் இருந்தது.

அதில் சட்டிப்பானை பரிசலைப்போட்டு அதன்மேல் அமர்ந்து கொண்டு கொரவை மீன்களை பார்த்துப் பார்த்து பிடித்துக் கொண்டிருந்தான் -கண்மாய்க் காவலுக்கும் ஊர்க்காவலுக்கும் பேர்போன சிங்கராயன்!

கார் மண்சாலையில் செல்வதைப் பார்த்துவிட்டு ஆச்சரியமானவன் மளமளவென்று சட்டிப்பானை பரிசலை துடுப்புக்கழியால் தள்ளியபடி கரையைத் தொட்டு இறங்கினான். பின் அவிழ்ந்த வேட்டியை இறுக்கிக் கட்டிக்கொண்டு விறுவிறுவென்று நடக்க ஆரம்பித்தான்.

அவனது யூகம் சரிதான்.

கண்மாயைக் கடந்து ஊருக்குள் கால் வைக்கும்போதே முகப்பில் குடிசைபோட்டு ஒரு பெட்டிக் கடையும் வைத்திருக்கும் வீரண்ணன் சிங்கராயனைப் பார்த்துவிட்டு இமைகள் படபடக்க-

''சிங்கா ஓடிவா... மாளிகையை பாக்க பார்ட்டி வந்துருக்கிறமாதிரி தெரியுது'' என்றான்.

''அதான் வீரண்ணா நானும் ஓடியாந்தேன். எந்த கூறுகெட்டவன் வந்துருக்கான்னு தெரியலியே'' - எனும் போதே ஒரு கிராமத்து சிறுவன் சைக்கிள் டயர் ஒன்றை உருட்டிக்கொண்டு அவர்களை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தான்.

''தா... ஆள்வந்துடீச்சி பாரு...'' -வீரண்ணன் கைகாட்ட, ஓடிவரும் சிறுவனும் அவர்களை நெருங்க,

''என்னாடா...?''

''சிங்கராயண்ணனை பாக்க யாரோ வந்துருக்காங்க. அவரை கூட்டிகிட்டு வரச்சொன்னாங்க.''

''சிங்கராயா... போ... உனக்கு வேல வந்துடிச்சு பாரு...'' -வீரண்ணன் ஒரு பீடியை பற்றவைத்துக் கொண்டே சொன்னான்.

சிங்கராயனுக்கு சலிப்பாக வந்தது.

''கொஞ்ச நாளா எழுவு உழுவாம இருந்தது. இப்ப திரும்ப உழுவப்போகுது...'' என்று முணுமுணுத்தபடியே கிளம்பினான்!

விஸ்தாரமான அந்த பதினான்காயிரம் சதுர அடி மாளிகை துளிகூட பொலிவே இல்லாமல் காரை எல்லாம் உதிர்ந்து ஹோவென்று கிடந்தது.

மாளிகையைச் சுற்றிலும் கிட்டத்தட்ட 1000 மீட்டர் சுற்றளவிற்கு குறையாத கருங்கல் மதிர் சுவர். அங்கங்கே சுவர் பெயர்ந்து விழுந்திருக்க மதிர் சுவரில் பல இடங்களில் அரசஞ்செடிகள் துளைபோட்டு வளர்ந்திருந்தன.

மாளிகையைச் சுற்றி நிறைய வேப்ப மரங்கள். நடுநடுவே அங்கங்கே ஆலம், அரசம் என்று ராஜ கம்பீரமான மரங்களும் தழைத்திருந்தன.

அவ்வளவும் பழுப்பு உதிர்காலத்தில் உதிர்த்த இலைகள் தரைப்பரப்பு முழுக்க வாரப்படாமல் அப்படியே கிடந்தன.

பாழும்மனை என்றால் முள்வேலிக்காத்தான் எப்படியோ அங்கே பரவிவிடும் என்பதற்கு தோதாக காலிஇடம் முழுக்க



முள்வேலியும் கருவேலமும் வளர்ந்து தழைத்திருக்க தரையே தெரியாதபடி பார்த்தீனியமும் நெருஞ்சி முள்ளும்கூட சேர்ந்திருந்தன.

மாளிகை முகப்பில் வேல்கம்புகளால் உருவாக்கப்பட்ட அந்த கிராதிக்கதவில் கூட இரண்டொரு வேல்கம்பு உருவப்பட்டு தாராளமாய் சிலர் உள்ளே நுழையலாம் என்கிற மாதிரி இருந்தது அது.

அந்த கிராதிக்கதவுக்கு முன்னால் நின்று கொண்டிருந்தது பொன்னு சாமியின் அம்பாஸிடர். காருக்கு வெளியே தன் மைத்துனன் கைலாசத்துடன் கழுத்தில் மைனர் செயின் மின்ன பொன்னுசாமி!

இருவரும் தங்களுக்கு எதிரே மரமும் புதருமான நாயக்கர் மாளிகையை பார்த்தபடி நின்று கொண்டிருந்தனர்.

''ஒரு காலத்துல இந்த மாளிகைக்கு என்ன ஒரு பேர் தெரியுமா... பாத்தியா கைலாசம் இப்ப இது இப்படி பாழ்பட்டு கிடக்கறத...'' பொன்னுசாமி பெருமூச்சுவிட்டார்.

''பார்க்கவே என்னவோ மாதிரி இருக்கு மாமா... இதை நீங்க வாங்கத்தான் வேணுமா?'' -கைலாசம் குரலில் கொஞ்சம் பயம் தெரிந்தது.

''நீயும் பயப்பட ஆரம்பிச்சுட்டியாலே...?''

''ஊரே பயப்படுது... நானும் மனுஷன்தானே மாமா...''

''போடா பொடலங்கா... ஊரு பயப்படுது, உலகம் பயப்படுதுன்னுகிட்டு. எல்லாம் பொரளிடா.''

''அது எப்படி அவ்வளவு தைரியமா சொல்றீங்க?''

''விக்ரம நாயக்கர் வாழ்ந்த வாழ்க்கை பொறுக்காம யாராவது சதி செஞ்சுருக்கலாமில்லியா?''

''அதுசரி... அப்புறமா எவ்வளவோ பேர் இந்த மாளிகையை வாங்க வந்து ஊரை விட்டே திரும்பிப் போனதில்லைன்னு சொல்றாங்களே... அது எப்படி?''

''அவங்கெல்லாம் பயந்த தொடை நடுங்கிங்கடா... ஆனாநான் அப்படி இல்லை.''

''வேணாம் மாமா... எதுக்கும் கொஞ்சம் யோசியுங்க''

''எலேய்... நீ எனக்கு துணையா வந்துருக்கியா இல்லை இம்சை பண்ண வந்துருக்கியா?''-பொன்னுசாமி மைத்துனனை ஒரு அதட்டு அதட்டும்போது ''யாருங்க அது?'' என்கிற கேள்வியோடு அவர்களை நோக்கி வந்தான் சிங்கராயன்.

''நீதான் காவக்காரன் சிங்கராயனா?''

''ஆமாம்...''

''நாங்க மாளிகையை வாங்கற எண்ணத்துல இருக்கோம். அதுக்கு முந்தி உள்ள சுத்திப் பார்க்கலாம்னு வந்துருக்கோம்...''

''சரிதான்... இந்த மாளிகை பத்தி உங்களுக்கு எதுவும் தெரியாதாக்கும்?''

''எல்லாம் தெரிஞ்சுதான் வந்துருக்கோம்...''

''எல்லாம் தெரிஞ்சு எப்படி வந்தீங்க? உள்றபோன யாரும் உசுரோட இதுவரை திரும்பினதில்லை தெரியுமா?''

''நீ என்ன காலக்காரனா... இல்லை வர்றவங்களை பயமுறுத்தி திருப்பி அனுப்பறதுக்குன்னே உன்னை காவக்காரனா போட்ருக்காங்களா?''



''அட என்னங்க நீங்க... பச்சாதாபப்பட்டு நீங்க நல்லா இருக்கணும்னு பேசுனா என்னை தப்பா நினைக்கறீங்க.''

''நீங்க ஒண்ணும் எங்களுக்காக பச்சாதாபப் படவேண்டாம். சாவியைக் கொடு. நாங்க பாத்துக்கறோம்.''

''மாளிகை சொந்தக் காரவுங்க அனுமதி இல்லாம நான் யாருக்கும் சாவி தரமாட்டேன்.''

''இவ்வளவு தூரம் வந்துருக்கற நான் அனுமதி இல்லாம வந்துருப்பேனா...?''

''அப்ப நாயக்கரய்யா மவ வந்து சொல்லட்டும். சாவி கொடுக்கறத பத்தி யோசிக்கறேன்.''

''ரொம்பதான் லொள்ளு பண்றே நீ. இவ்வளவு தூரம் வந்துருக்கற நான் அவங்கள பார்க்காம, பேசாம வருவேனா...''

''அதுக்கு ஆதாரம்?'' -வீரண்ணன் கேட்ட மறுநொடி பாக்கெட்டில் இருந்த செல்ஃபோனை எடுத்து எண்களைத் தட்டி மறு முனையைப் பிடித்து பின் அப்படியே அவனிடம் நீட்டினார் பொன்னுசாமி. அவன் காதிலும் விக்ரம நாயக்கரின் மிஞ்சி இருக்கும் ஒரே மகளான சந்தானலட்சுமி குரல் ஒலிக்கத் தொடங்கியது.

''சிங்கராயா... நான் பாக்கியம் பேசறேன்.''

''அம்மா... எப்படிம்மா இருக்கீங்க?''

''ஏதோ இருக்கேன்... நம்ப மாளிகையை பார்க்க வந்துருக்கற பொன்னுசாமி பிள்ளைகிட்ட சாவியைக் கொடு...''

''அம்மா...''

''என்னடா...?''

''எல்லாம் தெரிஞ்சும் நீங்களே இப்படி ஆள் அனுப்பினா என்ன அர்த்தம்?''

''நான் சொல்லவேண்டியத சொல்லிட்டேன். ஆனா அவங்கதான் 'எங்கள எந்த பேயும் பிசாசும் எதுவும் பண்ணாது'ன்னு சொல்றாங்க.''

''அவங்க அப்படித்தான் சொல்வாங்க. இந்த மாதிரி சொல்லியே இதுவரை ஏழுபேர் போய்சேர்ந்துட்டாங்க ளேம்மா...?''

''டேய்... நானே எத்தத்தின்னா பித்தம் தெளியும்ன்னு இருக்கேன். இவங்க நேரம் இவங்களுக்கு எதுவும் ஆகாம போய் இவங்களும் மாளிகையை விலைக்கு வாங்கினா எனக்கு தானேடா நல்லது.''

''சரிம்மா... தலை எழுத்தை யாரால மாத்த முடியும்?'' -சலித்தபடியே செல் ஃபோனை பொன்னுசாமியை நோக்கி நீட்டினான். அப்படியே ஒரு பார்வை பார்த்துவிட்டு ''கொஞ்சம் இருங்க. என்வீட்டுக்கு போய் சாவியை எடுத்துகிட்டு வரேன்...'' என்று கிளம்பினான்.

அவன் விலகவும் கைலாசமும் பொன்னுசாமியும் திரும்பவும் மாளிவை நோக்கி ஒரு பார்வை பார்த்தனர்.

ஒரு நூறடி தூரத்தில் தோளில் கலப்பையோடு ஒருவர் போய்க்கொண்டிருந்தார். மாளிகை கிராதிக் கதவுமுன் காருடன் நிற்கும் இருவரையும் பார்த்துவிட்டு தேங்கி நின்றார். கைலாசமும் அவரைப் பார்த்துவிட்டு கையை ஆட்டி அருகே வரும்படி கூப்பிட்டான். பதிலுக்கு 'நான் அங்கே வரமாட்டேன்' என்கிறமாதிரி சைகை செய்தார்.

''மாமா... இங்க வரமாட்டேங்கறான் பாருங்க அந்த ஆளு...''



''அவனை எதுக்குடா கூப்பிட்டே...?''

''இந்த மாளிகையைபத்தி நாலு வார்த்தை பேசத்தான்...''

''கிட்டையே வரமாட்டேங்கறான். இவன் என்னத்த சொல்வான். 'உள்ற போகாதீங்க. செத்துருவீங்க'ம்பான்''

''பாத்தீங்களா... ஊர்க்காரனே கிட்டவர பயப்பட்றான். ஆனா நீங்கமட்டும் எந்த தைரியத்துல இதை வாங்கறேங்கறீங்க?''

''திரும்பத்திரும்ப நீயும் என்னை கோழை ஆக்கப் பாக்குறியே... பேய் பிசாசுங்கறதெல்லாம் வெட்டிப் பசங்க பேசற பேச்சுடா.

அப்படி அதெல்லாம் இருக்கறது உண்மைன்னா இந்த உலகத்துல இப்ப வாழ்ந்து கிட்டிருக்குறவங்களைவிட வாழ்ந்து செத்தவங்கதாண்டா அதிகம். ஊர் பூரா அப்ப ஆவியாதான் அலையணும்.

''அப்படி இல்ல மாமா... வயசு வந்து சாவறது ஒரு விதம். அநியாயமா தற்கொலை பண்ணிக்கிட்டு செத்து ஆவியா சுத்தறது இன்னொரு விதம்.''

''அப்படிங்களா... அப்ப அந்த ஆவிங்க இந்த காவக்காரனை மட்டும் ஏண்டா விட்டுவெச்சுருக்குது?''

''நீங்க என்ன சொல்றீங்க?''

''எல்லாம் புரளி...''

''அப்படி ஒரு புரளியால யாருக்கு என்ன நன்மை?''

''புரளிங்கறது எல்லா நேரமும் ஒரு விஷயத்தை எதிர் பார்த்தே பரப்பறதுல்ல. முக்காலே மூணு வீசம் ஒருத்தரைப்

பார்த்து இன்னொருத்தர்னு நம்பியே பரவிடும். ஒரு பொய்யை பத்துபேர் ஆமோதிச்சா அது சத்தியமாயிடும்னு சொல்வாங்க. அந்த மாதிரிதான் இதுவும்.''

''பரவால்ல மாமா... உங்களுக்கு தில்லுதான். விடாம சமாளிக்கறீங்களே...''

''சமாளிச்சாதாண்டா பத்துகோடி மதிப்புல உள்ள இந்த மாளிகையை பத்து லட்சத்துக்கு வாங்க முடியும். தெரிஞ்சுக்க...'' -பொன்னுசாமி பதிலுக்கு பதில் என்று சொல்லி கைலாசத்தின் வாயை அடைத்தார். அந்த கலப்பைக்கார விவசாயியோ சிறிதுநேரம் நின்று பார்த்துவிட்டு போயேபோய்விட்டார். அதைப் பார்த்து சிரித்த பொன்னுசாமி ''சரிவா உள்ற போய் காம்பவுண்டு வாலை சுத்தி வருவோம்.'' -என்றபடி கிராதிக் கதவின் அகற்றப்பட்டிருக்கும் வேல்கம்புகளுக்குள்ளான இடைவெளியில் உடம்பை நுழைத்தார்.

சிரமப்பட்டு உள்ளேயும் காலடி வைத்தார்.

பின்தொடர்ந்தான் கைலாசம்.

அவனுக்கு பயமாகத்தான் இருந்தது.

## 4

பிறந்தநாள் கூத்தெல்லாம் ஒரு வழியாக முடிந்து அடங்கிவிட்டது. ஆனால் அது ஏன் வந்தது என்று இருந்தது பங்கஜ மீனாட்சிக்கு.

''பட்டுப் புடவைக்குள் இடுப்பில் ஒட்டியாணமும் கழுத்தில் அட்டிகையுமாய் கோவிலில் இருக்கும் அம்பிகையைப் போல் இருந்தவள் கண்களில் கண்ணீர். அவளைச் சுற்றி அவளது வாரிசுகளும் சிலைபோல நின்று கொண்டிருந்தன.



விக்ரமநாயக்கருக்கு ஆறுபெண்கள்!

ஆறுபேருமே ஆறு செப்புச் சிலைகள்.

பெரியவளுக்கு பன்னிரண்டு, அதற்கு அடுத்தவளுக்கு பத்து... கடைசியாய் உள்ள வெண்சிலை வயது மூன்று. ஆறுபேருமே ஒரே மாதிரி பட்டுப் பாவாடையில் ஒன்றுபோல தலை வாரி அதில் கனகாம்பரம் சூட்டப்பட்டிருக்க, அழுதபடி இருக்கும் அம்மாவைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

''அம்மா... ஏம்மா அழுவறே?''

கேட்டாள் பெரியவள். பின் அவளே ''அப்பா ஏம்மா இப்பல்லாம் வீட்டுக்கு எப்பவாச்சும்தான் வரார்... அவர் எங்கம்மா போறாரு...'' -என்று கேட்டாள்.

பஞ்கஜ மீனாட்சியிடம் பதிலில்லை.

கண்களில் கூடுதலாய் கண்ணீர் உதிர்ந்தது.

அவளுக்குப் புரிந்தது.

''அம்மா... அப்பா அந்த செங்கமலம் வீட்டுல இருக்காரு?''

அவளது கேள்வி அவள் கண்களில் மேலும் கண்ணீரைப் பிழிய வைத்தது.

கணக்குப்பிள்ளை எதார்த்தமாய் அந்தப் பக்கம் வந்தார். பஞ்கஜ மீனாட்சி அழுவதைப் பார்த்துவிட்டு ''அம்மா... அழுவாதீங்கம்மா. பார்த்தீங்களா - புள்ளைங்களும் அழுவுதுங்க. நீங்க அழுதா இந்த மாளிகை நல்லா இருக்காதும்மா'' என்றார்.

அவள் சமாதானம் ஆகவில்லை.

"அந்த தட்டுவாணி சிறுக்கி நம்ம ஐயாவுக்கு மருந்து வெச்சிட்டாம்மா. அதான் அவரு அவ ஞாபகமாகவே இருக்காரு. அவ பெரிய கைகாரி. பல பெரிய தலைங்கள உருட்டினவ.

ஆமையும் அவளும் ஒண்ணும்மா. அவ எந்த வீட்டுல நுழைஞ்சாலும் அந்த வீடு விளங்காம போயிடும்னு சொல்வாங்க..."

-கணக்குப் பிள்ளை ஆறுதல் சொல்வதாக நினைத்துக் கொண்டு பங்கஜமீனாட்சியின் கவலையை அதிகமாக்கினார்.

அவளும் விசும்பி விசும்பி அழுதாள்.

"அழுவாதீங்கம்மா... போங்கம்மா... போய் ஐயாவை பார்த்து இங்க கூட்டிகிட்டுவாங்க. வெளியே விடாதீங்க. அவ வந்தா நாங்க பாத்துக்கறோம்."

-'கணக்குப்பிள்ளை இறுதியாகச் சொன்னது கொஞ்சம் வேலை செய்தது. பங்கஜமீனாட்சி கண்களை துடைத்துவிட்டுக் கொண்டு கிளம்பினாள்.'

❖❖❖

எங்கு பார் ஒரே புதர்!

நடக்கும்போது இலை தழைகளில் கால்பட்டு அவை ஏகத்துக்கும் சப்தம் போட்டது.

கைலாசம் நடக்கவே பயந்தான்.

"விலைக்கு வாங்கி பத்திரம் பதிஞ்ச மறு நிமிஷம் நல்லா ஒரு அம்பது பேரைவிட்டு அம்புட்டு புதரையும் வெட்டி வெளிய எறிஞ்சு தீயை வைக்கணும்."



-என்றபடியே தாவிக்குதித்து நடந்தபடி இருந்தார் பொன்னுசாமி. சில இடங்களில் ஆள் உயரத்திற்கு பாம்புப் புற்றுகள். வழித்தடங்களில் அங்கங்கே அவை உதிர்த்துப்போட்ட சட்டைகள்!

"மாமா பார்த்து நடங்க... எங்கையாவது பாம்புங்க இருந்து - அதை மிதிச்சுவைக்கப் போறீங்க..." சொல்லும்போதே கைலாசம் ஒரு பாம்பின்மேல் காலினை வைக்க அது சீறிக்கொண்டு முட்டிக்கால்வரை எகிறியது. அது எகிறின விதம் பார்த்து நல்ல வேளையாக எம்பிக்குதித்து ஓடி அதனிடம் இருந்து தப்பித்தான் கைலாசம். அதுவும் சரசரவென்று ஒரு அடர்ந்த புதருக்குள் நுழைந்து மறைந்துபோயிற்று.

பொன்னுசாமியே ஒரு வினாடி அதனால் திகைத்துவிட்டார். குப்பென்று வியர்த்துவிட்டது. "மாமா... என்ன மாமா இது... வாங்க மாமா போயிடலாம்..." -கைலாசம் வெளிறிய முகத்துடன் அவரை அழைத்தான்.

"ஆமாண்டா கைலாசம்... எங்க எது இருக்குன்னே தெரியல. சரி வா போயிடலாம்..."

-பொன்னுசாமியும் பாம்புகளுக்கு பயந்து கொண்டு திரும்பினார். அதே சமயம் கைலாசத்தின் பார்வை மாளிகையின் ஒரு பக்கத்து பால்கனியை பார்த்தது. அங்கே முகம் முழுவதையும் முடிக்கற்றையால் மூடிக்கொண்டு யார் என்றே தெரியாதபடி ஒரு பெண்! அவனுக்கு 'பக்'என்றது. பொன்னுசாமியை மாமா என்று கூப்பிடக்கூட நாக்கு வரவில்லை... அப்படியே சிலையாக நின்று விட்டான்.

"கைலாசம்... நடடா... ஏன் நின்னுட்டே?"

"மாமா... மாமா..."

''என்னடா?''

-அவன் வலது கை பால்கனி நோக்கி உயர்ந்தது. பொன்னுசாமியும் நிமிர்ந்து அங்கே பார்த்தார். ஆனால் அங்கே யாருமில்லை.

''என்னடா... எதுக்கு கை காமிச்சே?''

''மாமா... அங்க தலைவிரிகோலமா ஒரு பொண்ணு...''

''எங்கடா... யாரையும் காணலியே.''

''இல்லையா...? இப்ப பார்த்தேனே...!''

-கைலாசம் கைகளை உதறினான்.

''முதல்ல நீ நட... சரியான தொடை நடுங்கி நீ. ஆரம்பத்துல இருந்தே பயந்து நடுங்கற உனக்கு பாக்கற இடமெல்லாம் தப்பாத்தான் தெரியும்...''

''இல்ல மாமா... நான் இப்ப பார்த்தேன்.''

''நடன்னு சொல்றேன்ல...''

-மிரட்டலாக அவன் தோளில் கை போட்டு தள்ளிக்கொண்டு திரும்ப கிராதிக் கதவருகே வந்தார்.

சிங்கராயனும் கச்சிதமாக சாவிக் கொத்தோடு வந்து சேர்ந்தான். இருவரும் கதவுக்கு அப்பால் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தபடியே சாவிக் கொத்தை நீட்டினான்.

''நீயே வந்து கதவைத் திறந்துவிடு. அப்படியே உள்ற வந்து சுத்திக்காட்டு.'' என்றார் பொன்னுசாமி.

''அதுக்கு வேற ஆளைப் பாருங்க. என் வேலை கட்டடத்துக்கு வெளிய இருந்து காவக்காக்கறதுதான். அதுவும் சம்பளம் இல்லாத காவக்காரன் நான். பழைய விசுவாசத்துல இந்த சாவிங்கள வெச்சுகிட்டு இருக்கேன்.''



''அப்ப நீ உள்ற வரமாட்டே...?''

''ஏன்... உங்களுக்கும் உதறல் எடுக்க ஆரம்பிச்டிசிடுச்சா...''

''உதறலா...? எனக்கா...? கொண்டா சாவியை. என்னை யாருன்னு நினைச்சே?''

-ஒருவித ஆண்மைச் செருக்கோடு தன் வலது கையை நீட்டி அவனிடம் இருந்த சாவிக்கொத்தை வெடுக்கென்று பிடுங்கினார் பொன்னுசாமி.

''போங்க போங்க... சுடுகாட்டுல இருக்கற வெட்டியான் பயலுக்கு சொல்லிட்டுதான் வந்துருக்கேன்...'' என்றான் அவனும்.

''வந்து உன்னை கவனிச்சுக்கறேன். பூச்சாண்டி காட்றத உட்டுட்டு அப்படிப்போய் நில்லு.'' -என்று அவனுக்கு கட்டளை பிறப்பித்துவிட்டு சாவிக் கொத்தையும் தூக்கிப் போட்டு பிடித்தார். கைலாசம் கண்டங்கழுத்தெல்லாம் வியர்த்து வடிய நின்று கொண்டிருந்தான்.

அவரோ திரும்பி மாளிகையின் போர்டிகோ போன்ற முகப்பு நிழல் கூரை நோக்கி நடந்தார். கைலாசம் அவரைத் தொடராமல் கதவருகேயே நின்றான்.

முகப்பு பாகம் வரை நடந்த பொன்னுசாமி அங்கிருந்து திரும்பிப்பார்த்தார். இடையில் ஒரு நூறு அடிதூரம் இருந்தது.

''எலேய் வாடா... என்ன அங்கேயே நின்னுட்டே...''

''இல்ல மாமா... நான் வரலை.''

''என்னடா?''

-அவன் வலது கை பால்கனி நோக்கி உயர்ந்தது. பொன்னுசாமியும் நிமிர்ந்து அங்கே பார்த்தார். ஆனால் அங்கே யாருமில்லை.

''என்னடா... எதுக்கு கை காமிச்சே?''

''மாமா... அங்க தலைவிரிகோலமா ஒரு பொண்ணு...''

''எங்கடா... யாரையும் காணலியே.''

''இல்லையா...? இப்ப பார்த்தேனே...!''

-கைலாசம் கைகளை உதறினான்.

''முதல்ல நீ நட... சரியான தொடை நடுங்கி நீ. ஆரம்பத்துல இருந்தே பயந்து நடுங்கற உனக்கு பாக்கற இடமெல்லாம் தப்பாத்தான் தெரியும்...''

''இல்ல மாமா... நான் இப்ப பார்த்தேன்.''

''நடன்னு சொல்றேன்ல...''

-மிரட்டலாக அவன் தோளில் கை போட்டு தள்ளிக்கொண்டு திரும்ப கிராதிக் கதவருகே வந்தார்.

சிங்கராயனும் கச்சிதமாக சாவிக் கொத்தோடு வந்து சேர்ந்தான். இருவரும் கதவுக்கு அப்பால் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தபடியே சாவிக் கொத்தை நீட்டினான்.

''நீயே வந்து கதவைத் திறந்துவிடு. அப்படியே உள்ற வந்து சுத்திக்காட்டு.'' என்றார் பொன்னுசாமி.

''அதுக்கு வேற ஆளைப் பாருங்க. என் வேலை கட்டடத்துக்கு வெளிய இருந்து காவக்காக்கறதுதான். அதுவும்



சம்பளம் இல்லாத காவக்காரன் நான். பழைய விசுவாசத்துல இந்த சாவிங்கள வெச்சுகிட்டு இருக்கேன்.''

''அப்ப நீ உள்ற வரமாட்டே...?''

''ஏன்... உங்களுக்கும் உதறல் எடுக்க ஆரம்பிச்டிசிடுச்சா...''

''உதறலா...? எனக்கா...? கொண்டா சாவியை. என்னை யாருன்னு நினைச்சே?''

-ஒருவித ஆண்மைச் செருக்கோடு தன் வலது கையை நீட்டி அவனிடம் இருந்த சாவிக்கொத்தை வெடுக்கென்று பிடுங்கினார் பொன்னுசாமி.

''போங்க போங்க... சுடுகாட்டுல இருக்கற வெட்டியான் பயலுக்கு சொல்லிட்டுதான் வந்துருக்கேன்...'' என்றான் அவனும்.

''வந்து உன்னை கவனிச்சுக்கறேன். பூச்சாண்டி காட்றத உட்டுட்டு அப்படிப்போய் நில்லு.'' -என்று அவனுக்கு கட்டளை பிறப்பித்துவிட்டு சாவிக் கொத்தையும் தூக்கிப் போட்டு பிடித்தார். கைலாசம் கண்டங்கழுத்தெல்லாம் வியர்த்து வடிய நின்று கொண்டிருந்தான்.

அவரோ திரும்பி மாளிகையின் போர்டிகோ போன்ற முகப்பு நிழல் கூரை நோக்கி நடந்தார். கைலாசம் அவரைத் தொடராமல் கதவருகேயே நின்றான்.

முகப்பு பாகம் வரை நடந்த பொன்னுசாமி அங்கிருந்து திரும்பிப்பார்த்தார். இடையில் ஒரு நூறு அடிதூரம் இருந்தது.

''எலேய் வாடா... என்ன அங்கேயே நின்னுட்டே...''

''இல்ல மாமா... நான் வரலை.''

''அடேய் தொடை நடுங்கி. தைரியமா வாடா.''

''இல்ல... நான் வரலை. நீங்க போய் பார்த்துட்டுவாங்க. நான் இங்கயே நின்னுகிட்டிருக்கேன்.''

''உனக்கெல்லாம் எதுக்குடா மீசை?'' -சத்தம் போட்டு அவனைப் பார்த்து நாக்கை கடித்துக் கொண்டவர் ஒருவாறு சுதாரித்துக் கொண்டு அந்த போர்டிகோ பாகத்தைக் கடந்து படிகளில் ஏறி காரிடார் போன்ற பாகத்தில் நடந்து வேலைப்பாடுகளுடன் அமைந்த ராட்சஸ நிலை கால் கதவு முன்னால் நின்றார்.

கருந்தேக்கில் உருவாக்கப்பட்ட பத்தடி உயரக் கதவு. ஒருயானைக்கு இருயானை ஒன்றாக நுழையலாம் - அவ்வளவு அகலம்.

பட்டையான தாழ்ப்பாள் மட்டுமே மூன்றடி நீளத்தில் இருந்தது. இரு கைகளால் சிரமப்பட்டு தூக்க வேண்டிய அளவில் பெரிய சைஸ் பூட்டு.

சாவியும் அரை அடிநீளம் இருந்தது. சாவிக்கொத்தில் அதை தேடிப்பிடித்து துவாரத்தில் செருகி திறப்பதற்குள் புஜமெல்லாம் வலி எடுத்தது. முக்கி முனகி அதைத் திறக்கவும் பலத்த சப்தம். கூடவே கொஞ்சம் புழுதியும் கிளம்பி அவர் மூக்கில் ஏறியது.

திறந்து கொண்ட பூட்டை கஷ்டப்பட்டு தாழ்ப்பாளைவிட்டு பிரித்து அருகில் கீழே வைத்துவிட்டு கதவைத் திறக்கத் தொடங்கினார்.

'கீச்சு வீச்சு' என்று நூறு எலிகள் ஒன்றாகக்கூடி சப்தமிடும் தினுசில் சப்தத்தோடு அதுவும் திறந்து கொண்டது.

திறந்து கொண்ட கதவுக்கு அப்பால் நீண்ட உள்வராண்டா. அந்த வராண்டா மையத்தில் பெரிதாய் ஒரு



மீன்வலை போல சிலந்தி வலை. நடுவில் ஒரு பனை நுங்கு சைஸில் சிலந்தி ஒன்று! பார்க்கவே பயங்கரமாக இருந்தது.

''படுபாவிங்க... இப்படியா பூட்டிவைப்பாங்க. திறந்தே பல வருஷம் இருக்கும்போல இருக்குதே.'' -என்ற முணு முணுப்புடன் முன்னேறிய அவரைப் பார்த்து சிலந்தி வேகமாக விலகி ஓடியது.

நல்லவேளையாக அவர் தோளில் ஒரு துண்டு இருந்தது. அதை எடுத்து விசிறியதில் அந்த வலை அறுந்து வழி கிடைத்தது. அதே சமயம் மார்பிள் தரை முழுக்க கால் அங்குலத்துக்கு புழுதி! நடக்கும்பொழுது செருப்புக் கால்களையும் மீறி ஒரு மெதுமெதுப்பு தெரிந்தது.

காலால் தரையைத் தேய்க்கவும், தேய்த்த பாகம் மட்டும் பளிச்சென்று தெரிய மற்ற பாகத்தில் புழுதிப்படலம் அப்பிக்கிடந்தது. பார்க்கவே என்னவோ போல் இருந்தது. எதிரில் உள்ள ஹாலுக்குள் நுழைவதற்கான இன்னொரு நிலைகால் கதவு. அதிலும் பூட்டு தொங்கியது. திரும்பி வந்து சாவிக்கொத்தை எடுத்தபடி நிமிர்ந்து ஒருமுறை வெளியே பார்த்தார்.

கிராதிக் கதவருகே கைலாசமும் காவல்காரன் சிங்கராயனும் சிலைபோல நின்று பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவர்களை ஒரு புழுவைப் பார்ப்பது போல பார்த்தவர் சாவிக் கொத்தோடு திரும்பவும் உள்ளே நுழைந்தார்.

நிலைக்கால் கதவை அடைந்தவர் அந்தப் பூட்டையும் திறக்க ஆரம்பித்தார். ''கரகர கொரகொர' வென்று ஒரே சப்தம். கதவும் ஒரு வழியாக திறந்து கொண்டது.

திறந்து கொண்ட கதவுக்கப்பால் இரண்டாயிரம் சதுர அடியில் பிரதான ஹால். நடுவில் அந்த நாளைய

மையமண்டபம் போல் கூம்பு வடிவத்தில் கூரை. கூரையில் கண்ணாடிகள் பதிக்கப்பட்டு சூரிய வெளிச்சம் உள்ளே பளீரென்று விழுந்திருந்தது.

அதே சமயம் அந்த ஹால் மட்டும் படுசுத்தமாக கூட்டியதுபோல இருந்தது. ஹாலின் மையத்தில் வண்ணப் பளிங்குக் கற்களை வைத்தே உருவாக்கப்பட்டிருந்த தாமரை மலர் தோற்றம்!

அது பளிச்சென்று தெரிந்தது. பொன்னுசாமிக்கு அதைப்பார்க்க ஆச்சரியமாக இருந்தது. அந்த ஹாலின் மொத்த பாகத்தையும் ஒரு பார்வை பார்த்தார். எங்கும் துளிகூட நூலாம்படையே இல்லை. ஹாலைவிட்டு ஆறு முனைகளில் கதவுகள் அமைந்து அறைகளுக்கும் இதர பாகங்களுக்கும் செல்ல நிலைகால் வாசல்கள் தெரிந்தன. அதில் ஒரு வாசல் மட்டும் திறந்தே இருந்தது. 'ஹாலில் தரையில் போடப்பட்டிருக்கும் மார்பிளின் மதிப்பே பத்து லட்சம் வரும்' என்று அவர் மனது ஒருமுறை சொல்லிக் கொண்டாலும் கூடவே அது அவ்வளவு தூய்மையாக இருப்பது ஆச்சரியமாக இருந்தது.

'எப்படி இது சாத்யம்?' என்ற கேள்விக்குள் அவர் விழுந்த அடுத்த நொடி மூடியிருக்கும் ஐந்து கதவுகள் முன்னாலும் ஐந்து பெண்கள்!

முகம் தெரியாதபடி கூந்தல் மூடிய நிலையில் திடீரென்று காட்சி தந்து ஒரு வினாடி அவரை திகைக்கவிட்டனர்.

மேலே சாளரத்தில் இருந்தும் ஏதோ ஒன்று வந்து அவர் காலடியில் விழுந்தது. பதறிப்போய் துள்ளியவர் வேகமாக சாளரத்தைப் பார்த்தார். விருட்டென்று ஒரு பெண் உருவம் தோன்றி மறைந்தது. திரும்பவும் பார்வையை அங்கே இருந்து விலக்கி எதிரில் ஹாலின் ஐந்து முனைகளில் உள்ள கதவுகளின்



பக்கம் கொண்டு சென்றபோது அந்த ஐந்து பெண்களைக் காணவில்லை! சட்டென்று அவருக்கு நெஞ்சை அடைத்தாலும் 'யாராவது மிரட்டுவதற்காக இப்படி செய்கின்றார்களோ' என்றும் தோன்றியது.

''யாரது...? நான் இதுக்கெல்லாம் பயப்பட மாட்டேன்...'' என்று ஒருமுறை தைரியத்தை வரவழைத்துக் கொண்டு உரக்கக் கத்தினார். அது ஒருமுறை அந்த ஹாலில் பலமாக எதிரொலித்தது.

வெளியே கைலாசம் பேந்தப் பேந்த நின்று கொண்டிருந்தான்.

''ஆமா... உள்ளார போயிருக்கற ஆள் உனக்கு என்ன உறவு?'' - கேட்டவன் சிங்கராயன்.

''எங்க அக்கா புருஷன்...''

''அடப்பாவி... அநியாயமா உன் அக்காவை அனாதை ஆக்கப் போறானேடா அந்த ஆளு.''

''சும்மா இருப்பா... என் மாமா ரொம்ப தைரியசாலி.''

''தைரியமெல்லாம் மனுஷங்ககிட்டதான். பேய் பிசாசுங்ககிட்ட கிடையாது. தெரிஞ்சுக்க.'' -சிங்கராயன் கையை காலை ஆட்டிக் கொண்டே சொன்னபோது ''ஐய்யோ அம்மா காப்பாத்துங்க...'' என்று ஒரு அலறல் குரல்!

கைலாசத்தின் ரத்தம் உறைந்துவிட்டது. அடுத்த நொடியே திறந்து கிடந்த கதவு வழியாக திருதிருவென்று ஓடிவந்து கொண்டிருந்தார் பொன்னுசாமி. பின்னங்கால் பிடரியில்பட ஓடி வந்தவர், கிராதிக் கதவருகே நின்று கொண்டிருந்த கைலாசத்தை சமீபித்து அப்படியே அவன் காலடியில் சுருண்டு விழுந்தார். கைலாசமும் பதறிப்போய் அவரைத் தொட்டுத் தூக்கினான்.

அவர் முகத்தில் தெப்பமாய் வியர்வை. கண்களில் பிதுங்கி வழியும் பீதி.

மூச்சுக்காற்றிலோ ஸ்டீமர் போல் வெப்பம்.

''மாமா... மாமா... என்ன ஆச்சு... என்ன ஆச்சு மாமா...''

-கைலாசம் அவர் நெஞ்சை வருடியபடியே கேட்க அவனைத் தள்ளிவிட்டுக் கொண்டு ஓடிப்போய் காரில் ஏறி அப்படியே பின் சீட்டில் விழுந்தார்.

கைலாசமும் ஓடிப்போய் காரின் டிரைவிங் சீட்டில் ஏறி காரைக் கிளப்பினான். புழுதி பறக்க நெடுந்தூரம் காரைக் கொண்டு வந்து நிறுத்திவிட்டு திரும்பி பொன்னுச்சாமியை பார்த்தான்.

அவரிடம் பேச்சு மூச்சு இல்லை!

## 5

'பங்கஜமீனாட்சியை ஊருக்குள் பார்த்தவர்களுக்கு ஒரே திகைப்பு.

பட்டுப்புடவை சரசரக்க அவள் வீதியில் விறுவிறுவென்று நடந்து செல்வது எல்லோர் கண்களையும் பிடுங்கியது.

அவள் எதற்கு வந்திருக்கிறாள் என்பதும் எல்லோருக்கும் புரிந்துவிட்டது. அவளோ யார் பார்க்கிறார்கள், என்ன பேசுகிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் சட்டையே செய்யவில்லை.

விறுவிறுவென்று நடந்தவள் செங்கமலம் வீட்டு முன்னால்தான் நின்றாள்.



வாசலில் ஒரு கிழட்டுப் பெண், பங்கஜமீனாட்சியை எதிர்பார்க்காத மாதிரி அதிர்ச்சியைக் காட்டினாள். ''எங்க என் வீட்டுக்காரர்...?'' -அவளிடம் நின்று கேள்வியை எழுப்பியவள் அப்படியே எட்டி உள்ளே பார்த்தாள். வாசலில் தொங்கிக் கொண்டிருந்த திரைச்சீலை மறித்தது.

ஆனால் விக்ரமநாயக்கர் உள்ளேதான் இருக்கிறார் என்பதை வீட்டுமுன் நின்று கொண்டிருக்கும் அவரது வாக்ஸ் ஹால் கார் ஊர்ஜிதமாய் சொல்லியது.

''யாரும் இங்க இல்லை. நீ யாரு?'' என்று ஒன்றுமே தெரியாத மாதிரி அந்தக் கிழவி கேட்டாள்.

''என்னைத் தெரியல...?''

''தெரியல.''

''பொய் சொல்லாதே...''

''நீ யாரா இருந்தாலும் சரி. இங்க நின்னு கத்தாதே. திரும்பிப் போயிடு.''

-சப்தம் உள்வரை கேட்டு செங்கமலம் திரைச் சீலையை விலக்கிக் கொண்டு எட்டிப் பார்த்தாள்.

அவளைப் பார்த்த நொடி பங்கஜமீனாட்சி கைகளைக் கூப்பினாள். கண்களில் கண்ணீர் கரகரவென்று வழிந்தோடியது.

''அம்மாடி... உனக்கு கோடி புண்ணியம். அவரை தயவு செய்து விட்டுடு. நீ என்ன கேட்டாலும் தரேன்...''

''யாரை?'' -சிரித்தபடியே மார்பு குலுங்க கேட்டாள் செங்கமலம்.

''வேண்டாம்மா... என் குடும்பத்தோட விளையாடாதே...'' அலறினாள் பஞ்கஜமீனாட்சி.

"நீதான் இப்ப என் வீட்டு வாசல்ல நின்னு சத்தம் போட்டு வம்பு இழுத்துகிட்டு இருக்கே..."

"என் புருஷனை அனுப்பு... நான் போய்ட்றேன்."

"வந்தா கூட்டிகிட்டு போ..." -செங்கமலம் அலட்சியமாக சொன்ன பதிலில் பங்கஜமீனாட்சிக்குள் ஊசிகள் வெடுக்வெடுக்கென்று ஏறின.

"வேண்டாம்... உன்கால்ல விழறேன். அவரை தயவு செய்து அனுப்பிவை."

"அதான் சொல்லிட்டேனே... வந்தா கூட்டிகிட்டு போன்னு..."

-உடனே அரக்க பரக்க உள்ளே ஓடினாள் பங்கஜமீனாட்சி. நுழைந்த வேகத்தில் ஸ்தம்பித்து நின்றாள்.

விக்ரமநாயக்கர் செங்கமலம் வளர்க்கும் நாயை புழக்கடையில் வைத்து கழுவிக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தார்.

"அய்யோ... அய்யோ..." -பங்கஜமீனாட்சி உதடுகள் பதறித்துடித்தன. அவரும் திரும்பிப்பார்த்தார்.

"என்னங்க இது... உங்க தகுதி என்ன... அந்தஸ்து என்ன... இந்த நாதேரி வீட்ல நாயைக் கழுவிகிட்டு இருக்கீங்களே..." -பங்கஜமீனாட்சி தொடர்ந்து பதறிவெடித்தாள். அவர் யாரையோ பார்க்கிற மாதிரி பார்த்துக் கொண்டிருந்தார்.

"என்னங்க இது... நான் இந்த கத்து கத்தறேன். இப்படி பார்த்தா என்னங்க அர்த்தம்?"



-அவரிடம் பதிலே இல்லை. கண்களிலும் ஏகத்துக்கும் சிமிட்டல்கள். அப்பொழுதுதான் கணக்குப்பிள்ளை சொன்னது அவள் காதில் ஒலித்தது.

'அந்த தட்டுவாணி நம்ப ஐயாக்கு மருந்துவெச்சுட்டாம்மா. அதான் அவர் அவளாபகமாவே இருக்கார்...'

"அய்யோ!"

அவளது அடிவயிற்றில் இருந்து ஒரு அலறல் ரத்தநாளங்கள் வெடித்துச் சிதறுகிற மாதிரி பீறிட்டது.

❖❖❖

காரை ஒரு ஓரமாக நிறுத்திவிட்டு கீழே இறங்கி பின்பக்கம் சென்று பொன்னுசாமியை தொட்டுப் பார்த்தான் கைலாசம். நல்லவேலை உயிர் இருந்தது. அவனுக்கும் 'அப்பாடா' என்று இருந்தது. அவரோ பயங்கரமாய் உளற ஆரம்பித்தார்.

"இல்ல... நான் இல்ல... ஐய்யோ என்னைவிட்டுடு. நான் இனிவரமாட்டேன்... நான் வரமாட்டேன்..."

"மாமா... என்ன இது.. எதுக்கு இப்படி புலம்பறீங்க... இங்க பாருங்க நான் கைலாசம் பேசறேன்.."

"அய்யோ என்னை விட்ருங்க. என்னை விட்ருங்க..."

-பொன்னுசாமி காரில் இருந்து இறங்கி தலை தெரிக்க ஓட ஆரம்பித்தார்.

கைலாசமும் அவரைப் பிடிக்க பின்னாலேயே ஓடினான்.

மல்லாக்கப் படுத்திருந்தார் பொன்னுசாமி. கையையும் காலையும் அவர் படுத்திருந்த கட்டிலில் கயிறால் இழுத்துக்

கட்டியிருந்தார்கள். செய்தியைக் கேள்விப்பட்டு செல்லமுத்துக் கவுண்டர் வந்து பார்த்தபோது பார்க்கவே பரிதாபமாக இருந்தது. அவர் முகமும் பரிதாபத்தால் சுணங்கிப்போனது. அருகிலேயே நின்றுகொண்டிருந்த கைலாசம் செல்ல முத்துக்கவுண்டரை தனியே அழைத்துச் சென்று நடந்ததை சொல்லத் தொடங்கினான்.

''நாயக்கர் மாளிகைக்குள்ற போறதுக்கு முந்தியே ஆளாளுக்கு மிரட்ட ஆரம்பிச்சுட்டாங்க. காவக்காரன் சிங்கராயன் சாவி கொடுக்கவே மாட்டேன்னுட்டான். அவன்கிட்ட சாவி வாங்கறதுக்குள்ற போதும் போதும்னு ஆயிடிச்சு.

அதுக்கு நடுவுல அந்த மாளிகையைச் சுத்தியுள்ள பாகங்களைப் பாக்கலாம்னு நானும் மாமாவும் போனோம். எங்கபார் ஒரே புதர், எவ்வளவு பாம்புப் புத்துங்க தெரியுமா?''

''கைலாசம்... இந்தக் கதையெல்லாம் எதுக்கு? அங்க உள்ற என்ன நடந்துச்சு? எது பொன்னுசாமியை இப்படி பைத்தியமாக்கினுச்சு...? அதச் சொல்லு.''

''அது எனக்குத் தெரியாது... நான் மாமாவோட உள்ற போகலை.''

''அப்ப அவன் கூட நீ எதுக்கு போனே?''

''அது...அது...''

''அட போப்பா... நீ எல்லாம் என்ன மச்சினன்... இப்ப பார்த்தியா?''

''அண்ணே நான் சொல்றத கொஞ்சம் கேளுங்க, அந்த மாளிகைல பேயுங்க இருக்கறது உண்மை. ஒரு பொம்பளையை தலவிரிகோலமா நான் பார்த்தேன்.''



''பொம்பளையை பார்த்தியா... பேயை பார்த்தியா?''

''அந்த பொம்பளதான் பேயிங்கறேன் நான்.''

''இல்ல... அங்க வேற ஏதோ சிக்கல் இருக்கு. அதுல பொன்னுசாமி சிக்கிட்டான்,''

''என்னண்ணே நீங்க? அப்படி வேற ஏதாவது இருந்தா அதுக்கெல்லாம் பயப்பட்றவர் கிடையாது என் மாமா...''

''அப்படின்னா...?''

''பேயுங்களப் பார்த்து பயந்து ஓடிவந்ததுலதான் அவருக்கு இப்படி ஆயிடிச்சு...'' -கைலாசம் தன் கருத்தை அழுத்தமாகச் சொல்ல, பொன்னுசாமியின் மனைவி கண்ணாத்தா அவர்களை நோக்கி வந்தாள்.

நிறைய அழுதிருந்தாள்.

செல்ல முத்துக்கவுண்டரை ஒருவித கோபத்துடன் தான் பார்த்தாள்.

''எதுக்கு தாயி என்ன அப்படி பாக்கறே?''

''பாக்காம...? அவருக்கு அஞ்சுலட்சரூபா பணத்தைக் கொடுத்து அனுப்பி வெச்சவர் நீங்கதானே?''

''அடக்கடவுளே... அவன்தான் என்னை வந்து பார்த்து பணம் கேட்டான். நான் அவனை அனுப்பி வைக்கலை.''

''இல்ல... அவர் உங்ககிட்ட பேய் பிசாசுங்கறது இருக்குதா... அது உண்மையான்னு கேட்டப்போ நீங்க அதெல்லாம் பொய்யுன்னு சொல்லலை?''

''இப்பவும் சொல்றேன். பேய் பிசாசுங்கறதெல்லாம் பொய்தான். பொன்னுசாமி வேற எதையோ பார்த்து மிரண்டுதான் இப்படி ஆகியிருக்கான்.''

''இங்க நின்னுகிட்டு இப்படியெல்லாம் வெடாசா பேசறதெல்லாம் பெரிய விஷயமில்லண்ணே... நீங்க கூட போயிருந்திருக்கணும்.''

''இப்ப நீ முடிவா என்ன சொல்றே?''

''என் வீட்டுக்காரரை அநியாயமா அந்த பங்களா விஷயத்துல மாட்டவிட்டு இப்படி ஆக்கிட்டீங்களே அண்ணே...''

''சத்தியமா இதுல என்பங்கு எதுவும் இல்லை கண்ணத்தா. என்ன நம்பு.''

''அதெல்லாம் எனக்குத் தெரியாதுண்ணே, எனக்கு என் புருஷன் வேணும். அதுக்கு ஒரு நல்ல வழிபண்ணுங்க.''

''நான் என்னம்மா பண்ண... நல்ல டாக்டருங்ககிட்ட காட்டு. இவன் தெளியட்டும். பொறவு தெரியும் அங்க உண்மைல என்ன நடந்துச்சின்னு?''

''அண்ணே...'' -கைலாசம் இடையில் கத்தரித்தான்.

''என்ன கைலாசம்...?''

''இன்னொரு கொடுமையும் நடந்து போச்சுண்ணே.''

''என்ன அது?''

''பத்துலட்ச ரூபா பணத்தை மாமா இடுப்பு வேட்டி மடிப்புல ஒரு கட்டா கட்டி வெச்சுருந்தாரு. அவ்வளவும் 1000ரூபா நோட்டுங்க. அதுவும் அங்க காணாம போயிருச்சு.' -கைலாசம் அப்பொழுதுதான் அந்த விஷயத்தையே ஒபன் செய்தான். செல்லமுத்துக் கவுண்டருக்கு உச்சந்தலையில் யாரோ ஆணியால் குத்தியமாதிரி இருந்தது.

''என்னய்யா சொல்றே?''



''ஆமாண்ணே... அரக்கப் பரக்க ஓடி வரைல நோட்டுக்கட்டு அந்த மாளிகைக்குள்ற விழுந்துடிச்சோ என்னவோ?''

''ஐயோ... ஐயோ...'' -கண்ணாத்தா உடனேயே ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள்.

செல்லமுத்துக் கவுண்டருக்கு அவளது ஒப்பாரி எரிச்சலை மூட்டியது.

''முதல்ல இப்படி ஒப்பாரி வைக்கறது நிறுத்து ஆத்தா... இப்ப எதுக்கு இப்படி கத்தறே?''

''ஐயோ... பணம் போச்சே... பத்துலட்ச ரூபாயாச்சே...?''

''உன் பணம் மட்டும்தானா... என்பணமும்தான். அதுல அஞ்சுலட்சம் என்னுது - தெரியும்தானே?''

''ஏன் தெரியாம... பணமும்போய் மனுஷரும் இப்படி பைத்தியமா கிடந்தா எப்படிண்ணே மனசு தாங்கும்?''

-மீண்டும் கண்ணீர் சிந்தினாள் கண்ணாத்தா. செல்லமுத்து கவுண்டரும் தாடையை வருடியவராக தீவிரமாக யோசிக்கத் தொடங்கினார்.

''என்னண்ணே யோசனை...?'' கைலாசம் கேட்டான்.

''ஒண்ணுமில்ல... அப்படி என்னதான் அந்த மாளிகைல இருக்குதுன்னு யோசிக்கறேன்...''

''நான் சொன்னா நம்பமாட்டீங்க. வந்து பார்த்தீங்கன்னாதான் உங்களுக்கும் தெரியும்.''

''அப்ப கிளம்பு...''

''ஐயோ... என்னண்ணே இது திடீர்னு...''

''கிளம்புங்கறேன்ல...?''

''அண்ணே...''

''கிளம்புடான்னா...'' -செல்லமுத்து கவுண்டர் குரலில் உக்ரம் கூடிப்போனது.

''வேணாம்... வேணாம்... தம்பி நீ போவாதே. அப்புறம் உனக்கும் ஏதாவது ஆயிடப்போகுது.''

''கண்ணாத்தா கொஞ்சம் சும்மாஇரு. பத்துலட்ச ரூபா பணத்துக்காகவாவது நான் இப்ப அங்க போயாகணும்.''

''வேணும்னா நீங்க போங்க. என் தம்பியை நான் அனுப்பமாட்டேன். அவன் ஏற்கெனவே மிரண்டுபோய் கிடக்கறான்.''

-கண்ணாத்தா உறுதியாக சொன்னதைக் கேட்டு உக்ரமாக ஒரு பார்வை மட்டும் பார்த்தார் செல்லமுத்து. அவளோ முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டாள்.

செல்லமுத்துக் கவுண்டர் வேறு வழியின்றி தனியாகவே அங்கே செல்லுவது என்று தீர்மானித்தவராக புறப்பட்டார்!

## 6

'ஒரு மாதம் வரை ஓடிவிட்டது. பங்கஜ மீனாட்சி இளைத்து துரும்பாகிவிட்டாள். கணக்குப்பிள்ளை மட்டும் அவ்வப்போது வந்து ஆறுதல் சொன்னார். கூடவே அதிர்ச்சிகரமான விஷயங்களையும் சொன்னார்.

''அம்மா... அந்த கிராதகி அய்யாவை மயக்கி பல சொத்துப் பத்தரங்கள்ல கையெழுத்து வாங்கிட்டான்னு



கேள்விப்பட்டேன். மிஞ்சி இருக்கறது இந்த மாளிகைதான். இதுல நீங்க இருக்கறதால விட்டுவெச்சிருக்காளாம்...'' -என்று சொல்லவும் அவளுக்கு நெஞ்சு வலியே வந்துவிட்டது.

பங்கஜ மீனாட்சிக்கு ஒரு அண்ணன் இருக்கிறார். ராஜதுரை என்பது அவர்பெயர். குற்றாலம் பக்கமாய் அவருக்கு ஏகமாய் நிலபுலன்கள். கிட்டதட்ட ஒரு ஜமீன்தார்போல வாழ்ந்து வருபவர். தங்கையின் மோசமான நிலையைக் கேள்விப்பட்டு நாயக்கர் மாளிகைக்கு வந்து சேர்ந்தார். பங்கஜ மீனாட்சியை ஒரு சோகச் சித்திரமாய் பார்த்து அப்படியே நொறுங்கிவிட்டார்.

''பஞ்கஜம்... நீ தைரியமா இரு. அந்த சிறுக்கியை ஒருவழி பண்ணிட்டு மாப்ளையை கட்டித் தூக்கிட்டு வரேன் பார்...'' என்று சபதம் செய்தவராக தன் அடியாட்களுடன் அல்லிக்கரை செங்கமலத்தைத் தேடிப் புறப்பட்டார்!

கையில் ஒரு நீண்ட துப்பாக்கிவேறு...

❖❖❖

திபுதிபுவென்று ஒரு கூட்டத்துடன் ராஜதுரை வீட்டுவாசலில் வந்து நிற்பதைப் பார்த்து செங்கமலத்தின் வீட்டுக்கிழவி அரண்டுபோய் விட்டாள்.

''ஏய்... எவடி அங்க? வாடி வெளிய...'' -ராஜதுரையின் கூலியாள் ஒருவன் மெகா போன் வைத்துக்கொள்ளாத குறையாக கத்தினான். சப்தம் ஊரையே திரும்பிப் பார்க்க வைத்தது.

அதில் ஜம்புலிங்கமும் ஒருவன். அவனுக்கு நடப்பதை எல்லாம் பார்க்க பரம சந்தோஷமாக இருந்தது.

அவன் நினைத்தது நடந்துவிட்டது.

விக்ரம நாயக்கர் விழுவார் என்றுதான் நினைத்தான். ஆனால், இப்படி அதல பாதாளத்தில் விழுந்துவிடுவார் என்று அவனே கூட எதிர்பார்க்க வில்லை. கைகொட்டி சிரித்தான்.

அதே சமயம் செங்கமலம் யாரும் எதிர் பார்க்காத ஒரு காரியத்தை அங்கே செய்யத் தொடங்கியிருந்தாள்.

விக்ரம நாயக்கரை தரதரவென்று தன் வீட்டில் இருந்து இழுத்து வந்து துப்பாக்கியும் கையுமாய் நிற்கும் ராஜதுரை முன்னால் தள்ளிவிட்டாள்.

''இவரை தாராளமா கூட்டிகிட்டுபோ... இவரை நான் போகச் சொல்லி எவ்வளவோ நாளாச்சு. இந்த ஆள்தான் போகாம காலையே சுத்திச் சுத்தி வர்றாரு...'' என்றாள்.

கூட்டம் அதிர்ந்தது.

ராஜதுரை அதற்குமேல் அதிர்ந்தார்.

''மாப்ள... வாங்க மாப்ள நம்ப வீட்டுக்கு போகலாம்'' என்றார். அவர் எந்த பதிலும் சொல்லாமல் வெகுவேகமாய் செங்கமலம் வீட்டுக்குள் நுழைந்து ஒரு அறைக்குள் புகுந்து தாழ்ப்பாளும் போட்டுக்கொண்டார்.

ராஜதுரைக்கு கன்னத்தில் அறைபட்ட மாதிரி இருந்தது.

''இப்பவும் சொல்றேன்... தகவை உடைச்சு கூட்டிகிட்டு போங்க. எனக்கு ஆட்சேபணை இல்லை... நான் தாசிதான். விரும்பி வர்றவங்களை சந்தோஷப்படுத்தறதுதான் என் தொழில். ஆனா ஒரு குடும்பத்தைக் கெடுக்கறவ கிடையாது.''



-செங்கமலம் பேசியபேச்சு ஒரு ஆச்சரிய மின்னலாய் எல்லோர் மனத்தையும் தாக்கியது.

ராஜதுரையும் அதற்குமேல் அங்கே நிற்க விரும்பவில்லை. நாலுபேருடன் வெகுவேகமாக அவளது வீட்டுக்குள் நுழைந்து அவர் தாழிட்டுக் கொண்ட தகவை உடைக்கத் தொடங்கினார்.

கதவு பெயர்ந்து விழவும் உள்ளே ஒரு மூலையில் நின்றுகொண்டிருந்தவரை பாய்ந்து பிடித்து அப்படியே குண்டுக்கட்டாக தூக்கிக்கொண்டு அங்கிருந்து கிளம்பினார்!

❖❖❖

தென்னந் தோப்பில் அவர் வழக்கமாய் ஓய்வெடுக்கும் குடிசை முன்னால் குறுக்கும் நெடுக்குமாய் குட்டிபோட்ட பூனைபோல நடந்து கொண்டிருந்தார் செல்லமுத்துக் கவுண்டர். 'ஜல்ஜல்' என்று அவரது வில்வண்டி வரும் சத்தம் கேட்டு திரும்பிப்பார்த்தார்.

பொன்மேனிதான் வண்டியில் வந்து கொண்டிருந்தாள். கோவிலுக்குப் போய்விட்டு வருகிறாள் என்பது அவளைப் பார்த்த மாத்திரத்தில் தெரிந்தது.

அவளும் தேங்கி நின்ற வண்டியில் இருந்து குதித்து இறங்கி அவரை நெருங்கினாள்.

''எங்க புள்ள... கோவிலுக்கு போய்ட்டு வர்றியா?''

''ஆமாங்க. வழியில அப்படியே நீங்க தோப்புல இருக்கறது தெரிஞ்சு பிரசாதம் கொடுக்க வந்தேன்.''

''நல்லது... பிரசாதத்தை அப்படி வெச்சுட்டுக் கிளம்பு.''

''அது என்ன அப்படி சொல்லிப்போட்டீக. ஆமா.. என்ன என்னவோ கேள்விப்பட்டேனே.''

''என்ன?''

''உங்க சினேகிதரு பொன்னுச்சாமி பிள்ளைக்கு பைத்தியம் பிடிச்சிருக்காம்ல?''

''சரிதான்... அது உன் காது வரைக்கும் வந்துடிச்சா?''

''ஊரே பேசும் போது நான் கேக்கறதுதான் உங்களுக்கு பெரிசா போயிடிச்சாக்கும்.''

''விடு... அவன் கெட்டநேரம்!''

''கெட்ட நேரம் அவனுக்குமட்டுமா.. உங்களுக்கும்தான்''

''என்ன புள்ள சொல்றே?''

''அவரு அப்படி ஆகவே நீங்கதான் காரணம்னுல்ல பேசிக்கறாங்க.''

''போச்சுடா... பட்டையை கட்டிவிட ஆரம்பிச் சுட்டாங்களா...?''

''ஒண்ணுன்னா ஒன்பதுங்கறதுதான் ஊரோட வழக்கம். தெரிஞ்சிருந்தும் நீங்க இந்த விஷயத்துல சிக்கிட்டீங்களே...''

''பொன்மேனி... எதுக்கு தொண தொணன்னு பேசிகிட்டு. நானே குழப்பத்துல இருக்கேன். கொஞ்சம் வாயை மூடிக்கிட்டு சும்மா இருக்கியா?''

''என் வாயை அடைக்கலாம். ஊர் வாயை எப்படி அடைப்பீங்க?''



''ஆமா நீ பிரசாதம் கொடுக்க வந்தியா... இல்ல ஊர்க்கதை பேச வந்தியா?''

''ஊர் அப்படி பேசினதைக் கேட்டு பயந்துதான் நான் கோவிலுக்கே போனேன். நீங்களோ இந்த தோப்பைவிட்டு நகரமாட்டேங்கறீங்க...''

''சரி... பேசி முடிச்சிட்டீல்ல... கிளம்பு.''

''இதை எப்படி சமாளிக்கப் போறீங்க...?''

''அந்தக் கவலை உனக்கு எதுக்கு?''

''எனக்குத் தெரியாது... இந்த விவகாரத்தை தலைமுழுகிட்டு வீடுவந்து சேர்ரீங்க நீங்க...''

-பொன்மேனி ஒருமுடிவுக்கு வந்தமாதிரி சொல்லிவிட்டு புறப்பட்டாள். அவள் விலகிய மறுநிமிடம் அம்பாஸடர் கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து கவுண்டரின் குடும்ப வக்கீல் இறங்கினார். வக்கீலைப் பார்க்கவும்தான் எட்டு வருஷமாக நடந்துவரும் கேஸே ஞாபகத்திற்கு வந்தது.

''வணக்கம் செல்லமுத்து.'' -வக்கீல் கும்பிட்டபடி வந்தார்.

''வாங்க வக்கீலு... எங்க இவ்வளவு தூரம்?''

''எல்லாம் நம்ம கேஸ் விஷயமாதான்...'' -வக்கீல் பதிலோடு கயிற்றுக்கட்டிலில் அமர்ந்தார்.

''என்ன... என்மேல கேஸ் போட்டுருக்கற எதிரி வாய்தா வாங்கியிருக்கானா?''

''எந்த கேஸ் பொட்டுல அடிச்சமாதிரி சட்டுன்னு முடிஞ்சிருக்கு? வாய்தா, விசாரணை, திரும்ப வாய்தான்னு இழுபட்றதுதானே அதோட லட்சணம்.''

''அது என்ன அப்படி சொல்லிப்போட்டீக. ஆமா.. என்ன என்னவோ கேள்விப்பட்டேனே.''

''என்ன?''

''உங்க சினேகிதரு பொன்னுச்சாமி பிள்ளைக்கு பைத்தியம் பிடிச்சிருக்காம்ல?''

''சரிதான்... அது உன் காது வரைக்கும் வந்துடிச்சா?''

''ஊரே பேசும் போது நான் கேக்கறதுதான் உங்களுக்கு பெரிசா போயிடிச்சாக்கும்.''

''விடு... அவன் கெட்டநேரம்!''

''கெட்ட நேரம் அவனுக்குமட்டுமா.. உங்களுக்கும்தான்''

''என்ன புள்ள சொல்றே?''

''அவரு அப்படி ஆகவே நீங்கதான் காரணம்னுல்ல பேசிக்கறாங்க.''

''போச்சுடா... பட்டையை கட்டிவிட ஆரம்பிச் சுட்டாங்களா...?''

''ஒண்ணுன்னா ஒன்பதுங்கறதுதான் ஊரோட வழக்கம் தெரிஞ்சிருந்தும் நீங்க இந்த விஷயத்துல சிக்கிட்டீங்களே...''

''பொன்மேனி... எதுக்கு தொண தொணன்னு பேசிகிட்டு. நானே குழப்பத்துல இருக்கேன். கொஞ்சம் வாயை மூடிக்கிட்டு சும்மா இருக்கியா?''

''என் வாயை அடைக்கலாம். ஊர் வாயை எப்படி அடைப்பீங்க?''



''ஆமா நீ பிரசாதம் கொடுக்க வந்தியா... இல்ல ஊர்க்கதை பேச வந்தியா?''

''ஊர் அப்படி பேசினதைக் கேட்டு பயந்துதான் நான் கோவிலுக்கே போனேன். நீங்களோ இந்த தோப்பைவிட்டு நகரமாட்டேங்கறீங்க...''

''சரி... பேசி முடிச்சிட்டீல்ல... கிளம்பு.''

''இதை எப்படி சமாளிக்கப் போறீங்க...?''

''அந்தக் கவலை உனக்கு எதுக்கு?''

''எனக்குத் தெரியாது... இந்த விவகாரத்தை தலைமுழுகிட்டு வீடுவந்து சேர்ரீங்க நீங்க...''

-பொன்மேனி ஒருமுடிவுக்கு வந்தமாதிரி சொல்லிவிட்டு புறப்பட்டாள். அவள் விலகிய மறுநிமிடம் அம்பாஸடர் கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து கவுண்டரின் குடும்ப வக்கில் இறங்கினார். வக்கீலைப் பார்க்கவும்தான் எட்டு வருஷமாக நடந்துவரும் கேஸே ஞாபகத்திற்கு வந்தது.

''வணக்கம் செல்லமுத்து.'' -வக்கில் கும்பிட்டபடி வந்தார்.

''வாங்க வக்கீலு... எங்க இவ்வளவு தூரம்?''

''எல்லாம் நம்ம கேஸ் விஷயமாதான்...'' -வக்கில் பதிலோடு கயிற்றுக்கட்டிலில் அமர்ந்தார்.

''என்ன... என்மேல கேஸ் போட்டுருக்கற எதிரி வாய்தா வாங்கியிருக்கானா?''

''எந்த கேஸ் பொட்டுல அடிச்சமாதிரி சட்டுன்னு முடிஞ்சிருக்கு? வாய்தா, விசாரணை, திரும்ப வாய்தான்னு இழுபட்றதுதானே அதோட லட்சணம்.''

''இழுபட்டாதானே உங்களுக்கும் பொழப்பு நடக்கும். சரி... வந்த விஷயத்தை சொல்லுங்க...''

''சொல்றேன்...'' -வக்கில் மீண்டும் ஒரு இழு இழுத்தார். ஆனால் விஷயத்தை சொல்வதில் ஏதோ தயக்கம் இருக்கிற மாதிரி தோன்றியது.

''என்ன வக்கீலு... என்ன ஆச்சு உங்களுக்கு?''

''எனக்கு ஒண்ணும் ஆகலை. உங்க எதிரிங்களுக்குதான் புதுசா ஒரு பலம் வந்துருக்குது.''

''என்ன சொல்றீங்க?''

வக்கீல் பதிலுக்கு ஒரு போட்டோவைக் காட்டினார். அதைப் பார்த்த செல்ல முதது்க் கவுண்டருக்கு அப்படியே உடம்பெல்லாம் நடுங்க ஆரம்பித்தது.

''இந்த போட்டோ ஒண்ணுபோதும். உங்க எதிரிங்க உங்க சொத்தை பங்கு போட்டுக்க...''

''இது... இது எப்படி அவங்களுக்கு கிடைச்சது.''

''உங்கப்பா அவர் வெச்சிருந்த சின்ன வீட்டை கல்யாணம் பண்ணிகிட்டாருங்கறதுக்கான இந்த ஆதாரம் பழைய போட்டோ ஸ்டூடியோ ஒண்ணுல இருந்துருக்குது. உங்க கெட்ட நேரம் இது அவங்க பார்வைல பட்ருச்சு. இந்த போட்டோவுக்கும் நெகடிவுக்கும் மட்டும் ஒரு லட்சரூபா கொடுத்துருக்கான் உங்க தம்பி...''

''வக்கிலு... அவனை நீங்களும் என் தம்பிங்காதீங்க.''

''நான் மட்டும் இல்ல... இனி ஊர் உலகமே அப்படிதான் சொல்லப் போகுது. அவங்கதான் இந்த போட்டோவையே



எனக்கு அனுப்பிவெச்சு 'இதுக்குப் பிறகும் இந்த கேஸ் ஜெயிக்கும்னு நினைக்கறீங்களா'ன்னு கேட்டது...''

''வக்கீலு... இந்த போட்டோ ஒரு செட்டப் போட்டோ, எங்கப்பா சத்தியமா அந்த பொம்பளய கல்யாணம் பண்ணல. அந்த நாயும் எங்கப்பனுக்கு பொறக்கல.''

''இந்த பேச்செல்லாம் கோர்ட்ல நிக்காது. வழக்கை வாபஸ் வாங்கிட்டு உங்களுக்குள்ற சமாதானமா போயிடுங்க. சட்டப்படி போனா சொத்துல சரிபாதி அவனுக்கு போயிடும். மறுபாதிதான் உங்களுக்கு. ஆனா நீங்களோ சொத்தை வெச்சு நிறைய கடன் வாங்கியிருக்கிங்க. அந்த கடனுக்கு உங்க பங்கு சொத்து சரியாயிடும். மிச்சம் உங்க தம்பிக்கு போயிடும். அப்புறம் உங்களுக்கு தெருவுதான்.''

-வக்கீல் இடம்பார்த்து குண்டு போடுவது போல பேச வேண்டியதை பேசிவிட்டு கிளம்பிச் சென்றார்.

செல்லமுத்துக் கவுண்டருக்கு தலையைச் சுற்றியது. ஏற்கெனவே பொன்னுசாமிப் பிள்ளையால் நாயக்கர் மாளிகையை மையமாக வைத்து சிக்கல். அடுத்து என்னடா வென்றால் எப்பொழுதோ செத்துப் போய்விட்ட அப்பாவின் வைப்பாட்டியால்-அவளது பிள்ளையால் இப்பொழுது மொத்த சொத்தும் பறிபோய்விடும் ஒரு பரிதாப நிலை.

ஒரு க்ஷணம் என்ன செய்வது, எதைச் செய்வது என்றே தெரியவில்லை. நடுத்தெருவில் நிற்பதுபோல் எல்லாம் மனக்கண்ணில் காட்சிகள் தோன்ற ஆரம்பித்துவிட்டன.

தோள்கொடுத்துக்காப்பாற்ற பிள்ளைகளும் இல்லை. பொன்மேனியின் வயிற்று ராசியோ இல்லை வாங்கி வந்த வரமோ-வாரிசே இல்லாமல் போய்விட்டது.

இந்த நிலையில் என்னதான் செய்வது?

ஒரேவழிதான் இருப்பதாகத் தோன்றியது.

அது நாயக்கர் மாளிகையை வசப்படுத்துவதுதான்!

அதுமட்டும் அந்த பத்து லட்சத்துக்கு வசமாகிவிட்டால் அதை வைத்தே வாழ்க்கையில் எப்படியாவது இப்போது இருப்பதைவிட நல்ல நிலைக்குப் போய்விட முடியும் என்று தோன்றியது.

ஆனால் அதுவோ உள்ளே நுழைபவர் உயிரையே அல்லவா வாங்கிவிடுகிறது...

விருட்டென்று எழுந்தார் செல்லமுத்துக் கவுண்டர்.

நடுத்தெருவில் ஒரு பாப்பராக நின்று சாவதற்கு நாயக்கர் மாளிகையை வசப்படுத்த முயன்று சாவது கொஞ்சம் மேன்மையான ஒன்றாகத் தோன்றியது.

உயிரை வைத்து ஒரு விளையாட்டு.

விளையாடுவதைத் தவிர வேறு வழி இருப்பதாகவும் தெரியவில்லை.

பொன்மேனியிடம் போய் இதை எல்லாம் பிரஸ்தாபித்தால் குறுக்கே விழுந்து தடுத்து விடுவாள் என்றும் எண்ணியவர் அதன் பின் சொல்ப வினாடிகள் கூட தாமதிக்கவில்லை.

புறப்பட்டுவிட்டார்!

கண்மாய்க்கரையில் பானையில் பிடித்துப் போட்ட மீன்களை எல்லாம் உலரப் போட்டு கருவாடாக்குவதில் மும்முரமாக இருந்தான் சிங்கராயன்.

அந்த கரை வெளிமேல் ஒரு சிறுவன் ஓடிவந்து கொண்டிருந்தான்.



சிங்கராயனுக்கும் அவன் தன்னைத்தான் நோக்கி வருகிறான் என்பது தெரிந்தது.

''அண்ணே... அண்ணே...''

''என்னாடா?''

''நாயக்கர் அரண்மனைக்கு ஒருத்தர் வந்துருக்காரு. நீ எங்கேன்னு கேட்டாரு...''

''போச்சுடா.... இரண்டு நாள் முந்திதான் ஒருத்தன் வந்து அலறி அடிச்சுகிட்டு ஓடினான். அதுக்குள்ற இன்னொருத்தனா?''

''நீங்க உடனே வருவீங்களாம். வேல் கம்பு கதவு கிட்டாரையே நின்னுகிட்டிருக்காரு...''

-அந்த பொடியன் சொல்லச் சொல்ல சிங்கராயன் முகத்தில் ஏகப்பட்ட மாற்றங்கள்.

''சரி... நீ இங்க இருந்து இந்த மீனுங்களப் பார்த்துக்க. நான் போய்ட்டு வந்துட்றேன்.''

சிங்காரயன் கிளம்பினான்.

பெட்டிக்கடை வீரண்ணன், மாளிகை முன் நின்று கொண்டிருக்கும் செல்லமுத்துக் கவுண்டரிடம் பேசிக் கொண்டிருந்தார்.

''ஒரு நா இரண்டு நா இல்ல சாமி... முப்பது வருஷமா இந்த மாளிகை இப்படித்தான் கிடக்குது. இதோட பேரைச் சொன்னாலே சிலருக்கு காச்சல் வந்துடுன்னா பார்த்துக்குங்களேன்.''

''நானும் கேள்விப்பட்டேன் பெரியவரே... அப்படி என்னதான் இந்த மாளிகைல இருக்குது?''

''என்னான்னு சொல்ல... நாயக்கர் சம்சாரமும் அவங்க புள்ளைங்களும் ஒரே சமயத்துல தூக்குல தொங்கி உசுரை விட்டுட்டாங்க. நாயக்கரையும் அவரது மச்சினனே சுட்டுக் கொன்னதால அவரையும் போலீஸ் புடிச்சுகிட்டு போயிடிச்சு.

அதுக்குப் பொறவுதான் இந்த மாளிகையே மங்க ஆரம்பிச்சிடுச்சு. தன்னோட புருஷன், அப்புறமா அவ்வளவு சொத்தும் பறிபோயிட்ட அதிர்ச்சியில்தான் நாயக்கர் பொண்டாட்டி தூக்குல தொங்குனதா சொல்வாங்க.

அவங்கதான் இந்த பங்களாவை யாரும் சொந்தம் கொண்டாடிடக் கூடாதுன்னு ஆவியா வந்து தடுக்கறதா நாங்க நினைக்கறோம்.''

''முப்பது வருஷமாவா?''

''முப்பது இல்ல... முன்னூறு வருஷமானாலும் சரி யாரும் இந்த மாளிகைக்குள்ற வரக்கூடாது. நானும் வரவிடமாட்டேன்'னு அந்தம்மா சபதம் போட்டதா சொல்வாங்க...''

''அப்படி அவங்க சபதம் போடக் காரணம்?''

''எல்லாம் அந்த சண்டாளி அல்லிக்கரை செங்கமலம்தான். வேறயாரு?''

''அது யாரு?''

''நாயக்கரோட வைப்பாட்டிதான். வேறயாரு?''

''பெட்டிக்கடை வீரண்ணன் வைப்பாட்டி என்றதும் செல்லமுத்துக் கவுண்டருக்கு தன் விஷயம் ஞாபகம் வந்தது.

''இங்கேயும் ஒரு வைப்பாட்டியாலதான் சிக்கலா?'' என்றார் உடனே...



''இங்கேயும்னா...?''

''அது... அது... இல்ல பல பெரிய இடங்க இப்படி ஒண்ட வந்த பொம்பளைங்களாலதான் சீரழிஞ்சு போயிருக்கு. அதான் அப்படி கேட்டேன்...''

''மத்த இடம் பத்தி எனக்குத் தெரியாது. ஆனா இங்க அப்படித்தான். அந்த செங்கமலம் நாயக்கர் சொத்து அவ்வளவையும் அமுக்கிட்டா. கடைசியா அவகுறிவெச்சது இந்த மாளிகையை... ஆனா அதுக்குள்ற நடக்கக்கூடாதது எல்லாம் நடந்து மாளிகை நாசமாப் போச்சு...''

''இப்ப அந்த செங்கமலம் எங்க இருக்கா?''

''தெரியாது... ஆனா ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலேங்கறது எங்க ஊரைப் பொறுத்தவரைஅப்படியே பலிச்சிடிச்சு.

இந்த மாளிகை உருவாகக் காரணமே நாயக்கர் சம்சாரம் பங்கஜமீனாட்சிதான். இது அழியக் காரணமும் அவங்களாவே இருந்துட்டாங்க...''

''அப்ப உள்ளார இருந்து எல்லாரையும் மிரட்டிக் கிட்டிருக்கறது அவங்க ஆவிதானா?''

''அதுவேதான்... அதுல என்ன சந்தேகம். பல சமயம் அவங்க ஆவி இந்த பக்கமா நடந்து போறதை நாங்களே பல தடவை பார்த்துருக்கோமே...''

-பெட்டிக்கடை வீரண்ணன் செல்லமுத்துக் கவுண்டருக்குள் பீதியைக் கரைத்தபடி இருந்தான்.

ஆனால் அதையெல்லாம் கவுண்டர் நம்பியது போலவே தெரியவில்லை.

மாளிகையை பார்த்தபடி இருந்தார்.

சிங்காரயனும் வந்து சேர்ந்தான்.

''யாருங்க நீங்க... என்ன விசயம்?''

''இந்த மாளிகையை நான் வாங்கலாம்னு இருக்கேன். அதுக்கு முந்தி உள்ற சுத்திப்பாக்கணும்.''

''நாயக்கர் மகள் கிட்ட உத்தரவு வாங்கிகிட்டு வந்துட்டீங்களா?''

''இரண்டு நாளைக்கு முந்தி ஒருத்தர் வந்துருப்பாரே...''

''ஆமாம்...''

''அவரும் நானும் சேர்ந்து வாங்கத்தான் ஆசைப்பட்டோம். என்சார்பாதான் அவர் வந்தாரு...''

''அது சரி... அவர்தான் தலை தெறிக்க ஓடினாரே. அதைப் பார்த்துமா உங்களுக்கு இங்க வரணும்னு தோணினுச்சு...?''

''அப்படித்தான் வெச்சுக்கையேன்...''

''தைரியம்தான். ஆமா அவரு இப்ப எப்படி இருக்காரு?''

''அவர் எப்படி இருந்தா உனக்கென்ன... நீ சாவியைக் கொடு...''

''நல்லா யோசிச்சுக்குங்க. அவராவது அதிர்ஷ்டவசமா உயிர் தப்பினாரு... உங்களுக்கு அதுக்கும் சந்தர்ப்பமில்லாம போயிடப்போகுது.''

''நான் ஒண்ணு கேட்கலாமா?''

''தாராளமா கேளுங்க...''



''நீ இந்த மாளிகைக்கு காவக்காரனா இல்லை வாங்க வர்றவங்களை விரட்டி அடிக்கறவனா?''

-செல்லமுத்துக் கவுண்டர் கேள்வி அவன் முகத்தில் ஊறியது.

''அப்ப நீங்க என் பேச்ச கேக்கப் போறதில்லன்னு சொல்லுங்க...''

''எதுக்கு கேக்கணும்... பத்து லட்ச ரூவா தந்தா போதும் - யார் வேணும்னா இந்த மாளிகையை எடுத்துக்கிடலாம்னு இதோட சொந்தக்காரங்களே சொல்லும்போது நீ ஏன்ப்பா இப்படி வர்றவங்களை துரத்தறே...''

''ஒரு நல்ல எண்ணம்தான்...''

''அப்ப விக்க நினைக்கற நாயக்கர் மகளுக்கு அந்த நல்ல எண்ணம் இல்லையா?''

''அது பாவம்... எப்படியாவது வித்து நாலு காசு பாக்க நினைக்குது. அதோட தேவை அப்படி...''

''அப்ப அவங்களுக்கு சாதகமா நின்னு பேசமா ஏன் வர்ற எல்லாரையும் துரத்தறே?''

-கவுண்டர் அப்படி ஒரு கேள்வியைக் கேட்ட பிறகு அவன் மறுபேச்சு பேசவில்லை. சரேரென்று சாவிக்கொத்தை எடுத்து நீட்டினான்.

''இப்படி சாவியை நீட்டுனா எப்படி...?''

''வேற என்ன செய்யச் சொல்றீங்க...''

''உள்ற வந்து எல்லா இடத்தையும் காட்டு.''

''அதுக்கு வேற ஆளைப்பாருங்க.''

''வேற ஆளா இங்க காவக்காரன்?''

-செல்லமுத்துக் கவுண்டர் அழகாக மடக்கினார். அவனோ முறைத்தான்.

''என்ன பாக்கறே... இங்க புறப்பட்டுவர்றதுக்கு முந்தி இப்ப இந்த மாளிகையோட ஒரே வாரிசா இருக்ற நாயக்கரோட கடைசி மககிட்ட பேசிட்டுதான் வந்தேன்.

சிங்காரயன் எங்கப்பா காலத்துல இருந்து இருக்குறவன். ஏன்னு தெரியல அவனே எங்களுக்கு எதிரா பேசறான்'னு சொன்னிச்சு.''

-சிங்கராயன் அதைக் கேட்டு தன் சற்றே பெரிய கண்களை மேலும் அகட்டினான்.

''எங்கம்மா... எங்கக்கா ஆவி அங்க சுத்தறதா சொல்லியே அந்த மாளிகை மதிப்பை எல்லாரும் குறைச்சுட்டாங்க. நீங்களாவது நம்புங்க. அங்க அப்படி எதுவும் இல்ல'ன்னு சொன்னிச்சு.''

-செல்லமுத்துக் கவுண்டர் பதில் சிங்கராயனை மட்டுமல்ல சற்றுமுன்வரை அவரிடம் வந்து பீலா விட்டுக் கொண்டிருந்த பெட்டிக்கடை வீரண்ணனையும் கூட அதிரச் செய்தது.

''நீங்க என்ன சொன்னாலும் சரி... நான் உள்றல்லாம் வரமாட்டேன். நாயக்கர் மக வீம்பு பேசுது. அது எப்படியாவது இந்த பங்களாவை வித்து காசு பாக்க நினைக்குது... பாவம் அதோட கஷ்ட நிலை அப்படி...''

''இப்படி பேசற நீ காவக்காரனா இல்லாம இருந்தா நான் ஒத்துக்குவேன். சும்மாக்கிடக்கற மாளிகைய வெளிய இருந்து காவக்காக்க நீ எதுக்கு? காக்கா குருவி போதுமே...?''



-தொட்டுத் தொட்டு துளை போட்டது செல்லமுத்துக் கவுண்டரின் கேள்வி. அவனும் பேந்தப் பேந்த விழித்தான்.

''நல்லாத்தான் முழிக்கிறே... எப்பவோ தூக்குல தொங்குன நாயக்கர் சம்சாரம் ஆவியா இருந்து துரத்தறாங்களாக்கும் ... கதைதான்!''

-கவுண்டரின் நக்கல் தூள் பறந்தது. அப்படியே சாவிக்கொத்தை ஒரு முறை தூக்கிப் போட்டுப் பிடித்தார்.

தைரியமாக மாளிகைக்குள் கிராதிக் கதவை தள்ளிக் கொண்டு காலையும் வைத்தார்.

சிங்காரயன் வீரண்ணனைப் பார்க்க வீரண்ணன் மெல்லிய குரலில் ''முதல் முதலா ஒரு விவரமான மனுஷன் வந்துருக்கான்... என்ன பண்ணப் போறே?'' என்றான்.

அட!

## 7

'குண்டுக்கட்டாக விக்ரம் நாயக்கரைத் தூக்கிக் கொண்டு வந்த ராஜதுரையைப் பார்த்து பதறிவிட்டாள் பங்கஜமீனாட்சி.

ராஜதுரை அசரவில்லை.

அவரை மாளிகையின் படுக்கை அறைக்குள் தள்ளி கதவைப் பூட்டினார்.

''என்ன பங்கஜம் பாக்கறே... எனக்கு வேற வழியே தெரியல... அதான் கட்டிதூக்கிகிட்டு வந்தேன். ஜாக்ரதை! விட்டா ஓடிப்போய்டுவாரு. அவமேல அப்படி ஒரு பைத்தியமா இருக்காரு.'' என்றும் சொல்ல பங்கஜமீனாட்சி பொலபொலவென்று கண்ணீர்விட்டாள்.

"இப்படியெல்லாம் நடந்துக்கற மனுஷனே இல்ல இவரு. இப்படி மாறிவிட்டாரே..."

"அதான் அவ வெச்ச மருந்தோட சக்தி."

"மருந்துன்னா..."

"வசிய மருந்து..."

"சண்டாளி... சண்டாளி. ஆமா... அதுக்கு இவ்வளவு சக்தியா?"

"அதான் பாக்குறியே... பாத்துமா இப்படி ஒரு கேள்வி?"

-அப்பொழுது கணக்குப் பிள்ளையும் குறுக்கிட்டார்.

"தம்பி... நீங்க சொன்னதுதான் என்னோட கருத்தும். ஆனா அம்மாவால நம்பமுடியல..."

"இவளுக்கு இந்த மாதிரி விஷயம் பத்தி எல்லாம் எதுவும் தெரியாது கணக்குப் பிள்ளை. அதுசரி... அந்த தேவடியாளோ பக்கத்து ஊர். அவ எப்படி இங்க வந்து இவரைப் பிடிச்சா?"

"எல்லாம் அந்த ஜம்புலிங்கம் பண்ண வேலைப்பா. அவன்தான் ஐயாவோட பொறந்தநாள் அன்னிக்கு அவளை கூட்டிகிட்டு வந்தான். ஒரே நாள்ல அவளும் ஐயாவை சாச்சிட்டா..."

"ஒருநாள் ஒரு பார்வைல ஒரு மனுஷனை வீழ்த்தற அளவுக்கு அவ ஒண்ணும் பெரிய ரம்பையா தெரியலியே..."

"அது உண்மைதான். ஆனா அவளுக்கு பயங்கரமா வசிய வித்தையெல்லாம் தெரியும்னு நான் கேள்விப்பட்டிருக்கேன்..."

"அப்ப அவ தேவடியா இல்ல. சூன்யக்காரின்னு சொல்லு."



"நிச்சயமா...! அப்பப்ப சுடுகாட்டுக்கு போறதென்ன... வாரதென்ன?"

-கணக்குப்பிள்ளை சொன்ன அந்தப் புதிய விஷயம் ராஜதுரையின் நெற்றியில் வரிப்பந்தல் போட்டது. கண்களிலும் மளுக்கென்று ரத்தம் பாய்ந்து வெண்ணிற திரை சிவந்து போகத் தொடங்கியது.

இடையில் யாரோ நாயக்கரை அடைத்த அறையின் கதவுத்துவாரம் வழியாக உள்ளே பார்த்துவிட்டு அலற ஆரம்பித்தார்.

"ஐயய்யோ... நாயக்கரய்யா ஜன்னல் கம்பியை வளைச்சிட்டு தப்பி ஓடப்பாக்கறாரு. ஓடி வாங்க... ஓடி வாங்க..."

-குரல் கேட்டு ராஜதுரையும், கணக்குப் பிள்ளையும் ஓடிச்சென்று கதவைத் திறந்து பார்த்தபோது உள்ளே நாயக்கர் இல்லை. ஒரு கைதி சிறையில் இருந்து தப்பி ஓடியதுபோல ஜன்னல் கம்பி வளைக்கப்பட்டிருந்தது.

ராஜதுரையால் ஆத்திரத்தை அடக்க முடியவில்லை.

"அந்த சிறுக்கியை என்ன பண்றேன் பாரு..." என்றபடி தனியாளாக துப்பாக்கியுடன் வெளியே ஓடிவந்து அவரது ஜீப்பில் தாவி ஏறினார்!

❖❖❖

எந்த பயமும் இல்லாமல் செல்லமுத்துக் கவுண்ட மாளிகை நோக்கி நடப்பது சிங்கராயனை ஆச்சரிய படுத்தினாலும் அவன் முகத்தில் ஒரு மர்மச் சிரிப்பு.

''இப்படியெல்லாம் நடந்துக்கற மனுஷனே இல்ல இவரு. இப்படி மாறிவிட்டாரே...''

''அதான் அவ வெச்ச மருந்தோட சக்தி.''

''மருந்துன்னா...''

''வசிய மருந்து...''

''சண்டாளி... சண்டாளி. ஆமா... அதுக்கு இவ்வளவு சக்தியா?''

''அதான் பாக்குறியே... பாத்துமா இப்படி ஒரு கேள்வி?''

-அப்பொழுது கணக்குப் பிள்ளையும் குறுக்கிட்டார்.

''தம்பி... நீங்க சொன்னதுதான் என்னோட கருத்தும். ஆனா அம்மாவால நம்பமுடியல...''

''இவளுக்கு இந்த மாதிரி விஷயம் பத்தி எல்லாம் எதுவும் தெரியாது கணக்குப் பிள்ளை. அதுசரி... அந்த தேவடியாளோ பக்கத்து ஊர். அவ எப்படி இங்க வந்து இவரைப் பிடிச்சா?''

''எல்லாம் அந்த ஜம்புலிங்கம் பண்ண வேலைப்பா. அவன்தான் ஐயாவோட பொறந்தநாள் அன்னிக்கு அவளை கூட்டிகிட்டு வந்தான். ஒரே நாள்ல அவளும் ஐயாவை சாச்சிட்டா...''

''ஒருநாள் ஒரு பார்வைல ஒரு மனுஷனை வீழ்த்தற அளவுக்கு அவ ஒண்ணும் பெரிய ரம்பையா தெரியலியே...''

''அது உண்மைதான். ஆனா அவளுக்கு பயங்கரமா வசிய வித்தையெல்லாம் தெரியும்னு நான் கேள்விப்பட்டிருக்கேன்...''

''அப்ப அவ தேவடியா இல்ல. சூன்யக்காரின்னு சொல்லு.''



''நிச்சயமா...! அப்பப்ப சுடுகாட்டுக்கு போறதென்ன... வாரதென்ன?''

-கணக்குப்பிள்ளை சொன்ன அந்தப் புதிய விஷயம் ராஜதுரையின் நெற்றியில் வரிப்பந்தல் போட்டது. கண்களிலும் மளுக்கென்று ரத்தம் பாய்ந்து வெண்ணிற திரை சிவந்து போகத் தொடங்கியது.

இடையில் யாரோ நாயக்கரை அடைத்த அறையின் கதவுத்துவாரம் வழியாக உள்ளே பார்த்துவிட்டு அலற ஆரம்பித்தார்.

''ஐயய்யோ... நாயக்கரய்யா ஜன்னல் கம்பியை வளைச்சிட்டு தப்பி ஓடப்பாக்கறாரு. ஓடி வாங்க... ஓடி வாங்க...''

-குரல் கேட்டு ராஜதுரையும், கணக்குப் பிள்ளையும் ஓடிச்சென்று கதவைத் திறந்து பார்த்தபோது உள்ளே நாயக்கர் இல்லை. ஒரு கைதி சிறையில் இருந்து தப்பி ஓடியதுபோல ஜன்னல் கம்பி வளைக்கப்பட்டிருந்தது.

ராஜதுரையால் ஆத்திரத்தை அடக்க முடியவில்லை.

''அந்த சிறுக்கியை என்ன பண்றேன் பாரு...'' என்றபடி தனியாளாக துப்பாக்கியுடன் வெளியே ஓடிவந்து அவரது ஜீப்பில் தாவி ஏறினார்!

❖❖❖

எந்த பயமும் இல்லாமல் செல்லமுத்துக் கவுண்டர் மாளிகை நோக்கி நடப்பது சிங்கராயனை ஆச்சரியப் படுத்தினாலும் அவன் முகத்தில் ஒரு மர்மச் சிரிப்பு.

அவரும் போர்டிகோ பாகம் கடந்து படிகளில் ஏறி காரிடாரில் நடந்து முகப்பு நுழைவாயில் கதவு முன் போய் நின்று பூட்டைப் பார்த்தார். அப்படியே திரும்பி ஒரு பார்வை!

வீரண்ணனும், சிங்கராயனும் கிராதிக் கதவுக்கு அருகில் ஏதோ அய்யனார் கோவிலில் நிற்கும் உருவாரச்சிலை போல நிற்கின்ற மாதிரி இருந்தது.

மளமளவென்று பூட்டைத் திறந்தார்.

பிறகு கதவைத் தள்ளிவிட்டார்.

இரண்டு நாள் முன் வந்து சென்றிருந்த பொன்னுசாமிப் பிள்ளையின் காலடித் தடயங்கள் பளிச் சென்று தெரிந்தன.

அந்த பனைநுங்கு அளவுக்கான சிலந்தி மீண்டும் ஒரு முழு வலையைப் பின்னியிருந்தது. அதைப் பார்த்தவர் அதை அறுப்பதற்குமுன் பாதுகாப்பாக இருக்கட்டும் என்கிற மாதிரி இடுப்புப் பகுதியில் கையைவிட்டு கைத்துப்பாக்கி ஒன்றை வெளியே எடுத்தார்.

அதை வலது கையில் பிடித்தபடியே நடந்தார். மீண்டும் ஒரு நிலைகால் கதவு, அதிலும் பூட்டு தொங்கியது. அதையும் திறந்தவர் உள்ளே பார்வையை விட்டார்.

பளிச்சென்று ஒரு குட்டி மைதானம் போல மார்பிள் கல் பதிக்கப் பெற்ற படு துப்புரவான ஹால்! நடுவில் கூம்பு விதானம்! நாலா புறமும் அதில் கண்ணாடி பதிக்கப் பெற்று சூரியக் கதிர்கள் ஊடுருவி இருந்தன.

சரேலென்று ஒரு கறுப்புப்பலகையை மூடிப் போர்த்தினாற் போல அவை அப்படியே வெளிச்சத்தை இழக்க ஹால் பாகம் மொத்தமும் திடும்மென்று கும்மிருட்டானது.

அசுர வேகத்தில் அப்படி நடந்ததால் செல்லமுத்துக் கவுண்டருக்கும் ஒரு வினாடி நெஞ்சையடைத்தது. காது



மடல்கள் படபடவென்று துடித்தன. அதே காது அடைக்குமளவு ஒரு வீலென்று அலறல்! அந்த அலறல் ஒலி ஹாலின் எல்லா பாகங்களிலும் ஒரு பந்து போல முட்டி மோதி அவரது கைகளால் காதுகளை பொத்திக் கொள்ள வைத்தது.

கண்களையும் இறுக்கமாக மூடிக்கொண்டார். ஆனால் மூக்கில் ஒரு வித துர்நாற்றம் புகைவாசமாய் நுழைந்து அமட்டியது. கண்களைத் திறந்தபோது சப்தநாடியும் நொறுங்கிவிட்டது. சுற்றிலும் ஒரே புகைமண்டலம். எதிரே நடு ஹாலில் தலைவிரிகோலமாய் கோரைப் பல்லுடன் - மிகஅகண்ட விழிகளுடன் ஒரு பெண்! அவளது கையில் யாரோ ஒரு மனிதனின் தலைமட்டும் இருந்தது. உதட்டுக்குக் கீழே ரத்தத்தை உறிஞ்சிக் குடித்த கரைகள் இருந்தன.

அவளும் மெல்ல கவுண்டரை நோக்கி வர ஆரம்பித்தாள். கவுண்டரின் துப்பாக்கி பிடித்த கைகள் படபடவென்று நடுங்கின.

வலுக்கட்டாயமாக தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அந்த துப்பாக்கியை அவர் அவளை நோக்கி நீட்டினார். நீட்டிய மறு நொடியே அந்த கைமேல் எங்கிருந்தோ ஒரு மண்டை ஓடு வந்து விழுந்தது. துப்பாக்கியும் நெளிந்து எங்கோபோய் விழ ஒரு ஆக்ரோஷ சிரிப்புச் சப்தம் காதை அடைக்குமளவு ஒலிக்க ஆரம்பித்தது. அதுவும் சட்டென்று அடங்கி திரும்பவும் கூம்பு வடிவு கூரைச் சாளரத்தில் பளிச்சென்று அந்த கறுப்புத் தடை விலக பளிச்சென்று வெளிச்சம் சரேலென்று ஹாலுக்கு ஊடுருவியது!

ஒலி ஒளிக் கண்காட்சியில் கூட சற்று காலதாமதமாக நடக்கும் இந்த மாற்றங்கள் மின்னல் வேகத்தில் நடக்க, ஹாலிலிருந்து வெளியேறும் ஆறு நிலை கால்கதவுகளுக்கு

முன்னால் ஆறு பெண் உருவங்கள் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தன!

மற்றபடி அவர் விடும் மூச்சுக் காற்றுச் சப்தம் தான்.

அவ்வளவு நிசப்தம்.

அந்த நிசப்தமும் மெல்ல கலைவது போல ஒரு மெல்லிய அழுகை சப்தம். எங்கோ வெகுதூரத்தில் யாரோ அமர்ந்து அழுகிற மாதிரி இருந்தது.

அதற்குமேல் செல்லமுத்துக் கவுண்டராலும் தாள முடியவில்லை. திரும்பி ஓடிவிடும் எண்ணத்தோடு திரும்பியவர் மீது சொத்தென்று ஒன்று வந்து விழுந்தது. 'ஆ' வென்ற அலறலோடு அதை உதறியவர் கீழே விழுந்ததை பார்த்துவிட்டு அலறினார். அது ஒரு தலையில்லாத பிஞ்சுக்குழந்தையின் சடலம்!

''என்னைவிட்ரு.... நான் இங்க வரலை... நான் இந்த பங்களாவையும் வாங்கலை... என்னை விட்ரு''-என்று கத்திக் கொண்டே வெளியே ஓட ஆரம்பித்தார்.

பொன்னுசாமிப்பிள்ளை ஓடிவந்தது போலவே பின்னங்கால் பிடரியில் பட ஓடிவந்தவர் கிராதிக்கதவருகே சுருண்டு விழுந்தார்.

வீரண்ணனும், சிங்கராயனும் அதைப் பார்த்து மீசையை நீவிக் கொண்டு சிரித்தனர்.

## 8

**மீண்டும்** அல்லிக்கரை செங்கமலத்தின் வீட்டுவாசல்! கீறிச்சிட்டு நின்ற ஜீப்பில் இருந்து ஒரே குதியாகக் குதித்தபடி இறங்கினார் ராஜதுரை. கையில் மூன்றடி நீள குழாய்த்துப்பாக்கி. பல காடுகளில் அது பல



மான்களையும், காட்டுப் பன்றிகளையும் சுட்டுத் தள்ளியுள்ளது.

அதை நீட்டிப் பிடித்தபடியே வீட்டுக்குள் நுழைந்தார். இந்த முறை அந்த வீட்டிலும் தடிதடியாய் பல அடியாட்கள் இருந்தனர். ராஜதுரையின் முன்னால் அவரை மறிப்பது மாதிரி வந்து நின்றனர்.''விலகுங்கடா... அநியாயமா என் துப்பாக்கிக்கு இரையாகாதீங்க...'' - உரக்கக் கூச்சலிட்டார் ராஜதுரை.

''இம்புட்டுக்காண்டி பறவைகள் சுட்ற துப்பாக்கியை வெச்சுகிட்டு பூச்சியா காட்றே... ஒழுங்கா திரும்பிப் போயிடு...''

-அவர்களில் ஒருவன் பதிலுக்கு கத்தினான்.

''வேண்டாண்டா.... கூலிக்கு மாரடிக்கற நாயுங்களா. நான் அசல் வேட்டைக்காரன். இதால நான் புலியையே சுட்டவன்...''

''அப்படியா... எங்க சுடு பார்க்கலாம்...?''

-ஒருவன் சட்டை பட்டனை வேகமாக அவிழ்த்து மார்பைக் காட்டினான்.

''வேண்டாம்... சொன்னாக் கேளு.''

''சும்மா சுட்றா... பெரிய வேட்டைக்காரன்னியே சுட்றா பார்ப்போம்...''

-அவனும் முன்னேறி துப்பாக்கிக் குழலின் துவாரத்தை அப்படியே மார்பினால் மூடி அழுத்தினான். அழுத்தியபடி ராஜதுரையையும் சேர்த்துத் தள்ளினான்.

அவரும் தள்ளப்பட்ட நிலையில் சில அடிகள் வரை பின்னால் சென்றவர் பொறுமை இழந்தவராக ஸ்ட்ரிக்கரில் இருந்த ஆள்காட்டிவிரலை ஒரு அழுத்து அழுத்தினார்.

அடுத்த நொடி மார்பில் சிவப்பு ரத்தச் சிதறலோடு தள்ளியவன் விழுந்தான். துப்பாக்கி முனையோ அப்படியே அடுத்த அடியாளை நோக்கித் திரும்பியது. அடியாட்களும் வெலவெலக்க ஆரம்பித்தனர்.

கீழே விழந்தவனின் அலறல் செங்கமலத்தைப் பிடித்து இழுத்து வந்தது.

''டேய்...'' என்றபடி ராஜதுரை எதிரில் வந்தாள். மஞ்சள் புடவை, ரவிக்கை மஞ்சள்நிறத்தில் பூஜையில் இருந்தவள்போல் தெரிந்தவள் கண்ணிரண்டையும் விரித்து முறைத்தவிதத்தில் அனல் பறந்தது.

''வாடி வா... ஊர்க் குடியை கெடுக்கப் பிறந்தவளே...'' - ராஜதுரை வக்கரித்தார்.

''ராஜதுரை...''-கத்தரித்தது ஒரு புதிய குரல். கொடுத்தவர் விக்ரம நாயக்கர்தான்...

''மாப்ளே...''

''வாய மூடு... நான் இனி உன் மாப்ள கிடையாது.''

''மாப்ள... வார்த்தைய யோசிச்சு பேசுங்க. ஒரு பொண்ணுக்கு ஆறு பொண்ணுக்கு அப்பா நீங்க.''

''அதெல்லாம் முடிஞ்ச விஷயம். நான் இனி எப்பவும் செங்கமலத்தோட அடிமை...'' என்றபடி அவள் அருகே வந்து அவளையும் மிகப்பணிவாக ஒரு பார்வை பார்த்தார்.

''மாப்ள... இப்படி கூடவாய்யா உன்புத்தி மழுங்கிப் போகும்?''

''வாய் மூடிகிட்டு வந்தவழியே திரும்பிப் போறியா?''



''போறதுக்கு வரல... உங்கள இப்படி பித்தாக்கின இந்த சிறுக்கியைக் கொல்லாம விடமாட்டேன்...''

-அவரது துப்பாக்கி படுவேகமாய் செங்கமலத்தை குறிபார்த்தபடி திரும்பியது.

''வேண்டாம்... அவ என் உயிர். அவளை ஒண்ணும் பண்ணிடாதே,''-அவளுக்கு முன்னால் சென்று கையை உயர்த்தியபடி அவளையும் மறைத்துக் கொண்டு நின்றார்.

''மாப்ள... சொன்னாக் கேளுங்க. நகருங்க''

''முடியாது. நீ திரும்பிப்போ...''

என் தங்கச்சியோட கதி?

''போய் ஏதாவது குளத்துல விழுந்து சாவச் சொல்லு...''

''அடச் சண்டாளா... நானும் பொறுத்துப் பொறுத்துப் பாக்கறேன். எகிறிகிட்டே போறியே. முதல்ல நீ மேல போ...''

-ராஜதுரையின் துப்பபாக்கியில் இருந்த தோட்டா சீறிப் பாய்ந்தது. நேராக நாயக்கரின் மார்பைத் தாக்கி இதயம் வரை ஊடுருவி அந்த சதைக் கோளத்தையும் சிதற அடித்தது.

''ஐய்யோ...'' - நாயக்கர் துவண்டும் சரிந்தும் கீழே விழ, ராஜதுரை அதைபார்த்து திகைக்க அந்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக் கொண்ட அடியாட்களும் அப்படியே அவர்மேல் பாய்ந்து ஒரே அமுக்காக அமுக்கினர்.

மன்னரைப் போல வாழ்ந்த விக்கரம நாயக்கர் தாசி செங்கமலம் வீட்டில் ஒரு நாயைப் போல சுடப்பட்டு

இறந்தார் என்கிற செய்தியும் வெகுவேகமாக நாயக்கர் மாளிகை நோக்கி செல்லத் தொடங்கியது!

❖❖❖

வெகு நீளமான- செல்லமுத்துக்கவுண்டர் பற்றிய நிஜங்களை அவ்வப்போது கண்ணீருடன் சொல்லி இறுதியா அவர் சுருண்டு விழுந்தார் என்பதோடு நிறுத்திய பொன் மேனியை பரந்தாம நாயக்கர் பளபளப்பான கண்களோடு பார்த்தபடி இருந்தார்.

''ஆமா... சுருண்டு விழுந்தாருங்கறதோட நிறுத்திபுட்டியே, உன் புருஷன் என்ன ஆனான்... உசுரு இருந்துச்சா இல்ல உன் புருஷன் அந்த பொன்னுச்சாமி மாதிரி மெண்ட்டல் ஆனானா?''

-பரந்தாம நாயக்கரின் பரிவான கேள்வி அவள் கண்களை மீண்டும் போட்டு பிழியவிட்டது.

''ஆ ஊன்னா அழுவளே... தெளிவாச் சொன்னாதானே உனக்கு நான் ஏதாவது உபகாரம் பண்ண முடியுமாங்கறது பத்தி நான் யோசிக்க முடியும்?''

நம்பிக்கை தருவது போலவும் பேசினர். அவளும் சேலைத்தலைப்பால் முகத்தைத் துடைத்துக்கொண்டாள். திரும்ப ஆரம்பித்தாள்.

''என் வீட்டுக்காரரை நாலுபேர் ஒரு டிராக்டர்ல போட்டு தூக்கிட்டு வந்து என் வீட்ல சேர்த்துட்டுப் போனாங்க. நானும் அவரைப் பார்த்து பதறிப் போனேன். எங்க ஊர் நாட்டு வைத்தியர் செய்தி கேள்விப்பட்டு வந்து பார்த்தாரு, ஏதோ ஒரு மூலிகை வேரை சுட்டு அதோட புகையை மூக்குல விட்டாரு.

என் வீட்டுக்காரரும் கொஞ்சம் போல கண்ணு திறந்து பார்த்தார். ஆனா என்னையோ, அந்த வைத்தியரையோ



அடையாளம் தெரியல. பேந்தபேந்த முழிச்சாரு. நான் அழுதேன். நான் அழுவறத பார்த்தார். திரும்பவும் மயக்க மாயிட்டாரு.

அதுக்குப்பிறகு மூணுமாசம் வரை படுக்கலைதான் எல்லாம். இடைல எங்க மேல ஒரு கேஸ் போட்ருந்தாரு என் கொழுந்தன். அதுக்கு நோட்டீஸ் வந்துச்சு. இவர் இப்படி இருந்தா எப்படி போகமுடியும். கேசுல தீர்ப்பு அவங்கபக்கம் சாதகமாயிடிச்சு.

குடியிருந்த வீடு, சோறுபோட்ட தென்னந்தோப்புன்னு எல்லாம் ஒரே நாள்ள போயிடுச்சி. என்கிட்ட இருந்த நகைநட்டுன்னு இருக்கறதை எல்லாம் வெச்சு வைத்யம் பார்த்தேன், பிரயோஜனமில்லை.

அவர் ஒரு நாள் உசுரைவிட்டுட்டாரு. எங்க சம்பிரதாயப்படி அவர் உடம்பை பொதைச்சேன். மறுநாள் பால் ஊத்தப் போயிருந்தப்ப சமாதிகிட்ட புதுசு புதுசா பானைங்க உடைஞ்சு கிடந்துச்சு. வெட்டியானைக் கூப்ட்டு கேட்டதுக்கு 'ஒரு வயசான பொம்பள வந்து சாமதியை தோண்டப்போனாள், நான் தடுத்து அனுப்பிட்டேன்'னு சொன்னான்.

ஆரம்பத்துல எனக்கு ஒண்ணும் புரியல. பொறவுதான் புரிஞ்சிச்சு. அங்க வந்துட்டு போனது அல்லிக்கரை செங்கமலம்கற அந்தநாள் தாசின்னு... வயசாயிட்ட நிலையில இப்ப அவ வசியமருந்து பண்றது, ஏவல் செய்யறதுன்னு ஏதோதோ செய்யறதல்லாம் தெரிய வந்துச்சு. அவ என் புருஷன் சமாதிக்கு வந்ததுக்கு பின்னால ஏதோ பெரிய காரணம் இருக்குது.

அதுமட்டுமில்ல... அந்த நாயக்கர் மாளிகைலயும் பேயோ பிசாசோ இல்ல. அவதான் ஏதோ பண்றாங்கறது என்னோட அபிப்ராயம்.''

-பொன்மேனி தன் எண்ணம் முழுவதையும் ஒருவாறு சொல்லி முடித்தாள்.

''உன் கதையைக் கேட்டா எனக்கே ஒரு மாதிரிதான் இருக்குது. சரி இப்ப நான் என்ன செய்யணும்கறே?''

''அதை நான் இப்ப சொல்லப்போறதில்ல... நாளைக்கு நீங்களே சொல்லு வீங்க...''

''நீ சொல்றது எனக்கு விளங்கலை பொன்மேனி.''

''எப்படி விளங்கறமாதிரி சொல்றதுன்னும் தெரியல எனக்கு.''

''சும்மா சொல்லு... நான் புரிஞ்சுக்கிட முயற்சி செய்யிறேன்.''

''என் புருஷன் வாங்க ஆசைப்பட்ட அந்த நாயக்கர் மாளிகை எனக்கு வேணும்.''

''சரிதான்... விடிய விடிய கதை கேட்டு சீதைக்கு ராமன் சித்தப்பாங்கற மாதிரில்ல இருக்கு உன் பேச்சு. ஒருத்தருக்கு இரண்டுபேர் இப்பதான் அங்க போய் செத்து ஒழிஞ்சிருக்காங்க. இவ்வளவுக்கு பொறவும் அந்த மாளிகை வேணும்னா என்ன அர்த்தம்?''

''அதுக்குள்ளாற இருந்துகிட்டு அராஜகம் பண்ற அந்த அல்லிக்கரை செங்கமலத்தை அழிக்கணும்கறேன்...''

''அவதான் அங்க இருந்துகிட்டு எல்லா லொள்ளும் பண்றான்னு எதை வெச்சு சொல்றே?''

''அவதான்... அவளேதான்... எந்த நாயக்கர் மாளிகை எட்டுத்திக்கும் பேரோடையும் புகழோடையும் இருந்திச்சோ அது சுடுகாடா மாறணும்கறதுதான் அவ ஆசை. அதைத்தான் அவ செய்து செய்துகிட்டிருக்கா...''



''சரி... அதுதான் உன் எண்ணம்னா உன் விருப்பப்படி என்ன செய்யணுமோ அதைச் செய்...''

''அதுக்காகத்தானே உங்களுக்கு முந்திவிரிக்கவே வந்துருக்கேன்.''

''நீ என்ன சொல்றே?''

''அஞ்சுகாசு செலவு இல்லாம அவளை தீர்த்துக்கட்டவும் அதே சமயம் உங்களையும் காப்பாத்தவும் வந்துருக்கேன்.''

''இன்னமும் நீ என்னா சொல்றேன்னு எனக்கு விளங்கலை.''

''நாளைக்கு வரை பொறுத்திருங்க. விளங்கும்.''

-அவள் விடை சொல்ல முயல்கிற மாதிரி இருந்தது. ஆனால் அது ஒரு கேள்விக்குறியாகி தேங்கித்தான் நின்றது. அதற்குப் பிறகு பரந்தாம நாயக்கரும் அவளிடம் பேச்சை வளர்க்கவில்லை.

''சரி... நாளைக்கு இதே நேரம் வருவேன். விளங்கறமாதிரி சொல்லு. எனக்கு விளங்கலைன்னா கழுத்தைச் சுத்தி மூக்கைத் தொடாம இடத்தைக் காலி பண்ணிடு.''

''இல்ல... நாளைக்குத்தான் நீங்களும் இந்த பொன்மேனி எப்படிப்பட்டவங்கறத புரிஞ்சுக்குவீங்க.''

-பரந்தாம நாயக்கர் அவள் பதிலை ரசித்தார். இனி பேச ஏதுமில்லை என்கிற மாதிரி கிளம்பத் தயாரானார்.

கட்டிலில் கிடந்த அவரது அங்கவஸ்த்ரத்தை அவளே எடுத்துக் கொடுத்தாள்.

அப்பொழுது அவள் பார்த்த பார்வையில் ஏராளமான பொருள்!

## 9

குழந்தைகளுக்கு சோறு ஊட்டிக்கொண்டிருந்தாள் பங்கஜ மீனாட்சி. அப்பொழுதுதான் அந்தசெய்தி அவளை அடைந்தது.

''ஆமாம்மா... நம்ம ஐயாவை உங்க அண்ணன் சுட்டுக் கொன்னுப்புட்டாரு. அதுமட்டுமில்ல அவரையும் பிடிச்சு போலீஸ்ல கொடுத்துட்டாங்க.

-தகவல் காதை அடைத்தது. மறுநொடி அவளது இதயம் அறுந்து பொத்தென்று அவளது வயிற்றுக்குள் விழுந்தது.

நொறுங்கிப்போய் ஒரு ஓரமாய்ப் போய் அமர்ந்தாள். குழந்தைகள் சுற்றி நின்று கொண்டன.

''அம்மா... பேசும்மா... ஏம்மா ஒருமாதிரி ஆயிட்டே பேசம்மா...''- அனத்த ஆரம்பித்தன.

'பங்கஜம்! இந்த மாளிகையை உலகமே பாத்து அசந்து போற மாதிரி உன்புருஷன் கட்டிட்டாரு. இப்படி ஊரே கண்ணுபட்றமாதிரி கட்டுனா திருஷ்டியில இது மூழ்கிப் போயிடும்.

எதாச்சம் பலி கொடுத்து திருஷ்டிய கழிக்கப்பாரு. இல்லாட்டி நிம்மதியா வாழவிடாது.'

-யாரோ மாளிகை கிரகப்பிரவேசத்தின் போது சொன்னது அவள் காதில் எதிரொலித்தது.

அந்த கருத்து மெய்யாகிவிட்டது.

இனி வாழ்வதில் அர்த்தமேயில்லை.



ஆதரவு காட்டுவதற்காக இருந்த அண்ணன்கூட அநியாயமாக கொலைகாரன் ஆகிவிட்டான். தாலி கட்டியவனும் எவ்வளவு தாழ்ந்து போக வேண்டுமோ அவ்வளவு தாழ்ந்து உயிரையும் விட்டுவிட்டான்.

இவ்வளவுக்கும் பிறகு வாழ்வதில் எதாவது அர்த்தமிருக்கிறதா? அவள் மளமளவென்று அடுத்தகட்ட நடவடிக்கையில் இறங்கத் தொடங்கினாள்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் விசாரணைக்காக மாளிகைக்கு வந்தபோது ஒரு ஏவலாட்கள் கூட இல்லை. மயானத்துக்கு வந்தது போல அது வெறிச்சோடி கிடந்தது.

சிங்கராயன் மட்டும் வாசலில் சோகமா நின்று கொண்டிருந்தான்.

''உள்ற யார் இருக்கா?''

''அம்மா இருக்காங்க சார்...''

''இன்னும் யாரெல்லாம் இருக்காங்க...''

''முன்ன வேலைக்காரங்களே அம்பதுபேர் இருப்பாங்க. இப்ப ஒருத்தர் கூட இல்ல.''

''ஐயாவோட நடவடிக்கை பிடிக்காம வேலையைவிட்டு நின்னுட்டாங்க.''

''ஏன்... நீ நிக்கலியா?''

''இல்லீங்க... நான் ஐயா குடும்பத்து உப்பைத் தின்னு வளர்ந்தவங்க. விட்டுட்டுபோக மனசு வரலீங்க.''

-அவன் பதிலை அசைபோட்டவராக விறுவிறுவென்று உள்ளே நுழைய ஆரம்பித்தார். முகப்பு நுழைவாயிலைக் கடந்து காரிடாரில் நடந்து மெயின் கதவையும் தாண்டி ஹாலுக்குள் நுழைவதற்கான கதவருகே சென்று நின்றபோது அது தாழிடப்பட்டிருந்தது.

கைவசம் இருந்த லட்டிக்கம்பால் அதை முதலில் மென்மையாகத் தட்டினார். பிறகு பலமாக... அதன்பிறகு சாவித்துவாரம் வழியாக உள்ளே பார்க்கவும் கண்ணில் முள் ஏறியது போல ஒரு அதிர்ச்சி. அதன்பிறகு கதவை உடைத்துக்கொண்டு உள்ளே செல்லவும் அவர் வாழ்நாளில் பார்த்திராத காட்சி அங்கே அரங்கேறியிருந்தது.

வரிசையாக ஆறு பிணங்கள்!

பங்கஜ மீனாட்சியில் தொடர்ந்து அவளது ஆறு வயது மகள் வரை ஒரே சீராக வரிசையில் தொங்கிக் கொண்டிருந்தனர். ஆறாவது பெண்ணான மூன்று வயது சந்தானலட்சுமி மட்டும் தூக்கில் தொங்காமல் அதற்கு கட்டப்பட்டிருந்த கயிறு எப்படியோ அவிழ்ந்ததில் கீழே மயங்கி விழுந்து கிடந்தது.

அந்தக் குழந்தைக்கு மூச்சிருக்கிறதா என்றுதான் முதலில் பார்த்தார்.

நல்ல வேள... அதன் மூக்குத் துவாரங்கள் இடையே சூடான காற்று போய் வந்து கொண்டிருந்தது. அப்படியே தூக்கி தோள்மேல் போட்டுக் கொண்டவர் விறுவிறுவென்று வெளியே வந்தார்.

அதன்பின் ஊரே செய்தியறிந்து அந்த நிலைகால்வரை தொங்கிக்கொண்டிருந்த அந்த சடலங்களைப் பார்த்து அயர்ந்து போனது. பலரது கண்களில் பீதி பொங்கி வழிந்தது.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு வரிசையாக பிணங்கள் ஒரு வேனில் ஏற்றப்பட, கதவை இழுத்துப் பூட்டியது போலீஸ்!

அப்பொழுது போலீசுக்கு-தெரியாது.



அந்த மாளிகை அதன்பிறகு பூட்டியபடிதான் எல்லா நாளும் இருக்கப்போகிறது என்பது.

மாளிகைக்கு வெளியே நின்று வேடிக்கை பார்த்தவர்களில் ஐம்புலிங்கமும் இருந்தார். தனது பொறாமை எல்லை மீறிப் போய்விட்டதாக அவரே நினைக்கறமாதிரி இருந்தது.

கணக்குப் பிள்ளையும் அந்த கூட்டத்தில் இருந்தார்.

''நீ நல்லா இருப்பியா...

அநியாயமா எல்லாரும் அழியக் காரணமா இருந்துட்டியே. உன்னை செத்துப்போன நாயக்கரம்மா ஆவி சும்மா விடாது பார்...'' என்று எல்லோருக்கும் கேட்கும்படியாகக் கத்தினார்.

அதன் பிறகு மிகச்சரியாக 11ம் நாள்.

விக்ரமநாயக்கன்பட்டி வயல் வரப்பில் பட்டுவேட்டி சரசரக்க அறுப்பு நடப்பதைப் பார்க்க வந்தவர் வரப்பில் படுத்திருந்த நல்ல பாம்பு ஒன்றை அறியாமல் மிதிக்கவும் அது சீறிஎழுந்து ஒரு போடுபோட்டது. சுருண்டு விழந்தவர் ஐந்து நிமிடத்தில் நீலம் பாரித்து வரப்பிலேயே செத்துப்போனார்.

அதன்பின் பங்கஜமீனாட்சிதான் பாம்பு உருவில் வந்து பழிவாங்கிவிட்டதாக ஊரே பேசிக்கொண்டது.

இன்ஸ்பெக்டரால் காப்பாற்றப்பட்ட நாயக்கரின் கடைசி மகள் சந்தான லட்சுமியை அவளது மாமன் ராஜதுரையின் மனைவியே எடுத்து வளர்க்கத் தொடங்கினாள்.

பிணம் விழுந்த மாளிகையை அப்படியே போட்டுவைக்க கூடாது என்று ஒருநாள் விளக்கு ஏற்றிவைப்பதற்காக மாளிகைக்கும் வந்தாள்.

வந்தவள் ஹாலில் ஐந்து பெண்கள் ஓடிப்பிடித்து விளையாடுகிற மாதிரி ஒரு வித சப்தத்தைக் கேட்டு பயத்தில் மயங்கி விழுந்தாள்.

காவக்காரன் சிங்கராயன்தான் அவளை வெளியே தூக்கிவந்து போட்டு மயக்கமும் தெளிவித்தான். அவள் முகத்தில் தண்ணீர் தெளிப்பதற்காக மாளிகையின் உள்ளே தண்ணீர் எடுக்கச் சென்றவன் ஒரு அறையில் இருந்து இன்னொரு அறைநோக்கி பங்கஜ மீனாட்சியே ஒரு சிலைபோல விரைப்பாக நடந்துபோனதைப் பார்த்துவிட்டு அலறி அடித்துக்கொண்டு ஓடிவந்தான்.

அவனும் அதன்பின் எதற்காகவும் உள்ளே செல்லவில்லை!

❖❖❖

விடிந்துவிட்டது.

பரபரவென்று கைகளைத் தேய்த்தபடி எழுந்த பரந்தாம நாயக்கர் மளமளவென்று பாத்ரூம் போய் முகம் கழுவி, கழிக்க வேண்டியதையும் கழித்துவிட்டு வந்து மடங்கிக்கிடந்த தினசரி பேப்பரைத் திறந்தார்.

இதுதான் அவரது அன்றாடம்.

அதன்பின் காபி வரும். பருகியபடியே பேப்பர் படித்து முடிப்பார். அதன்பின் முகச் சவரம், பிறகு குளியல், பிறகு அவரது வியாபாரந் தொடர்பான நடவடிக்கைகள் என்று அவருக்கு சரியாக இருக்கும்.

அன்றும் அந்த வழக்கத்தில் பேப்பரைத் திறந்தவருக்கு பகீர் என்றது.



'திருமங்கலம் விருமாண்டி விடுதலை!' என்கிற ஒரு செய்தி அவரது வயிற்றில் புளியைக் கரைத்தது.

''அடப்பாவி... எப்படி இவன் விடுதலை ஆனான். வெளிய வரவே முடியாது; தூக்கு தண்டனைதான்'னு சொன்னாரே வக்கில்''- என்ற முணுமுணுப்போடு மொத்தச் செய்தியையும் படித்து முடித்தவர் நெடுநேரம் வரை எதையும் பேசவில்லை.

ஈக்கு வந்த கோழி போல ஆகிவிட்டார்.

அவரது வெல்லமண்டி மேனேஜர் வந்த போதும், செக்காலை சூப்பர்வைசர் ஒருவர் வந்தபோதும் அவர்கள் தொழில் தொடர்பாக பேசியது எதுவுமே காதில் விழவில்லை.

நினைவெல்லாம் விருமாண்டிதான் நிரம்பி இருந்தான். சாப்பிட உட்கார்ந்த போதுகூட சுரத்து இல்லை. அவர் வசித்துவரும் வீட்டைப் பராமரித்துவரும் அவரது விதவைச் சகோதரிகூட ஏதோ வியாபாரத் தொடர்பான குழப்பமாகத்தான் இருக்கும் என்று நினைத்தாள்.

பேருக்கு அள்ளிப் போட்டுக்கொண்டுவிட்டு ஹாலுக்கு வந்தவருக்கு அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது. ஹாலில் விருமாண்டியே உட்கார்ந்திருந்தான்!

''வி... விருமாண்டி...நீயா?''

''நானேதான். ஏன் அப்படியே போயிடுவேன்னு நினைச்சீங்களோ?...''

''இல்ல... அப்படி எல்லாம் இல்ல. வக்கீலைப் பாக்கும்போதெல்லாம் அவர்கூட சொல்வாரே, கேஸ்வலுவா இல்லை-நீ எப்படியும் வந்துடுவே'ன்னு...''

''அப்படியா?'' - அவன் கேட்டவிதமே ஒருவித நக்கலோடுதான் இருந்தது.

''சத்தியமா விருமாண்டி...''

''ஏன்யா ஒரு சத்தியத்தை எனக்காண்டி வேஸ்ட் பண்றே. நீ சாகணும்னு ஆசைப்பட்டேன்னு தைரியமா சொல்லேன். அதானே உண்மை.''

-அவன் பேச்சுக்கு பதில் பேசமுடியாதபடி அவனை மலங்க மலங்கப் பார்த்தார்.

''முழிக்கறதப்பாரு. சரி சரி போய் ஒரு அம்பதாயிரம் கொண்டுவா...''

''அம்பதாயிரமா...?''

''லட்ச ரூவா கேக்கணும்தான் நெனச்சேன். சரி ஒரே நேரத்துல வேண்டாம். அடுத்த மாசம் கேட்டுக்குவோம்னு உட்டுட்டேன்.''

''விருமாண்டி... இது அநியாயம்...''

''அதை ஒரு யோக்யன் சொல்லணும்.''

''நான் என்ன அப்படி செய்யக்கூடாத தப்பை செய்துபட்டேன்னு இப்படி என்னை பாடா படுத்தறே...?''

''அதுசரி... தினசரி ஒருத்திகூட படுக்கறது உனக்கு வேணா சரியாப்படலாம். ஆனா அது எம்புட்டு பெரிய கேப்மாரித்தனம் தெரியுமா?''

''எவன் இன்னிக்கு செய்யலை? என்கிட்ட பெருசா நியாயம் பேச வந்துட்டியே.''



''சரி... அப்ப நான் பத்திரிகைக்காரங்களுக்கு அனுப்ப வேண்டியத அனுப்பிட்றேன். உன்போட்டோ அமக்களமா எல்லா பேப்பர்லையும் வரும். அப்ப அவங்ககிட்ட உன் நியாத்தைச் சொல்லு.''

''விருமாண்டி...''

''என்ன விருமாண்டி? போய் பணத்தை எடுத்துகிட்டு வாய்யா...''

''இப்படி அப்பப்ப வந்து சில்லரை சில்ரையா கேக்காம ஒரேடியா ஒரு தொகையைச் சொல்லிடு. தந்துட்றேன்.''

''அதுக்கு வேற ஆளப்பாரு. நீ என்னோட பொன்முட்டை போட்ற வாத்து. நான் கேக்கும் போதெல்லாம் முட்டை போட்டுகிட்டே இருக்கணும் நாயக்கரே... வளவளன்னு பேசாம போய் பணத்தை எடுத்துகிட்டு வா...''

-அவன் அலட்சியமாக சொல்லிவிட்டு எதிரில் மோடா மேல் கிடந்த பேப்பரை எடுத்து படிக்க ஆரம்பித்தான்.

நாயக்கருக்கும் வேறவழி தெரியவில்லை. உள்ளே சென்று ஐம்பதாயிரத்தை எடுத்து வந்து அவன் மேலே விட்டெறிந்தார்.

''மகாலட்சுமியை இப்படியா தூக்கி எறிவே? என்மேலே கோபம்னா என்கிட்ட நேரா காட்டு. ரூவா என்ன பண்ணிச்சு?'' என்று அந்த நோட்டுக்கட்டை எடுத்து முத்தமிட்டபடியே அங்கிருந்து அகல ஆரம்பித்தான் அவனும்!

நங்குநங்கு என்று தலையில் குட்டிக் கொண்டார் நாயக்கர். அவ்வளவு இயலாமை! அதன்பின் காலைப்பொழுது என்று கூட பார்க்காமல் வீட்டில் ரகசியமாக அவர் நிர்வகித்து

வரும் மினி பாருக்குள் நுழைந்து ஒரு பெக் அடித்து முடித்தார். அந்த அமிலம் அடுத்து அவரை என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்தது.

அவரது தென்னந்தோப்பும் பம்ப்செட் அறையும் ஞாபகத்திற்கு வந்தது. பொன்மேனியும் ஞாபகத்தில் மின்னி கண்ணடித்தாள்.

அடுத்த ஐந்தாவது நிமிடம் அவரது கார் புறப்பட்டுவிட்டது!

தோப்பில் உள்ள பம்ப்செட் அறைக்குள் பிரவேசித்த போது பொன்மேனி தயாராகக் காத்திருந்தாள். பம்ப்செட் மோட்டாரிலேயே குளித்ததில் கூந்தல் ஒன்றோடொன்று ஒட்டாமல் ஷாம்பு விளம்பரக்காரி போல அவளைக் காட்டியது.

முதல்நாள் அவள் பேசிய எதுவும் துளிகூட ஞாபகத்திற்கு வரவில்லை. விருமாண்டி அந்த அளவு அவரை ஆக்ரமித்திருந்தான். அவருக்கு சரியாக போதையின் ஆக்ரமிப்பு.

''பொன்மேனி... பரவால்லியே - ரெடியா இருக்குறியே. நான் இப்படி காலைலயே வருவேன்னு தெரியுமா உனக்கு...''

''நல்லா தெரியும்...''

''சபாஷ்... ஆமாம்... எப்படித் தெரியும்?''

''விருமாண்டின்னு ஒருத்தன் வெளிய வந்தட்டான்ல, நீங்க இனி நேரம் காலமெல்லாம் பாக்கமா இங்கதான் வருவீங்க...''



அவள் விருமாண்டி பேரைச் சொன்னது தான் தாமதம் - அவரது போதை ஜிவ்வென்று இறங்கத் தொடங்கியது.

''பொன்மேனி... உனக்கும் விருமாண்டியைத் தெரியுமா?'' உதறிக் கொண்டு கேட்டார்.

''தெரியுமாவா...? ஒருத்தனுக்கு முந்தி விரிச்சு ஒருத்தன் பொண்டாட்டியா - உத்தமியா இருந்த என்னை இந்த நிலைமைக்கு ஆக்குனவனாச்சே...''

''என்ன சொல்றே நீ...?''

''என்னத்த சொல்ல... உடம்பைக் கோவிலா நினைச்சு கும்புட்டவங்களும் நம்ப நாட்டுல உண்டு. அதை பலபட்டறையாக்கி பாடா பட்றவங்களும் நம்ப நாட்டுல உண்டு. அந்த வகைல நீங்களும், என் புருஷனும் ஒண்ணும்தான்.''

''என்ன சொல்றே பொன்மேனி... உனக்கு எல்லா விஷயமும் தெரியுமா?''

''தெரிஞ்சதால தானே அஞ்சும் மூணும் எட்டுன்னு கணக்குப் போட்டு கச்சிதமா இங்க வந்துருக்கேன்.''

''அப்படின்னா...?''

''அந்த நாய்க்கு கப்பம் கட்டினவங்கள்ள என் புருஷனும் ஒருத்தர்... அப்பதான் நீங்களும் அவன் வலைல விழுந்து கப்பம் கட்டிகிட்டு இருக்கறது தெரிய வந்துச்சு. அதுக்குள்ற ஒரு திருப்பம். அவனை ஒரு கொலை கேஸ்ல போலீஸ் பிடிச்சு உள்ள போட்ருச்சு. என் வீட்டுக்காரரும் தப்பிட்டதா நினைச்சாரு. நீங்களும் அப்படித்தான் நினைச்சிருக்கணும்.''

''உண்மைதான். ஆனா இப்ப வெளிவந்து திரும்ப பால் கறக்கற மாதிரி காசைக் கறக்க ஆரம்பிச்சிட்டானே...''

''அந்த பால்காரனை சமாளிக்க ஒரு வழி இருக்கு. நேத்து நான் ஒரு விஷயத்தை பாதில விட்டேனே ஞாபகம் இருக்கா?''

''என்ன சொல்றே... கொஞ்சம் விளங்கற மாதிரி சொல்லு பார்ப்போம்.''

''என்ன மனுஷரு நீங்க... இன்னுமா விஷயத்துக்கு உங்களால வரமுடியல...''

''போதைல எனக்கு ஒரு எழவும் புரியல... நீயே புரியற மாதிரி சொல்லிடு...''

-அவளும் சொல்லத் தொடங்கினாள். சொல்லி முடித்தநிலையில் பரந்தாமநாயக்கர் முகத்தில் ஒரு புது வெளிச்சம்.

''பொன்மேனி... இதைத்தான் ஒரு கல்லுல இரண்டு மாங்கான்னு சொல்றதா?''

''அதேதான்!''

''உனக்குத்தான் என்ன ஒரு மூளை... ஆமா அது எப்படி உனக்கு விருமாண்டி வெளியவரப்போறது நேத்தே தெரியும்.''

''நேத்து சொன்ன தீர்ப்புதான் இன்னிக்கு பத்திரிகைல வந்துருக்குது. எங்க கேஸ் விஷயமா கோர்ட்டுக்கு போய்ட்டு அங்க இந்த விஷயத்தை நேரிலயே பார்த்து தெரிஞ்சுகிட்ட பிறகுதான் உங்களப் பாக்கறதுன்னு முடிவெடுத்தேன். தோப்புக்கும் வந்தேன்.

உங்க தோப்பு காவக்காரன் என்னை 'அந்த மாதிரி' பொம்பளைன்னு நினைச்சி உள்ளபோய் இருன்னான்.

எனக்கும் அது சௌகர்யமாப் போச்சு. இப்ப புரியுதா?''



-பொன்மேனியின் பேச்சைக் கேட்டு பரந்தாம நாயக்கர் வாயைப் பிளந்துவிட்டார்.

''அப்ப நீ எனக்கு முந்தி விரிக்கறேன்னு சொன்னது...?''

''உங்களை வளைச்சுப் பிடிக்க சும்மா அப்படி சொன்னேன்.''

''ஒருக்கா அதை மீறி நான் உன்னத் தொட்டுருந்தா...''

''என் காரியம் முடியறவரை இந்த உடம்பை நீங்க திங்க கொடுத்துட்டு அப்புறமா என் புருஷன் போன வழி போயிட்டறதுதான் நான் எடுத்திருந்த முடிவு.''

-இறுதியாக அவள் சொன்னது அவர் கண்களில் கண்ணீரை வரவழைத்து விட்டது.

''இல்ல பொன்மேனி... நான் அவ்வளவு மோசமானவன் இல்ல. பொஞ்சாதி இருந்தா கண்டிப்பா. அவளோ போய் பல வருஷம் ஆச்சு. காசு பணத்துக்கும் பஞ்சமில்ல. சேருவோர் சேர்க்கையும் சரியில்லை. அதான் இப்படி ஆயிட்டேன். ஆனா விருமாண்டி நல்லா பாடம் கத்துக் கொடுத்துட்டான்.''

''அப்படித் தெரியலியே...''

''வேற எப்படித் தெரியுது?''

''அவன்கிட்ட பாடம் கத்துருந்தா இந்த பம்பு செட் ரூமுக்குள்ற நான் வரமுடியுமா?''

''அது... அது...''

''மென்னு துப்பாம தப்பை தப்புன்னு ஒத்துக்குங்க.''

''ஆமா தப்புதான்...''

''இனியாச்சும் அந்த ராமன் மாதிரி இருக்க முயற்சி பண்ணுங்க.''

''அது மட்டும் அந்த விருமாண்டி கைலதான் இருக்கு.''

''நல்லதை நினைச்சு இறங்குங்க. நான் சொன்னது ஞாபகம் இருக்கட்டும்.''

''நல்லா ஞாபகம் இருக்கு... இந்த சந்தர்ப்பத்தவிட்டா நான் மானத்தோடையே வாழ முடியாது. அப்படி இருக்க விடுவேனா...?''

''அப்ப முதல்ல அவனுக்கு தகவல் அனுப்புங்க. நாளைக்கு இந்த நேரம் நல்ல செய்தி நமக்கு வரணும்.''

''வருமா?''

''வரும்... வரணும்!''

-பொன்மேனி வலக்கையை உயர்த்தி சூளுரைப்பது போல சொன்னவிதத்தில் நல்ல அழுத்தம்!

பொத்தென்று தம்முன் விழுந்த பரந்தாமநாயக்கரின் தோப்பு பத்திரத்தைப் பார்த்து ஒரு வினாடி இன்ப அதிச்சிக்குள்ளானான் விருமாண்டி.

''இதோட மதிப்பு இன்னிக்கெல்லாம் முப்பது நாப்பது லட்சம். சந்தேகமா இருந்தா நாலுபேர்கிட்ட கேட்டுக்க. பத்தரத்தையும் எடுத்து நல்லா பார்த்துக்க.''

''நாயக்கரே... எதுக்கு பீடிகை? விஷயத்துக்குவாங்க. நான் என்ன பண்ணனும்?''



''விக்ரமநாயக்கபுரம் நாயக்கர் மாளிகை பத்தி கேள்விப்பட்டுருக்கியா?''

''பேய் பங்களாம் பாங்களே... அதா?''

''அதேதான்... ஆனா அங்க பேயெல்லாம் இல்ல. அல்லிக்கரை செங்கமலம்னு ஒரு சூனியக்கார பொம்பளதான் அங்க இருக்கா...''

''அல்லிக்கரை செங்கமலம்...? கேள்விப்பட்ட பேர் மாதிரி தெரியுதே...''

''முப்பது வருஷத்துக்கு முந்தி அவ ஆள் மயக்கி. இப்ப அவ சூனியக்காரி...''

''வயசானவுடனே தொழில மாத்திக்கிட்டாளாக்கும்?''

''இருக்கலாம்... அவ தொழில மட்டும் மாத்திகல. அந்த மாளிகைல இருந்துகிட்டு ஊரையே ஏமாத்தி கிட்டும் இருக்கா...''

''அவளை நான் போட்டுத் தள்ளணுமாக்கும்?''

''கரெக்டா சொல்லிட்டே...''

''உங்களுக்கும் அவளுக்கும் அப்படி என்ன பகை?''

''என் குடும்பத்துக்கு சூனியம் வைக்கப் போறாளாம்.''

''அப்படிப் போடு அருவாளை... அதான் தோப்பே போனாலும் பரவால்ல - அவ போகணும்னு முடிவு எடுத்துட்டீரா...?''

''ஆமாம். அவளைப் போட்டுத் தள்ள உன்னால முடியுமா?''

''ஒரு பெரிய சொத்தே வரும்போது அவ என்ன... இன்னும் பத்துப் பேரை கூட போட்டுத் தள்ளுவேன்.''

''உன் வீராப்பெல்லாம் அவகிட்ட வேகாது. அவ மிரட்ற மிரட்டு கொஞ்ச நஞ்சமல்ல... விக்ரமநாயக்கர் பரம்பரையே கருவறுத்தவ அவ.. அந்த மாளிகையை யாரும் வாங்க உடாம பண்ணிகிட்டு, அதே சமயம் அவ அதை அனுபவிச்சுகிட்டும் இருக்கான்னு கேள்வி.''

''யானைக்கு அங்குசம்... மீனுக்கு வலை, குதிரைக்கு கடிவாளம், அந்த மாதிரி அவளுக்கு நான் நாயக்கரே...''

''அப்ப அதையும் நான் பாக்கறேன். இப்பவே புறப்படு!''

''நான் புறப்பட்றது இருக்கட்டும். காரியம் கச்சிதமா முடிஞ்ச பொறவு எனக்கு அல்வா கொடுத்துட மாட்டீங்களே...''

''அதான் என் போட்டோங்க உன்கிட்ட இருக்குதே. என்னால நினைச்சாலும் முடியுமா?''

''அப்படிபோடு... பயம் இருந்தா சரி!''

''ஒரே பயம். அது நீயா மட்டும்தான் இருக்கணும். அவ பயம் கூடாது.''

''இருபத்தி நாலுமணிநேரம் தான். என்ன நடக்குதுன்னு பாருங்க...''

''சரி.. எப்படி காரியத்தை முடிப்பே...?''

''கேக்கறத பார்த்தா வழியையும் சொல்லுவீங்க போல இருக்குதே...''

''ஆமா... உன் முரட்டுத் தனமெல்லாம் அவகிட்ட வேகாது. நான் ஒரு வழி சொல்றேன். இதோ...'' - அவர் பேச்சோடு பேச்சாக தன் அருகில் ஒரு டவலால் மூடிய நிலையில் இருந்த டைம்பாம் ஒன்றை வெளியில் எடுத்து அவன் முன் வைத்தார்.



''டைம் பாமா?''

''ஆமாம்.. விறுவிறுன்னு உள்றபோய் வெச்சுட்டு வந்துடு. அவளை அழிக்க இது ஒண்ணுதான் வழி.''

''அதுவும் சரிதான்!''-விருமாண்டி அதை ஆவலோடு எடுத்துக் கொண்டான்.

''பாத்து... துளிகூட காரியம் பிசகக்கூடாது!''

''பிசகறதா... பேய்மாளிகை தூள்தூளான விஷயம் காதுக்கு வருதா இல்லையான்னு பாருங்க...''

-டைம்பாமுடன் புறப்பட்டவனைப் பார்த்து நிம்மதிப் பெருமூச்சுவிட்டார்.

அவன் விலகவும் பொன்மேனி வெளிப்பட்டாள்.

''பொன்மேனி... எப்படி?''

''பின்னாலேயே போங்க. மாளிகைக்குள்ற அவன்போன உடனேயே காவக்காரன்கிட்ட அவன் டைம் பாமோட போய்ட்டான்னு மட்டும் சொல்லுங்க. அப்புறம் பாருங்க...''

''அந்த காவக்காரன் அந்த செங்கமலத்தோட கையாளா?''

''கையாளாவா... அவன்தான் அவளுக்கு எல்லாம். அந்த அளவு - விசுவாசியான அவனையே - வசியப்படத்தி வெச்சுருக்கா...''

''அதுசரி... இவ்வளவு தெரிஞ்ச நீ எப்படி கவுண்டரை அங்க போகவிட்டே?''

''தப்பு நாயக்கரே... என் புருஷன் போனதாலதான் இவ்வளவும் தெரியவந்துச்சு. தன்னால செத்தவங்க நிஜமாலுமே மண்ணுக்கடியில் போயிட்டாங்களா இல்லையான்னு பாக்கறதுக்காகவும் அவங்க ஆவியையும் வசப்படுத்தி பிடிக்கவும்தான் அவ சுடுகாட்டுக்கே வந்துருக்கா.

சுருக்கமா சொன்னா என் புருஷன் சமாதிக்கு நான் பால் ஊத்த போய்தான் இவ்வளவு விஷயத்தையும் தொட்டுத் தொட்டு தெரிஞ்சுகிட்டேன்.''

''கவலையைவிடு... என்னையும் உன்னையும் மலையா அழுத்திகிட்டு இருக்கற ஒரு விஷயம் இன்னியோட தீரப் போகுது. நானும் புறப்பட்றேன்.''

-பரந்தாம நாயக்கரும் பின்னாலேயே புறப்பட்டார்!

விக்ரமநாயக்கபுரம் நாயக்கர் மாளிகை முன்னால் நின்று கொண்டிருந்தான் விருமாண்டி.

சிங்கராயனை அழைத்து அவனிடம் சாவிகேட்டு உள்ளே போய்ப் பார்ப்பதெல்லாம் அசட்டுத்தனமாய் அவனுக்குத் தோன்றியதோ என்னவோ?

சிங்கராயன் நிச்சயம் அல்லிக்கரை செங்கமலத்தின் கையாளாகத்தான் இருக்க வேண்டும். எனவே அவனுக்குத் தெரிகிற மாதிரி உள்ளே நுழைந்தால் உள்ளே இருக்கும் செங்கமலம் எச்சரிக்கையடைந்து ஜெகஜ்ஜால வேலைகளை அதன் பின் காட்டுவாள் என்பதால் ஓசைப்படாமல் உள்ளே நுழைவதுதான் சரி என்று ஒரு வேளை அவன் நினைக்கிறானோ?



ஓசைப்படாமல் அவனைப் பின் தொடர்ந்து வந்திருந்த பரந்தாம நாயக்கரோ ஒரு பருத்த தூங்கு மூஞ்சி மரத்தின் பின்னால் நின்று கொண்டே அடுத்து அவன் என்ன செய்யப்போகிறானோ என்று பார்த்துக் கொண்டேயிருந்தார்.

அவன் சிங்கராயனை சந்திக்காமல் நேராக வந்து நின்று கொண்டிருப்பதே அவருக்கு பெரிய கேள்விக் குறியாகத்தான் இருந்தது.

அவனது கையில ஒரு சால்வை!

அதில் தான் டைம்பாம் இருந்தது.

மேலே கத்தரிக்காய், வெண்டைக்காய் என்று காய்கள் இருந்தன. யாருக்கும் சந்தேகம் வரக்கூடாது என்பதற்காக அவனாய் செய்து கொண்ட ஏற்பாடு.

மாளிகையோ எந்த அரவமுமின்றி 'ஹோ' வென்று காட்சியளித்தது. நல்ல உச்சி வேளை!

சூரியன் மட்டும் எந்த மேகத் தடுப்பும் இன்றி விருமாண்டியைப் பார்த்தபடி அனல் கக்கிக் கொண்டிருந்தான்.

பரந்தாம நாயக்கர் நிலை கொள்ளாதபடி தவித்துக் கொண்டிருந்தார்.

அவனோ அந்த சால்வையை அருகில் தழைத்திருந்த பார்த்தீனியப் புதரில் கொண்டு போய் மறைவாக வைத்தான். பின் இடுப்பு மடிப்பில் இருந்து பொடி டப்பாவை எடுத்து ஒரு உறிஞ்சு உறிஞ்சிக் கொண்டான்.

அப்படியே திரும்பி நடந்தான்!

அதுவும் பரந்தாம நாயக்கர் ஒளிந்தபடி இருக்கும் தூங்கு மூஞ்சி மரத்தைப் பார்த்தபடி.

நாயக்கர் வியர்க்க ஆரம்பித்தார்.

அவன் எதார்த்தமாய் வேறு எதற்காகவாவது இந்தப் பக்கம் வருகிறானா - இல்லை நான் வந்திருப்பது தெரிந்துதான் வருகிறானா என்பது தெரியாமல் குழம்பியவர் அவன் பார்வையில் பட்டுவிடாதபடி மரத்தண்டின் பின்னால் அப்படியே மறைந்து மறைந்து அவன் அருகே வரவும் பார்வையில் படாதபடி ஒளிந்து நின்று கொண்டார்.

மரத்தடியில் வந்து நின்றவன் அதன் அடியில் திடீரென்று உட்கார்ந்தான். சட்டைப்பாக்கெட்டில் இருந்து ஒரு பீடியை எடுத்து பற்றவைத்தான். புகைவிடத் தொடங்கினான். அவனது நடவடிக்கை துளிகூட புரிந்துகொள்ள முடியாதபடி மிக வித்யாசமாக இருந்தது.

நாயக்கரிடமும் இதயம் தாறுமாறாக துடித்தபடி இருந்தது.

பீடி ஒரு பாதி முடிந்த நிலையில் அதை ஒரு பார்வை பார்த்துவிட்டு தூக்கி எறிந்தான். பிறகு கைகளை பரபரவென்று தேய்த்துக்கொண்டான்.

நாயக்கர் 'பக்பக்' என்று துடித்துக்கொண்டேயிருந்தார். பிறகு எழுந்தவன் மாளிகை நோக்கி திரும்பவும் நடப்பது போல நடந்தான்.

சில அடிகள் தான் நடந்திருப்பான்.

சட்டென்று நின்றவன் படுவேகமாய் திரும்பினான். அவன் அப்படித் திரும்புவான் என்பது தெரியாதபடி எட்டிப்பார்த்த பரந்தாம நாயக்கர் அவன் திரும்பிப் பார்க்கவும் ஆடு திருடிய கள்ளனைப் போல முழித்தார். அவனோ மெல்ல... மிகமெல்ல என்று சிரிக்கத் தொடங்கினான்.



பரந்தாம நாயக்கருக்கு அவன் அப்படிச் சிரித்தால் என்ன அர்த்தம் என்பது தெரியும்.

''அது... அது... நீ உள்ற போய் கலக்கப்போறத பார்க்கத்தான் பின்னாலேயே வந்தேன்... வேற ஒண்ணுமில்ல'' என்றார் வழிந்தபடி.

''அப்படி வந்த ஆள் எதுக்கு என்னயப் பாத்து ஒளியணும்?''

''அது... அது...''

''எமகாதகன்யா நீ... எப்ப இந்த விஷயத்தை நீ என்கிட்ட ஒப்படைச்சியோ அப்பவே இந்த மாளிகையோட வரலாறு அம்புட்டையும் நான் கறந்துட்டேன். டைம்பாமோட உள்ற நான்போவேன்... நீ அந்த காவக்காரனைப் பார்த்து உசுப்பேத்தி உடுவே. உடனே அவன் பதறிப்போய் உள்ளாற தகவல் தருவான். உள்ளாற எனக்கு நடக்க வேண்டியது நடக்கும். நான் கொண்டு போன பாமும் உன்கிட்ட இருக்கற இன்னொரு ரிமோட்டால வெடிக்கும். இதுதானே உன்திட்டம்?''

-அவரது திட்டத்தை அப்படியே விவரித்தவனை மிரமிரளப் பார்த்தார் நாயக்கர்.

''என்ன... எப்படி எனக்கு இதெல்லாம் தெரியும்னனு பாக்குறியா?''

-அவரும் ஆமாம் என்கிற மாதிரி பார்த்தார்.

''அங்கதான் இந்த விருமாண்டிய நீ சரியா புரிஞ்சுக்கல. நீ தடுக்குல பாஞ்சா நான் கோலத்துலேயே பாயறவன். இப்பதான் உனக்கு கிரிமினல் புத்தி ஸ்டார்ட்டிங்க. ஆனா, என்வரைல அது ஆல்வேஸ்ரன்னிங். புரியுதா?''

''சரி இப்ப என்ன பண்ணப்போறே, அதைச் சொல்லு.''

''வேடிக்கையைப் பாரு...''

-கையை சொடுக்கிக்கொண்டே நடந்தவன் மாளிகையின் கிராதிக் கதவின் வேல்கம்பு உருவப்பட்டிருந்த இடைவெளிக்குள் நுழைந்து விறுவிறுவென்று நடக்க ஆரம்பித்தான்.

இலை தழை சருகுகள்இவன் காலடிபட்டு சப்தமெழுப்ப சில ஓணான்கள் அவனது வேகம் பார்த்து அங்கும் இங்குமாய் ஓடிப் பின் தன் முன்னிரண்டு கால்களை உயர்த்தி வேடிக்கை பார்த்தன.

முகப்புக் கதவை அடைந்தவன் கதவுப் பூட்டை தன்வசம் உள்ள வினோதமான கம்பி ஒன்றைக் கொண்டே திறந்தான்.

அப்படியே திரும்பியும் பார்த்தான்.

பரந்தாம நாயக்கர் பார்த்துக்கொண்டே இருந்தார்.

''அந்த காவக்காரனுக்கு தகவல் கொடுத்துடாதீங்க. டைம் பாமெல்லாம் வேஸ்ட்டு... என்ன பண்றேன்னு பாருங்க'' என்றவனாய் உள்ளே நுழைந்தான். கண்ணை விட்டும் மறைந்தான்.

நொடிகள் கரைய ஆரம்பித்தன.

அவை அறுபதை எட்டி முதல் நிமிடமும் கழிந்தது.

அடுத்து இரண்டு... மூன்று... நான்கு... என்று வரிசையாக நிமிடங்கள் கழியவும் நாயக்கரால் நிலை கொள்ள முடியவில்லை.

அதே சமயம் உள்ளே இருந்து ஒரு பெண் வெளியே வந்தாள். படு கேஷுவலாக வந்தவள் நாயக்கரையும் நெருங்கினாள்.



''உங்களை அண்ணன் உள்ள கூப்டுச்சு...''

''அண்ணனா?''

''அதான் விருமாண்டி அண்ணன்.''

''அவன்... அவன்.. உள்ற?''

''உள்ற தான் இருக்கு... அதுக்கு ஒண்ணும் ஆகலை. எதுவும் ஆகவும் ஆகாது. ஏன்னா இந்த மாளிகைல பலவருஷமா இருக்கறதே அதுதானே?''

-அந்த பதில் பரந்தாம நாயக்கரின் இதயத்தையே கட்டை விரல் நகத்தால் ஒரு கிள்ளு கிள்ளுகிற மாதிரித்தான் ஆக்கியது.

''நீ... நீ சொல்றதெல்லாம்ம நெசமா?''

''உள்ற வாங்க தெரியும்...''

''நான்... உள்ளாரையா... அவனை வெளிய வரச்சொல்லேன்.''

''அஞ்சு நிமிஷம் தான்... நீங்க உள்ளார வராட்டி இந்த டைம் பாம் வெடிச்சு நீங்க சிதறிடுவிங்கன்னு அண்ணன் சொல்லச் சொன்னாரு...''

-அந்த பதிலின் கொடூரம் அவரை உள்ளே தள்ளியது. பயமும் நடுக்கமுமாய் நடந்தார். உள்ளேயும் நுழைந்தார்.

பளிச்சென்ற மைதானம் போன்ற ஹாலுக்குள் நுழைந்தபோது பெரிய ஆச்சரியம் ஒன்று காத்திருந்தது.

உள்ளே தடிதடியாய் ஆட்கள்!

ஊஞ்சல் ஒன்றில் அல்லிக்கரை செங்கமலம் அழகாய் சுருட்டு பிடித்தபடி முழு பெண் சுதந்திரம் பெற்றுவிட்ட ஒருத்தியா...

அவளது காலடியில் அமர்ந்தநிலையில் பிடிபற்ற வைத்துக் கொண்டிருந்தான் விருமாண்டி. பரந்தாம நாயக்கர் வரவும் திரும்பினான். பார்த்தான். சிரித்தான்.

சிரிப்பா அது?

அந்த ஹாலில் அவனது சிரிப்பின் எதிரொலி மிகமோசமான எதிரொலியாக விளங்கியது.

ஒரு வழியாக அவனுக்கு மூச்சிரைக்கவே சிரிப்பும் அடங்கியது.

''என்ன நாயக்கரே... ஒண்ணும் புரியல இல்ல?''

அவனே அந்தக் கேள்வியையும் கேட்டான்.

''இது எங்க கோட்டையா...

ஒட்டு மொத்த தமிழ் நாட்டுல தூக்கு தண்டனைல இருந்தும், ஆயுள்தண்டனைல இருந்தும் தப்பி ஓடிவந்த கைதிங்கள்ள இருந்து, அப்பப்ப அங்கங்க குண்டு வைக்கற தீவிரவாதிங்கவரை அம்புட்டுபேரும் இங்கதான் இருக்காங்க.

உங்களை எல்லாம் காப்பாத்த போலீசு, சட்டம் ஒழுங்குன்னா எங்களைக் காப்பாத்த பேய் பிசாசுங்க... அதுங்க உருவாக்கற பயம்தான் பிரதான காரணமே!

இங்க நாங்க ஒத்துமையா, சந்தோசமாக இருக்குறோம் - இன்னிக்கு நேத்திக்கு இல்ல. முப்பது வருஷமா...

எல்லாம் செங்கமலத்தக்கா போட்ட பிச்சை!

ஒளியத் தெரியாதவன் தலையாரி வீட்டுல ஒளிஞ்சமாதிரி நீ என்கிட்டையே வந்து என்கைலயே டைம்



பாமையும் கொடுத்திருக்கியே... உனக்கு எவ்வளவுதில் இருந்திருக்கணும்...?''

அவன் கேட்ட விதமே ஒரு மாதிரி இருந்தது. நாயக்கர் அப்படியே நெஞ்சைக் கையில் பிடித்துக் கொண்டார்.

''சும்மா சொல்லக்கூடாது... ஊரே இங்க நடக்கற சாவுங்களுக்கும், பயங்கரத்துக்கும் இந்த மாளிகையோட முதலாளியா இருந்து, ஒழிஞ்சானே விக்ரம நாயக்கன்... அவன் பொண்டாட்டி பங்கஜ மீனாட்சிதான் காரணம்னு நினைச்சுகிட்டிருக்கு. அவளோட பொண்ணுங்க அஞ்சும் இங்கதூக்குல தொங்கிட்டு இங்கையே அவ சுத்திச் சுத்தி வந்துகிட்டிருக்கறதா நினைச்கிட்டிருக்கு.

ஆனா அது உண்மையில்லன்னு கண்டு பிடிச்சாப்பார் ஒருத்தி... அங்கதான் அக்கா கொஞ்சம் ஸ்லிப்பாயிட்டா. இல்லக்கா?''

-விருமாண்டி செங்கமலம் பக்கம் பேச்சோடும் கேள்வியோடும் திரும்பினான்.

''அவ புத்திசாலிடா... இங்க என்னைப் பார்த்துட்ட அவ புருஷன் அதை அவகிட்ட சொல்லிட்டுதான் செத்திருக்கணும். ஆனா அவன் சொன்னான்னு சொல்லாம தான் கண்டுபிடிச்சதா சொல்லி இவனை அவ தயார் படுத்தியிருக்காப்பாரு... அங்கதான் அவளோட புத்திசாலித்தனம் இருக்கு.

சரி, வளவளன்னு பேசிக்கிட்டிருக்காம இந்த ஆளுக்கும் எலெக்ட்ரிக் ஷாக்கொடுத்து சக்கையாக்கி தூக்கி வெளிய எறி.

நிஜமாலுமே இங்க பேயும் பிசாசும் தாண்டவமாடறதா தான் இனியும் எல்லோரும் நினைக்கணும்.''

''ஆனா அவ நினைக்க மாட்டாளே...''

''உயிரோட இருந்தால்ல நினைக்கறதுக்கு...?''

''அப்டின்னா...?''

''தென்னந் தோப்புல அவ இந்த நொடி தூக்குல தொங்கிட்டு இருப்பா... நம்ம ஆளுங்க தொங்க விட்ருப்பாங்க.''

-செங்கமலம் சொல்லிவிட்டு சுருட்டை ஒரு இழுஇழுத்தாள்.

''அக்கா... நீ ஆனாலும் ஸ்பீடுக்கா.''

-விருமாண்டியும் உற்சாகமாய் எகிறினான். பரந்தாம நாயக்கர் மயக்கத்தின் விளிம்பில் இருந்தார். அப்பொழுது ஒரு அதிசயம் போல அங்கே பொன்மேனி நுழைந்து கொண்டிருந்தாள். அவள் கையில் அந்த டைம்பாம். அவளை அங்கே பார்த்த விருமாண்டியும், செங்கமலமும் பீதியோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளும்போதே-

''நாயக்கரே... நீங்க வெளிய போங்க.'' என்றாள் பொன்மேனி.

''ஆய்...'' சீறிக் கொண்டு கிளம்பப் பார்த்த ஒருவன் எதிரே டைம்பாமின் பட்டனை அழுத்துவது போல ஒரு தோற்றம் கொடுக்கவும் அவன் அப்படியே ஜகா வாங்கினான்.

''போங்க நாயக்கரே... ஓடுங்க. இன்னும் ஒரு நிமிஷம்தான். இந்த மாளிகையே சுக்கு நூறாகப் போகுது. வெளியயும் போலீஸ் நிக்குது. தைரியம் இருந்தா இவங்க வெளிய ஓடட்டும்.''



-அவள் சொன்னது அவர்களை விதிர்க்கவிட்டது.

''அக்கா ... என்னக்கா இது? தூக்குல தொங்கிட்டு இருப்பான்னே... டைம்பாமோட வந்து நிக்றாளேக்கா...''

''அதாண்டா எனக்கும் புரியல...''

-விருமாண்டியும், செங்கமலமும் ஒரவருக்கொருவர் அலமலந்து போகும்போது பரந்தாமநாயக்கர் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வெளியே ஓட ஆரம்பித்தார்.

வாசலுக்கு வந்து, போர்டிகோ பாகத்தில் இறங்கி, கிராதிக்கதவு நோக்கி அவர் ஓடியபோது பயங்கர வெடிச்சப்தம் கேட்டது. நின்று திரும்பிப் பார்த்தவர் எதிரே ஒரே புகை மண்டலம்.

ஒரு வினாடி 'ஐயோ பொன்மேனி' என்று அடிமனசிலும் ஒரு ஓலம் எழுந்து அடங்கியது.

எல்லாம் முடிந்து களைத்துப் போய் தென்னந்தோப்புக்குள் நுழைந்தவர் பம்ப்செட் அறை நோக்கிதான் நடந்தார். நாயக்கர் மாளிகையில் டைம்பாம் வெடித்ததைத் தொடர்ந்து ஊரே திரண்டு வந்து பார்த்ததும், காரணம் புரியாமல் பேசிக் கொண்டதெல்லாம் ஒரு கனவு போலத்தான் இருந்தது. நல்ல வேளை போலீஸ் வருமுன் அவர்கள் விசாரணை வளையத்தில் சிக்காதபடி தப்பிவந்ததே ஒரு பெரிய சாதனையாகத்தான் இருந்தது.

பொன்மேனி எப்படி அங்கு வந்தாள் என்பது மட்டும் விளங்கவேயில்லை.

அவள் பேரில் மதிப்பும் கரிசனமும் பல மடங்கு கூடிப்போயிருந்தது.

விருமாண்டி என்கிற ஒரு பிளாக் மெயிலரிடம் இருந்து தப்பித்துவிட்ட சந்தோஷம் ஒருபுறம் அவரை ஆக்ரமித்தாலும், பொன்மேனியை இழந்து விட்டதுயரம் இப்பொழுதைக்கு எந்த கொண்டாட்டமும் வேண்டாம் என்பது போல அவரை அடக்கியிருந்தது.

எப்படியோ பேய் பிசாசு என்று முப்பது ஆண்டுகளாக மிரட்டி வந்த ஒரு பொய்யான விஷயம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது.

அதுவும் பொன்மேனியால்!

-நினைப்போடு பம்புசெட் அறைக்கதவைத் திறந்தவருக்கு தூக்கிவாரிப் போட்டது.

உள்ளே பொன்மேனி தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தாள். பேயும் பிசாசும் பொய் என்றாக்கிய அதே பொன்மேனிதான் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தாள்.

அப்படியானால் அங்கே வந்தது அவளது ஆவியா?

நினைக்கும் போதே மயக்கமாய் வந்தது பரந்தாமநாயக்கருக்கு! எது நிஜம்?

❋

# 4. பதுங்கும் நாகங்கள்

## 1

4-11-86

செவ்வாய்

ஜப்பானின் புதிய சகாமுரா கெடிகாரம் தீக்கோழி செருமும்ரகத்தில் துளி சப்தமிட்டு நாலரையை தாண்டியபோது ஐஸ்வர்யாவுக்கு நிறைய வேர்த்திருந்தது. வழக்கமாக சக்கங்களில் மட்டுமே ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா மேப் ரகமாய் வியர்க்கும் ஈரத்திற்கு உடம்பில் குட்டி நதிகளாய் பரிணமித்திருந்தன.

அவளது பத்தொன்பது வருட மூணரை மாத வாழ்க்கையில் முதல் தடவையாக இதயம் வேகித்து 'தடக் தடக்' என்று இறைச்சலிட்டு நிறைய ரத்தத்தை மானாவரியாய் உடம்பில் பம்ப் செய்து கொண்டிருந்தது.

விளைவு?

விழியில் சிகப்பு! வியர்வை ஆறு! உதட்டில் வறட்சி!

சிவந்த விழியை திரும்பவும் கைகளின் பத்து விரல்களில் பந்தாகிவிட்ட ஏர்மெயில் மேல் கொண்டு சென்றாள்.

ஐஸ்வர்யாவுக்கு!

என் செவியை கசக்கிய வதந்தியை இன்று நான் நம்பும் நிலை எனக்கு ஏற்பட்டு விட்டது. ஒரு கிளப்பில் வீடியோவில் உன்னை நான் பிறந்த மேனியாய்... சாரி மேலே எழுதும் தெம்பு எனக்கு இல்லை. நீ மிகவும் முன்னேறிவிட்டாய். அது மட்டும்

புரிகிறது. அந்த பழைய ஐஸ்வர்யா இறந்து விட்டாள். ஆதலால் என் காதலும் இறந்துதானே தீரவேண்டும்? ஒன்று உறுதி. பெண் இனத்திற்கே கேவலமாகி விட்ட நீ இருப்பதைவிட.. சீச்சீ அத எதுக்கு நான் என் வாயால சொல்லிகிட்டு... நீ நல்லா இருக்க மாட்டாடி

இப்படிக்கு

பிரேம்.

இந்தமுறை விரிந்த கடிதக் காகிதப் பந்து சுக்கு நூறாய் கிழிபட்டு அறை ஏ.சியின் இதமான குளிரில் மிதந்து தரையின் கிரே கலர் கார் பெட்களில் பொல பொலத்து சிதறியது.

நோ...

நோ... இட் ஈஸ் இம்பாசிபிள்

பிரேம், நீங்க சொல்றது பொய். பார்த்தது பொய். நான் அந்த மாதிரி பொண்ணு இல்ல. ஒரு நடிகைன்னா அவளப் பத்தி எப்படி வேணும்னா பேசறதா? அதுவும் என்னைப் புரிஞ்ச பிரேம் பேசறதா? நோ நோாாா...!

ஓங்கலான அவளது அலறலில் அவளது ஐந்தரை அடி உயர சிவந்த நெகுநெகுத்த சரீரத்தில் எங்கோ ஒரேஒரு இடத்தில் நரம்பொன்று பட்டென்று வீணை தந்தி மாதிரி அறுபட்டது போல் தோன்றியது.

நாசித் துவாரங்களில் சிவப்பாய் வந்து ஒழுகியது ரத்தம்.

சொத்தென்று சரீரம் கூட தரையில் விழுந்து விட்டது.

❖❖❖



## 2

5-1-86

புதன்

ஐஸ்வர்யாவின் விழிகள் விரிந்தபோது முகத்தில் காத்திருந்த மாதிரி புகுந்தது அசட்டுச் சிரிப்பு. அத்துடன் துளி அசட்டுத்தனம். கொஞ்சம் பயம். கொஞ்சம் கூச்சம்-எல்லாம்.

பக்கத்தில் கவலையோடு பலரோடு ஒருவராக நின்று கொண்டிருந்த டைரக்டர் ராம்நாத், டாக்டர் கவலையோடு கூறியதை நினைத்து விதிர்க்க ஆரம்பித்திருந்தார்.

''ஐஸ்வர்யா ஏற்கெனவே ஷார்ப் டெம்பர்டு கேரக்டர். பலம்ம்ம்மான அதிர்ச்சியை மீட் பண்ணியிருக்கா போல இருக்கு பாடி கண்டிஷன் நார்மல். பிராப்லம் பிரெய்ன்லதான். திரும்பற சுயநினைவோட தன்மையை பொறுத்தது அது...''

''அப்படின்னா?''

''இது ஒருவகை ஆக்சிடெண்ட் சார். சுய நினைவே சில சமயம் போயிடும். ஜஸ்ட் லைக் தட் அம்னீஷியா! அப்புறமா பிறந்த குழந்தையும் இவங்களும் ஒண்ணுன்னே சொல்லலாம்.''

''ஐய்யய்யோ அப்படி ஆயிட்டா அப்புறமா என் படத்தோட கதி?''

''ப்ளீஸ் வெயிட் அண்ட ஸீ... பதட்டப் படாதீங்க.''

இப்பொழுது ராம்நாத்தால் பதட்டப்படாமல் இருக்க முடியவில்லை.

''யோவ் இங்க வாய்யா?'' டைரக்டர் அவரின் பி.ஏ. மாணிக்கவாசகத்தை நகர்த்திக் கொண்டு வெளியே வந்து நின்று புலம்ப ஆரம்பித்தார்.

''என்னய்யா நடந்துச்சு, உனக்கு ஒண்ணும் தெரியாதா?''

''எல்லாம் புதிரா இருக்கு சார்.''

''என்ன புதிர்? நீ எல்லாம் ஒரு பி.ஏ. எப்ப... எப்படி இந்த மாதிரி ஐசுக்கு ஆனது?''

''நேத்து சாயங்காலம் நாலரைக்கு. அவங்க பர்சனல் ரூம்ல...''

''ரொம்ப நல்லா இருந்தாங்க. சாயங்காலம் ஆறு மணிக்கு தியேட்டர் ரமாவில அவங்க மூவிஸோட ஜுபிளி விழாவில் கூட கலந்துக்க இருந்தாங்க.''

''பலமான அதிர்ச்சிங்கறாரு டாக்டர். அப்படி ஏதாவது மேட்டர்?''

''எனக்கு தெரிஞ்சு ஒண்ணுமில்ல.''

''ரூமுக்குள்ள அவங்க நுழையும்போது முக்கியமா அவங்களுக்கு வந்த கடிதங்களை வழக்கமா தந்தேன். வாங்கிட்டு உள்ளே போனாங்க அவ்வளவுதான் தெரியும்.''

''ஏன் அதுல அதிர்ச்சி தரக்கூடிய விஷயம் ஏதும் இருக்கக் கூடாது?''

''சார் அதெல்லாம் எனக்கு தெரியாது. ஆனா அவங்களை மயக்கமா பார்த்தபோ தரையெல்லாம் லெட்டர் ஒண்ணு கிழிஞ்சு கிடந்தது.''

''பாத்தியா, பாத்தியா வெடிகுண்டே அதுல தான்யா இருக்கு. நீ மரமண்டை. ஆமா அந்த காகிதத் துண்டுங்க?''



''வேலைக்காரி கூட்டி எறிஞ்சுட்டா.''

ராம்நாத் உடனே மாங்கு மாங்கு என்று கைகளை குத்திக் கொண்டு வழிந்தார். அவருக்கு அப்பால் ஒரு துவண்ட மயில் குஞ்சாய் படுக்கையில் கிடந்த ஐஸ்வர்யா இந்த முறை ராம்நாத்தின் வயிற்றில் அக்கினியை கரைத்தாள்.

''சனிப் பெயர்ச்சியினால சிக்கல்லாம் வரும்னான் ஜோசியக்காரன்! ம்... அது இப்படியா வரும்? இன்னும் ஒரே ஒரு ஷெட்யூல்தான் இருக்கு. நீட்டா முடிச்சு பொங்கலுக்கு படத்தை ரிலீஸ் பண்ண வழியில்லாதபடி இப்படி படுத்துக் கிடக்கறியே ஐசு.''

ராம்நாத் கவலையோடு வாய்விட்டு முணு முணுத்தார்.

❖❖❖

## 3

6-11-86
**வியாழன்**

வளையங்குளத்து வளைவில் மதுரையை நோக்கி ராஜகோபாலின் சிவப்பு மாருதி வளைந்த போது, தலைக்கு மேலே பெரிய ஒரு அன்னப் பட்சியாய் ஒரு தினுசாக சப்தம் போட்டுக் கொண்டு குறுக்கிட்டது அந்த ஆவ்ரோ விமானம்!

மதுரையின் விளிம்போரத்து அந்த விமான நிலயத்தின் அகண்ட இரும்புப் பாதை ஆவ்ரோவை தன் மேனி மேல் ஏற்றிக் கொண்ட போது சூரியன் கூட ஆவ்ரோவின் லேண்டிங்கை ஆச்சர்யத்துடன் பார்த்தான். பிறகு மேற்கு அடிவானத்தில் செம்பட்டையாக கிடந்த மேகப் பந்தலுக்குள் உருண்டு ஒளிந்தான்.

ஆவ்ரோவிலிருந்து நீங்கி ஒரு அசாதாரண நடை நடந்து வந்த பலரில் அவினாஷ் சற்று தூக்கலாக தெரிந்தான்.

ரிசப்ஷனில் ராஜகோபாலை பார்த்தபோது அவினாஷின் நடை உடை பாவனைகளில் ஒருவகை ராஜ அம்சங்கள் வந்து இழைந்தன. ஆவலோடு வந்து கட்டிக் கொண்டான் ராஜகோபால்.

''என்ன மாப்ள ஒரு சுத்து பெருத்துருக்கே. துபாய் சாப்பாடு அவ்வளவு ஜோராவா இருக்கு'' ராஜகோபாலின் நைச்சியத்தில் சிரிப்பை கலந்து பேச்சை தெளித்தான் அவினாஷ்.

''சாப்பாட்டைவிட சந்தோஷம்தான் ராஜா உடம்போட பூரிப்புக்கே அடிப்படை'' - அவினாஷ் சொல்லிக் கொண்டே, சூட்கேஸை கீழே வைத்துவிட்டு ஒரு சிகரெட்டை எடுத்து செருகி அதன் தலையில் கொள்ளியை வைத்தான்.

நாசித் துவாரங்களில் அந்த சிகரெட்டின் ஆத்மா புகையால் ஒழுகியபோது அவினாஷ் ராஜகோபாலை அரைக் கண்ணால் பார்த்து ஒரு வெட்டு வெட்டி ''மாப்ள இந்த தடவை உன்னை ஒரு அசத்து அசத்தப் போறேண்டா!'' என்றான்.

''உசிலம்பட்டி போய் தாய் தகப்பனை பாக்கறதவிட முக்ய வேலை ஒண்ணு இருக்கு. அரும்பாடுபட்டு ஒரு வீடியோ கேசட் கொண்டு வந்திருக்கேன். செக்கிங் கெடுபிடியை எல்லாம் கிராஸ் பண்றதுக்குள்ள உயிர் போயிருச்சுப்பா மதுரை பரவால்ல லைட்டாதான் தடவிப் பார்த்தாங்க.''

- அவினாஷ் அலுப்போடு பேசினாலும் அதில் ஒரு வகை குஷி பரவிக் கிடப்பது ராஜ கோபாலுக்கு தெரிந்தது. ''என்னடா ஏதும் ப்ளுஃபிலிமா?'' - மாருதியை நெருங்கிய நிலையில் கேட்டான் ராஜகோபால். ஆமோதித்து ஒரு முப்பது டிகிரிக்கு சரிந்து நிமிர்ந்தது அவினாஷின் சிரம்.



அவினாஷின் வளைசல் நெளிசலான தலைமுடியை காற்று உலுப்பும்போது மாருதி பெருங்குடியை கடந்து அவனியா புரத்தை பார்த்து பறந்து கொண்டிருந்தது.

''அலுத்து போச்சு அவினாஷ், ப்ளுஃபிலிம் பார்த்து அவ்வளவா இண்ட்ரஸ்ட்டே இல்லை'' என்றான் ராஜகோபால்.

''இண்ட்ரஸ்ட்டோட கடல்பா என்னோட கேசட்! லோக்கல் ஐட்டங்களோட உருவில் பிரலில்னா நெனைச்சே''

அவினாஷ் அதற்குள்ளாக இரண்டாவது சிகரெட்டை எடுத்து தகனமாக்கினவாய் சிலாகித்தான்.

''ஆமா பெரிய்யா...

ஐஸ்வர்யா மாதிரி ஸ்டார் பெர்ஃபாமன்ஸா என்ன?''

ராஜகோபால் அவனியாபுர ஆரம்பத்தில் சலித்துக் கொண்ட சலிப்பிற்கு உடனே பதில் வந்தது அவினாஷிடம்.

''ஐஸ்வர்யா மாதிரி இல்லடா. ஐஸ்வர்யவோட பெர்ஃபாமன்ஸே!''

அவினாஷ் சொல்லி வாய் மூடும் முன் ராஜகோபால் ஆக்சிலேட்டரை இழுத்து மிதித்தான்.

மிதித்த இடத்தைவிட்டு நகராமல் சக்கென்று நின்ற மாருதிக்குள் ராஜகோபால் வாயைப் பிளப்பது மட்டும் தெரிகிறது.

❖❖❖

## 4

7-11-86
(காலை) வெள்ளி

நல்ல வேளை.

ஐஸ்வர்யா கண் திறந்து விட்டாள்!

லேசாகப் பேசி நம்பிக்கையும் தந்தாள்!

''கேஸ் மைனர்தான்!'' - இது டாக்டர்.

''டாக்டர் நோ பிராப்லம் தானே?'' - இது டைரக்டர் ராம்நாத்.

''யெஸ், ஆனா ரொம்ப ஜாக்ரதையா இருக்கணும்.'' முன்பு நம்பிக்கையாய் பச்சை விளக்கெரிய பேசியவர் உடனேயே சிவப்பு விளக்கை காட்டவும் ராம்நாத் காற்றுப்பட்ட சிமெண்டுக் குழைசலாய் முகம் இறுகிப் போனார்.

- ஆஸ்பத்திரி கதவுக்கு வெளியே நூற்றுக் கணக்கில் ரசிகர்கள்!

- தபால்காரர் நீட்டிய கடிதங்களில் ஆயிரக் கணக்கில் பிரசாத பொட்டலங்கள்!

தினசரி முழுக்க பளிச்சென்று நாசியின் ஆக்சிஜன் ட்யூப் நுழைந்த நிலையில் பெட்டில் கிடக்கும் ஐஸ்வர்யாவின் படம்!

''என்ன ஆச்சு ஐசுக்கு?

என்ன ஆச்சு? என்னப்பா ஆச்சி?''



பத்திரிக்கையாளர்கள், சினிமாக்காரர்கள், ரசிகர்கள் அத்தனை பேரும் ஆட்டுத் தழை மாதிரி நாவின் அண்ணங்களில் ஈரம் வரள வரள கேட்டுக் கொண்டு அல்லாடிக் கொண்டிருந்தார்கள்.

❖❖❖

## 5

8-11-86
சனி 1.00

சர்க்கரை தூவப்பட்ட எறும்புப் புற்றைப் போல் பரபரத்துக் கிடந்தது மதுரை தபால் நிலையம்.

பளீர்ன்னு வண்ணத்தை பூசிக்கொண்டு மெர்க்குரி விளக்கில் டாலடித்த அதன் எதிரே தமுக்கம் மைதான நுழைவு வாசலில் அருகே லோக்கல் வில்ஸ் ஃபில்ட்டரை ஊதிக்கொண்டு 'உம்' மென்று இருந்தான் அவினாஷ். அருகே ராஜகோபால். இருவரின் பிரதான மாருதி எதிர் சாரியில் சரஸ்வதி தியேட்டரை பார்த்து படர்ந்திருக்கும் சாலையில் ஒரு ஓரமாக நின்று கொண்டிருந்தது.

''ஏண்டா துபாய்க்கு கேபிள் கொடுத்தியே, யாருக்குடா?'' - ராஜகோபால் அவினாஷின் 'உம்' மிப்பை உடைக்கவும்-

''எங்க கன்ஸ்ட்ரக்ஷன் டிபார்ட்மெண்ட் ஏஜெண்ட்டுக்குடா'' என்றான் அவினாஷ்.

''பொய்!'' இது ராஜகோபால். அவினாஷின் நெற்றி உடனே புடைப்போடு ராஜகோபால் பக்கம் திரும்பியது.

''சம்திங் ராங் அவி. நீ பேப்பர் பார்த்ததுல இருந்தே சரியில்லை. அத்தோட ஐஸ்வர்யா கேசட் ஒரு அசாதாரண விஷயம். வேற என் கிட்ட கூடவா அவி உனக்கு ஒளிவு மறைவு?''

ராஜகோபால் மென்மையாய் வதங்கிப் பேசினான்.

''ஒளி மறைவு இல்ல ராஜகோபால். இது ஒரு புது சிக்கல். எப்படி சமாளிக்கறதுன்னு புரியமா குழம்பிகிட்டு இருக்கேன்! உன்னையும் சிக்கல்ல இழுத்துவிட விரும்பல நான். அதான்.''

''சிக்கலா... புரியும்படி சொல்லுப்பா.''

''ப்ளீஸ் வேண்டாம்!''

''டேய் சொல்லுடா. உன்னை ஏர்போர்ட்டுக்கு ரிசீவ் பண்ண உன் அப்பா அம்மா கூட வரலை. நான்தான் வந்தேன், ஞாபகம் வெச்சுக்கோ! நீ இந்த மண்ல குடிச்ச முதல் காபி எங்க அம்மா போட்ட காப்பி.

இந்த அளவு அந்யோன்யமான நமக்குள்ள ரகசியங்களா?''

''அதனால தான் யோசிக்கிறேன் ராஜகோபால். நீ ஒரு ரயில் ஸ்னேகிதமா இருந்தா இந்நேரம் உன்கிட்ட நான் எப்படி வேணும்னா நடந்துகிட்டிருப்பேன். ஆனா நம்ப நட்பு சகோதர பாசம்கற எல்லையை ஒட்டின ஒண்ணுடா. அதனால தான் நீயாவது நிம்மதியா இருக்கற மாதிரி நான் நடந்துக்க வேண்டி இருக்கு.''

''போதும் பீடிகை. விஷயத்துக்கு வா. புத்திய கொண்டு எதையும் சாதிக்கலாம். அவனவன் கொலையே பண்ணிட்டு



காலரை தூக்கி கிட்டு நடக்கறாண்டா நாட்டுல. அதை விடவா இது பெரிய சிக்கல்?''

''ஆமாண்டா'' என்ற அவினாஷ் காரணத்தோடு சற்று பின்னோக்கிப் போனான். பின்னோக்கி என்றால் 8-8-86க்கு!

❖❖❖

## 6

8-8-86
வெள்ளி 6.00

''குட்மார்னிங் அபி, ஹவ் ஆர் யூ?''

ஊசிப்பணி ஒழுகும் அந்த காலை வேளையில் ஜராக் அவென்யூ எதிரே ஒரு காபிடேரியாவில் அவினாஷ் அபி என்னும் அந்த வாலிபனை எதிர்கொண்டபோது மேலே படு இரைச்சலுடன் சாம்ராட் பறந்து கொண்டிருந்தது. அதன் வாலிலும், உடம்பிலும் தெரிந்து 'ஐஏ' என்னும் சிகப்பெழுத்துக்கள் அவினாஷை பரவசப் படுத்தின.

''இதுலதான் அபி என் ரிலேஷன்ஸ்வர்றாங்க! ஆனா இன்னிக்கு இல்ல, நாளைக்கு'' என்ற அவினாஷ் அந்த காபிடேரியா ஊழியன் தந்த பேரிச்சையும், திராட்சையும் கலந்த ஜூசை வாங்கி நாக்கில் பரவ விட்டான்.

அபி அதை கேட்டு அளவாக சிரித்தான். முகம் முழுக்க ஆஸ்திரேலியாவின் இதம்பதமான சூழ்நிலை உண்டாக்கியிருந்த வெளிற் சிகப்பு நிறம் தள தளப்போடு தெரிந்தது.

''நம்ம நாட்டுலு இருந்து ஒரு காக்கா கிளம்பிட்டே'' என்று அவனே தொடரவும் '' இன்னிக்கு எனக்கு மார்னிங்க் ஷிப்ட்டுப்பா, செவன் டு த்ரீ'' என்றான் அவினாஷ்.

''வழக்கமா டென்டு ஃபைவ் தானே நீ!''

''இன்னிக்கு ஸ்பெசிபிக்கா மார்னிங் ஷிப்ட் கேட்டு வாங்கி இருக்கேன்.''

''அப்படியா ஈவ்னிங் ஒரு பார்ட்டி இருக்கு வர்றியா?''

''பார்ட்டி!'' அவினாஷின் விழிகள் அநியாயத்துக்கு விரிந்தன.

''யா வரமுடியுமா உன்னால-''

''என்ன பார்ட்டி? வழக்கமான ட்ரிங்க்ஸ்.''

''நோ. இதுல வேற ஐட்டம்! ஜஸ்ட் லைக் இது ஒரு அண்டர் கிரவுண்ட் பார்ட்டி.''

''வாக். அப்டீன்னா லேடீஸ்...''

''லேடீஸ் மட்டும் இல்ல, டிரெஸ் இல்லா லேடீஸ்தான் இந்த பார்ட்டியோட ஹீட்.''

''டெஃபனட்லி வரேன்.''

சொன்னபடி அவன் வர, அவனோடு கூட அவினாஷ் சேர, அவர்களின் கார் ரியாத் சிடிக்கு மேற்கில் சரிந்து கொண்டிருந்த சூரியனை நோக்கி ஜிவ்வித்தது.

பாதை ஓரங்களில் அத்தனை பசுமையில்லை. தோண்டினால் மட்டுமே 'எண்ணெய் எண்ணெய்' என்கின்ற



மாதிரிகளில் கரும் பழுப்பில் புல்லைக் கூட விளைவிக்காத அந்த சாலைகள் அவர்களை வெறித்தன.

''எங்க உசிலம்பட்டி எப்படி செழிப்பா இருக்கும் தெரியுமா? பக்கமாதான் வைகை ஓடுது!'' அவினாஷ் பேசுவது எதுவுமே அபிக்கு புரியவில்லை. அபி பார்ட்டியின் அம்மணங்களில் அமிழ்ந்திருந்தான். அது அவினாஷிற்கு புரிந்தது.

-கார் பார்ட்டி பில்டிங்கை எட்டியது, ஊருக்கு ஒதுக்கில் ஒரு 'ட்ரை அண்ட் எர்ரர்' பாலிசியில் கட்டப்பட்ட தினுசில விளக்குகளால வெளீரிட்ட பங்களாவுக்கு வெளியே பல கார்கள்.

உள்ளே தூணுக்கு தூண் ஸ்டீரியோ 'ஹேய் ஐ அண்ட் யூ' என்றது.

-குறுந்தாடியும் கோப்பை விஸ்கியுமாக நிறையப் பேர்! அநேக பெண்கள் படுகாற்றோட்டமாக காணப்பட்டார்கள்.

''அபி நான் கட்டுப்பாட்டுல ஊறிப்போன ஒருஅரபு நாட்டுலதான் இருக்கேனா, இல்லை இந்தியாவுலையா?'' அவினாஷ் உற்சாகத்துடன் கத்தி விட்டான்.

பார்ட்டி ஹாலில் ஒரு பருமனான மனிதர் தெரிந்தார். ஷேக்குகளைப் போல் கருத்த அங்கிக்குள் முகத்தை தவிர அனைத்தையும் மூடிக் கொண்டிருந்தார்.

''இவர் பேர் கலாம். இவர்தான் இந்த பார்ட்டிக்கெல்லாம் மூல காரணம்!'' அவினாஷிற்கு கலாமை அறிமுகப்படுத்தி வைத்தான் அபி.

''ஹலோ...''

''ஹலோ...''

இப்பொழுது அடிவயிற்றில் காற்றமுத்த மண்டலம் கடல்மேல் புயலாய் மையங் கொள்வது போல் போதை வந்து மையங் கொண்டு அவனை ஒரு தூக்கு தூக்கியது.

கண்கள் செருகிக் கொள்ள அவன் இலேசான போது காத்திருந்த மாதிரி கலாம் தோள் கொடுத்து தூக்கிக் கொண்டு அடுத்த அறைக்குள் அவனோடு நுழைந்து கதவை தாள் போட்டுக் கொண்டான்.

அபியை ஒரு புதிய பெண் வந்து வளைத்துக் கொண்டிருந்தாள்!

❖❖❖

## 7

9-8-85
**சனி காலை 7 மணி**

**ஒ**ட்டிக் கொண்டு விட்ட இமைகளை விலக்கி வெளிபுலகை அவினாஷ் பார்த்த போது தூக்கிவாரிப் போட்டது. பார்ட்டி நடந்த ஹாலின் மையத்தில் வெறும் ஜட்டியோடு அவன் கிடப்பது தெரிந்தது.

சற்றுத்தள்ளி அபி... ஏறத்தாழ அவனும் அதே நிலையில்! மூளையை கிள்ளிவிட்டு நேற்று பார்ட்டியில் நடந்ததை யோசிக்க முனைந்தான்.

ஊஹூம் எதுவுமே ஞாபகத்தில் இல்லை.

'தயவு செய்து எதையும் சிந்திக்காதே- எனக்கு மிகவும் வலிக்கிறது'- என்று மூளை கெஞ்சுகின்ற மாதிரி தோன்றியது.



எழுந்திருந்து அபி'யைப் போய் எழுப்ப அவனும் இவனைப்போலவே எழுந்திருந்து மலங்க மலங்க விழித்தான்.

''விடிஞ்சுடுச்சா... மை காட், நம்ம கூட பார்ட்டியில கலந்துகிட்டவங்கள்ளாம் எங்க?''

அபியின் கேள்விக்கு வெறுமை நிரம்பிய அந்த பார்ட்டி ஹால் பல்லைக் காட்டியது.

''எல்லாரும் போய்ட்டாங்களா, மைகாட்...'' பேசிக்கொண்டே எழுந்து நிற்க முயன்றான் அபி. முடியவில்லை. போதை இன்னும் விலகியிராத மாதிரி தோன்றியது.

அவினாஷ் கசங்கிப் போயிருந்தான். தனது உடுப்பைத் தேட ஆரம்பித்தான். பார்ட்டி ஹாலில் இல்லை. தான் மது அருந்திய அறைக்குள்ளே நுழைந்து தேடினான். அங்கேயும் இல்லை!

மெள்ள ஊடுருவி அதனுள்ளே தெரிந்த இன்னொரு அறைக்குள் நுழைய அங்கே பஞ்சணை போன்ற மெத்தையில் அவனது உடுப்புகள் கிடந்தன.

''இங்கே என் உடுப்புகள் எப்படி வந்தன?'' - கேள்வியோடு எடுத்து அணிந்து கொண்டு, எதுவும் பேசாத அசாத்ய மௌனமும் குழப்பமுமாய் அந்த கட்டடத்துக்கு வெளியே வந்தபோது அவர்கள் கார் மட்டும் அனாதையாக நின்று கொண்டிருந்தது.

''அபி எல்லாம் ஒரே மர்மமா இல்ல?''- அவினாஷின் கேள்வி அபியை சிரிக்க வைத்தது.

''உனக்கு தான் மர்மமெல்லாம். எனக்கு இதுபழகிப் போன விஷயம். நாம புதுக்குடி காரங்க! இப்படித்தான் விழுந்து

இப்பொழுது அடிவயிற்றில் காற்றழுத்த மண்டலம் கடல்மேல் புயலாய் மையங் கொள்வது போல் போதை வந்து மையங் கொண்டு அவனை ஒரு தூக்கு தூக்கியது.

கண்கள் செருகிக் கொள்ள அவன் இலேசான போது காத்திருந்த மாதிரி கலாம் தோள் கொடுத்து தூக்கிக் கொண்டு அடுத்த அறைக்குள் அவனோடு நுழைந்து கதவை தாள் போட்டுக் கொண்டான்.

அபியை ஒரு புதிய பெண் வந்து வளைத்துக் கொண்டிருந்தாள்!

❖❖❖

## 7

9-8-85
**சனி காலை 7 மணி**

ஒட்டிக் கொண்டு விட்ட இமைகளை விலக்கி வெளியுலகை அவினாஷ் பார்த்த போது தூக்கிவாரிப் போட்டது. பார்ட்டி நடந்த ஹாலின் மையத்தில் வெறும் ஜட்டியோடு அவன் கிடப்பது தெரிந்தது.

சற்றுத் தள்ளி அபி... ஏறத்தாழ அவனும் அதே நிலையில்! மூளையை கிள்ளிவிட்டு நேற்று பார்ட்டியில் நடந்ததை யோசிக்க முனைந்தான்.

ஊஹூம் எதுவுமே ஞாபகத்தில் இல்லை.

'தயவு செய்து எதையும் சிந்திக்காதே- எனக்கு மிகவும் வலிக்கிறது'- என்று மூளை கெஞ்சுகின்ற மாதிரி தோன்றியது.



எழுந்திருந்து அபி'யைப் போய் எழுப்ப அவனும் இவனைப் போலவே எழுந்திருந்து மலங்க மலங்க விழித்தான்.

''விடிஞ்சுடுச்சா... மை காட், நம்ம கூட பார்ட்டியில கலந்துகிட்டவங்கள்ளாம் எங்க?''

-அபியின் கேள்விக்கு வெறுமை நிரம்பிய அந்த பார்ட்டி ஹால் பல்லைக் காட்டியது.

''எல்லாரும் போய்ட்டாங்களா, மைகாட்...'' பேசிக்கொண்டே எழுந்து நிற்க முயன்றான் அபி. முடியவில்லை. போதை இன்னும் விலகியிராத மாதிரி தோன்றியது.

அவினாஷ் கசங்கிப் போயிருந்தான். தனது உடுப்பைத் தேட ஆரம்பித்தான். பார்ட்டி ஹாலில் இல்லை. தான் மது அருந்திய அறைக்குள்ளே நுழைந்து தேடினான். அங்கேயும் இல்லை!

மெள்ள ஊடுருவி அதனுள்ளே தெரிந்த இன்னொரு அறைக்குள் நுழைய அங்கே பஞ்சணை போன்ற மெத்தையில் அவனது உடுப்புகள் கிடந்தன.

''இங்கே என் உடுப்புகள் எப்படி வந்தன?'' -கேள்வியோடு எடுத்து அணிந்து கொண்டு, எதுவும் பேசாத அசாத்ய மௌனமும் குழப்பமுமாய் அந்த கட்டடத்துக்கு வெளியே வந்தபோது அவர்கள் கார் மட்டும் அனாதையாக நின்று கொண்டிருந்தது.

''அபி எல்லாம் ஒரே மர்மமா இல்ல?''- அவினாஷின் கேள்வி அபியை சிரிக்க வைத்தது.

''உனக்கு தான் மர்மமெல்லாம். எனக்கு இதுபழகிப் போன விஷயம். நாம புதுக்குடி காரங்க! இப்படித்தான் விழுந்து

கிடப்போம். மத்தவங்க அப்படியில்ல... கவலைப்படாதே அவினாஷ், நத்திங் டு ஓர்ரீட் அபௌட் இட் கமான்...''

-காரில் ஏறிக்கொள்ள அது சீறிய சீறலில் அவினாஷ் இனம் தெரியாத ஒரு கோப வயப்பட்டிருப்பது தெரிந்தது.

போகும்போது அபி கேட்டான்.

''அவினாஷ் நாளைக்கும் பார்ட்டி இருக்கு வர்றீயா?''

-அந்த கேள்விக்கு வேகமாக மறுப்பாக தலையை அசைத்தான் அவினாஷ்.

''வேணாம்ப்பா... வினோதமான பார்ட்டியா இருக்கு இது. என்ன நடந்துச்சு, ஏது நடந்துச்சுன்னே தெரியாதபடி...''

அபி அதற்கு மேல் வற்புறுத்தவில்லை. ஆனால் சில நிமிடங்களுக்குள்ளேயே அவினாஷ் மனம் மாறிவிட்டான்.

''வர்றேன் அபி... நான் எப்படி அந்த அறைக்குள்ளே கிடந்தேங்கறது எனக்கு தெரிஞ்சாகணும்...'' - என்றான்.

-அபி சந்தோஷத்தோடு அவன் தோளை 'சியர் அப்' பாணியில் தட்டி விட்டான்.

❖❖❖

## 8

10-8-85

**ஞாயிறு மாலை 6 மணி**

பார்ட்டி ஹால் வழக்கம் போல கலகலப்பாயிருந்தது! மாணவரியாய் முத்தம் கொடுத்துக் கொண்டு, இடுப்பை கிள்ளிக் கொண்டு...



வழக்கம் போல் தென்பட்டான் கலாம்.

''எனக்கு தெரியும். ஒரு தடவை இங்க வர்றவங்க அப்பறம் விடமே மாட்டாங்கன்னு...'' -கலாம் சொல்லிவிட்டு வாங்க அறைக்கு போகலாம் என்று அழைத்தான்.

அவினாஷ் சற்று சுதாரிப்பாக இருந்தான். என்ன நடக்கிறது, ஏது நடக்கிறது என்பதை தெரிந்து கொள்ளும் ஆர்வம் அவனுக்குள்ளே கொடி கட்டியிருந்தது.

அந்த வெளிர் நீல வெளிச்சம் பரவிய அறையில் இந்த முறை எல்லோரும் சற்று வயதானவர்களாகவே இருந்தனர். சிலர் பார்வை அவினாஷின் மேலேயே இருந்தது!

கலாம் மதுவை கண்ணாடி கோப்பையில் நிரப்பி எடுத்து வந்து நீட்டினான். அவினாஷ் மறுத்து விட்டான். கலாமுக்கு இடித்தது.

''ஏன் வேண்டாங்கறே?'' கலாமின் கேள்விக்கு அவினாஷிடம் பதிலில்லை. அபி வாங்கிக் குடிக்கச் சொன்னான். தானும் வாங்கிக் கொண்டான். ஆனாலும் அவினாஷ் அசைந்து கொடுக்க வில்லை.

''ரொம்ப போதை ஏறி நடக்கறதே ஒன்னும் தெரியமாட்டேங்குது அபீ... ஆமா ஐட்டம் எங்க?''-அபியிடம் இசைவாக வந்து கடிந்து கொண்டான் அவினாஷ்.

அபி கலாமை பார்த்து சிரிக்க மூவரும் இன்னொரு அறைக்குள் நுழைந்தனர். அந்த அறை முழுக்க அசாத்யமான ஒரு வெளிச்சம். நடுவே ஒரு கருநீல வெல்வெட் மெத்தை பாவியகட்டில்.

அதன்மேல் நாற்பது வயது மதிக்கத்தக்க பெண் ஒருத்தி.

கலாம் அவளை நோக்கி இருவரிடமும் கைகாட்டி 'எஞ்ஜாட் இட்' என்றான். அவள் பதிலுக்கு மில்லி கிராமில் சிரித்தாள்.

அவினாஷ் ஒரு கணம் புரியாமல் நின்றான்.

பளீரென்ற வெளிச்சம். வயதுக்கு மீறிய பெண். பக்கத்தில் அபி, கலாம் என்று மனித சூழல்!

அந்தரங்கத்தில் பிறரறியாமல் வீணை வாசிக்கின்ற மாதிரி கொஞ்சிக் கொஞ்சி குலாவிக் குலாவி லீலைகள் செய்வதை விட்டு விட்டு, இப்படி வெளிச்சத்தில் அபி, கலாம் என்று ஆட்களை வைத்துக்கொண்டு...

அவன் யோசித்துக் கொண்டிருக்கும் போதே கலாம் அந்த இடத்தைவிட்டு கழண்டு கொண்டு விட்டான். கதவு இறுக்கமாய் மூடிக்கொண்டாற்போல் 'பட்டென்று' சப்தம் போட்டு தாள் போட்டுக்கொண்டது.

சுற்று சுவர் முழுக்க வெள்ளை வெளேர் என்று பெயிண்டை பூசிக்கொண்டு ஜொலித்துக் கொண்டிருந்தது. அபியால் எதையும் பார்த்து நிதானிக்க முடியவில்லை.

மளமளவென்று கதவு சாத்தப்பட்ட வேகத்தில் அவினாஷைகூட சட்டை செய்யாமல் அந்த பெண்ணை நெருங்கினான். அவள் எழுந்திருந்து 'அபி'யை அப்படியே இறுக்கிக் கொண்டு ஒரு வினாடி கலவரமாய் நிற்கும் அவினாஷைப் பார்த்தாள்.

அவினாஷை ஆசையையும் மீறி வெட்கமும், விழிப்பும் வந்து வளைத்துவிட்டிருந்ததபடியால் அவனால் 'அபி' யைப் போல் துணிய முடியவில்லை.



அபிக்கு இந்த உலகமே மறந்து போய்விட்டிருந்தது. காய்ந்த மாட்டிற்கும் தனக்கும் வேறு பாடில்லாத தினுசில் அவளை அப்படியே... அவளோ அவினாஷையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''வா அவினாஷ்'' கண்களாலேயே பத்திரிகை வைத்தாள். அவினாஷின் உடம்பில் எறும்புகள் ஊறத் தொடங்கும்போது விர்ர்ச் என்று இலேசாய் சப்தம்.

பட்டாம்பூச்சி ஏதும் பறக்கிறதா? சுற்றிச் சுற்றிப் பார்த்தான். ப்ளீரிடும் வெளிச்சத்தில் பூச்சியாவது பூதமாவது...

ஆனால் அந்த விர்ர்ர் சப்தம் நின்ற மாதிரியில்லை. அவன் அவர்களை கவனிப்பதை விட்டு விட்டு சப்தத்திற்கு காதைக் கொடுத்து நின்றபோது அந்த பெண் அதை உணர்ந்தவளைப் போல அபியை தள்ளிவிட்டு எழுந்து வந்து அவினாஷை நெருங்கி நின்றாள்.

அவள் அவன் எதிரில் இடுப்பு உடுப்பை கழட்டி விட்டாள். அவினாஷ் சுண்டிவிடப்பட்டான்.

இதுதான் சமயம் என்று அவள் அவனை கைகளால் வளைத்து இதழைத் தேடி இச்ச்... இச்ச்...

அவினாஷ் அந்த உதட்டு உரசலில் தன்னை முழுவதுமாய் அவளோடு அப்படியே படுக்கை மேல் போய் விழுந்தான்.

இந்தப் பக்கம் அபி, இந்தப் பக்கம் அவினாஷ், நடுவில் அவள். ஊடே விர்ர்ர்! சப்தம்.

அடிக்கடி அவினாஷின் நினைவு தவ்வி தவ்வி அந்த சப்தத்தை பின் தொடர்ந்தது. அவள் அவனை மல்லாக்க கிடத்திவிட்டு தான் மேலே விழுந்தாள்.

இப்பொழுது அவினாஷ் கண்களை கூசும் வெளிச்சம் வந்த பல்புகளைப் பார்த்தான். அதற்கு பக்கத்தில் அது என்ன சிறிதாய் கருப்பாய் ஒரு துவாரம்?

அவனை அதிக நேரம் அவள் ஊன்றவிட வில்லை. புரட்டி எடுக்க ஆரம்பித்தாள். அவினாஷிற்குள் ஆர்வமும், சிவப்பு விளக்கும் மாறி மாறி எரிந்து அணைந்தன.

''கதைகளில் கேள்விப்பட்டிருக்கும் சம்பவம் ஏதும் தன்னை சுற்றி நிகழ்கிறதா?'' - அவன் யோஎசிக்க யோசிக்க அவள் விடாமல் கலைத்தாள். அபி அதற்கு ஒத்துழைத்தான்.

ஒரு வழியாக எல்லாம் முடிந்து-களைப்போடு இருவரும் வெளியே வந்தபோது அவளும் அவர்களோடு சேர்ந்து வந்தாள்.

கலாம் சிரித்துக் கொண்டே பதில் சொன்னான்.

''ஆள் யாருங்கறது இருக்கட்டும். கம்பெனி நல்லா இருந்துச்சா?''

''பரவால்ல. ஆமா நாங்க இருந்த ரூம்ல எதுக்கு அவ்வளவு லைட்டு? அதை அணைக்கலாம்னா ரூம்ல ஸ்விட்சையே காணோம். கதவையும் திறந்துகிட்டு வெளிய வரமுடியலையே ஏன்?''

கேட்க வேண்டிய கேள்வியை கேட்டான் அவினாஷ் கொஞ்சம் வித்தியாசமா. லேசான முறைப்புடன் அவினாஷை பார்த்தான் கலாம். பிறகு பேசினான்.

''அந்த லேடி ஒரு பெரிய பணக்காரி. அவளுக்கு அடிக்கடி உங்கமாதிரி இளைஞர்களோட கம்பெனி தேவைப்படும். அதுக்காக இங்க வருவா. இந்த பார்ட்டி



பிளேஸ் அதுக்கு ஏற்ற இடம். அவளுக்கு வெளிச்சத்துலன்னா இஷ்டம். அதுக்கு இந்த பார்ட்டி பிளேஸ்ல உதவுவேன். அதுக்காக அவ எனக்கு பணம்கூடத் தருவா? இவ்வளவுதான் விஷயம்.''

அவினாஷிற்கு அந்த பதில் மிக செயற்கையாக பட்டது. கலாமை அவனும் பதிலுக்கு சந்தேகப் பார்வை பார்த்துவிட்டு ''விர்ர்ர்னு ஏதோ காமிரா ஓட்ற மாதிரி சப்தம் வேற கேட்டிக்கிட்டடிருந்திச்சு'' என்றபோது அபிக்கு தூக்கி வாரிப் போட்டது.

''விர்ர்ர் சப்தம் ஒரு காமிரா ஓட்டற சப்தமா? அப்படின்னா நம்ம லீலைகள் படமாயிருக்கா?'' அவனுக்குள்ளே கேள்விப் பொறி வெகுவேகமாய் பிறந்து பறந்தது. முகம் திடும்மென்று கடுமையாகி கலாமை நோக்கி வெறித்தது.

''கலாம் உண்மையைச் சொல்லு... இந்த பார்ட்டி பிளேஸ் பற்றி நீயா வந்து தகவல் சொல்லி எனக்கு இன்வைட் பண்ணது எதுக்கு? அவினாஷ் சொல்லச் சொல்லத்தான் எனக்கும் மெள்ள சந்தேகம் வருது. இங்க என்னவோ நடக்குது! என்னன்னு எனக்கு தெரிஞ்சாகணும். நான் ஒரு தாப்பாயில வடிகட்டின மடையன். பொம்பளை விஷயம்னா என்னால முன் கூட்டியே உஷாரா யோசிக்க முடியாம போயிடுது.

கமான் கலாம், என்ன விஷயம், உண்மையைச் சொல்லு''

-கலாம் இருவரின் பேச்சாலும் கறுத்து விட்டிருந்தான்.

என்ன செய்வதென்று புரியாத குழப்பத்தில் தடுமாறுவது தெரிந்தது. சரியாக இந்த நேரம் பார்த்து 'வீடியோ

காமிரா' ஒன்றுடன் ஒரு நபர் ஒரு அறையிலிருந்து இன்னொரு அறைக்கு மாறிச் செல்ல அதை பார்த்த 'அபி' அப்படியே நெஞ்சை கையில் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான்.

ஏறத்தாழ அவினாஷிற்கும் அதே நிலை. இதற்குள் கலாம் ஒரு முடிவிற்கு வந்நவன் போல் தெளிந்து விட்டிருந்தான். இருவரையும் உற்றுப் பார்த்து பேசினான்.

''ஏன் நீங்க இவ்வளவு பதட்டப்பட்றீங்க' இப்ப என்ன நடந்து போச்சு? செக்ஸ்ங்கறது ஒரு தெய்வீக விளையாட்டு! அதை கிரிக்கெட், டேபிள் டென்னிஸை ஷூட் பண்ற மாதிரி ஷூட் பண்றதுங்கறது இங்க நடக்கற பார்ட்டியில ரொம்ப சகஜம்.

சிலர் இதை விரும்புவாங்க. சிலர் இதை விரும்பமாட்டங்க. நீங்க எப்டிங்கறது எனக்கு தெரியாது. அதுக்காக படம் எடுக்காம இருக்கறது எங்களால முடியாத விஷயம்.''

-கலாமின் பேச்சு அவினாஷையும், அபியையும் மரணப் பள்ளத்தாக்கில் பிடித்து தள்ளினால் போல் இருந்தது.

''இந்த சந்தோஷத்துக்காக சொத்துக்களையே இழந்தவங்கல்லாம் இருக்காங்க. உங்களுக்கு காலணா செலவில்லாம ஒரு கட்டுப்பாடு மிகுந்த நாட்டுல கிடைச்சுருக்குன்னா அதுக்கு நீங்க சந்தோஷப்படணும். டேக் இட் ஈஸி.''

-கலாம் பேசப்பேச அவனாஷினுள் கோபம் எரிதலைக்கு அஸ்திவாரமிட்டுக் கொண்டிருந்தது. அதே சமயம் வசமாய் மாட்டிக் கொண்ட மாதிரியும் ஒரு வேதனை. இரண்டுக்கும் ஊடே அவினாஷ் புழுவாய் நெளிந்தபடி 'அபி'யை பார்த்தான். அபியின் கண்களை நீர் வந்து மூடியிருந்தது.



கலாம் அதை பார்த்து சிரித்து விட்டான்.

''அடடே... ரொம்ப துணிச்சாலனவங்க நீங்கன்னு நெனைச்சுகிட்டிருக்கேன். இப்படி அழுவறதை பார்த்தா வேடிக்கையா இருக்கு. நீங்க என்ன பொம்பளையா-''. வேடிக்கையாக கேட்டான் இப்பொழுது கலாமை சுற்றி இரண்டு முரட்டு மனிதர்கள் வேறு வந்து நின்ற கொண்டிருந்தார்கள்.

''அபி, வசமா மாட்டிகிட்டோண்டா. கத்தறதுலையோ, அழறதுலையோ ஒரு பிரயோஜனுமுமில்லை. கொஞ்சம் புத்திசாலித்தனமாத்தான் போயாகணும். நம்ம கைக்கு எப்படியாவது அந்த பிலிம் சுருள் வந்தாகணும். அதுக்கு என்ன பண்ணலாம்.

இந்த கலாம் பணத்துக்கு மசிஞ்சவனா?''

-அவினாஷ் மிக வேகமாய் புத்திசாலித்தனத்தோடு 'அபியின் காதை கடிக்க அபி எழுந்து கலாமை நெருங்கி 'உன்னிடம் கொஞ்சம் தனியாக பேசவேண்டும்' என்று அவனை நகர்த்திக் கொண்டு போனான்.

பிறகு சில நிமிடங்கழித்து உற்சாகமாக திரும்பி வந்தான்.

''அவினாஷ். கவலைப்படாதே! நாம தப்பிச்சுக்க வழி இருக்கு. கலாம் நம்ம பிலிம் சுருளை தந்துடறேங்கறான். ஆனா அதுக்கு விலை பணம் கிடையாது. இன்னொரு வேலை நீ பண்ணணும்'' என்றான்.

''என்ன பண்ணனும் அபி. எதுவா இருந்தாலும் சரி செஞ்சு அந்த பிலிம் சுருளை வாங்கப் பார்ப்போம். இல்லேன்னா மானம் போயிடும் அபி...'' - அவினாஷ்

நடுநடுங்க பேசி அபியிடம் விடை கேட்க அபி அதன் பொருட்டு இதழ்களை திறந்தான்.

''தமிழ் நாட்டுல ஐஸ்வர்யான்னு ஒரு நடிகை இருக்கறதா சொன்னேல்ல?''

''ஆமா!''

''அவ நடிச்ச புளு பிலிம் கேசட் வேணுமாம். அதை தந்துட்டு நம்ம கேசட் பிலிமை எடுத்துக்கறதாம்.''

-அவினாஷிற்கு தலையே சுழற்றியது.

''அடேய், அந்த ஐஸ்வர்யா என்ன புளு பிலிம்ல நடிக்கற சீஃப்பான ஆர்ட்டிஸ்டாடா? அப்படியே இருந்தாலும் இந்த மாதிரி விஷயத்தை என்னால் எப்படிடா முடிக்க முடியும்? நான் ஐஸ்வர்யாயையும் நேர்ல பார்த்ததுல்ல. வீடியோ கேமிராவையும் பார்த்ததுல்ல. இது எப்படிடா சாத்யம்? இல்லாத ஒரு ஊருக்கு வழி கேக்கறானா இந்த கலாம். டேய் இந்த கலாம் ஒரு பெரிய கிரமினல்டா. நாம நல்லா மாட்டிக்கிட்டோம். நம்ம கீழ்த்தரமான ஆசைக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும்.''

-வாய் விட்டு பட்டாசாய் வெடித்து கதறினான் அவினாஷ். கலாம் அதை கேட்டுக் கொண்டே வந்து அவினாஷின் தோளில் கைகளை போட்டான்.

''ரொம்ப புலம்பாதே அவினாஷ்.

தைரியமா சிந்திச்சா இது ரொம்ப ஈஸியான ஒரு விஷயம். ஐஸ்வர்யா மாதிரியே இங்க ஒருத்தி இருக்கா ஏறத்தாழ அவ ஸ்ட்ரக்சர். எங்களுக்கு ஐஸ்வர்யாவோட நியூட் ஸ்டில் கிடைச்சாகூட போதும். காமிரா வித்தையினால ஐஸ்வர்யாவோட டூப்பை வெச்சா ஒரு படத்தை எடுத்துடுவோம்.



ஐஸ்வர்யாவுக்கு இப்ப இங்க ஏக வரவேற்பு. எப்படியாவது அவ குளிக்கும் போது ஒரு பத்து நிமிஷத்துக்கு படம் எடுத்துகிட்டு வந்து தந்துடு. அது போதும்.''

-கலாமின் பேச்சு அவினாஷை எரிமலையாகவே ஆக்கி விட்டது.

''கிறுக்கனாட்டம் பேசாதே கலாம். அவ குளிக்கும்போது படம் எடுத்து தர்றதா? இது நடக்கற விஷயமா? அவளை பார்க்கணும்னாலே அப்பாயின்ட்மென்ட் இல்லாம முடியாது. சினிமாவுல கூட அவ ஆபாசமா நடிச்சது கிடையாது.

ரொம்ப சாதாரணமா சொல்றையே! இதே தொழிலா இருக்கற உன்னாலயே முடியலையே. தெரியாத்தனமா இங்க வந்து மாட்டிக்கிட்ட எங்களால என்ன செய்ய முடியும்? விளையாட்றையா?''

-துப்பாக்கியிலி நந்து ரவை சிதறுகின்ற மாதிரி வார்த்தைகள் வெளிப்பட்டன அவினாஷிடம்.

அதனால் கலாம் துளியும் பாதிப்படையவில்லை. அழையாத புன்னகையை முகத்தில் தேக்கிக் கொண்டு தீர்க்கமாக அதற்கு பதில் தரும் பாவனையில் பேசினான் கலாம்.

''மெட்றாஸ்ல இது விஷயமா அனுபவமுள்ள ஒருத்தன் உனக்கு உதவி செய்வான். நீ அவன் கூட மாட ஒத்தாசை பண்ணினாக்கூட போதும். காரியம் கச்சிதமா முடிஞ்சிடும்.''

''ஐஸ்வர்யா பற்றி உன்னைவிட எனக்கு அதிகம் தெரியும். முடியாததைப் பற்றி நெனைச்சி அதை இரண்டு கோழைகள் கிட்ட வெச்சு பேச நான் ஒண்ணும் முட்டாள் இல்லை. உங்க பிலிம் கேசட் உங்களுக்கு வேணும்னா சொல்றதை கேட்டு செயல்படுங்க.''

சவமாக மாறி இருவரும் தலையசைத்தனர்.

பிறகு ஒரு வாரத்தில் இருவரும் சென்னை புறப்பட கலாம் ஏற்பாடு செய்துதந்தான். சென்னை விமான நிலையத்தில் அவினாஷையும், அபியையும் கலாம் சொன்ன அந்த மனிதன் வரவேற்று அழைத்து சென்றான்.

அவன் எப்படி தான் திட்டம் தீட்டியிருக்கிறேன் என்பதை விவரித்தான்.

அதன்படி எல்லாம் நடந்து முடிந்தது. ஒரு காரியமும் பிசிறடிக்கவில்லை. அத்தனை கச்சிதமான திட்டமிடுதல்!

முடிவாக ஐஸ்வர்யா குளிக்கும் முழுநிர்வாண கேசட் அவினாஷின் கைகளில் வந்து அடங்கியது!

அவினாஷிற்கு எல்லாமே கனவு போல் தோன்றியது. பத்ரம், ஜாக்கிரதை என்று அந்த நிமிடம் ஓடக்கூடிய உயிர்ச் சித்திரத்தை ஒரு புராண திரைப்படத்தின் இடையில் செருகித் தந்து விமானத்தில் அனுப்பி வைத்தான் அவன்.

விமானத்தில் ஏறுவதற்கு முன் ''இங்க நடந்த எந்த சம்பவமும் யாருக்கும் தெரியக்கூடாது. நாம கூட்டா சேர்ந்து தப்பு செஞ்சிருக்கோம். ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும். பிரிண்ட் நேரா கலாமுக்குதான் போகணும். கலாம் ரொம்ப முரட்டு ஆசாமி, ஏழெட்டு கொலை பண்ணினவன். பார்த்து நடந்துக்குங்க.



அங்க ஏர்போர்ட்டுல கலாம் தயாரா இருப்பான். நடுவுல எங்கேயாவது 'டைவ்' அடிச்சு இந்த காப்பியை வைச்சு பிரிண்ட் போடற குரங்கு வேலையெல்லாம் செய்ய மாட்டீங்கன்னு நம்பறேன். ஆல்தி பெஸ்ட்!''

அந்த விமானம் ஆகாயம் கிழிக்க சீறியது. பிறகு அன்னமாய் தரை இறங்கியது. விமான நிலையத்தில் எதிர்பார்த்தபடியே கலாம்.

''என்ன எல்லாம் சக்சஸ்தானே?'' கேட்டான்.

''உம்!'' இது அவினாஷ்.

''இதெல்லாம் சாத்யமான்னு கேட்டியே என் பவரை பார்த்தியா? இப்ப என்ன சொல்றே?''

''நீ பயங்கரமான ஆளுதான். உன் கேசட் இருக்கட்டும் எங்களோட கேசட்?'' - அபி

கலாம் இதற்கு பெரிதாக சிரித்தான்.

''உங்க கேசட்டை பார்த்துட்டு எல்லாரும் சிரிச்சாங்க. சரியான கிழட்டுப் பசங்கன்னு சொல்லி கமெண்ட் அடிச்சாங்க. அவசியம் அந்த கேசட் வேணுமா?'' இடக்காக கேட்டான்.

''அதுக்காகத்தானே செய்யக் கூடாத காரியமெல்லாம் செஞ்சுருக்கோம். கலாம் உனக்கு புண்யமா போகட்டும். மொத எங்க கேசட்டை கொடு.'' அவினாஷ் கெஞ்சினான்.

''இது ஒரு முட்டாள் தனமான கோரிக்கை தம்பி. உன் கேசட் இன்னேரம் குறைஞ்சபட்சம் இருபதைஞ்சு பிரிண்டாவது போடப்பட்டிருக்கும். ரொம்ப குறைஞ்ச ரேட்டுக்கு வித்தாலும் எனக்கு பல ஆயிரம் கிடைக்கலாம்.''

''உனக்கு வேணும்னா கூலி தரேன் கேசட்டை கேட்காதே.'' சொல்லும்போதே வெடுக்கென்று அவினாஷின் கைகளிலிருந்த ஐஸ்வர்யா கேசட் அடங்கிய சூட்கேஸை வெடுக்கேன்று பிடுங்கிக் கொண்டான்.

அவினாஷின் உயிர் சுண்டி விடப்பட்டு அவனை அப்படியே மயங்க வைத்தது. அபி சுதாரித்து தாங்கிக் கொண்டான்.

❖❖❖

## 9

8-11-86, 2.30

ராஜகோபாலின் தொண்டையில் முள் சிக்கிக் கொண்டாற் போல் ஒரு அடைப்பு.

அவினாஷ் சொன்ன அந்த நீண்ட பிளாஷ்பேக்கின் பின்னணியில் இப்படி ஒரு அதிர்ச்சி தரும் விஷயங்கள் இருக்கும் என்று அவன் நினைக்கவேயில்லை.

அவினாஷின் கண்கள் ஒழுகிக் கொண்டிருந்தன.

''ராஜகோபால் கேவலமான செக்ஸ் உணர்ச்சிக்கு ஒருத்தன் ஆட்பட்டா எவ்வளவு இடைஞ்சல் வரும்கறதுக்கு நான் ஒரு பக்கா உதாரணம்.

அவனவன் வெளிநாடு போனா பெரிய பணக்காரனா வருவான். நான் குற்றவாளியா வந்திருக்கேன். இப்பவும் நான் கலாமோட பிடியில இருந்து விடுபடலை. ஒதுக்கி இருக்கேன்.

என் மானம் அன்றாடம் வீடியோ கேசட்ங்ற விஞ்ஞான சாதனம் மூலமா அழிஞ்சுகிட்டு இருக்கு. எல்லாத்துக்கும்



சிகரம் ஐஸ்வர்யா குளிக்கும்போது அவளுக்கு தெரியாம எடுத்த வீடியோ படம்தான்.

இந்த விஷயம் அவளுக்கு தெரிஞ்சதனால தான் அவ இப்படி ஆயிட்டாளேன்னு எனக்கு பயமா இருக்கு. அவ கொஞ்சம் துணிஞ்சு விஷயத்தை பெரிசுபடுத்தினா என் நிலையும் அந்த குளியல் காட்சியை எடுத்தானே அவன் நிலையும் சந்தி சிரிச்சாலும் சிரிச்சிடும்.

கலாம் கழுவற தண்ணியில நழுவற மீன்.''

நீளமாக பேசி மிக வருந்தி நின்ற அவினாஷிடம் ஆவல் ததும்ப கேட்டான் ராஜகோபால்.

''ஆமா யார் அந்த ஆளு? அந்த குளியல் காட்சியை அவன் எப்படி எடுத்தான்?''

''நேரம் வரும் சொல்றேன். தயவு செய்து என்னை இதுக்கு மேல எதுவும் கேட்காதே. எனக்கு அவனைத்தான் தெரியும். அவன் பேரைத் தெரியாது.'' அவனாஷின் பதில் ராஜகோபாலை ஊமையாக்கியது.

❖❖❖

## 10

9-11-86
காலை 9.00

ஷூட்டிங்கிற்கு கிளம்ப தயாராக இருந்தாள் ஐஸ்வர்யா. அவள் காத்திருத்தலுக்கு ஏற்ப டைரக்டர் ராம்நாத் போன் செய்து 'செட் ரெடி' என்று தகவல் தரவும் பி.ஏ. மாணிக்க வாசகத்துடன் ஸ்டுடியோவிற்குக் கிளம்ப தயாரானாள்.

இதற்குள் அவளது சித்தி ஓடி வந்து திருஷ்டி கழித்தாள்.

துவட்டலான நடை நடந்து காரில் ஏறிய ஐஸ்வர்யாவை தொடர்ந்து மாணிக்கவாசகம் முன்புறம் ஏறிக் கொண்டான்.

''மேடம் சீன் சிச்சுவேஷன், டைலாக்பேப்பர் எல்லாம் காலைலயே வந்துடுச்சு. நீங்க மூட்ல இல்ல. அதனால நான் சொல்லலை. இப்ப சொல்லவா?'' மாணிக்கவாசகம் மிகப் பணிவாய் விசாரித்தான்.

'உம்' கொட்டினாள் ஐஸ்வர்யா.

''கதைப்படி உங்களை இன்னிக்கு வில்லன் ரேப் பண்ணப் பார்க்கிறான். நீங்க அவன்கூட போராடி உங்க கற்பை காப்பாத்திக்க முயற்சிக்கறீங்க. அப்புறமா கதாநாயகன் வந்துட்டாரு. உங்களை காபாத்திட்றாரு. இதுதான் இன்னிக்கு எடுக்க போற ஷாட். டயலாக் ரொம்ப கம்மிதான். 'என்னை விட்டுடு என்னை விட்டுடுன்னு' அடிக்கடி கத்தணும். தட்ஸ் ஆல்.''

ஐஸ்வர்யா மாணிக்கவாசகத்தின் பேச்சால் வெந்து போனவள் போல் முகம் காட்டினாள்.

''இன்னிக்கு ரேப் சீன்னா சொன்னீங்க?'' கசப்பாக கேட்டாள். மாணிக்கவாசகம் மெல்ல தலையை அசைக்க, ஐஸ்வர்யாவுக்கு மேற்கொண்டு என்ன பேசுவது, கேட்பது என்றே தெரியவில்லை.

-இதற்குள் ஸ்டுடியோ வந்து விட்டது.

-வாசலில் மேள தாளத்துடன் டைரக்டர் ராம்நாத் காத்திருப்பதை பார்க்க ஐஸ்வர்யாவுக்கு சற்று பரவசமாய் இருந்தது.



''என்ன சார் இதெல்லாம்?'' அவள் கேட்டு கொண்டு காரைவிட்டு இறங்கும் போதே ஒருத்தி ஓடி வந்து பூசணிக்காயால் திருஷ்டி கழித்தாள். ராம்நாத் தனது மனைவியை அழைத்து மாலை போட வைத்தார்.

''புனர் ஜென்மமெடுத்து திரும்பி வந்துருக்கே நீ! எத்தனை பேர் கண்ணுபட்ட தேகம் உனக்கு. சாதாரணமாவா உன்னை ரிசீவ் பண்றது? அதனாலதான் இந்த ஏற்பாடெல்லாம். இந்த வினாடி முதல் நீ பழைய ஐஸ்வர்யாவா ஆரோக்யமானவளா மாறி திரும்பவும் சினிமா உலகத்தை ஒரு கலக்கு கலக்கணும்.

எத்தனை அவார்டு உனக்காக காத்துகிட்டிருக்கு...''

ராம்நாத் பேசியபடியே அவளை செட்டுக்குள் அழைத்துச் செல்ல, அவரது ஏற்பாடு ஐஸ்வர்யாவை உள்ளபடியே திணற வைத்திருந்தது. மனது இலேசாகி தனது கவலைகளெல்லாம் விலகி ஒரு வினாடி தான் ஒரு சுக தேவதை ஆகிவிட்டதைபோல் உணர்ந்தாள்.

-ஆனால் எல்லாம் சில நிமிடங்கள்தான்.

-திரும்பவும் பழையபடி அவள் நினைவுக்குள் அந்த ஏர்மெயில் கடிதமும், அதன் விபரங்களும் எழும்பிப் பந்தடித்தன. மளுக்கென்று கண்களில் நீர் கோர்த்துக் கொண்டது.

-இதை ராம்நாத்தும் கவனித்தார்.

-ஒரு மர்மச் சோகத்தில் அவள் சிக்கித் தவிப்பதை சரியாக உணர்ந்தார். ஆனால் அதை பற்றி விரிவாக பேசினால் இப்பொழுது வேலை கெட்டு விடும் என்று விவேகத்துடன் சிந்தித்தமையால் காமிராமேனை பார்த்தார்.

'ஒரே ஒரு ஆயிரம் அடி. எப்படியாவது இவளைக் கொண்டு இன்னிக்கு சுருட்டிட்டா விட்டது சனியன்' -பார்வையாலேயே அவர் பேசுவது காமிராமேன் கைலாசத்துக்கு புரிந்தது.

முகத்தை ஒரு மாதிரி லாவகமாக அசைத்து ''கவலைப்படாதீர்கள் நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றான் கைலாசம்.

சில நிமிடத்திலேயே செட் அமைதியாகி விட்டது. அவ்வளவு வேகம். எல்லோரும் சொல்லி வைத்த மாதிரி படுவேகமாக இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

வில்லன் ரேப் செய்யத் தயராக இருந்தான். கதாநாயகன் காப்பாற்ற ஓடிவரத் தயராக இருந்தான். விளக்குகள் எரியத் தயாராக இருந்தன. காமிரா சுழலத் தயாராக இருந்தது.

'கப்சிப்... கப்சிப்'

''ரெடி ஷாட் ரெடி!'' ராம்நாத் குரல் கொடுக்க, உதவியாளர் கிளாப் அடிக்க, ஐஸ்வர்யா ஒரு அறை போன்ற செட்டுக்குள் வில்லனைப் பார்த்து மிரண்டு துடிக்க கைலாசம் படுவேகமாய் காமிராவை அசைத்தான்.

வில்லன் ஐஸ்வர்யா மேல் பாய்ந்து சேலைத் தலைப் உருவுகிறான். அவ்வளவுதான்! சேலையை நழுவ விட்டு விட்டு உள் பாவாடையுடன் விழுந்தடித்து ஓடவேண்டிய ஐஸ்வர்யா மாறாக வில்லனை தாறுமாறாக அறைந்து நகங்களால் கிற ஆரம்பித்தாள்.

காட்சி திசைமாறுவதும், ஐஸ்வர்யா குணம் மாறுவதும் சில விநாடியிலேயே ராம்நாத்துக்கு புரிந்து விட்டது. டக்கென்று அவரை கவலை வந்து கவ்வியது.



'கட்' சொல்லிவிட்டு ஐஸ்வர்யாவை பார்த்தார். வில்லன் நிஜமாலுமே ஐஸ்வர்யாவை வலி தாளாமல் வில்லன் பார்வை பார்த்து முறைத்துக் கொண்டிருந்தான்.

''டேக் இட் ஈஸி மிஸ்டர்'' என்று அவனை ஆறுதலாய் ஒதுங்க வைத்துவிட்டு ராம்நாத் மிகுந்த கவலையோடு ஐஸ்வர்யாவை நெருங்கினார்.

''சார்... என்னை மன்னிச்சிடுங்க. இந்த காட்சியில நடிக்கற சக்தி எனக்கு கிடையாது. என் மனசுல இருந்த அந்த துணிச்சல் போயிடுச்சு. என் பிரேம் அதை போக்கடிச்சுட்டார். ப்ளீஸ்... ப்ளீஸ்...''

'பிரேம்... பிரேம்...' அவள் சொன்ன அந்த பெயர் ராம்நாத்துக்கு ஒரு புதிய தெம்பளித்தது.

''பேக் அப்'' என்றார் சற்று வருத்தத்துடன்' பின்னர் மாணிக்கவாசகத்தை நெருங்கினார்.

''யாருய்யா பிரேம்கிறது?'' கேட்டார்!

''அம்மாவோட மனசுக்கு பிடிச்சவரு சார்'' மாணிக்கவாசகம் மிடறு விழுங்கினான்.

''மனசுக்கு பிடிச்சவன்னா? நான் கூடதான் மனசுக்கு பிடிச்சவன். புரியும்படி சொல்லுய்யா.''

''அம்மாவோட காதலன்னு நினைக்கிறேன்.''

''இப்பவும் நெனைச்சுகிட்டுதான் இருக்கியா, தீர்மானமா தெரியாதா?''

''சார்...''

''என்னய்யா சார் மோர்னுகிட்டு. அவன் தான்யா அவ பிரச்சினைக்கே காரணம்! அவனை நான் பார்க்கணும். அவனைப்பார்த்துட்டு பிறகு தான் மறுவேலை. அவனைப் பார்த்தா ஐஸ்வர்யா பிரச்சினையே எப்படியும் தீர்த்துவிடலாம். ஆமா அவங்களுக்குள்ள ஏதாவது ஊடலா?''

''எனக்கு எதுவுமே தெரியாது சார்...''

''நீ எல்லாம் எதுக்குய்யா அவளுக்கு பி.ஏ.வா இருக்கே. சரியான சாம்பிராணிய்யா நீ...''

மாணிக்கவாசகம் அதைக் கேட்டு அசடு வழிந்தான்.

''சரி சரி. பிரேம் துபாய் பக்கத்துல ஏதோ ஒரு அரபு நாட்டுல இருக்காரு...''

''எங்கே இருந்தா என்ன அட்ரஸை கொண்டா...''

மாணிக்கவாசகம் அட்ரஸை தேடி எடுத்து வந்து தந்தான். அட்ரஸை பார்த்த ராம்நாத்துக்கு சற்று திகைப்பாக இருந்தது.

''என்னய்யா ஆளு வெளிநாட்டுலயா இருக்காப்படி?''

''ஆமா சார்...''

''அங்கே இருந்துகிட்டே சண்டையா? பெரிய விஷயமாத் தான் இருக்கும்போல இருக்குது...''

முணுமுணுப்போடு நகர்ந்தார்.

❖❖❖



# 11

11-11-86
காலை 9.00

ஐஸ்வர்யா துவட்டலாய் சோபாவில் உட்கார்ந்திருந்தாள். ராம்நாத் வந்திருப்பது கூட தெரியாத சோர்வு அவளை ஆக்ரமித்திருந்தது.

''ஐஸ்வர்யா''ராம்நாத் மெல்ல கூப்பிட்டு பார்த்தார். ஐஸ்வர்யா பிரக்ஞை மீளவேயில்லை!

''ஐஸ்வர்யா'' இந்த முறை ராம்நாத்தின் குரலில் சற்று உக்ரம். திடுக்கிட்டு திரும்பியவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''வாங்க சார்!'' சிரமப்பட்டு நிகழ்கால சம்பிரதாயத்துக்கு வந்தாள்.

''நான் வர்றது இருக்கட்டும். உனக்கென்னம்மா ஆச்சு? என்னமோ குடிமுழுகிப்போயிட்ட மாதிரி.''

அவர் கேள்விக்கு அவள் விழிகள் கண்ணீரால் பதில் சொன்னது.

ராம்நாத்திடம் கொஞ்சம் திகைப்பு.

''ஐஸ்வர்யா உன் பிரச்சனை என்னன்னு எனக்கு தெரியும். நானா சொல்றதை விட நீயா அதைபற்றி பேசறது நல்லது'' கொஞ்சம் சாமர்த்தியமாக நேரடியாக விஷயத்துக்கு வந்தார்.

ஐஸ்வர்யா திடுக்கிட்டு அவரை பார்த்தாள்.

ஆமாம். பிரேம்கிட்டே எல்லாத்தையும் விசாரிச்சு தெரிஞ்சுகிட்டேன்.''

அவர் பதில் ஐஸ்வர்யாவை ஒரு உலுக்கே உலுக்கிவிட்டது.

''சார் அதை நீங்களும் நம்பிட்டீங்களா? நான் அந்த மாதிரி பொண்ணு கிடையாதுன்னு உங்களுக்கு நல்லா தெரியும். நீங்களுமா நம்பிட்டீங்க.'' ஐஸ்வர்யா குத்தி விட்டாற்போல் கொட்டத் தொடங்கிவிட்டாள்.

'எந்தமாதிரி பொண்ணு?' ராம்நாத் மனதுக்குள் தள்ளாடினார். உள்ளபடியே அவருக்கு ஒன்றும் தெரியாது. 'பிரேம்' என்ற பெயரை பயன்படுத்தி அவர் வீசியிருக்கும் தூண்டில்தான் 'எல்லாம் தெரியும்' என்கிற வார்த்தை. அதைத் தொடர்ந்து ஐஸ்வர்யாவும் அரைகுறையாக விஷயத்தை கக்கிவிட்டாள். இருந்தும் முழுதும் புலப்படவில்லை.

பிறகு ஒருவாறாக ஐஸ்வர்யாவே தொடர்ந்து அழுதவண்ணம் அந்த ரகசியம் முழுவதும் புலப்படுகின்ற விதமாக பேசினாள்.

லட்ச லட்சமாய் வருமானம் வருது எனக்கு. நல்ல குடும்ப படத்துலையே கிளாமரா டிரெஸ் பண்ண எனக்குபிடிக்காது. என் விதி நான் நடிகையாயிட்டாலும் எந்த குடும்பப் பெண்களுக்கும் நான் குறைஞ்சவ இல்லை. என்னைப் போய் ஒரு புளூஃபிலிம்ல பிரேம் பார்த்தாராம்!

என்னால தாங்க முடியலை சார். ஒரே குழப்பமாயிருக்கு. பிரேம் பொய் சொல்ற, அவசரப்பட்ற ஆள் இல்லை! யாராவது என் ஸ்டில்ஸை யூஸ் பண்ணி அப்படி ஏதாவது படத்தையே சாமர்த்தியமா...?''



அவளால் முழுவதுமாய் முடிக்கக்கூட முடியவில்லை.

''ஃப்பூ இவ்ளோதானா விஷயம்! நான் கூட என்னவோ ஏதோன்னு நெனைச்சு பயந்துட்டேன்'' என்றார் ராம்நாத்.

ஐஸ்வர்யா ஒரு வினாடி அவரை ஒன்றும் புரியாமல் பார்த்தாள். பிறகு ராம்நாத்தே அதற்கு விடையளித்தார்.

''உள்ளபடியே உன் கவலைக்கான காரணம் எனக்கு தெரியாது பிரேம்ங்கற வார்த்தையை பயன்படுத்தி நான் உன்கிட்ட விஷயத்தை வாங்கியிருக்கேன். கவலைப்படாதே உன் கேரக்டர் பற்றி எனக்கு தெரியும்.

உன் பிரேம் மனத்தை மாற்றி அவனுக்கு உண்மையை புரிய வைக்கிறேன். இது என் கடமை. நீ தைரியமா தெளிவா இருக்கணும். உனக்காகவே நான் பிரேமை பார்க்க துபாய் போய்ட்டு வரேன் ஓ.கே.''

ஐஸ்வர்யாவுக்கு உயிர் வந்து உற்சாகத்துடன் நுழையட்டுமா என்று கேட்டது.

''சார், இது வெளிய தெரிய வேண்டாம். அப்புறம் கிசு கிசு அது இதுன்னு விஷயம் ரொம்ப பெரிசாயிடும் நான் அதனாலதான் எனக்குள்ளளறையே வெச்சுகிட்டு குமைஞ்சுகிட்டிருந்தேன். ப்ளீஸ்''

'உம்' கொட்டிவிட்டு உற்சாகமாய் நகர்ந்தார் ராம்நாத்.

❖❖❖

## 12

14-11-86
மதியம் 1.00

துபாய் வரை தன்னை தேடி வந்திருக்கும் ராம்நாத்தை பார்த்து ஒரு வினாடி திகைத்துப் போனான் பிரேம். பிறகு அவர் வந்த விஷயம் அறிந்து அவரையும் வீடியோ டெக் அருகே அழைத்துச் சென்று ஐஸ்வர்யாவின் கேசட்டை ஓட விட்டான்.

ராம்நாத்துக்கு ஆச்சர்யம் அவர் சில்லி மூக்கை உடைத்தது. ஒரு முறைக்கு பத்து முறை ஊன்றி பார்த்தார். அது ஐஸ்வர்யாதான்.

ஆனால் அவ்வளவு காட்சியும் ஒரே கோணத்தில் எடுக்கப்பட்டிருந்தது. அவரது புத்திசாலித்தனமான சினிமா மூளை உடனே அதை குறிப்பெடுத்துக் கொண்டது. ஐஸ்வர்யாவுக்கு தெரியாமல் ஐஸ்வர்யாவின் ஒத்துழைப் பில்லாமல் இது நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி என்றும் புரிந்து கொண்டது.

அதை பிரேமுக்கு அவர் விளக்கியபோது அவன் கைகளை சொடக்கி விட்டுக் கொண்டான்.

''அப்படியா சொல்றீங்க. என்னால நம்பவே முடியலையே...'' விதிர்ப்போடு வாயை திறந்தான்.

''இந்த சினிமா உலகத்துல எதுவும் எப்பவும் நடக்கும் தம்பி. அவ்வளவு சுலபமா புகழ்ங்கற பூமியில சந்தோஷமா



திரிய விட்டுட மாட்டாங்க. நானறிஞ்ச வரையில ஐஸ்வர்யா பத்தரை மாற்றுத் தங்கம். இதுல ஏதோ சதி இருக்கு பிரேம்.

மொத அவ பாத்ரூமை போய் பார்க்கணும். எல்லாம் புரிஞ்சிடும். நீ மெட்ராஸ் வர்றியா?''

உடனேயே அவன் தலையசைக்க மறுநாளே இருவரும் திரும்பினர்.

விமான காபினுக்குள் ராம்நாத்தை பார்த்து கேட்டான் பிரேம்.

''என்ன சார். இதுல போலீஸ் உதவி தேவைப்படுமா?''

''மொதல்ல சதி என்னன்னு தெரிஞ்சுப்போம் பிறகு அதுக்கு தகுந்த மாதிரி முடிவெடு; பிறகு பார்ப்போம்.

இது விஷயம் ஐஸ்வர்யாவுக்கு துளிகூட தெரியக் கூடாது.''

''ஐஸ்வர்யாவால இந்த அதிர்ச்சியை நிச்சயமா தாங்கிக்க முடியாது. பீ கேர் ஃபுல். அவகிட்ட எக்ஸ்யூஸ் கேட்டுகிட்டு புளூ பிலிம்ல பார்த்த உருவம் அவ மாதிரியே வேறு ஒருத்தியோட துங்கறதை எடுத்துச் சொல்லி ஆறுதல் சொல்லு அவளுக்கு, ஓ.கே?''

பிரேம் தலையசைத்தான்.

❖❖❖

## 13

15-1-86
காலை 9.00

''யோவ் இங்க வாய்யா'' ஐஸ்வர்யாவின் பி.ஏ. மாணிக்கவாசகத்தை ராம்நாத் அழைத்த விதம் வேடிக்கையாக இருந்தது.

''என்ன சார்?'' பணிவாக வந்து கேட்டான் மாணிக்கவாசகம்.

''ஐஸ்வர்யாவோட பாத்ரூம் எங்க இருக்கு?'' கேட்டார். இந்த மாதிரி கேள்வியை அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

''சார் அம்மா பர்சனல் பாத்ரூம் வெச்சுருக்காங்க. யாரையும் அலவ் பண்ண மாட்டாங்க.'' என்றான்.

''எனக்கு தெரியும் - நீ காட்டு.'' என்ற ராம்நாத்தை தயக்கத்தோடு அழைத்துச் சென்றான். மாடியில் அவள் ஏ.சி அறைக்குள் லகுவாகக் கட்டப்பட்டிருந்தது.

சுற்றிலும் சுவரில் ப்ளோ அப் போஸ்டரும், வால் பெயிண்ட்டிங்குமாய் கலா அழகுடன் கண்ணைக் கவர்ந்தது.

பாத் டர்ஃப் 'விம்' போட்டு துலக்கப்பட்டு நந்தமாய் பல்லைக் காட்டியது.

சுவரில் லஸ்தர் விளக்கு - எளிய வெளிச்சம்!

தரையெங்கும் மொசைக்கின் வழவழப்பு.

கும்மென்ற டெட்டால் சென்ட்டின் ரம்யமான நெடி.



ராம்நாத் அறையை விழுங்கி விடுவதை பார்த்து மாணிக்கவாசகம் ஆச்சரியப்பட்டு போனான்.

''நீங்க ஏதாவது புதுசா பாத்ரூம் கட்டப் போறீங்களா சார்?''

-விவஸ்தையில்லாமல் ஒரு அனுமானமாய் கேட்டான்.

-அசட்டு சிரிப்பு சிரித்துவிட்டு வெளியே வந்தார் ராம்நாத்.

-மாணிக்க வாசகத்துக்கு ஒரு எழவும் புரியவில்லை.

❖❖❖

## 14

15-11-86
மதியம் 1.00

**வ**ழக்கத்திற்கு மாறாக வசந்தப் பட்சி போல் தென்பட்டாள் ஐஸ்வர்யா. பிரேமை பார்த்ததிலிருந்து அவன் அன்பு காட்டத் தொடங்கியதிலிருந்து அவளுக்குள் புதிய தெம்பு பெருக்கெடுக்கத் தொடங்கியிருந்தது.

ராம்நாத் காட்சிகளை மடமடவென்றுசுட்டுக் கொண்டிருந்தார். ஆனாலும் உள்ளுக்குள்ளே அந்த புளூஃபிலிமின் பின்னணியை அறியும் உத்வேகம் நீறுபூத்த நெருப்பாய்.

பிரேம் அந்த உத்வேகத்தை அன்று கொட்டியே விட்டான். ''சார் நாள் பாட்டுக்கும் போய்கிட்டே இருக்கு. ஒண்ணுத்தையுமே நாம கண்டுபிடிக்கல்லையே.''

''பொறு பிரேம், காரியம் நடந்துகிட்டிருக்கு'' என்று பூடகமாய் பதில் சொன்னார் ராம்நாத்.

''என்ன நடந்துகிட்டிருக்கு- போலீசுக்கும் போக வேண்டாம்னுட்டீங்க. இது சம்பந்தமா வந்ததுல இருந்து நாம ஒண்ணுமே செய்யலையே.''

''இதோ பார் பிரேம். சந்தேகமில்லாம இது ஒரு சதி வேலை. ஐஸ்வர்யா குளிக்கச்சே-அரை குறை உடையோட அவ பர்சனல் ரூம்ல அவ சுதந்திரமா இருக்கச்சே இது தெரிஞ்சு யாரோ திட்டம் போட்டு படம் எடுத்திருக்காங்க.''

குறைஞ்ச வெளிச்சத்துலையும் சாமர்த்தயமா படம் எடுக்கறவங்களை நெனைச்சா ஆச்சர்யமா தான் இருக்கு.

அந்த நபர் அவகூடத்தான் இருக்கான். அவளோட ஒவ்வொரு அசைவுகளை பற்றியும் நல்லா தெரிஞ்சவன் அவன். அவன் யாருங்கறத தெரிஞ்சுக்க நான் ஒரு வழி பண்ணியிருக்கேன்.

அவ பி.ஏ. மாணிக்கவாசகம் ஒரு சரியான லூசுப்பய. அவனைவிட்டு கண்காணிக்க சொல்லியிருக்கேன். அவனும் தினமும் தகவல் சொல்லிக் கிட்டு வர்றான்.

அந்த விதத்துல இரண்டு பேரை மிரட்டிகூட பார்த்துட்டேன். பலன் பூஜ்யம். நடுங்கறாங்க ஒரேயடியா!

''போகட்டும்

இன்னிக்கு எதாவது தகவல் வரலாம்-கொஞ்சம் பொறுமையாதான் செயல் படணும். ஐஸ்வர்யா தேறிகிட்டு வர்றா! அவளை ஜாக்ரதையா பார்த்துக்கணும். அது ரொம்ப முக்யம்.''



-இருவருக்கும் பேசிக் கொண்டிருக்கும் போதே மாணிக்கவாசகம் அவர்களை தேடிக் கொண்டு வந்தான்.

''சார் கார் டிரைவர் கந்தசாமி பேர்ல சந்தேகமா இருக்கு''-என்றான். பிறகு ''எதுக்கு சார் இதையெல்லாம் கவனிக்கச் சொல்றீங்க'' என்று கேட்டான்.

''ஐஸ்வர்யாவை நிர்வாணமா படம் எடுக்கணும். அதுக்குத்தான் போய் வேலையப் பாருடா...''

-கோபத்தில் கொஞ்சம் வெளிப்படையாகவே வெடித்து விட்டார் ராம்நாத். மாணிக்கவாசகம் தலையை தொங்கப்போட்டுக் கொண்டு நகரவும் கேமிராமேன் கைலாசம் அவனை தேடிக் கொண்டு வந்தார்.

''என்ன மாணிக்கவாசகம் ஐஸ்வர்யா இப்ப நல்லா இருக்காங்களா?'' -நைச்சியமாக கேட்டார்.

''அவங்க நல்லா இருந்தாங்க. டைரக்டர் சார்தான் நாயா மாறிட்டு வர்றாரு.'' -என்றான் மாணிக்கவாசகம்.

-க்ளுக்கென்று சிரித்து விட்டார் கைலாசம்.

''டைரக்டருக்கு படம் முடிலையேங்கற கவலைப்பா அதான் கோபிச்சுட்டிருப்பாரு. ஐஸ்வர்யாதான் சரியா ஒத்துழைப்பே தரமாட்டேன்னுடிச்சே. அதுலையும் அந்த ரேப் சீன்தான் படத்துலையே உயிர்நாடி.

ஐஸ் மட்டும் கொஞ்சம் தாராளமா பிரேசியர் போடாம கவர்ச்சியா நடிச்சு ஒத்துழைச்சா படம் பிச்சிகிட்டு போகும். லட்சலட்சமா செலவு பண்ணியும் இப்போ பிரயோஜனம் இல்லாமல்ல இருக்கு'' எதார்த்தமாய் கைலாசம் பேசிக் கவலைப்பட அதை கேட்டு மாணிக்கவாசகம் தலையாட்டி விட்டு நகர்ந்தான்.

❖❖❖

# 15

18-11-86
காலை 10.00

ராஜகோபாலோடு வெளியே கிளம்பிக் கொண்டிருந்த அவினாஷிற்கு ரியாத்திலிருந்து கலாம் ஒருவரிடம் கடிதம் கொடுத்து விட்டிருந்தான். கொஞ்ச பயம், கொஞ்ச ஆச்சர்யம் முதலிய கவலையோடு அந்த கடிதத்தை பிரித்து படித்தான் அவினாஷ். அருகில் ராஜகோபால்!

'டியர் அவினாஷ்! நேற்று ஒரு இனிய செய்தி எனக்கு கிட்டியது.

அதன் விளைவுதான் இந்த அவசர கடிதம்.

உன் வசம் ஐஸ்வர்யா குளியல் பட கேசட் ஒன்று இருப்பது எனக்கு தெரியும்! இங்கே சில ஆயிரம் ரூபாய்க்கு விலை போகும் அந்த கேசட். அங்கே இரண்டு லட்சத்துக்கு குறையாமல் விலைபோக வாய்ப்பு உள்ளது.

-டைரக்டர் ராம்நாத் என்பவரை சந்தித்து வியாபாரத்தை முடிக்கவும். இரண்டு லட்சத்தில் ஒரு லட்சம் உனக்கு ஒரு லட்சம் எனக்கு.

அதன் பிறகு உனக்கும் என் பிடியிலிருந்து விடுதலை தருகிறேன். இது உறுதி.

வியாபாரத்தை கச்சிதமாய் தனிமையில் முடிக்கவும். ராம்நாத்துக்கு இப்போது இந்த கேசட் வரப்பிரசாதமான விஷயம்.

வீடியோ பட கவர்ச்சி காட்சிகளில் சில, ராம்நாத்



படத்தில் இடம் பெற்றாலும் போதும். ஏரியா அனைத்தும் விற்பனையாகும். தகுந்த தருணம். தைரியமாய் செயல்பட்டு லாபத்துடன் விடுதலை பெறப்பார்.

இப்படிக்கு,
கலாம்.

''ஒரு நாள் என்னை நிம்மதியா இருக்க விடமாட்டான் இந்த கலாம். பார்த்தியா ராஜகோபால்?''-தலையை உசுப்பிக் கொண்டு கேட்டான் அவினாஷ்.

''டைரக்டர் ராம்நாத் கலாம் சொன்னமாதிரி கேஸட்டை வாங்கிக்குவாரா? இதெல்லாம் நடக்குமா அவினாஷ்?'' -ராஜகோபால் கவலையோடு கேட்க.

''நடத்தி ஆகணும் ராஜகோபால். இல்லேன்னா கலாமுக்கு பதில் சொல்ல முடியாது. நமக்கும் லாபமிருக்கு இதுல, ஏன் விடணும் சொல்லு?''

-அவினாஷின் பேச்சு ராஜகோபாலுக்கு ஆச்சர்யம் தந்தது. டேய் அவினாஷ் மாட்டிக்கிட்டா வில்லங்கம்டா... கொஞ்சம் முந்தி ரொம்ப பயந்தே-இப்ப நீயே துணிஞ்சிட்டியே...''

''ஆமா ராஜகோபால். முழுக்க நனைஞ்சாச்சு! சாண்போனா என்ன, முழம் போனா என்ன? வா ராம்நாத்துக்கு போன் பண்ணுவோம். பிசினஸ் செட்டிலாகற வரையிலும் நேர்ல கண்ல படக்கூடாது.''

-மறு நிமிடமே ராம்நாத் வீட்டு டெலிபோன் அலறிக் கதறியது. ராம்நாத்தே கையிலெடுத்தார்.

''ஹலோ டைரக்டர் ராம்நாத்தா?''

''ஆமா -என்ன வேணும், யார் நீங்க?''

''அது இருக்கட்டும். உங்க படம் ஒண்ணு ஐஸ்வர்யா வால முடங்கியிருக்கா.''

''ஹலோ நீங்கயாரு, விஷயத்தை சொல்லுங்க.''

''அந்த படம் பயங்கரமா சேல்ஸ் ஆக வழி இருக்கு. ஐஸ்வர்யா நடிச்ச குளியல் காட்சி படம் எங்கிட்ட இருக்கு. முழு நிர்வாணக் குளியல் காட்சி சார். உயிரைக் கொடுத்து எடுத்த படம்.''

-ராம்நாத் ஒரு வினாடி அதை கேட்டு கதி கலங்கிப் போனார்.

''ஹலோ நீங்க யாரு?''

''இப்படியெல்லாம் மடத்தனமா கேள்வி கேட்கலாமா நீங்க? புத்திசாலித்தனமா எங்களுக்கு இரண்டு லட்சம் கொடுத்ட்டு கேசட்டை வாங்கப்பாருங்க சாமர்த்யமா. சென்ஸாருக்கு டிமிக்கி கொடுத்து படத்தை ரிலீஸ் பண்ணி கோடி கோடியா சம்பாதிக்க பாருங்க. இது புத்திசாலித்தனம்.''

-ராம்நாத் சில வினாடி மௌன ஊஞ்சல் ஆடினார் பிறகு 'அவர்களை விடக்கூடாது- இது நல்ல சந்தர்ப்பம் அவர்களை வளைக்க' என்னும் மின்னல் வேக விழிப்பில் ''ஓ!கே!'' என்றார்.

''இப்பதான் நீங்க புத்திசாலி. பணத்தோட நீங்க தாம்பரம் வெள்ளை பங்களா ஹோட்டலுக்கு வாங்க. படத்தை போட்டு காட்றோம். கண் குளிரப் பார்த்துவிட்டு வாங்கிகிட்டு போகலாம்.



நேர்மையா வியாபாரம் செய்வீங்கன்னு நம்பறோம். மத்த ஆராய்ச்சியெல்லாம் உங்களுக்கு தேவையில்லாத ஆபத்தான விஷயம்.''

''ஆமா ஐஸ்வர்யா நடிச்ச படம்னு சொல்றீங்களே. அவ எப்படி சம்மதிச்சா?''

''ஐஸ்வர்யா நடிச்ச படம் இல்ல, ஐஸ்வர்யாவுக்கு தெரியாம சாமர்த்யமா எடுத்த படம். இவளோ போதும் உங்களுக்கு.''

''அது சரி ஐஸ்வர்யா படம் பார்த்துட்டு கோர்ட்டு கேசுன்னு இழுத்தா...''

''பேசாம கேசட்டை கோர்ட்டுல சப்மிட் பண்ணிடுங்க. எந்த பொண்ணு சார் இந்த விஷயத்துல துணியும்? அதுலையும் ஐஸ்வர்யா ஒரு தொட்டாச்சிணுங்கி வேற...

ரைட், ரைட்-அறுக்காம வை கேஷோட நாளைக்கு, நீங்க பத்து மணிக்கு ஹோட்டலுக்கு வந்திடுங்க...''

பட்டென்று முடங்கியது டெலிபோன். ராம்நாத் நிறைய வியர்த்திருந்தார். பெருமூச்சோடு முகத்தை துடைத்து விட்டுக் கொண்டார்.

பிரேமை பார்த்து 'ஆட்கள் சிக்கிவிட்டார்கள்!' என்று கத்த வேண்டும் போல் தோன்றியது.

இனிதான் ஜாக்கிரதையாக நடக்க வேண்டும் என்பதுபோல் எச்சரிக்கை உணர்வும் கொப்பளித்தது!

❖❖❖

# 16

19-11-86
**காலை 10.00**

அந்த ஹோட்டல் அறைக்குள் யாரையுமே காணவில்லை. வெளிச்சமாய் தெரிந்த ஒரு இடத்தில் பணத்தை வெளிப்படையாக எண்ணி வைக்கும்படி ஒரு குரல் மட்டுமே கேட்டது.

பக்கத்தில் வீடியோ டெக்கினுள் ஐஸ்வர்யா குளித்துக் கொண்டிருந்தாள்.

பிரேம் கண்களை கோவைப் பழமாக்கிக் கொண்டு குரல் எங்கிருந்து வருகிறது என்று தேடி பார்த்தான்.

''நிக்கற இடத்தை விட்டு நகர்த்து உள்ள வந்து யாரையும் தேடக் கூடாது. பணத்தை எண்ணி வைக்கணும். வீடியோ கேசட்டை ஆஃப் செய்து கையில எடுத்துக்கணும் -கிளம்பிடணும் மீறினா துப்பாக்கி வெடிக்கும்.''

ராம்நாத் பிரேமை வெறித்து பார்த்தார். குரல் தொடர்ந்தது.

''இந்த பிசினஸ்ல நாங்க எங்களை அறிமுகப்படுத்திக்க விரும்பலை. உங்களுக்குத் தேவை கேசட். எங்களுக்கு தேவை பணம். வந்த வேலைய முடிச்சுகிட்டு கிளம்புங்க. கமான் க்விக்.''

பிரேம் பொறுக்க முடியாமல் வீடியோ டெக்கை நோக்கி நடந்தான். அதை ஆஃப் செய்து கேசட்டை வெளியே எடுத்தான்.



ராம்நாத் பணப் பெட்டியிலிருந்து பணத்தை எண்ணி வெளியே வைப்பது போல் பாவானை காட்ட அறைக் கதவு தட்டப்படும் சப்தம்!

ராம்நாத் போய் திறந்தபோது போலீஸ் இனஸ்பெக்டர் ராம்நாத்தை பார்த்து மெள்ள கண்ணசைத்தார். அதைத் தொடர்ந்து திபுதிபு என்று சில போலீசார் உள்ளே நுழைய அவினாஷும், ராஜகோபாலும் வியர்த்து விறுவிறுத்தனர்!

''அவினாஷ் கதை வேற ரூட்ல போகுது. வா-ஜன்னல் வழியா குதிச்சு தப்புவோம்.''

ஜன்னலை தேடி ராஜகோபால் ஓட, ஜன்னலுக்கு அப்பால் ஒரு இன்ஸ்பெக்டர் பல்லை காட்ட, இருவரும் அப்படியே நொறுங்கி ஸ்தம்பித்தனர்.

பீதியோடு அவினாஷையும் மண்டியிட்ட ராஜகோபாலையும், ராம்நாத் புன்னகையோடு பார்த்தார்.

''இதுவரைக்கும் நாப்பது படம் டைரக்ட் பண்ணியிருக்கேன். என் படத்துல இந்த மாதிரி எவ்ளோ சீன் செட் பண்ணியிருப்பேன் தெரியுமா? என் கிட்டயே உங்க வேலையை காட்றீங்களே...

அது சரி நீங்க யாரு, உங்க பேர், கேஸட் வந்த விதம், எடுத்தவிதம், உங்க பேக் கிரவுண்ட் எல்லாம் எங்களுக்கு இப்ப தெரிஞ்சாகணும்.

இல்ல உன் உடம்பு எலும்ப நீங்களே நேர்ல பார்த்து அழுவ வேண்டி வரும்! என்ன சொல்றீங்க?''

வில்லன் பாவனையில் நிறுத்தி நிதானமாக பேசி அவர்களுக்குள் புளியை கரைத்தார் ராம்நாத். அவினாஷ் பயத்துடன் பார்ட்டி ஹாலில் துவங்கிய தனது

கஷ்டகாலத்துடன் விஷயத்தை சொல்ல ஆரம்பித்தான். அதை அவன் முடித்த போது ராம்நாத்துக்குள் ஒரு செயற்கையான சினிமாக் கதை கூட இவ்வளவு திருப்பங்களுடன் இருக்க முடியாது என்னும்படியான பிரமிப்பு.

''அது சரி யார் இங்க உனக்கு படம் எடுத்து தந்தது?'' ஆவலாக கேட்டார்.

''பேர் தெரியாது, ஆளைத் தெரியும்'' என்றான் அவினாஷ்.

''எப்படி எடுத்தீங்க?'' கேட்டார். இன்ஸ்பெக்டர் ஒருவர் அதை குறித்துக் கொள்வது போல் பாவனை செய்தார்.

''சார் போலீசுக்கு போனா விஷயம் விபரீதமாகி ஊருக்கு தெரிஞ்சுடுங்கறது உங்களுக்கு தெரியாதா? தெரிஞ்சும் இப்ப போலீசை கூப்பிட்டுகிட்டு வந்து அவுங்க எதுக்கையே என்கொயரி பண்ணிகிட்டு...''

ராம்நாத்தை தனியாக அழைத்து சீறினான். ராம்நாத் சிரித்தார்.

''அவங்க நிஜ போலீசா இருந்தாத்தானே விஷயம் வெளியத் தெரிய? எல்லாம் நம்பசெட்அப் பிரேம். அவ்ளோபேரும் சினிமா துணை நடிகருங்க. வெளிய யாராவது கேட்டா காட்சியோட ரிகர்சல்னு கதையை திருப்பிடுவேன்- கவலைப்படாதே.''

''இவங்களுக்கே இது ரிகர்சல் மாதிரிதான். எல்லா போலீஸ் நடிகரும் முழிக்கறதை பாரு.''

ராம்நாத்தின் பதில் பிரேமை ஆசுவாசப்படுத்தியது. ''பெரிய ஆள் சார் நீங்க'' என்று புகழாரம் சூட்டினான் அவருக்கு.



''இல்லப்பா அஞ்சேகால் அடிதான் நான்'' என்று விட் அடித்த ராம்நாத் ''க்ளைமாக்ஸ் டெலிவரியில பிரேக் போட்டுட்டியே பிரேம்- நம்ப சார் சொல்றதை தனியா போய் கேட்போம் வா...''

-என்று அவினாஷை தனியாக இழுத்துக் கொண்டு போய் ராம்நாத் 'கேரி ஆன்' சொல்ல, அவன் அந்த மர்மத்தை உடைக்க ஆரம்பித்தான்.

ஐஸ்வர்யாவோட பாத்ரூம்ல புளோ அப் பேஸ்டர் ஒட்டின மாதிரி ஒரு சுவர் இருக்கு. அதுல நாலைஞ்சு துவாரங்கள் உண்டு. இது வழியா காமிராவை வைச்சு படம் எடுத்தோம். அப்புறமா புளோ அப் போஸ்டரை ஒட்டி மூடிட்டோம்.

உத்து பார்த்தாதான் அந்த துவாரங்கள் தெரியும். புளோ அப் படத்துல ஒரு காமிரா ஒரு குதிரையை ஷூட் பண்ற மாதிரி வரைஞ்சிருக்கும். அந்த காமிரா வரைஞ்ச இடத்துல தான் சரியா துவாரம் செஞ்சு நிஜ காமிராவை வெச்சு சந்தேகப்படும்படி இல்லாம எடுத்தோம்!

''பாத்ரூமுக்குப் பக்கத்துல ரெஸ்ட் ரூம்! அதுல மறைஞ்சிருஞ்சி எடுத்தோம்...''

''ஆமா அவ வீட்டுக்குள்ற எப்படி நுழைஞ்சீங்க. அவ பாத்ரூம்ல எப்படி காமிராவை வைச்சீங்க? ரெஸ்ட்ரூம் இருக்கற இடம் எப்படி தெரியும்?''

''எனக்கு எதுவும் தெரியாது. நான் வெறும் எடுபிடிதான். படம் எடுத்தவன் அவன் தான்.''

''அவன் தான்னா யார் அவன்?''

''பேர் தெரியாதே!''

''கேக்கறதுக்கென்ன?''

''அதெல்லாம் உனக்கெதுக்குன்னுட்டான்.''

''சரி ஆள் எப்படி இருப்பான்?''

''என் உயரம் இருப்பான். கொஞ்சம் கறுப்பு. சருட்டை முடி. அப்பாவித்தனமான முகம்.''

''அவன் எப்படி ஐஸ்வர்யா வீட்டுக்குள்ள கூட்டிகிட்டு போனான்.''

''நாங்க போனப்போ எங்களை கேள்வி கேட்க யாருமில்லை! ஒரு வேலைக்காரன் மட்டும் பார்த்து சிரிச்சான். ஒண்ணும் சொல்லலை... ஐஸ்வர்யா அவங்க பர்சனல் ரூம்ல இருக்கறதா சொன்னான்.

பாத்ரூம்ல எலக்ட்ரிக் பிராப்லம்னு சொல்லி என்னை கூட்டிகிட்டு போனான். ஐஸ்வர்யா என்னை நிமிர்ந்து கூட பார்க்கலை. ஷீட்ரிகஸ் காமிராவை துவாரத்துல வெச்சு ஃபோகஸ் பண்ணி செட் பண்ணுனோம்.

ரெஸ்ட் ரூம்லேயும் எலக்ட்ரிக்கல் பிராபலம்னு நுழைஞ்சி காமிராபாடியை ஜாயிண்ட் பண்ணி நெடுநேரம் காத்திருந்தோம். ரெஸ்ட்ல வீட்டுல இருந்தா மதியம் ஒரு முறை அவங்க குளிப்பாங்கன்னு சொன்னான்.

அதே போல குளிச்சாங்க. மதிய சூரிய வெளிச்சம் போதுமான அளவு பாத்ரூம்ல இருந்தது. படமும் தெளிவா வந்தது. ரெஸ்ட் ரூமை குளோஸ் பண்ணிகிட்டு ஈ காக்கை கூட பார்க்க முடியாத படம் எடுத்தோம்.

பிறகு வந்த மாதிரியே திரும்பிட்டோம்.''



''அப்ப அந்த நபரை ஐஸ்வர்யாவுக்கும் நல்லா தெரியும். வீட்டு வேலைக்காரனுக்கும் தெரியும். ரைட்! நீ ஐஸ்வர்யா வீட்டுக்கு வா.''

-அவினாஷோடு ராம்நாத்தும் பிரேமும் பட படக்க ஐஸ்வர்யா வீட்டை குறிவைத்து பறந்தனர். பயமுறுத்துவதற்கு தோதாக ஒரே ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் மட்டும் காரின் பின்னால் ஏறிக்கொண்டு பொம்மை துப்பாக்கியை வெளியே தெரியும்படி காட்டிக் கொண்டு வந்தார்.

ஐஸ்வர்யா வீட்டில்...

ஐஸ்வர்யா டப்பிங் தியேட்டருக்கு போயிருப்பதாக சொன்னார்கள். வேலைக்காரர்களை அணிவகுத்து நிறுத்தி அவினாஷிற்கு காட்ட அன்று சந்தித்த வேலைக்காரன் அவர்களில் இல்லை!

ராம்நாத் தலையிலடித்துக் கொண்டார்.

''நல்லா பார்த்துச் சொல்லுய்யா?'' - அதிர்வாக கத்தினார்.

''இவங்கள்ள அவன் இல்லை சார்.'' அவினாஷீம் சலிப்பில் வெடித்து விட்டான்.

''ஏய்யா கொஞ்ச நாள்ள யாரும் இங்க வேலையை விட்டு நின்னுருக்காங்களா?''-பிரேம் கேட்க வேண்டிய கேள்வியை வேகமாக கேட்டார்.

''ஆமாம் சார்... டேவிட்டுன்னு ஒரு கார்டனர் நின்னுட்டான்...''

''டேவிட்டுன்னா... அவன் அட்ரஸ்?''

''எங்களுக்கு தெரியாது மாணிக்கவாசகம் ஐய்யாவுக்கு தெரியும்.''

''மைகாட்... இந்த சந்தடியில நான் அந்த மரமண்டையை மறந்தேபோனேன். இப்ப அவன் எங்க?''

''அம்மா கூட டப்பிங் தியேட்டருக்கு போயிருக்காரு!''

''பிரேம் போன் போட்டு அவனைப் பிடிச்சு அட்ரஸை வாங்கு.''

-உடனேயே போன் கால் அலறி மாணிக்கவாசகத்தை அழைத்தது.

''மாணிக்கவாசகம் டேவிட்டுன்னு ஒரு வேலைக்காரன் இருந்தானே ஞாபகமிருக்கா?''

''ஆமா சார்... அவனுக்கென்ன?''

''அவன் அட்ரஸ் வேணும் ரொம்ப அவசரம் - நம்ப ஐஸ்வர்யா பிராப்லத்தோட முடிச்சை அவன் அவிழ்த்துவிடுவான். ஆமா அட்ரஸ் என்ன?''

''என்ன சார் சொல்றீங்க ஒண்ணும் புரியலை...''

''உனக்கு புரிய வேண்டாம். அவன் அட்ரஸ் வேணும் - இங்க அவினாஷ்னு ஒருத்தர் உடனே அவனை பார்த்தாகணும். கமான்.''

மாணிக்கவாசகம் உடனே அட்ரஸை சொல்ல பிரேம் குறித்துக் கொண்டான்.

''சார் டேவிட் அட்ரஸ் கிடைச்சுடுச்சு. கார் அனுப்பி ஆளை இழுத்துகிட்டு வந்துடவா?''



-ராம்நாத்திடம் கேட்க, ராம்நாத் வேகமாக தலையை அசைக்க அவினாஷ் பலி கோழியைப் போல் தலையை தொங்கப் போட்டுக் கொண்டிருந்தான். அருகில் ராஜகோபால்.

''அவினாஷ் என்னடா பண்ணப் போறே? கதை எப்படி எப்படியெல்லாமோ போய்கிட்டிருக்கேடா?''

''என்ன பண்றது எல்லாம் தலையெழுத்து- அதான் அப்ரூவர் ஆயாச்சே.'' - அவினாஷ் அழாக்குறையாக பதில் சொல்ல ஐஸ்வர்யாவின் வீட்டிலிருந்து ஒரு கார் படுவேகமாய் கிளம்பியது.

அது டேவிட்டை தேடித்தான் போகிறது என்பது இருவருக்கும் புரிந்தபோது மணி ஒன்று!

❖❖❖

## 17

19-11-86
மணி 2.00

டப்பிங் தியேட்டரிலிருந்து போன் வந்திருந்தது. ராம்நாத் தான் கைய்யிலெடுத்தார்.

''ஹலோ ராம்நாத்...''

''டைரக்டர் ராம்நாத்தா?''

''ஆமா சார்...''

''சார் இங்க ஐஸ்வர்யா திரும்பவும் மயக்கமாயிட்டாங்க பேச்சு மூச்சு இல்லை. ஜவஹர் நர்சிங் ஹோமுக்கு எடுத்கிட்டுபோயிருக்காங்க. ரொம்ப சீரியஸ்...''

-ராம்நாத் அப்படியே ஸ்தம்பித்தார்.

''என்ன ஆனது ஐஸ்வர்யாவுக்கு? எனிதிங்ராங்?''

''எங்களுக்கு ஒண்ணும் புரியலை.''

''மாணிக்கவாசகம் எங்கே?''

''அவரைக் காணோம்!''

''நேரம் பார்த்து எங்கியாவது போயிடுவானே! ஓ.கே. நான் வரேன்.''

-ராம்நாத் அவினாஷ் ராஜகோபாலோடு ஜவஹர் நர்சிங்ஹோமை நோக்கி காரைக் கிளப்பினார்.

வேலைக்காரனிடம்''டேவிட்டோட பிரேம் வந்தா காத்திருக்கச் சொல்லு வந்தடறேன்.'' என்றவர் காரை விமானமாக நினைத்து பறக்க விட்டார்.

தொண்டை வறண்டு விட்டிருந்தது.

இதயத்துடிப்பு பல மடங்கு கூடியிருந்தது.

முதலுக்கே மோசம் வந்துவிடுமோ என்னும் பயம் இடுக்கிப் பிடி போட்டிருந்தது.

அவினாஷும், ராஜகோபாலும், இன்ஸ்பெக்டர் வேட எக்ஸ்ட்ராவும் ஒன்றும் புரியாமல் மிரண்டு கொண்டிருக்க...

ஜவஹர் நர்சிங்ஹோமில் டாக்டர் நிர்மல் ராம்நாத்தை கவலையோடு வரவேற்றார்.

''பழையபடி ஆயிடிச்சு ராம்நாத்.



இனிமே ஐஸ்வர்யா அம்னீஷியாவுல இருந்து மீள வழியே கிடையாது. ஆமா இடையில என்ன நடந்தது?'' டாக்டர் கேள்வி கேட்கும்போது ஒரு மேட்ரன் ஓடி வந்தார்.

''சார் ஐஸ்வர்யாவோட ஜாக்கெட்டுக்குள்ற இந்த லெட்டர் இருந்தது. அவங்களுக்கு ஃபிரக்மாட்டலாம்னு நெனைச்சு டிரெஸ் சேஞ்ஜ் பண்ண முயற்சி செஞ்சப்போ இது கிடைச்சது.'

ராம்நாத் ஆவலோடு அதை வாங்கி பிரித்துப் படித்தார்.

''டியர் மேடம்!

என்னை மன்னியுங்கள்.

காசுக்கு ஆசைப்பட்டு நான் மிகப் பெரிய தவறு செய்துவிட்டேன். உங்கள் உப்பைத் தின்றுவிட்டு உங்களுக்கே தெரியாமல் நீங்கள் குளிக்கும் போது அதை வீடியோ படம் எடுத்தது நான்தான்!

அந்த உண்மை இன்னும் சில மணிகளில் டைரக்டர் ராம்நாத் மூலமாக உங்களுக்கு தெரிந்துவிடும். அவர்கள் என்னை பிடித்துவிடும் எல்லைக்கு வந்துவிட்டனர். வருகிறேன். என்னை மீண்டும் மன்னிக்க வேண்டுகிறேன்.

உங்கள்

மாணிக்கவாசகம்.''

ராம்நாத் கடிதம் படித்த அதிர்ச்சியோடு அந்த நபர் யார் என்று தெரிந்த அதிர்ச்சியில் சுருண்டுவிட்டார்.

டாக்டர் நிர்மல் கடிதம் பார்த்து போலீசுக்கு தகவல் தர அப்பால் அகன்றார்.

இதற்குள் பிரேமோ ஆர்வம் தாளாது எரிமலைக்கு நிகரான கனலோடும், டேவிட்டோடும் மாணிக்கவாசகத்தின் வீட்டை எட்டியிருந்தான்.

வீடு தாழிடப்பட்டிருந்தது.

''மாணிக்கவாசகம், டேய் மாணிக்கவாசகம் வாடா வெளிய'' வீட்டு வாசலில் பிரேமிடம் ரௌத்ர கர்ஜனை.

தாழ்போட்ட வீடு திறக்கப்படவேயில்லை. பக்கத்து ஜன்னல் வழியாக பார்வையை உள்ளே விட்டபோது நடுஹாலில் சுழலும் கைத்தான் பேனில் கயிற்றைக் கட்டி கழுத்தோடு மாட்டியபடி சவமாய் தொங்கிக் கொண்டிருந்தான் மாணிக்கவாசகம்!

❖